
# உலக அரங்கில் திருவள்ளுவர்

பாகம் – 2






பேராசிரியை, திருமதி. இளம்பிறை மணிமாறன்

தென்காசித் திருவள்ளுவர் கழக வெளியீடு 2010

# உலக அரங்கில் திருவள்ளுவர்

( பாகம் - 2 )



**இளம்பிறை மணிமாறன்**

திருவள்ளுவர் கழகம், தென்காசி.
83-ஆவது திருக்குறள் விழா வெளியீடு

தென்காசித் திருவள்ளுவர் கழக வெளியீட்டு எண் : *20*

**உலக அரங்கில் திருவள்ளுவர்** (பாகம் - 2)

பேராசிரியர் **இளம்பிறை மணிமாறன்**


| | | |
|---|---|---|
| பதிப்புரிமை | : | **திருவள்ளுவர் கழகம்**<br>தென்காசி - 627 811. |
| முதல் பதிப்பு | : | தி.பி. 2041, வைகாசி 17, (31-5-2010) |
| பக்கங்கள் | : | *viii + 252 = 260* |
| விலை | : | ரூ. **100/-** |
| கிடைக்கும் இடம் | : | **திருவள்ளுவர் கழகம்**<br>தென்காசி - 627 811.<br>94432 34962 |
| அச்சிட்டோர் | : | **சுந்தரம் ஆப்செட்**<br>122, சுவாமி சன்னதி,<br>தென்காசி - 627 811.<br>✆ 04633 - 223040 |

# பதிப்புரை

பேராசிரியை திருமதி. இளம்பிறை மணிமாறன் அவர்களின் எழுத்தோவியப் படைப்பாக முன்பு வெளிவந்த ‘உலக அரங்கில் திருவள்ளுவர்’ என்ற நூலின் இரண்டாம் பாகமான இந்நூலைத் தென்காசித் திருவள்ளுவர் கழகம் பெருமையோடு வெளியிடுகிறது.

இந்நூலில் மேலைநாட்டு அறிஞர்களான ரூசோ, பேக்கன், பிளேட்டோ, மாக்ஸ் முல்லர் ஆகியோரின் சீரிய சிந்தனைகளை நம் திருவள்ளுவர், தம் மருள்தீர்ந்த மாசறு காட்சியில் கண்டுணர்ந்த கருத்துக்களோடு ஒப்புநோக்கி அம்மையார் ஆய்வு செய்துள்ளார்கள்.

நூலாசிரியரின் இருமொழிப் புலமையும் ஆய்வுத் திறமும் முந்தைய நூலிற்போலவே இதன் கண்ணும் நூல் முழுவதிலும் இழையோடும் சிறப்பினைக் காண முடிகிறது.

தமிழ்த் திருநாட்டில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்த திருவள்ளுவப் பேராசான் கூறிப்போந்த அறநெறிச் சிந்தனைகளோடு மேலைநாட்டு அறிஞர்கள் சிலரின் பலதுறைக் கோட்பாடுகள் ஒத்திருப்பதை அறியும் போது வியப்பாக உள்ளது.

மேலைநாட்டில், குடும்ப வாழ்வியல் முறை, சமூக அமைப்பு, அரசியல் பொருளாதாரக் கொள்கைகள், இறையியல் நம்பிக்கைகள் போன்ற தளங்கள் முற்றாக வேறுபட்டவை. எனினும் அந்தச் சூழலில் வாழ்ந்த அறிஞர்களும் தம் சிந்தனையில் வள்ளுவரோடு ஒன்றுபடுவதை நூலாசிரியர் எடுத்துக்காட்டி மிக நுணுக்கமாக ஆராய்ந்துள்ளார்கள்.

சான்றோர்கள் ஒத்த சிந்தனை உடையவர்கள் என்று கூறப்பட்டாலும் வள்ளுவச் சிந்தனைகளில் மிளிரும் அறக் கோட்பாடுகளின் சாயலைத்தான் பிறநாட்டு நல்லறிஞர்களின் சிந்தனைக்கோலங்களில் காண முடியுமே அன்றி அவற்றின் முழு வீச்சையும் காண இயலாது என்பது திருவள்ளுவர்க்கே உரிய தனிச்சிறப்பு என்று நூலாசிரியர் அம்மையார் இந்நூலிலும் நிறுவியுள்ளார்கள்.

இந்நூல் அச்சாகும்போது மெய்ப்புகளை ஒப்பு நோக்கித் திருத்தம் செய்து உதவிய புலவர் கா.ச. பழநியப்பன், திரு.கே.எஸ். சங்கரநாராயணன் ஆகியோர்க்குக் கழகத்தின் நன்றி உரியது. இந்நூலைக் கவினுற வடிவமைத்து அச்சிட்டளித்த தென்காசி சுந்தரம் அச்சகத்தாரைக் கழகம் பாராட்டி நன்றி கூறுகிறது.

வாழ்க வள்ளுவம்!

**ச. கணபதிராமன்**
**தலைவர்**

**ஆ. சிவராமகிருஷ்ணன்**
**செயலர்**

**திருவள்ளுவர் கழகம்**

**தென்காசி.**
24-05-2010

# என்னுரை

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்திட வழிகாட்டும் உயர்ந்த அறங்களின் உன்னதக் களஞ்சியம்தான் திருக்குறள். இது தமிழர்களின் வேதம். 1330 அருங்குறட்பாக்களால் உலகை அளந்து மனிதர்களை நெறிப்படுத்தும் மேல்வரிச் சட்டம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக எழுதப்பட்டும் இன்றுவரை எல்லார் இதயங்களையும் ஆளுமை செய்யும் அற்புத சக்தி திருக்குறளுக்கு மட்டுமே உண்டு. அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிய திருக்குறளை அவரவர் மனோலயத்திற்கு ஏற்ப பல்வேறு காலகட்டங்களில் ஆராய்ந்து, பல்வேறு நூல்கள் தமிழ்கூறு நல்லுலகத்தில் வெளிவந்துள்ளன. என்னுடைய எண்ணமெல்லாம் அய்யன் திருவள்ளுவரை அகில உலகத்து அனைத்து அறிஞர் பெருமக்களோடும் இணைத்துப் பார்த்து, இன்புற வேண்டும் என்பதாக இருந்தது. அதன்படியே மார்க்கஸ் அரேலியஸும் திருவள்ளுவரும், ஆல்பர்ட் சுவைட்சரும் திருவள்ளுவரும், சேக்ஷ்பியரும் திருவள்ளுவரும், ஜார்ஜ் பெர்னாட்ஷாவும் திருவள்ளுவரும் என்கிற வகையில் ஒப்பீடு செய்து எழுதப்பட்ட எனது முதல் தொகுதியைத் தென்காசித் திருவள்ளுவர் கழகம் பெருமிதத்தோடு வெளியிட்டது. தமிழ்கூறும் நல்லுலகத்தின் வரவேற்பு அந்த நூலுக்கு அபரிமிதமாகக் கிடைக்கவே இப்போது வெளிநாட்டு அறிஞர்கள் நான்குபேரை உங்களுக்கு அறிமுகம் செய்து வைத்து, திருவள்ளுவரோடு அவர்களை ஒப்பீடு செய்திருக்கிறேன். படிப்பதோடு மட்டுமல்லாமல், படித்ததில் பிடித்ததை மக்களோடு பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பை இறையருள் எனக்கு வழங்கியுள்ளமைக்காக நன்றி தெரிவிக்கிறேன்.

என்னதான் எழுதினாலும் அதை மக்கள் மத்தியில் வலிமையோடு அறிமுகப்படுத்துவதற்கு ஒரு தூண்டு சக்தி

வேண்டும். அத்தகைய மகத்தான சக்திதான் தென்காசித் திருவள்ளுவர் கழகம். எனக்கும் தென்காசித் திருவள்ளுவர் கழகத்திற்கும் உள்ள உறவு அம்மாவுக்கும் பிள்ளைக்கும் இடையிலான அற்புத உறவு. அந்த உறவு ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக என் வாழ்விற்கும், வளர்ச்சிக்கும் ஆதார சுருதியாக அமைந்திருக்கிறது. இத்தகைய நூலை எழுதிட வேண்டும் என்று என்னை அவ்வப்போது ஊக்கப்படுத்திக் கொண்டிருந்த திருவள்ளுவர் கழக மேனாள் தலைவர் அமரர் கணபதியப்பன் அவர்களுக்கும், இந்நாள் தலைவர் சீர்மிகு. கணபதிராமன் அவர்களுக்கும், கைப்பிரதி தருவதில் காலதாமதம் நேர்ந்தாலும், கனிவோடும், பரிவோடும் காத்திருந்து பெற்றுக்கொண்ட இணையற்ற செயலாளர் சீர்மிகு ஆ. சிவராமகிருஷ்ணன் அவர்களுக்கும் மற்றும் திருவள்ளுவர் கழகத்தின் ஆற்றல்மிகு உறுப்பினர்கள் அனைவர்க்கும் நன்றிக் கடப்பாடுடையேன்.

இந்நூல் எழுதும்போது உறுதுணையாக இருந்து படியெடுத்துக் கொடுத்து உதவிய பேராசிரியை திருமதி. கீதா கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கும், குறுகிய கால இடைவெளியில் சிறப்பான முறையில் இதனை அச்சிட்டு வெளிக்கொணர்ந்த தென்காசி சுந்தரம் அச்சகத்தின் உரிமையாளர் திரு. கு. சுந்தரம், மற்றும் அன்புத்தம்பி பிரகாஷ் ஆகியோர்க்கும் நன்றி.

செம்மொழி மாநாடு நடைபெறும் வேளையில் வள்ளுவப் பேராசான் திருவடிகளுக்கு இந்நூலை அர்ப்பணிக்கிறேன். நன்றி.

தூத்துக்குடி
*24-5-2010*

இளம்பிறை மணிமாறன்

# பொருளடக்கம்

# ரூசோவும் திருவள்ளுவரும்

## சுதந்திரத்தின் தந்தை ரூசோ

பதினெட்டாம் நூற்றாண்டில், பிரான்சு தேசத்தில் தோன்றியவன் ஜீன் ஜேக்ஸ் ரூசோ என்னும் உலகப் புகழ் பெற்ற சிந்தனையாளன். உலகம் இன்று வரை அவனை 'சுதந்திரத்தின் தந்தை' என்று போற்றிப் புகழ்கிறது. உலகம் முழுவதும் மக்களாட்சி மலர வேண்டும் என்ற விழைவு கொண்டவன். பதினெட்டாம் நூற்றாண்டு, உலக வரலாற்றில் ஒரு முக்கியமான நூற்றாண்டாகும். களையப்பட வேண்டிய பழமைக்கும், வரவேற்கப்பட வேண்டிய புதுமைக்கும் பாலமாக அமைந்ததுதான், பதினெட்டாம் நூற்றாண்டு. இந்த நூற்றாண்டில், பிரான்சில் தோன்றிய வால்ட்டேர், தேவையற்ற பழமையான அடிமைத்தனத்தையும், அறியாமையையும், சமயப் பூசல்களையும், சமுதாயப் பிரிவினைகளையும் அழித்தொழிக்கப் பாடுபட்டான். ரூசோவோ இடித்து நொறுக்கப்பட்ட தேவையற்ற பழமைக்கு மேல், சமத்துவமும் சுதந்திரமும் இரு கண்களாய்க் கொண்ட புதிய உலகத்தைத் தன் சிந்தனைகளால் நிர்மாணம் செய்தான்.

மனிதனுக்கு மனிதன் அடிமையாக வாழ்ந்து கொண்டிருந்த காலத்தில் 'சுதந்திரம் எனது பிறப்புரிமை' என்று பிரகடனம் செய்தவன் ரூசோ. மனிதன் சுதந்திரச் சிந்தனையுடன், சமத்துவமாக வாழ வேண்டும் என்ற ரூசோவின் அழுத்தமான சிந்தனைகள்தான், 'சமுதாய ஒப்பந்தம்' என்ற நூலாக மலர்ந்தது. உலக சரித்திரத்தில் இடம் பெற்றுள்ள இரண்டு புரட்சிகளுக்கு, ரூசோவின் சிந்தனைகள் வித்திட்டன என்று சொன்னால் அது மிகையாகாது.

பிரான்சு தேசத்தில், முடியாட்சியை ஒழித்துக் கட்டவும், குடியாட்சியை நிலைப்படுத்தவும், ரூசோவின் சிந்தனைகள் பெரிதும் துணை புரிந்தன. ரூசோ இறந்து பதினொரு வருடங்களுக்குப் பின்னரும், பிரான்சு தேசத்தில் மட்டும்

அல்லாமல், அமெரிக்கப் புரட்சியின் பின்னணியிலும் எதிரொலித்தது ரூசோவின் கருத்துக்கள். அமெரிக்காவின் சுதந்திரப் பிரகடனத்திலும், ரூசோவின் சமுதாய ஒப்பந்தம் என்ற நூலில் உள்ள வாசகங்கள் காணப்படுகின்றன.

'உயர்குடியில் பிறந்தவர்களுக்கும், சொத்து உரிமை உடையவர்களுக்கும் மட்டுமே ஆட்சி செய்ய அதிகாரம் உண்டு' என்றிருந்த நிலையை மாற்றி, 'உழைப்பாளர்களும், ஏழைகளும் நாட்டின் நிர்வாகத்தில் பங்கேற்க முடியும்' என்றும், 'அனைத்துத் தரப்பாருக்கும் அடிப்படை உரிமைகள் பொது' என்றும், மனித சமூகம் உணர வழிவகை செய்த பெருமை ரூசோவுக்கு உண்டு.

மனித சமூகத்தின் நல்ல பண்புகளின் மேல் நம்பிக்கை வைத்திருந்தான் ரூசோ. எனவேதான் மனிதனை முதலில் மனிதனாக்க முயல்வோம்; அவனுக்கு மானுடப் பண்புகளைக் கற்றுத் தந்தால் அவனே பின்னர் ஞானியாகி விடுவான் எனச் சொன்னான். ரஷ்யாவின் தத்துவ ஞானியான டால்ஸ்டாய், ரூசோவின் கருத்துக்களிலும், எழுத்துக்களிலும் மிகவும் ஈடுபட்டார். ஜெர்மனியின் தத்துவப் பேரறிஞர் இம்மானுவேல் கான்ட் ரூசோவிடம் பெருமதிப்பு கொண்டிருந்தார். இருப்பினும் ரூசோவைப் பாராட்டியவர்களைவிட, வெறுத்தவர்களே அவன் காலத்தில் அதிகம்.

சுவிட்சர்லாந்தில் கடிகாரத் தொழிலுக்குப் பெயர் போன ஜெனிவா நகரில், பிரெஞ்சுக் குடும்பம் ஒன்றில், 1712-ஆம் வருடம் ஐசக் ரூசோ என்பவருக்கும், சூசான் பெர்னார்ட் என்ற பெண்மணிக்கும் மகனாகப் பிறந்த ரூசோ, தன் சொந்த வாழ்க்கையை சுயசரிதமாக, மிகப் பெரிய புத்தகமாக எழுதியுள்ளான். தன் வாழ்வில் நடந்த எந்த ஒரு நிகழ்ச்சியையும் மறைக்காமல், 'இன்ன நிகழ்வை எழுத்தாய் வடித்தால் அதனைப் படிப்பவர்கள் தன்னைப் பற்றி என்ன எண்ணுவார்கள்' என்ற எண்ணம் சிறிதும் இன்றி, மிகவும் வெளிப்படையாகத் தன் வாழ்வில் நடந்த பல நிகழ்வுகளையும், தன் எண்ணங்களையும் சுயசரிதையில் எடுத்துக் கூறியுள்ளான்.

இளவயதிலேயே புத்தகங்களை விரும்பி வாசிக்கும் பழக்கம் ரூசோவிடமிருந்தது. 1760-ஆம் வருடம் ஜூலி என்ற ரூசோவின் நாவல் வெளியானது. அந்த நாவல் பாரீசில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அந்த நாவலின் பிரதி கிடைக்காதா என்று மக்கள் அலைமோதினர்.

அந்த நாவலைப் பற்றிப் பலவிதமான அபிப்பிராயங் களும், கண்டனங்களும் எழுந்தன. அதன்பின் 'எமிலி' என்ற நூலை ரூசோ எழுதினான். மூடப்பழக்க வழக்கங்களில் மூழ்கிக் கிடந்த அன்றைய கல்வி முறையைச் சாடி எழுதப்பட்ட புத்தகம். இந்தப் புத்தகம் வெளியான இருபத்து ஒராவது நாள் பாரீசிலுள்ள நீதிமன்றத்துக்கு முன்னால் நெருப்பில் கொளுத்தப்பட்டது. புத்தக ஆசிரியரைக் கைது செய்யும்படி பிரெஞ்சுப் பார்லிமென்ட் உத்தரவிட்டது. ஸ்விட்சர்லாந்துக்குச் சென்றான் ரூசோ. அங்கும் ஜெனிவாவில் அவனுடைய புத்தகமான 'எமிலி' மக்கள் முன்னிலையில் தீக்கிரையானது.

எமிலியைத் தொடர்ந்து ரூசோவின் 'சமுதாய ஒப்பந்தம்' என்ற நூல் வெளியானது. அறிஞர்கள் பலர் ரூசோவை அவன் இருக்கும் இடத்திற்கு வந்து சந்தித்து உரையாடிச் சென்றனர். அவ்வாறு உரையாடியவர்களில் ஒருவர் இங்கிலாந்தின் புகழ் வாய்ந்த இலக்கியவாதி, டாக்டர் சாமுவேல் சான்சனின் சரிதையை எழுதிவைத்த, ஜேம்ஸ் பாஸ்வெல் என்ற அறிஞர். ரூசோவின் சமுதாய ஒப்பந்தம் என்ற நூலை, அவன் பிறந்த ஊரான ஜெனீவா நகரம் தீக்கிரையாக்கிய போதும் மனந்தளராதவன் ரூசோ. தனக்கு இழைக்கப்பட்ட அநீதிகளைக் கண்டித்து 1764-ஆம் ஆண்டு தன்னுடைய மலைக் கடிதங்களை வெளியிட்டான். பின் லண்டனில் வாழ்ந்த, டேவிட் ஹ்யூமின் நட்பும் ஆதரவும் ரூசோவுக்குக் கிடைத்தது. பின்னர் டேவிட் ஹ்யூமுக்கும், ரூசோவுக்கும் இடையில் ஏற்பட்ட மனவருத்தத்தின் காரணமாக, மீண்டும் ரூசோ பிரான்சுக்கு வந்து சேர்ந்தான். பின்னர் 1775-76-இல் தனது சம்பாஷணைகளையும், 1777-78-இல் தனது சிந்தனைகளையும் எழுதி முடித்தான்.

அந்திம காலத்தில், சாவையும் வாழ்வையும், உடல் நோயையும் உடல்நலத்தையும், இகழ்ச்சியையும் புகழையும் தான் சமமாகவே பாவிப்பதாக ரூசோ தனது 'சிந்தனைகள்' எனும் நூலில் குறிப்பிடுகின்றான். தன் அறுபத்து ஆறாவது வயதில் காலமான ரூசோவை, அவன் விருப்பப்படி ஏர்மெனான் வில்லா தோட்டத்தில் புதைத்தனர். பதினாறு ஆண்டுகள் கழித்துப் பிரெஞ்சுப் புரட்சியினால், பிரான்சு தேசம் பல குழப்பங்களைச் சந்தித்த காலகட்டத்தில், ரூசோவின் உடல் புதைக்கப்பட்ட இடத்திலிருந்து தோண்டி எடுக்கப்பட்டு, சகலவிதமான ஆடம்பரமான மரியாதைகளுடன் பாரீஸ் மாநகரம் நோக்கி ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. எந்த நகரம் அவனது 'சமுதாய ஒப்பந்தம்' என்ற நூலை நெருப்பிலிட்டுக் கொளுத்தி அவனை அவமானம் செய்ததோ, அதே பாரீஸ் மாநகரம் சமுதாய ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டு ரூசோவுக்குப் பெருமை சேர்த்தது.

ரூசோ தன்னைப் பற்றிக் கூறும்போது "ரூசோ ஒரு அரக்கனுமல்ல, ஒரு ஞானியுமல்ல மனிதத்தன்மையோடு கூடிய ஒருமனிதன்தான்" என்கிறான். ரூசோவின் மேல் மற்றவர்கள் கொண்டிருந்த தவறான எண்ணங்களின் விளைவாக அவனுக்கு ஏற்பட்ட தாக்கம், தார்மீகக் கோபமாக சுயசரிதையின் கடைசிப் பகுதியில் வெளிப் படுவதைப் பார்க்கிறோம்.

"நான் என்னைப் பற்றிய உண்மைகளை எல்லாம் எடுத்துக் கூறிவிட்டேன். இனி நான் பகிரங்கமாகவும் பயமில்லாமலும் கூறுவேன். எவனாவது என் எழுத்துக்களைப் படிக்காமலும், என்னுடைய சுபாவம், குணாதிசயம், நடையுடை பாவனைகள், ஆசைகள், சுகதுக்கங்கள், பழக்க வழக்கங்கள் முதலானவற்றைத் தன் சொந்தக் கண்களால் ஆராய்ந்து பார்ராமலும் என்னை ஒரு அயோக்கியன் என்று கருத முடியுமானால், அவன்தான் பரம அயோக்கியன்". விமர்சனங்களால் ரூசோ பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தான் என்பதனை அவனுடைய வாசகங்கள் நமக்குக் காட்டுகின்றன.

## சமுதாய ஒப்பந்தம்

ரூசோ எழுதிய அனைத்து நூல்களிலும், தலைசிறந்தது அவன் எழுதிய 'சமுதாய ஒப்பந்தம்' என்னும் நூலாகும். ஒரு சுதந்திர தேசத்தின் பிரஜையாகப் பிறந்த தனக்குப் பொதுஜன விவகாரங்களைப் பற்றிப் பேசுவதற்கு உரிமைகளும் கடமைகளும் உண்டு, என்று சொல்லத் தொடங்குகிறான் ரூசோ. மனிதன் பிறக்கும்போது சுதந்திரம் உள்ளவனாகத்தான் பிறக்கிறான். ஆனால் எங்கே நோக்கினாலும், அவன் அடிமைத்தளையில் அகப்பட்டவனாகவே காட்சி அளிக்கிறான்.

'Man is born free and everywhere he is in chains. Many a one believes himself the master of others and yet he is a great slave than they. How has this change come about? I do not know what can render it legitimate. I believe that I can settle this question'.

ஒவ்வொரு மனிதனும் தன்னை மற்றவர்களின் எஜமானன் என்று நினைத்துக் கொள்கிறான். அப்படி யார் நினைக்கிறானோ, அவன்தான் பெரிய அடிமையாகவும் இருக்கிறான். இந்த நிலை எப்படி உண்டாயிற்று? இதனை மாற்றி அமைக்க முடியுமா? இந்தக் குழப்பத்தைத் தன்னால் தீர்த்து வைக்க முடியுமா என்று கேள்வி எழுப்புகிறான் ரூசோ. மக்கள் அடிமைகளைப் போல் நடத்தப்பட்ட பழைய காலத்தில், தங்கள் சுதந்திரத்தை இழந்து, பிரக்ஞை அற்றவர்கள் போல, ஆண்டுவந்த வர்க்கத்திற்கு அடிமைகளாய்க் கிடந்து துன்புற்ற நிலைகளைக் கண்டு, கொதித்த ரூசோவின் மனதிலிருந்து புறப்பட்ட சிந்தனைகளின் வெளிப்பாடுதான் 'சமுதாய ஒப்பந்தம்' என்ற நூல். பலாத்காரத்தினாலும், அதிகாரத்தினாலும் அடக்கப்படும் மக்கள், அடிமைகளைப் போல அடங்கி வாழ்கிறார்கள். பின்னர், அதிகாரத்திலிருந்து தங்களை விடுவித்துக் கொள்வதற்கு எந்த பலாத்காரத்தினால் தங்கள் உரிமைகள் பறிக்கப்பட்டதோ, அதே நியாயத்தைக் கையில் எடுத்துத் தங்கள் உரிமையை மீட்டு எடுக்க முயற்சி

செய்கிறார்கள். சமுதாய ஒழுங்கு என்பது ஒரு புனிதமான உரிமையாகும். இந்த உரிமையே, அனைத்து உரிமைகளுக்கும் அடிப்படையாகும் என்கிறான் ரூசோ.

If men recover their freedom by virtue of the same right by which it was taken away, either they are justified in resuming it, or there was no justification or depriving them of it. But the social order is a sacred right which serves as a foundation for all others.

**அன்பா? ஆதிக்கமா?**

எல்லா மனிதனும் சுதந்திரத்தோடுதான் பிறக்கிறான். ஒரு குழந்தை தன் தந்தைக்குப் பிறந்திருந்தாலும், அவருடன் வாழ்ந்த கொஞ்ச காலத்திற்குப் பிறகு, தனிப்பட்டு சுதந்திரமாக இயங்கத் தொடங்குகிறது. பொது சுதந்திரமானது, மனித சுபாவத்தின் இயற்கையாகும். தனது தேவைக்காகவும் பாதுகாப்பிற்காகவும் வேண்டியனவற்றைக் கவனிப்பதே மனிதனின் முதல் தேவையாகும். பின்னர் நல்லது எது, தீயது எது எனப் பகுத்து அறியும் சக்தி மனிதனுக்கு ஏற்பட்ட பிறகு, தன் தேவைகளை அவனே நிர்ணயித்துக் கொள்கிறான். இந்த நிலையை அடையும் மனிதன் தனக்குத் தானே எஜமானன் ஆகி விடுகிறான்.

பழைய காலத்துக் குடும்ப அமைப்புகளை மாதிரியாக வைத்துத்தான், அரசியல், சமுதாய அமைப்புகள் அமைக்கப் பட்டன. குடும்பத்திற்குத் தலைவனாகத் தந்தை இருப்பதைப் போல, அரசன் சமுதாயத்தின் தலைவனாக இருந்தான். குடும்பத்தின் குழந்தைகளைப் போன்றவர்கள் சமுதாய மக்கள். எல்லோருமே சுதந்திரத்துடன்தான் பிறக்கின்றனர். தந்தை தன் குழந்தைகள் மேல் அன்பைப் பொழிந்து, அவர்களை அக்கறையுடன் கவனித்துக் கொள்கிறான். அரசனோ தேசத்தை ஆட்சிசெய்யும் மகிழ்ச்சியில், தன் பிரஜைகளிடம் அன்பு செலுத்துகிறான். காலப்போக்கில் ஒரு மந்தையில் உள்ள கால்நடைகளைக் கொன்று தின்பதற்காக, ஒரு எஜமானன் அவற்றை அக்கறையுடன் கவனிப்பதைப் போல, அரசனின் நிலையும் மாறிவிடுகிறது.

மக்கள் கால்நடைகளைப் போல மோசமான அடிமைகள் ஆகி விடுகிறார்கள்.

The family is, then, if you will, the primitive model of political societies; the chief is the analogue of the father, while the people represent the children; and all being born free and equal, alienate their liberty only for their own advantage. The whole difference is that in the family the father's love for his children repays him for the care that he bestowes; upon them while, in the state, the pleasure of ruling makes up for the chief's lack of love for his people.

'Just as a herd's man is superior in nature to his herd, so chiefs, who are the herdsmen of men are superior in nature to their people'.

**பலாத்காரத்தினால் விளையும் தீமை**

பலசாலியாய் இருப்பவன், தனது பலத்தின் காரணமாகவே எஜமானன் ஆகி, பிறர் மேல் எப்பொழுதும் ஆதிக்கம் செலுத்தி வர இயலுமா என்றால், அது இயலாது. எனவே தனது ஆதிக்கத்தை ஒரு உரிமையாகவும், மற்றவர்கள் தனக்கு அடங்கி நடப்பதைக் கடமையாகவும் காலப் போக்கில் மாற்றிக் கொண்டு, பின்னர் தன் ஆதிக்கத்தைத் தொடர்கிறான். பலாத்காரத்தினால் ஒருவன் எடுத்துக் கொண்ட உரிமை, பிறகு ஒரு தத்துவமாகவே மாறி விடுகிறது. இந்த அதிகாரத்திற்கு மற்றவர்கள் அடங்கி நடப்பது மனப்பூர்வமாக அல்ல, அவசியத்தை முன்னிட்டே யாகும். இந்த பலாத்காரத்தினாலும் போலித்தனமான உரிமையினாலும் விளைவது தீமைகளும் அறியாமையும்தான். இவ்வாறுதான், ஆதிக்க மனோபாவம் சமூகத்தில் தோன்றி வளர ஆரம்பித்தது என்பதைக் குறிப்பிடுகிறான் ரூசோ.

The strongest man is never strong enough to be always master, unless he transforms his power into right and obedience into duty. Hence the right of the stronger - a right apparently assumed in irony and really established in principle but will this phrase never be explained to us? Force is a physical power;

I do not see what morality can result from its effects. To yield to force is an act of necessity not of will. It is atmost an act of prudence. In what sense can it be a duty?

எனவே பலத்தினால் சாதிக்க நினைப்பவனிடத்தில் நியாயம் இருக்கும் என்பதில்லை. நாம் சட்டத்திற்குத் தான் கட்டுப்பட்டு நடக்க வேண்டுமே தவிர, பலாத்கார சக்திகளுக்கு அல்ல என்று துணிந்து, பலாத்காரத்தினால் அடக்கி ஆள நினைக்கும் ஆளும் வர்க்கத்தைச் சாடுகிறான் ரூசோ.

'Let us agree then that might does not make right, and we are bound to obey none but lawful authorities'.

எந்தத் தனி மனிதனாக இருந்தாலும், அவன் மற்றொரு மனிதன்மேல் அதிகாரம் செலுத்தக் கூடாது. பலாத்காரத்திற்கு எந்த உரிமையும் கிடையாது. 'எதேச்சையாக அதிகாரம் செய்கிறவன், தன் நாட்டில் பொது அமைதியை உண்டாக்குகிறான்' என்று சொல்பவர்களின் கருத்தை ரூசோ திட்டவட்டமாக மறுக்கிறான். தன் பேராசையின் காரணத்தினால் ஒரு எதேச்சாதிகாரி யுத்தங்களைச் செய்கிறான். அவனது நிர்வாகத்தில் உண்டாகும் ஊழல்களால், மக்களுக்குப் பெருந்துன்பம் ஏற்படுகிறது. அப்படி இருக்கும் போது ஒரு எதேச்சாதிகாரி பாதுகாக்கும் பொது அமைதியினால் எந்த லாபமும் உண்டாகப் போவதில்லை.

Since no man has any national authority over his fellow men, and since force is not the source of right, conventions remain as the basis of all lawful authroity among men.

It will be said that the despot secures to his subjects, civil peace. Be it so; but what do they gain by that, if the wars which his ambition brings upon them, together with his insatiable greed and the vexations of his administration, harass them more their own dissensions would? What do they gain by it if this tranquility is itself one of their miseries? Men live tranquilly also in dungeons; Is that enough to make them contented there.

காட்டுக் குகைகளில் கூட, தனிமையில் அமைதியாக வாழலாம். அந்த வாழ்வு மனிதனுக்குத் திருப்தி அளிக்குமா? என்ற கேள்வியை எழுப்புகிறான் ரூசோ.

ஒரு காலத்தில் மனிதன் தனித்து வாழ்ந்தான். அவனுக்குப் பாதுகாப்புக் குறைவும், அவனது முன்னேற்றத்திற்குப் பல தடைகளும் இருந்தன. ஒரு காலகட்டத்தில் மிகவும் முயன்று, அந்தத் தடைகளை எல்லாம் தாண்டி வந்தான் மனிதன். மனிதனின் வாழ்க்கை முறைகளும் கொஞ்சங் கொஞ்சமாக மாறத் தலைப்பட்டது. புதிய சக்தியினை உருவாக்குவது என்பது மனிதனுக்குச் சாத்தியமில்லை. எனவே மனித சமூகத்திடம் ஏற்கெனவே இருக்கும் சக்திகளை ஒன்று திரட்டி, அந்த சக்தியின் மூலம் தனக்கு எதிராக உள்ள சக்திகளை அழிக்கத் திட்டமிட்டான் மனிதன். சிதறுண்டு கிடந்த பல சக்திகளை ஒன்று திரட்டி ஒரு கூட்டுச் சக்தியாக ஆக்கினான். தனிப்பட்ட மனிதர்களின் கூட்டுறவுதான், சமுதாய ஒப்பந்தம் ஆகும்.

கூட்டாக வாழத் தலைப்பட்ட பின்னர், மனிதன் தன் தன்மானத்தையும், சுய கௌரவத்தையும் காப்பாற்றிக் கொண்டு, மற்றவர்களுக்கு இடையூறு செய்யாமலும், பிறரை அடிமைப்படுத்தாமலும் வாழ வேண்டும் என்பதே சமுதாய ஒப்பந்தத்தின் எதிர்பார்ப்பாகும். ஒவ்வொரு மனிதனும், சமூகத்தின் ஒரு அங்கமாக இருக்கிறான். அவன் ஆற்றுவதற்கென்று சில கடமைகளும் உள்ளன. எந்த அச்சுறுத்தலும் பயமும் இன்றி, மனிதர்கள் கடமை ஆற்றும் சூழ்நிலையை உருவாக்கி, உள்ளத்தாழ்வற்ற, ‘மனிதர் யாரும் சமம்’ என்ற கொள்கையை நிலைநாட்டும் வகையில், மனித வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதே சமுதாய ஒப்பந்தம்.

**புதிய ஒப்பந்தம்**

ஒவ்வொரு பிரஜையும் தனக்குரிய கடமையைச் செய்ய வேண்டும் என்பதை மறந்து விட்டு, உரிமையை மட்டும் அனுபவிக்க வேண்டும் என்று நினைத்தால் அந்தப் பொறுப்பற்ற தன்மை, ஒரு அரசுக்கே ஊறு விளைவிக்கும்.

சமுதாய ஒப்பந்தத்தின் எதிர்பார்ப்புகளின்படி நடந்து கொள்ளுதல் வேண்டும். அத்தகைய கடமை உணர்வு பிரஜைகளுக்கு ஏற்படும்போது, அரசு நிர்வாக இயந்திரமானது ஒழுங்காகச் செயல்படத் தொடங்கும். இயற்கை நிலையில், ஆதிமனிதன் வாழ்ந்த போது, தன் மனதில் எழுகின்ற உணர்ச்சிகளுக்கு ஏற்றபடி செயல்களைப் புரிந்து வந்தான். சமுதாய அமைப்பு என்று வாழத் தொடங்கிய பின்பு, தான் செய்வது நியாயமானதுதானா? அறத்தோடு கூடியதா? என்று எண்ணிப் பார்த்த பிறகுதான் செயல்படுகிறான் மனிதன்.

புதிய சமுதாயத்தில் உணர்ச்சிக்குப் பதிலாகக் கடமை முக்கியத்துவம் பெறுகிறது. மனிதனின் எண்ணங்களும் லட்சியங்களும் விசாலம் அடைகின்றன. அறியாமையுடன் கூடிய ஒரு சுதந்திர மிருகமாக வாழ்ந்து வந்த மனிதன், அறிவு நிறைந்த ஒரு கடமை மனிதனாக, புதிய சமுதாயத்தில் மனோ சுதந்திரத்தைப் பெற்று வாழத் தொடங்குகிறான். மனித சுதந்திரத்திற்கு ஊறு விளைவிக்காத, சமத்துவத்தோடு கூடிய கடமைகளுக்கும் உரிமைகளுக்கும் முக்கியத்துவம் தருகிற, மனிதன் மனிதனை அடிமைப்படுத்தாத, ஒரு சமநிலைச் சமூகத்தையே ரூசோவின் சமுதாய ஒப்பந்தம் நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

## சட்டங்களின் அவசியம்

சமூகத்தில் மக்களை வழிநடத்திச் செல்லும் தகுதியான சட்டங்களை இயற்றுவதற்கு, அறிவாளிகள் தேவைப்படுகிறார்கள். மக்களின் மனோபாவத்தையும் அவர்களின் உணர்வுகளையும் கணக்கில் எடுத்துக் கொண்டு, பொதுமக்களின் வாழ்வு சிறக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு, வருங்கால மக்களின் நன்மையைக் கவனத்தில் கொண்டு சட்டம் இயற்றுதல் வேண்டும். சட்டத்தை நிர்மாணிப்பவர்கள், மனிதர்கள் மீது தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்த முயற்சிக்கக் கூடாது. தங்கள் சொந்த விருப்பு வெறுப்புகளைச் சட்டத்தில் புகுத்தி விடவும் கூடாது. மனிதர்களை ஆட்சி செய்பவர்களே சட்டத்தை இயற்றுபவர்களாக இருக்கவும் கூடாது. எல்லா மக்களுக்கும்

பொதுவான சுதந்திரம், சமத்துவம் ஆகிய இரண்டு தத்துவங்களையும் நடைமுறைப்படுத்தும் வகையில் சட்டங்கள் அமைதல் வேண்டும். சமத்துவம் என்பது என்ன? என்ற கேள்விக்கு ரூசோ பதில் அளிக்கையில், தனி மனிதனுக்கு அளிக்கப்படும் சுதந்திர அதிகாரத்தைக் கொண்டு, ஒருவன் மற்றவர்களைப் பலாத்காரம் செய்யாமல் இருக்க வேண்டும். சட்டத்தைச் செயல்படுத்தும் அதிகாரம் உள்ளவர்களாக இருந்தாலும், அவர்களும் சட்டத்துக்குக் கட்டுப்பட்டுத் தத்தம் சமூக நிலைக்கு ஏற்ப அதிகாரத்தைப் பயன்படுத்துதல் வேண்டும். மற்றொரு மனிதனை, விலை கொடுத்து வாங்கும் அளவுக்கு ஒருவன் செல்வந்தனாக இருத்தல் கூடாது. தன்னை மற்றொருவனுக்கு விற்றுக் கொள்ளும் அளவில், ஒருவன் ஏழையாகவும் இருத்தல் கூடாது. இத்தகைய சமத்துவத்தை ஏற்படுத்துவது கடினமாக இருந்தாலும், முயன்று சட்டத்தின் மூலம் சமத்துவத்தை ஏற்படுத்த வேண்டும்.

சட்டத்தின் நோக்கமே சுதந்திரம், சமத்துவம் இவை இரண்டையும் மக்களுக்கு அளிக்க முயல்வதுதான். பொதுவாக நாட்டில் மக்கள் நிலையை அனுசரிக்காமல், ஏதோ லட்சியத்தை மனதில் வைத்துக் கொண்டு இயற்றப்படும் சட்டங்களால் யாருக்கும் பயனில்லை. இதுபோன்ற சட்டங்கள் அரசாங்கத்தின் அமைதியைக் குலைத்து, ஒரு அரசையே நிலையற்றதாகச் செய்துவிடும் என்று, சட்டநிர்மாண அதிகாரம், அரசு இயந்திரம் ஆகியனவற்றைப் பற்றிய தன் கருத்துக்களை எடுத்துரைக்கிறான். நிர்வாக அதிகாரம் என்பது மக்கள் கையில் இருக்க முடியாது. ஒரு அரசினால் செய்யப்படும் அனைத்துச் செயல்களும் சட்டமென்று ஆகிறது. இவைகளை நடைமுறைப்படுத்துவதற்கு உதவுவது நிர்வாக அதிகாரமாகும். இந்த அதிகாரத்தைப் பெற்றுள்ள நிறுவனத்தையே அரசாங்கம் என்கிறோம். எனவே, அரசு, அரசாங்கம், மக்கள் இம்மூன்றுக்கும் சரியான வகையில் சம்பந்தம் அமைய வேண்டும். அத்தகைய சம்பந்தம் ஏற்படாவிட்டால், ஏற்றதாழ்வுகள் உண்டாகி அராஜகமும், அழிவும் ஏற்படும்.

## சமூக நிர்மாணம்

சமூக நிர்மாணத்தைச் சரிவரச் செய்வதற்கான பல ஆலோசனைகளை வழங்குகிறான் ரூசோ. ஒரு தேசத்தின் எல்லை தேவைக்கு அதிகமாக பெருகியோ, குறைந்தோ இருக்கக் கூடாது என்று சொல்லும் ரூசோ, மனித சமுதாயத்தின் ஆற்றலுக்குக் கூட ஒரு வரையறை இருக்கிறது என்கிறான். இந்த வரையறை மீறப்படும் போது, சமுதாயம் தன்னையே இழந்துவிட நேரிடும். மிகப் பெரிய ராஜ்ய அமைப்பைக் காட்டிலும், சிறிய சிறிய ராஜ்ய அமைப்பு பலம் கொண்டதாய் இருப்பதைக் காண்கிறோம். ராஜ்யத்தின் அளவு அதிகமாகும்போது, நிர்வாகம் நடைபெறுவது கடினமாகி விடும். மிகப்பெரிய ஒரு சமுதாயத்தில், மக்கள் சட்டங்களை மதித்து நடக்கிறார்களா என்பதைக் கவனிக்க முடியாது. பரந்து விரிந்த ஒரு தேசத்தில், தேசபக்தியையும் எதிர்பார்க்க முடியாது. வெவ்வேறான சூழ்நிலைகளில் வாழ்ந்து, வேறு வேறு பழக்கங்களைக் கைக்கொள்ளும் பலவகையான மாகாண மக்களை, ஒரேவிதமான சட்டத்தை அனுசரிக்க வேண்டும் என்று நிர்பந்திப்பது சரிதானா என்று பார்த்துக் கொள்ள வேண்டும்.

இரண்டு விதமாக மக்கள் சமுதாயத்தை அளந்து பார்க்கலாம் என்கிறான். ரூசோ. அதில் ஒன்று தேசத்தின் நிலப்பரப்பை அளப்பது. மற்றொன்று அதன் ஜனத் தொகையைக் கணக்கிடுவது, இந்த இரண்டுமே பொருத்தமான முறையில் அமைதல் வேண்டும். மக்கள் தொகைக்கு ஏற்றபடி நிலப்பரப்பின் அளவு அமைவது அவசியம் என்கிறான் ரூசோ. சமுதாயத்தில் எல்லா மக்களும் அரசியல் நிர்வாகத்தில் பங்கு கொள்ள வேண்டும் என்றால் தேசம் மிகவும் சிறியதாக இருத்தல் வேண்டும். எல்லா மக்களும் ஒருவருவருக்கொருவர் தெரிந்தவராய் இருத்தல் வேண்டும். எளிய பழக்கவழக்கம் உடையவராய் இருத்தல் வேண்டும். அனைவரும் சம அந்தஸ்து உடையவர்களாகவும், சம அளவில் செல்வம் உடையவர்களாகவும் இருக்க வேண்டும். மக்கள் அதி ஆடம்பரமான வாழ்க்கை வாழ்பவராக இல்லாமல், ஒழுக்கமே சமூகத்தின் அடிப்படை என்று எண்ணி வாழ்பவர்களாக இருக்க வேண்டும்.

**எதேச்சாதிகாரம்**

மன்னர் ஆட்சி, எதேச்சாதிகாரம், மக்கள் பிரதிநிதிகளின் கடமை, ஆகியன பற்றி ரூசோ விரிவாக விவாதிக்கிறான். ஒரு மன்னன் ஒரு தேசத்தைத் தன் சேனைகளின் துணை கொண்டு கைப்பற்றி விடுகிறான். ஆனால் அதை ஆட்சி செய்வது மிகவும் கடினமான ஒன்று. எவ்வளவுதான் திறமைகள் இருப்பினும், ஒரு எதேச்சாதிகாரி தன் சுயநலத்துக்காகவே அதைப் பயன்படுத்துவான். எனவே அவனால் பொதுமக்களுக்கு எந்த ஒரு நன்மையும் ஏற்பட்டு விடாது.

ஒரு மனிதன் உலகத்தில் பாதி மக்களை அடிமைப் படுத்துவதன் மூலம், ஒரு சமுதாயத்தின் தலைவன் என்ற தகுதியைப் பெற்று விட முடியாது. அவனுக்குப் பின் அவன் ஆண்டு வந்த ஏகாதிபத்தியம், தீயால் தீய்க்கப்பட்டுச் சாம்பலான மரம் போல் இருந்த இடம் தெரியாமல் சிதறுண்டு போகும்.

Such a man had he enslaved half the world, is never anything, but an individual; his interest separated from that of the rest, is never anything but a private interest. If he dies, his empire after him is left disconnected and disunited, as an oak dissolves and becomes a heap of ashes after the fire has consumed it.

ஒரு ஆட்சியாளன் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பது பற்றியும் ரூசோ எடுத்துரைக்கிறான். மக்களின் ஒருமுகமான ஒப்புதலின் பேரில், ஆட்சியாளன் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அல்லது முன்னர் கடைப் பிடிக்கப்பட்டு வரும் சம்பிரதாயத்தின் அடிப்படையில் ஆட்சியாளரைத் தேர்வு செய்தல் வேண்டும். இந்த இரண்டும் இல்லாமல் பெரும்பான்மையினரால் தேர்வு செய்யப்படுதல் சரியானதல்ல. பெரும்பான்மையினரின் முடிவுக்கு எப்பொழுதும் சிறுபான்மையினர் கட்டுப்பட வேண்டும் என்ற அவசியமில்லை. பத்து பேரின் ஒப்புதல் இல்லாமல், ஒரு நூறு பேர் மட்டும் ஒருவரை நியமிக்கும் உரிமையை எங்கிருந்து பெற்றார்கள்? எனவே ஏகமனதாகத்

தேர்ந்தெடுத்தல் என்ற முறையே சாலச் சிறந்தது என்கிறான் ரூசோ.

சமுதாயத்திற்குப் பணியாற்றுவது தான் மக்களின் முக்கியமான கடமை என்று எடுத்துரைக்கிறான் ரூசோ. சிலர் உழைப்பிற்குப் பதிலாகப் பணத்தின் மூலம் வரியை மட்டும் செலுத்தி விடுவார்கள். பின்னர் பொழுது போக்குகளில் காலத்தை வீணாக்கிக் கொண்டு, கேளிக்கைகளில் மூழ்கிக் கிடந்து விட்டு, தமது பிரதிநிதிகளை சட்ட சபைகளுக்கு அனுப்பி விடுவார்கள். அவ்வாறு செய்வது தேசப்பணியாகாது. இவ்வாறு சிலர், செல்வ சுகபோகங்களில் திளைத்து, சோம்பேறித்தனமான வாழ்க்கை வாழ்ந்து கொண்டு, இன்பங்களில் மூழ்கி தங்கள் நாட்டின் நலனையே மறந்து விடுகிறார்கள். அரசாங்கக் காரியங்களில் அலட்சியத்துடன் நடந்து கொள்ளும் பொதுமக்களைக் கொண்ட நாடு உருப்படாது. ‘யார் ஆண்டால் என்ன? அரசியலைப் பற்றி எனக்குக் கவலை இல்லை’ என்று கருதும் மனப்பான்மை மக்களிடம் இருந்தால், அந்த நாடு செத்து விட்டதாகவே கருதலாம். மனிதர்களின் தேவைகளை அறிந்து, அவர்களின் கவலைகளை மாற்ற அரசாங்கம் முயற்சி எடுக்காததால் மக்கள் அரசியலைப் பற்றிக் கவலைப்படாமல் தங்கள் பொறுப்பு முடிந்து விட்டதாக எண்ணுகிறார்கள். எனவே ஆட்சியாளர்கள், மக்கள் நலனில் உண்மையான அக்கறை கொண்டவர்களாக இருத்தல் அவசியம், என்பதனை ரூசோ தன் நூலில் வலியுறுத்துகிறான்.

## அரசியல் அறம்

### வலிமையான துணை

திருக்குறளில் பொருட்பாலில் வரும் எழுபது அதிகாரங்களும், ஆட்சி செய்யும் மன்னன், அவனுக்கு இருக்க வேண்டிய தகுதிப்பாடுகள், அவன் கண்டிக்க வேண்டிய தவறுகள், அவன் தெரிந்திருக்க வேண்டிய நுட்பங்கள், நாட்டின் பாதுகாப்பு, குடிமக்கள் நலம் ஆகியன பற்றிக் குறிப்பிடுகின்றன. நுணுக்கமாகவும், தெளிவாகவும்

அரசியலுக்கான அறங்களைத் திருவள்ளுவரைப் போல, பகுத்தும் தொகுத்தும் உரைத்தவர்கள் இல்லை. முறை தெரிந்து அரசு புரிய வேண்டிய ஒரு மன்னன், அறத்தின் தன்மையைத் தான் கற்கும் நூல்களில் இருந்து மட்டுமல்லாமல், தனது பட்டறிவாலும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். சிறந்த அறப் பண்பும் அனுபவ ஞானமும் உடைய பெரியோர்களிடம் கொள்ளும் நட்பானது, துன்பங்களை எல்லாம் நீக்கி, நல்லனவற்றைக் கொண்டு தர வல்லது. ஒருவன் தன் அறிவைப் பெருக்கிக் கௌ்ளவும், ஆளுமைத்திறம் பெறவும், பெரியோர்களைச் சுற்றமாக ஆக்கிக் கொள்ளுதல் வேண்டும். நீக்கப்பட முடியாத துன்பங்களை நீக்குவதற்கும், மாறாத வெற்றியைப் பெறுவதற்கும் காரணமாக அமையும் பெரியோர்களின் துணையே வல்லமையான துணையாகும், என்கிறார்.

"தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையு ளெல்லாந் தலை" (குறள் : 444)

## இடிப்பார் இல்லாதான்

ஒரு மன்னனை மகிழ்ச்சி அடையச் செய்வதற்காக, அவன் செய்கின்ற அனைத்துச் செயல்களையும், தரம் பிரித்துப் பார்க்காமல் பாராட்டி ஏற்றிப் போற்றும் பக்கத் துணைவர்கள் பகைவர்களை விட மோசமானவர்கள். குற்றம் கண்ட இடத்து வன்மையாகவும் கடுமையாகவும் சுட்டிக் காட்டித் திருத்தும் தகைமை உடைய பெரியோர்களே ஆட்சியாளனுக்கு உண்மையில் நன்மை செய்கிறார்கள். அவ்வாறு இடித்துத் திருத்த ஆளில்லாமல் போனால், ஒரு அரசன் விரைவாகக் கெட்டுப் போவான். கெடுக்கும் பகைவர்கள் இல்லாமலே, திருத்தும் பெரியோர்கள் இல்லாததனால், கெட்டுப்போன மன்னர்கள் நிறைய பேர் உண்டு.

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்" (குறள் : 448)

ஒரு மன்னனுக்கு ஏற்படுகின்ற மிகப் பெரிய கேடு, சான்றோர்களின் தொடர்புகளைக் கைவிடுவதனாலேயே

ஏற்படும். மற்றவர்களுடன் ஏற்படுகின்ற பகையைத் தன் அறிவாற்றலால், நுட்பமாகத் தெரிந்து கொண்டு, அதிலிருந்து தப்பிக்கும் வழி அறிந்து, கேட்டிலிருந்து விடுபடலாம். ஆனால் நல்லவர்களின் தொடர்பைக் கைவிடுவதால் ஏற்படும் கேட்டிலிருந்து தப்புவதற்கு ஒரு வழியும் ஏற்படாது. எனவே, பெரியோர்களின் துணையைக் கைவிடுதல் என்பது, ஒருவராக நின்று பலபேருடன் பகை கொள்வதால் வரும் தீமையைக் காட்டிலும் பத்து மடங்கு பெரியது என்கிறார் திருவள்ளுவர்.

"பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்" (குறள் : 450)

இந்த நானிலத்தை ஆளும் மன்னன், நல்லோர் சொல் கேட்டு நடக்க வேண்டியதன் அவசியத்தைத் தெளிவாகப் புலப்படுத்துகிறார் திருவள்ளுவர். இந்த நாடு, இந்த இனம் என்றில்லாமல், உலகின் பல பாகங்களையும் ஆட்சி செய்யும் ஆட்சியாளர்கள் ஆள்வினைத்திறம் பெற, அறம் உணர்ந்து நடக்க, பெரியோர்களின் துணை எவ்வளவு அத்தியாவசியம் என்பதைத் திருக்குறள் உணர்த்துகிறது.

## எண்ணிச் செய்தல்

ஒரு மன்னன் தான் செய்யும் செயல்களை ஆராய்ந்து செய்யும் திறன் உடையவனாய் இருத்தல் வேண்டும். அரிய செயல்களையும், எளிதாகச் செய்து முடிக்க வேண்டுமானால், செய்ய வேண்டிய செயலை, நன்றாக எண்ணிப் பார்த்து வினைத்திறம் உடையாரோடு கூடி, அச்செயல் பற்றி ஆராய்ந்து, சிறப்பாய்ச் செய்து முடித்தல் வேண்டும். தெளிவு இல்லாமல் தொடங்கப்படும் எந்த ஒரு செயலும் பாதியில் நின்று போய், தோல்வியில் முடியும். ஒரு செயலைச் செய்யத் தொடங்கும் போது, அதனைப் பற்றி முழுமையாகச் சிந்தித்துப் பார்த்து, செயல்படத் தொடங்க வேண்டும். ஆராயாமல் ஒரு செயலைச் செய்யத் தொடங்குதல், பகைவர்களுக்கே சாதகமான சூழலை உண்டாக்கும். செயலின் வகைகளை முற்றிலும் எண்ணிப் பார்க்காமல் செய்யத் தொடங்குவது, அவன் பகைவர்களுக்கே சாதகமான சூழ்நிலையை உண்டாக்கும். அதன்மூலம் பகைவர்கள்தாம்

வலிமை பெறுவர். ஒரு பாத்தியில் வளரும் நாற்றினைக் குறிப்பிட்ட அளவு வளர்ந்தபிறகு, பறித்து, மற்றொரு பாத்தியில் நட்டு வளர்ப்பது பயிரின் வளர்ச்சிக்கு முழுவதும் துணை புரியும். அதுபோல, செயல்களைப் பற்றிய திட்டவட்டமான சிந்தனை இல்லாமல் அரைகுறையாக ஒரு செயலைக் கவனக் குறைவுடன் தொடங்குபவன் தன் பகைவனின் வெற்றிக்கே வழி வகுத்து, மறு பாத்தியில் வைத்து வளர்க்கப்படும் நாற்றைப் போல, பகைவர்களின் திறத்தை வளர்ப்பதற்கு மறைமுகமாகத் துணைபோனவன் ஆவான்.

"வகையறச் சூழா தெழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பதோ ராறு" (குறள் : 465)

## வெற்றிக்கு வழி

தான் செய்யும் செயல்களை ஒரு அரசன் ஆராய்ந்து செய்ய வேண்டுமெனச் சொல்ல வரும் திருவள்ளுவர், செய்ய வேண்டிய செயல்களை ஒருவன் செய்யாமல் இருந்தாலும், செய்யக் கூடாத செயல்களை ஒருவன் செய்தாலும் கெட்டுப் போவது உறுதி என்கிறார். தெளிவில்லாத செயல், துன்பத்தைக் கொண்டு தரும் செயல், பயனில்லாத செயல், ஒருவனைக் கெடுப்பதற்கு ஏதுவான செயல் ஆகிய செய்யத் தகாதனவற்றை ஒருவன் செய்தால், கேடு அவனிடம் வந்து சேரும். தெளிவுடைய செயல், பெரும் பயன் விளைவிக்கும் செயல் போன்ற செய்யத்தகுந்த செயல்களை ஒருவன் செய்யா தொழிந்தால், கேட்டினை அவன் சந்திப்பது உறுதி. எனவே, தக்கன எவை, தகாதன எவை எனச் சிந்தித்து, தகுந்தனவற்றைச் செயல்படுத்தியும், தகாதனவற்றை விலக்கியும் செயல்பட வேண்டும் என்று அறிவுறுத்துகிறார் திருவள்ளுவர்.

சிலர் ஒரு செயலைச் செய்யத் தொடங்கு முன், அச்செயலை வெற்றியை நோக்கி நடத்திச் செல்லும் வழிமுறைகளைப் பற்றிச் சிந்திப்பதில்லை. தன்னளவில் எண்ணித் துணியாமல், ஒரு செயலில் இறங்கிய பிறகு, அதனை வெற்றிபெறச் செய்வதற்குப் பலரின் துணையை நாடினாலும், அச்செயலானது இடையிலேயே நின்று, நிறைவுபெறாமல் தோல்வியுறும். எனவே, தொட்ட செயல் கெட்டுப்போகாமல் இருக்க, வெற்றி வாய்ப்புகளை

எண்ணித் துணிந்து செயலில் இறங்க வேண்டும் என்ற உலக ஞானத்தை, தெளிவாய் எடுத்துரைக்கிறார் திருவள்ளுவர். ஆராயாமல் ஒரு செயலைத் தொடங்கிவிட்டு, அதை நிறைவேற்றுவதில் சிரமம் வந்தால், மற்றவர்களின் துணையை நாடிக் கொள்ளலாம் என்று அசட்டையாய் இருப்பவன் எந்த ஒருசெயலிலும் வெற்றி பெற மாட்டான் என்ற திருவள்ளுவரின் சிந்தனை, அரசருக்கு மட்டுமல்ல; அனைவருக்குமே பொருந்தும்.

"ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும்" (குறள் : 468)

ஒரு சிறந்த ஆட்சியாளன் தனக்குள்ள வலிமையை, மற்றவர்களுடன் ஒப்பு நோக்கிப் பார்த்து அளந்து, தன் வலிமையை நல்ல வண்ணம் அறிந்து கொள்ளுதல் அவசியமானதாகும். தான் செய்யும், செயலின் வலிமையையும் தன் வலிமையையும், பகைவனது வலிமையையும், இருவருக்கும் துணையானவரின் வலிமையையும் ஆராய்ந்து செயல்பட வேண்டும். ஒரு செயலைத் தொடங்கும்போது அந்தச் செயலின் வலிமை என்ன? அதைச் செய்து முடிப்பதற்குரிய தன் திறம் என்ன? ஒருவேளை பகைவர்கள் எதிர்த்தால், அவர்கள் வலிமை என்ன? செயலை நிறைவேற்ற இருக்கும் தனக்குத் துணை வருவாரின் வலிமை என்ன? அதை முறியடிக்க நினைக்கும் பகைவருக்குத் துணை நிற்போரின் வலிமை என்ன? என்கின்ற, இந்த ஐந்தையும் சீர்தூக்கிப் பார்க்கும் போது, தன்னுடைய வலிமையும் தன்னுடைய துணைவர்களின் வலிமையும் குறைவாக இருக்குமானால், எடுத்த செயல் தோல்வியில் முடியும் எனத் தெரிந்து, அதை விட்டு விலகுவதே சிறப்புடையதாகும். பகைவரின் வலிமையும், அவர்களைச் சார்ந்தோரின் வலிமையும் குறைவாக இருக்கும் போது, எடுத்த செயலானது வெற்றியுடன் முடியும் என்று தீர்மானித்து அச்செயலில் ஈடுபடலாம் என்கிறார் திருவள்ளுவர். ஒரு செயலைத் தேர்ந்தெடுக்கும் போதே, அச்செயல் தன் ஆற்றலுக்குப் பொருந்துமா? என்பதை ஆலோசித்து, அதன் தொடர்பாகத் தெரிந்து கொள்ள வேண்டியனவற்றை எல்லாம் முயன்று தெரிந்து கொண்டு, அதற்குப் பின்னால் அந்த முயற்சியில்

இறங்கிச் செயல்படுவோருக்கு, செய்ய இயலாதது என்று எதுவும் இருக்காது.

மனதில் ஏற்படும் ஒரு விருப்பத்தையும் எழுச்சியையும் மட்டும் காரணமாக வைத்துக் கொண்டு, ஒரு செயலைத் தொடங்கி, திறமைக் குறைவாலும், செயல் முடிக்கும் ஆற்றல் இல்லாமையாலும், இடையிலேயே முயற்சிகளைக் கைவிட்டு விட்டுப் போனவர்கள் உலகில் பலபேர் உண்டு. ஆசையையும், வெறும் மன ஊக்கத்தையும் வைத்துக் கொண்டு, ஒரு செயலைச் செய்து முடித்து விடலாம் என்று நினைப்பது எட்டாக் கனிக்கு ஆசைப்படுவது போல் ஆகும்.

**வலியறிதல்**

சிலர் தமது ஆற்றலின் அளவு எவ்வளவு என்பதைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல், தங்களைத் தாங்களே அதிகமாகப் பாராட்டிக் கொள்வார்கள். 'தன் ஆற்றல் இவ்வளவுதான்' என்று கணக்கிடத் தெரியாமல், தன்னையே வியந்து கொள்கிறவன் கெட்டுப் போவான். ஆற்றல் இல்லாமல் இருப்பது ஒருவனின் குற்றமல்ல, ஆனால் இருக்கும் சிறிய ஆற்றலையும், ஒருவன் பேராற்றலாகக் கருதிக் கொள்வதே பெரும் குற்றமாகும்.

**"ஒல்வ தறிவது அறிந்ததன் கண்தங்கிச்**
**செல்வார்க்குச் செல்லாதது இல்"** **(குறள் : 472)**

**"அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை**
**வியந்தான் விரைந்து கெடும்"** **(குறள் : 474)**

**காலமறிதல்**

வலியறிதலைப் போலவே, காலம் அறிந்து செயல் படுதலும், ஒரு ஆட்சியாளனுக்கு மிகவும் அத்தியாவசியமான பண்பாக அமைகிறது. பகைவரை வெல்ல நினைக்கும் அரசர்கள், அதற்கு ஏற்ற தகுதியான காலத்தைப் பற்றிச் சரியாக தெரிந்து வைத்திருக்க வேண்டும். மிகவும் வலிமை வாய்ந்த மன்னர்கள்கூட, காலத்தைச் சரியாகக் கணக்கிடாமல் போர்களைத் தொடங்கித் தோல்வியுற்ற பல வரலாறுகள் உண்டு. இச்செய்தியை தெளிவுபடுத்தும் திருவள்ளுவர்,

சிறந்ததொரு உவமையைக் கையாளுகிறார். காகத்தைவிட ஆந்தை வலிமை உடையதுதான். ஆந்தையைக் கண்டு காகம் அஞ்சும் தன்மை உடையதாகும். இருந்தாலும் ஆந்தைக்குக் கண் தெரியாத பகல் நேரத்தில், காக்கை ஆந்தையை வென்று விடும். ஆந்தை போன்ற பகைவரை வெல்ல நினைக்கும் அரசன், பகைவன் பலவீனம் அடையும் காலத்தை அறிந்து, செயலில் இறங்க வேண்டும். அவன் வலிமையுடன் இருக்கும் காலத்தில், அவனை வெல்ல நினைப்பது பயன் தராது. எனவே காலம் அறிந்து செயல்படுதல் எத்தனை அத்தியாவசியம்.

> **"பகல்வெல்லும் கூகையைக் காக்கை; இகல்வெல்லும்**
> **வேந்தர்க்கு வேண்டும் பொழுது"** (குறள் : 481)

ஆற்றல் மிகுந்தவனாய் ஒருவன் இருந்தாலும், அவன் செயலைத் தொடங்குவதற்குரிய காலத்தைப் பற்றிச் சரியாகச் சிந்திக்காமல், காலம் தவறிச் செயல்படத் தொடங்கினால், அந்த ஆற்றலினால் அவனுக்கு யாதொரு பயனும் இல்லை. வாய்ப்பான காலம் வரும் வரை, மனக்கலக்கம் இல்லாமல் காத்திருப்பதே அறிவுடையவர்களின் செயலாகும். மனதில் ஊக்கம் இருக்கிறது என்பதற்காகக் காலத்தைக் கணிக்காமல் செயலில் இறங்குவது கூடாது. ஒரு ஆட்டுக் கடா கூட, தன் பகையைச் சந்திப்பதற்கு முன்னால், தான் மோத வேண்டிய பகையின் வலிமையைத் தெரிந்து கொண்டு - பின்வாங்குவது போல அடங்கி இருந்து, பிறகு தாக்கி வெற்றி பெறும். அதுபோல ஊக்கத்தினால் சாதிக்கலாம் என்று காலம் கருதாமல் அவசரப்படுகிறவன் தோல்வியைச் சந்திப்பதைப் பார்க்கிறோம்.

## பகைவனை வெல்லும் உபாயம்

பகைவர்களை ஒரு அரசன் எவ்வாறு கையாள வேண்டும் என்பதையும், அவனுக்கு எவ்வளவு ராஜதந்திரம் தேவை என்பதையும் மிக அழகாய் எடுத்துரைக்கிறார் தெய்வப் புலவர். தமக்குரிய பகைவர், தம்மிடம் பகைமை பாராட்டினாலும், அவர்களிடம் வெளிப்படையாய் கோபம் கொள்ளாமல் இருப்பதுதான், அறிவுடையார் செய்யும் செயலாகும். வெளியில் சினத்தைக் காட்டாமல், அவர்களை

வீழ்த்தும் காலம் வரும்வரை, தம்முடைய மனதில் கோபத்தை அடக்கி வைத்திருக்க வேண்டியது அவசியம் ஆகும்.

"பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்து
உள்வேர்ப்பர் ஒள்ளி யவர்" (குறள் : 487)

பகைவர்கள் தம்மைவிட ஆற்றல் உடையவர்களாய் இருக்கும்போது, அவர்களிடம் சினம் அடக்கி, அவர்களைப் பொறுத்துச் செல்லவேண்டும். அவர்களைத் தாழ்ந்து பணிந்து, தலைமேல் சுமக்க நேர்ந்தாலும், கவலைப்படக் கூடாது. அவர்களுக்குரிய இறுதிக் காலம் வரும்போது, அப்பகைவர் தலைகீழாக வீழ்ந்துபடுவர். ஒரு அரசன் பகைவர்களிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதையும், காலம் அறிந்து செயல்படுவதன் அவசியத்தையும் திருக்குறள் எடுத்துரைக்கிறது.

## இடமறிதல்

வலிமையையும் காலத்தையும் அறிவதுடன் நில்லாமல் வெற்றி பெறுவதற்குரிய ஏற்ற இடத்தைப் பற்றியும் தெரிந்து வைத்திருப்பது மிகவும் அவசியமாகும். பகைவனை ஒரு மன்னன் முழுமையாக முற்றுகை செய்வதற்கு ஏற்ற இடத்தைப் பெறுகிற வரையிலும் எந்தச் செயலையும் தொடங்கக் கூடாது. தம்மைவிட வலிமையில் குறைந்தவர் என்று பகைவர்களை ஏளனம் செய்து விடவும் கூடாது. பகைவர்களை வளைப்பதற்குரிய சரியான இடம் கிட்டுவதற்கு முன்னால் செயலைத் தொடங்கினால் பகைவர்களின் முற்றுகைக்கு உட்பட்டு அழிய வேண்டிய நிலை வந்து சேரும். ஒரு செயலைச் செய்வதற்கு ஏற்ற இடத்தை அறிந்து, அந்த இடத்தைச் சார்ந்து இருந்து, அந்த இடத்தை விட்டு விலகாமல் அச்செயலைச் செய்து முடிக்க வேண்டும். அவ்வாறு செய்பவர்களை வெல்ல நினைக்கும் பகைவர்கள் 'இவனை வெல்லுதல் இயலாது' என்று தங்கள் எண்ணத்தை மாற்றிக் கொள்வார்கள். இடமறிந்து செயல்பட வேண்டும் என்று சொல்கிறார் திருவள்ளுவர். தலைசிறந்த அரணையும், நல்ல படைபலத்தையும் உடையவராக இருந்தாலும், பகைவர்கள் வாழ்கின்ற இடத்திற்குச் சென்று, அவர்களைத்

தாக்க நினைத்தால் வெற்றி பெறுவது மிகவும் அரிதாகி விடும். ஏனெனில் ஒவ்வொருவருக்கும் தாம் வாழும் இடத்தில் மிகுந்த ஆற்றல் உடையவர்களாகவே விளங்குவர்.

வெற்றி பெறுவது படைப் பெருக்கத்தினால் மட்டுமல்ல; அளவினால் சிறிய படையை உடைய ஒருவன் கூட, பகைவர்களால் வெல்ல முடியாதபடி பாதுகாப்பான தகுந்த இடத்தில் இருந்து கொண்டால், மிகப் பெரிய படையை உடையவன் கூட அவனை வெல்ல முடியாமல் திணறிப் போவான். படையின் வெற்றி, அதன் அளவில் அமைந்தது அல்ல; போர் செய்யும் இடத்தைப் பொருத்தும் வெற்றி தோல்வி நிர்ணயிக்கப்படுகிறது. ஒரு மன்னன் இடமறிந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தைச் சொல்லும் திருவள்ளுவர், மூன்று முக்கியமான உவமைகளின் மூலம் தம் கருத்தை விளக்கம் செய்கிறார். தண்ணீரில் இருக்கும் வரையில் ஒரு முதலைக்குப் பலம் இருக்கும். நீருக்குள் இருந்த முதலை, மிகவும் வலிமை உடைய விலங்காகிய யானையின் காலைப் பற்றி இழுத்ததாகப் புராணங்களில் படிக்கிறோம். எவ்வளவு பெரிய விலங்கையும், தண்ணீருக்குள் முதலை இருக்கும் போது வென்று விடும். ஆனால் அதே முதலை தண்ணீரை விட்டு விட்டு, நிலத்தில் கிடக்க வேண்டிய நிலைமை வந்தால், தன் ஆற்றல் முழுவதையும் இழந்து விடுவதோடு மிகச் சிறிய விலங்கு கூட முதலையை வென்று விடும். எனவே முதலையின் பலம் தண்ணீரில் இருக்கும் போது உயர்ந்து நிற்கிறது. இடம் மாறும்போது முதலையின் வலிமையும் குறைந்து விடுகிறது. எனவே பகைவர்களின் ஆற்றல் எந்த இடத்தில் நலிவடையும் என்பதை நன்றாகத் தெரிந்து கொண்டு, இடமறிந்து செயல்பட்டால் வெற்றி அடையலாம். தேரையும் மரக் கலனையும் வைத்து, இடனறிந்து செயல்படுதலின் சிறப்பை எடுத்துரைக்கிறது திருக்குறள்.

"கடலோடா கால்வல் நெடுந்தேர்; கடலோடும்
நாவாயும் ஓடா நிலத்து" (குறள் : 496)

பெரிய உருளைகளை உடைய உயரமான தேர் நிலத்தில் ஓடுமே தவிர, கடலில் ஓடாது. மிகப் பெரிய

மரக்கலங்கள் கடலில் ஓடுமே அல்லாமல், நிலத்தில் ஓடாது. அதுபோல யார் யார் எந்தெந்த இடங்களில் பலத்துடன் இருப்பார்கள் என்பதைப் புரிந்து கொண்டு இடத்திற்கு ஏற்பச் செயல்புரிதல் வேண்டும்.

ஒரு செயலைச் செய்யும் வழி வகைகளைக் குறைவில்லாமல் எண்ணி, இடத்தோடு பொருந்திச் செய்தால் ஏற்றம் பெறலாம். இருக்கும் இடத்தைப் பொருத்துத்தான் பலம் அமைகிறது என்பதைச் சேற்றுநிலத்தில் அகப்பட்டுக் கொண்ட ஒரு யானையின் நிலையைச் சொல்லிப் புரிய வைக்கிறார் திருவள்ளுவர். வேல் தாங்கிய வீரர்களைக் கூடத் தன் தந்தத்தால் குத்திக் கொன்று, அவர்களின் உடல்களைக் கொம்புகளில் கோர்த்துக் கொள்கிற அஞ்சாத யானைகள் கூட, சேற்று நிலங்களில் அகப்பட்டுக் கொண்டால் எவ்வளவு பலம் இருந்தாலும், வெளியே வர முடியாமல் திணறிப் போகும். சேற்றுக்குள் இருக்கும் யானை எவ்வளவு பலம் உடையதானாலும், அதன் பலம் செயல்பட முடியாமல் பயனற்றுப் போகும். அந்த நிலையில் ஒரு சிறு நரிக்கூட்டம் கூட யானையைக் கொன்று விடும். உருவத்தில் பெரிய யானை, அது இருக்க வேண்டிய இடத்தை விட்டு விட்டு, சேற்றில் மாட்டிக் கொண்டால், மிகச் சிறிய உருவம் கொண்ட நரி கூட அதனை வென்றுவிடும். எனவே, இடம் அறியாது செயல்படும் போது, ஆற்றல் உடையவர்களை ஆற்றல் அற்றவர்கள் கூட வென்று விடுவார்கள்.

> "காலாழ் களரில் நரியடும் கண்ணஞ்சா
> வேலாள் முகத்த களிறு" (குறள் : 500)

## நல்ல துணையைத் தேர்தல்

ஒரு அரசனானவன், தனக்கு உதவி செய்பவனின் இயல்புகளை ஆராய்ந்து தெளிதல் அவசியமானதாகும். தனக்குத் துணையாக ஒருவனை அமர்த்துவதற்கு முன்னால், ஒரு அரசன் எவைகளை எல்லாம் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும் என்பதைக் குறிப்பிடுகிறார் திருவள்ளுவர். அறம், பொருள், இன்பம், உயிருக்காக அச்சம் ஆகிய நான்கு வகையாலும் ஆராயப்பட்ட பிறகே ஒருவனைத் தனக்குத்

துணைவனாக அமர்த்துவது பற்றி முடிவு செய்யவேண்டும் என்கிறார். முதலில் அவன் அறவழி நடக்கிறவனா? என்று பார்க்க வேண்டும்; இரண்டாவதாக, அவன் தீய வழியில் பொருள் சேர்ப்பதைத் தவிர்த்து, நல்ல வழியில் பொருளை ஈட்டுகிறவனா? என்று பார்க்க வேண்டும்; மூன்றாவதாக, அவன் அனுபவிக்கும் இன்பம், மனச்சாட்சிக்கு உகந்ததாக, அறவழிப்பட்டதாக இருக்கிறதா? என்று பார்க்க வேண்டும்; நான்காவதாக, சமயம் வாய்க்கும் போது, உயிருக்கு அஞ்சாமல் உதவும் தன்மை, அவ்னுக்கு இருக்கிறதா? எனப் பார்த்து, அவனைத் துணையெனக் கொள்ள வேண்டும். அவ்வாறு பார்க்காமல், யாரையும் துணைக்குச் சேர்ப்பது நல்லதல்ல. குற்றங்களில் இருந்து விடுபட்டவனாக இருக்கும் ஒருவனே துணையெனத் தேர்ந்து கொள்ளத் தக்கவன்.

சிலர் அறிவு ஆற்றலில் மிகுந்து இருந்தாலும், கொஞ்சமும் செயல்திறன் அற்றவராய் இருப்பர். அத்தகையோரின் அறிவாற்றல் எதற்கும் பயன்படாது. அதுபோல நிரம்ப அறிவுடையவராய் இருப்பினும், மக்களிடம் தொடர்பு உடையவராய் இல்லாதவரைத் துணையாகக் கொள்ளுதல் ஆகாது. ஏனெனில், மக்களுடன் கலந்து பழகாதவர், பெரும்பாலும் அன்பு இல்லாதவர்களாகவே இருப்பர். சிலர் அறிய வேண்டியனவற்றை அறியாதவர்களைக் கூடத் துணைவர்களாக ஏற்றுக் கொள்வார்கள். அவர்கள்பால் தாங்கள் வைத்திருக்கும் அன்பை மட்டுமே கணக்கில் எடுத்துக் கொண்டு, அவர்களின் ஆற்றலையும் அறிவையும் பற்றிக் கவலைப்படாமல், அத்தகையோரை துணையெனக் கொள்ளும் போது, அறியாமையினால் வரும் அனைத்துக் கேடுகளையும் சந்திக்க வேண்டிய நிலை வரும். ஒருவனை நம்பி அவனைத் துணையெனக் கொள்வதற்கு, அவன் மேல் கொண்ட அன்பு மட்டும் காரணமாய் அமைந்துவிடக் கூடாது. அவனுடைய அகப் பண்புகளை ஆராய்ந்தே முடிவு செய்ய வேண்டும்.

ஒருவனைத் துணையெனக் கொள்ளும் போது, அவன் தனக்கு மட்டுமல்லாது வழிவழியாய் தனது சந்ததிக்கும் நன்மை செய்பவனாய் இருக்க வேண்டும் என்பதையும் எண்ணிச் செயல்பட வேண்டும். ஆராயாமல்

ஒருவனைத் துணையெனக் கொண்டால், அந்தக் குற்றமானது அவனைத் தேர்ந்தெடுத்தவனுக்கு மட்டுமல்லாது வழி வழியாய்வரும் அவன் பரம்பரைக்கே தீங்கு செய்யும். எவ்வளவுதான் ஒருவன் தகுதி படைத்தவனாய் இருந்தாலும் ஆராயாமல் தெளிதல் கூடாது. ஆராய்ந்து தெளிந்த பின்னும், எந்தச் செயல் செய்வதற்கு அவன் தகுதி உடையவன் என்பதை முடிவு செய்து, அந்தச் செயலை அவனிடம் ஒப்படைக்க வேண்டும். 'அற்றாரைத் தேறுதல் ஓம்புக' என்று தொடங்கும் திருக்குறளுக்கு உரை விளக்கம் செய்யும் டாக்டர் மு.வ. அவர்கள், சுற்றத்தாரின் தொடர்பு அற்றவரை நம்பித் தெளிதல் கூடாது என்கிறார். ஏனெனில் உலகப் பற்று இல்லாதவர் பழிக்கு நாணுவதில்லை என்று பொருள் உரைக்கிறார். துணையென ஒருவரைத் தேர்ந்து கொள்ளும் முன்னால் எவ்வாறு சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும் என்பதனை மிகவும் விளக்கமாகத் திருவள்ளுவர் நமக்கு எடுத்துரைக்கிறார்.

"அறம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்
திறந்தெரிந்து தேறப் படும்" (குறள் : 501)

"அற்றாரைத் தேறுதல் ஓம்புக மற்றவர்
பற்றிலர் நாணார் பழி" (குறள் : 506)

"காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்
பேதைமை யெல்லாம் தகும்" (குறள் : 507)

**செயலாக்கம்**

செயலாற்றத் தெரிந்தவனைக் கொண்டு, ஒரு செயலைச் செய்து முடிப்பதை 'தெரிந்து வினையாடல்' எனக் குறிக்கிறார் திருவள்ளுவர். அரசனால் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட ஒரு செயல், அரசனுக்கு நன்மை பயக்குமா, தீமை பயக்குமா என்பதைத் தெளிவாக ஆராய்ந்து, தீமை பயப்பனவற்றைத் தள்ளிவிட்டு, நன்மை பயப்பனவற்றை விரும்புகின்ற இயல்புடையவனே செயலாற்றத் தெரிந்தவனாகக் கருதப்படுவான். அவனுக்கு அன்பு, அறிவு, ஐயம் இல்லாமல் தெளிந்து தேறும் ஆற்றல், அதிகப்படியான ஆசையின்மை ஆகிய குணங்கள் இருக்க

வேண்டும். யார் தன்னைப் பணியில் அமர்த்தினார்களோ, அவர்களிடத்தில் ஒரு இயல்பான அன்பும், குறிப்பிட்ட செயலைப் பற்றித் தெரிந்து வைத்திருக்கும் அறிவும், அதைச் செய்து முடிக்கும் தெளிவான திறமையும், பிறர் பொருளின் மேல் ஆசைப்படாமல் இருக்கும் நல்ல தன்மையும் உடையவனே எந்த ஒரு செயலையும் பிழையில்லாமல் செய்து முடிப்பான்.

அறிவுத் திறமும் செயலாற்றலும் உடையவர்களும் அதிகப்படியான பொருள் ஆசையினால், தம் பால் அன்புடையார்க்கும் நம்பிக்கையுடன் நடவாமல் கேடு சூழ்வதை உலகத்தில் பார்க்கின்றோம் தொடக்கத்தில் மனத் தூய்மை உடையவர்களாக இருப்பவர்களும் செயலாற்றத் தொடங்கிய பிறகு, பதவி பணம் இவைகளின் மேல்கொண்ட ஆசையினால் முகம் திரிந்து, வேறுபடுவதைப் பார்க்கின்றோம். எனவே ஒரு செயலைத் தேர்ந்தெடுத்து ஒருவனிடம் ஒப்படைத்த பிறகும், அந்தச் செயல் முற்றுப்பெறும் வரையிலும், அவனை மிக விழிப்பாகக் கண்காணித்தல் வேண்டும். சின்னச் சின்ன வேறுபாடுகள் அவனிடம் வெளிப்பட்டாலும் செய்யும் செயலில் இருந்து அவனை விடுவித்து விடவேண்டும். எத்தனை இடர்ப்பாடுகளைச் சந்திக்க நேர்ந்தாலும், அந்தத் தடைகளை எல்லாம் தாண்டி, வரும் துன்பங்களைத் தாங்கி, ஒரு செயலைச் செய்து முடிக்கும் திறம் படைத்தவன் என்று தெரிந்து, அவனது அறிவு, ஆற்றல், பொறுமை, விடாமுயற்சி இவைகளைக் கருத்தில் கொண்டு, ஒரு செயலை அவன் பொறுப்பில் விடுதல் வேண்டும். ஒருவன் அன்பில் சிறந்தவன் என்பதற்காக மட்டும் அவனை நம்பி ஒரு செயலை ஒப்படைப்பது தோல்வியில் முடியும். ஒரு உளவியல் வல்லுநரைப் போலத் திருவள்ளுவர் பேசும் இக்கருத்துக்கள் இன்றும் ஏற்றுக் கொள்ளத்தக்கனவாக அமைந்திருப்பதைப் பார்க்கலாம்.

## இதனை இவன் முடிக்கும்

ஒரு செயலைச் செய்பவனின் மன இயல்பை முதலில் ஆராய்தல் வேண்டும். பின்னர் அவன் செய்கின்ற செயலின்

இயல்பினை ஆராய வேண்டும். அதன் பிறகு அவன் இயல்பும், செயலின் இயல்பும் பொருந்துகிறதா என்று பார்த்தல் வேண்டும். பின்னர் செய்யப்படும் செயல் காலத்தோடு பொருந்துமா என்று கருதிப் பார்க்க வேண்டும். இத்தகைய பொருத்தங்கள் இருக்குமாயின் இந்தச் செயலை, இக்காலத்தில், இன்ன வழியில், இன்னாரைக் கொண்டு, செய்து முடிக்க வேண்டும் என்று துணிதல் வேண்டும். ஏனென்றால் சில குறிப்பிட்ட செயல்களை ஒரு சிலரே செய்து முடிக்க முடியும். ஒருவனே அனைத்துச் செயல்களையும் சிறப்பாகச் செய்து விட முடியும் என்பது சாத்தியமில்லை. எனவே எந்தச் செயலை, யார் திறம்படச் செயல்படுத்துவர் என்பதை நன்கு ஆராய்ந்து பார்த்து, அவர்களிடமே அந்தச் செயலை விடவேண்டும்.

**"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து**
**அதனை அவன்கண் விடல்"** **(குறள் : 517)**

இவ்வாறு சரியான முறையில் செயலாற்றும் சிலரை மன்னன் சில காலகட்டங்களில் தவறாகப் புரிந்து கொள்ள நேரிடுகிறது. தான் மேற்கொண்ட ஒருசெயலை, முழு நேரமும் முழு முயற்சியுடன் செய்கின்ற ஒருவனை, ஒரு அரசனோ தலைவனோ தவறாகப் புரிந்து கொண்டால், அவனை விட்டு, அவனது செல்வம் நீங்கி விடும் என்று எச்சரிக்கை செய்கிறார் திருவள்ளுவர். எனவே இடைவிடாத முயற்சியும் செயல்திறமையும் கேண்மையும் உடையவனை எக்காலத்திலும் தவறாகப் புரிந்து கொள்ளுதல் கூடாது.

**"வினைக்கண் வினையுடையான் கேண்மை வேறாக**
**நினைப்பானை நீங்கும் திரு"** **(குறள் : 519)**

தனது ஆட்சியில் ஒரு மன்னன் என்னென்ன தீமைகளை விலக்க வேண்டும் என்பதனையும் திருவள்ளுவர் குறிப்பிடத் தவறவில்லை. தீயொழுக்கம் உடைய பொருட் பெண்டிர் என்னும் பொது மகளிர் தொடர்பாலும், கள்ளாலும், சூதாலும் சமூகம் சீர்கெட்டு விடாமல் காப்பது ஒரு மன்னனின் தலையாய கடமை என்பதை வரைவின் மகளிர், கள் உண்ணாமை, சூது ஆகிய மூன்று அதிகாரங்களில் எடுத்துரைக்கிறார் திருவள்ளுவர்.

## மக்கட் பண்பு

ஒரு அரசனின் ஆட்சிக்குட்பட்ட குடிமக்கள் எத்தகைய இயல்புகளோடு இருத்தல் வேண்டும் என்பதனைக் குடியியலில் திருவள்ளுவர் எடுத்துரைக்கிறார். தகுதியில்லாத செயல்களைச் செய்ய உடன்படாமல், குற்றமற்ற குடிப் பண்புடன் குடிமக்கள் வாழ்தல் வேண்டும். வறுமையைக் காரணம் காட்டி வஞ்சனையைக் கையாண்டு, தகுதியில்லாத செயல்களைச் செய்து வசையுடன் வாழும் வாழ்வை குடிமக்கள் வெறுத்து ஒதுக்க வேண்டும். இன்சொல், ஈகை, ஆகிய நற்பண்புகளோடு இரக்கமும் உடையவனாக ஒருவன் இருத்தல் வேண்டும். அனைவருக்கும் பணிவு உடையவனாகவும், தன்னில் பெரியாரிடத்தில் மரியாதை உடையவனாகவும், தன்னை விட மெலியாரிடத்தில், இன்சொல்லும், இரக்கமும் உடையவனாகவும் இருத்தலே நல்ல குடியில் பிறந்தவர்க்கு உரிய பண்புகள் ஆகும். எப்பொழுதும் நெறியுடன் வாழும் மேன்மையைக் குடிமக்கள் கைக்கொள்ளுதல் வேண்டும். சிறந்த புகழோ, உயர்ந்த பதவியோ கிடைப்பதாக இருந்தால் அவற்றைப் பெறுவதற்காக உயர்ந்த குணமுடையோர் இழிவான செயல்களைச் செய்ய மாட்டார்கள். செல்வம் பெருகியுள்ள காலத்தில் எல்லோரிடத்திலும் பணிவாக நடந்து கொள்வது ஒருவனுக்கு மேன்மையைத் தரும். வறுமை வந்துற்ற காலத்தில் செம்மையாய் இருத்தல் வேண்டும். தன் நிலையில் இருந்து ஒருவன் தாழ்ந்தால், அவன் அனைவராலும் இகழப்படுவான். குடிப் பிறப்பால் மலைபோல் உயர்ந்தவனாயினும், தரம் தாழ்ந்து போவதற்கு உரிய செயல்களை ஒரு குன்றிமணி அளவு செய்தாலும், தன் நிலையில் தாழ்ந்து உயர்ந்தவர்களின் பழிச்சொல்லுக்கு ஆளாவான். அவன் நிலை ஒரு துளி நஞ்சு விழுந்த பாலைப் போல் ஆகும். மேன்மக்கள் உயிரை விட்டாலும் விடுவரே அல்லாமல், மானம் அழிந்து தம்மை இகழ்வாரைப் போற்றி வாழ விரும்ப மாட்டார். புறத்தில் மிகுதியான சிறப்புகளைக் கொண்டவன் ஆனாலும் அகத்தில் ஒழுக்கம் இல்லாதவனாய் இருக்கும் ஒருவனை உயர்ந்தோர் பழிக்கும் நிலை ஏற்படும்.

"ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு" (குறள்:974)

## பழிபடர வாழ்தல் தீது

ஒரு நல்ல குடிமகன் பழிக்கு அஞ்சுகிறவனாக இருப்பான். இழிந்த செயல்களைச் செய்வதற்கும், பொருந்தாத செயல்களைச் செய்வதற்கும், ஒருவன் உள்ளத்தால் கூசி ஒடுங்குதல் வேண்டும். நல்ல மக்களுக்கு நாணுடைமையே சிறப்பைத் தரும். உயிர் உடலைக் கொண்டு இயங்குவதைப் போல, சால்பு என்பது, நாணம் என்று சொல்லப்படும் நல்ல தன்மையை இருப்பிடமாகக் கொண்டதாகும். எனவே ஒரு நல்ல குடிமகன் பிறருக்கு ஏற்படும் பழிக்காகவும் தனக்கு ஏற்படும் பழிக்காகவும் நாணுதல் வேண்டும். அவ்வாறு பழிக்கு அஞ்சாது வாழ்பவன் உலகத்தில் வாழும் வாழ்க்கை, மரத்தால் செய்த ஒரு பாவையைக் கயிறு கொண்டு ஆட்டி, உயிர் உள்ளதாகக் காட்டுதல் போன்றது.

"நாண்அகத் தில்லார் இயக்கம் மரப்பாவை
நூலால் உயிர்மருட்டி யற்று" (குறள் : 1020)

அகத்தே நாணம் இல்லாதவன், பிற மக்களைப் போலவே உண்டும் உடுத்தியும் உலாவியும் வந்தாலும், அவனை உயிரற்ற நடைப்பிணமாகவே கருத வேண்டும் எனச் சொல்லும் திருவள்ளுவரின் சிந்தனை, பழிபடராத வாழ்வின் சிறப்பை உணர்த்தும்.

எத்தகைய இடையூறுகள் ஏற்பட்டாலும், தன் குடிப் பெருமைக்கு உரிய கடமையைச் செய்வதற்கு, நான் ஒருநாளும் சோர்வடைய மாட்டேன் என்று ஒருவன் முயற்சி செய்வது, அவனுக்கு மிகுந்த பெருமையை உண்டாக்கும். அப்படிப்பட்டவனுக்குத் தெய்வமே தன் ஆடையை இறுக்கிக் கட்டிக் கொண்டு, ஓடி வந்து முன் நின்று உதவி நிற்கும். போர்க்களத்தில் நின்று சாதிக்கும் வீரனைப் போலச் செயலாற்றும் தகுதி படைத்தோரை நம்பியே ஒரு குடியின் சிறப்பும் பெருமையும் இருக்கிறது. சோம்பல் கொண்டு, வினையாற்றலைப் பற்றிக் கவலைப்படாமல்,

காலம் தாழ்த்துபவன் தன் குடியே கெட்டுப்போவதற்கு வழி செய்கிறவன் ஆவான். அடிமைத்தனம், அறியாமை, வறுமை ஆகிய மூன்று விதமான குற்றங்களும் சமூகத்திற்கு ஏற்படாதவாறு அதனைக் காப்பாற்றக் கூடியவனாக ஒருவன் இருத்தல் வேண்டும். ஒரு மிகப் பெரிய ஆலமரத்தை வெட்டி வீழ்த்த முயற்சி செய்தால், மரம் நிலைகுலைந்து வீழ்ந்து விடாதபடி தாங்கி நிலைநிறுத்துவது மரத்தின் விழுதுகள் ஆகும். அதுபோலத் தான் சார்ந்த குடிக்குத் துன்பம் வரும்போது, அதனை விலக்க வல்ல துணிச்சல் மிகுந்த துணையாக ஆடவன் இருத்தல் வேண்டும்.

> "இடுக்கண்கால் கொன்றிட வீழும் அடுத்தூன்றும்
> நல்லாள் இலாத குடி" (குறள் : 1030)

ஆட்சியாளர்களுக்கு அறம் சொன்ன திருவள்ளுவர், சமூகத்தில் வாழும் மக்கள் கடைப்பிடித்து நடக்க வேண்டிய பல நல்ல பண்புகளையும் எடுத்துரைக்கத் தவறவில்லை. பொதுமகளிரின் தொடர்பை நீக்கி, கள்ளினை வெறுத்து ஒதுக்கி, வென்றாலும் சூது வேண்டாம் என்றிருக்கும் திண்மையுடன் குடிமக்கள் வாழ்ந்தால், ஒரு சமூகம் எல்லா வகையிலும் சிறப்புப் பெறும். ஒரு நாட்டில் குடிமக்கள் நல்லனவற்றை நாடும் மனம் உடையோராய், பழிக்கு அஞ்சி, நெறி சார்ந்த வாழ்க்கையின் மேல் நாட்டம் கொண்டு, தங்கள் நிலையில் திரியாமல், ஒழுக்கத்தை உயிரினும் மேலானதாகக் கருதி, எவ்வளவு செல்வத்தைப் பெற்றிருந்தாலும் பணிவும் இன்சொல்லும் உடையோராய் விளங்கி, அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை ஆகிய சால்புகளைப் பெற்று, நல்ல இயல்புகளுடன் நயம் தெரிந்து நடக்கும் பண்புடைமையைப் பேணி, புகழொடு பொருந்தாச் செயல்களை நீக்கி, தான் சார்ந்த குடியின் பெருமையை உயர்த்தும் ஊக்கம்கொண்டு, விடாமுயற்சி உடையவர்களாய் ஆள்வினை உடைமையும், செயலாற்றும் திறமையும் கொண்டு, அறியாமை, வறுமை, துன்பம் இவற்றினைப் போக்கும் தகுதி படைத்தவராய் இருக்க வேண்டியது கடமை ஆகும் என்று குடியியலில் எடுத்துரைக்கிறார் திருவள்ளுவர்.

## வேலன்று வெற்றி தருவது

### முடிவும் வழியும்

திருவள்ளுவர் வாழ்ந்த காலத்தில் நடைபெற்றது முடியாட்சியே ஆயினும், அவரது அரசியல் சிந்தனைகள் இன்று நடைபெற்றுவரும் குடியாட்சிக்குப் பொருத்தமாக அமைந்துள்ளதைப் பார்க்கிறோம். குறிப்பிட்ட சாதிக்கும், மதத்தவர்க்குமே அறம் கூறி வந்த நூல்கள் நடமாடி வந்த காலத்தில், 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற சங்கப் புலவனின் சிந்தனையின் அடிப்படையில், அனைவருக்கும் அன்றும் இன்றும் என்றும் பொதுவான அறம் உரைக்கும் நூலாகத் திருக்குறள் விளங்கி வருகிறது. திருக்குறள் சொல்லாத உயர்ந்த கோட்பாடுகள் எதுவும் இல்லை. எந்த ஒரு சமயத்தையும் தழுவி நில்லாமல், எந்த ஒரு சமூகத்தையும் சாராமல், உலகை முன்னிறுத்தி அறம் உரைத்ததே திருவள்ளுவரின் சிறப்பாகும்.

மேலை நாடுகளில் வாழ்ந்த மாக்கியாவெல்லி, அரிஸ்டாட்டில் ஆகியோரையும், கீழை நாட்டில் சாணக்கியரையும் வெற்றி காணும் அளவிற்கு உயர்நெறி உரைத்த பெருமை திருவள்ளுவரின் தனிப்பெரும் சிறப்பாகும். முடிவு சரியானதாக இருக்கும்போது, வழிமுறைகள் எப்படி இருந்தாலும் கவலைப்படத் தேவை இல்லை (The end justifies the means) என்பதுவே மாக்கியா வெல்லியும், சாணக்கியனும் ஏற்றுக் கொண்ட அரசியல் நெறியாகும். திருவள்ளுவரின் நெறி அத்தகையதல்ல. முடிவு மட்டும் சரியாக அமைந்தால் போதாது. அந்த முடிவை எட்டுவதற்குப் பின்பற்றப்படும் வழிமுறைகளும் சரியாக அமைதல் வேண்டும் என்பதே திருவள்ளுவரின் தெளிந்த சிந்தனையாகும். விவிலியம், திருக்குரான் முதலிய மறைநூல்கள் கூட குறிப்பிட்ட சமயத்தாருக்கே அறம் கூறுகின்றன. அனைத்துத் தரப்பாரும் ஏற்றுக் கொள்ளும் பொதுமை அறநெறியை வழங்கியவர் திருவள்ளுவர்.

## எது வளநாடு?

நல்ல நீர்வளமும், நில வளமும், பயிர் வளமும் ஒருங்கே இணைந்த நாடாக ஒரு நாடு இருந்தாலும், அந்த நாடு நற்பண்புகள் நிறைந்த ஒரு நல்லவனைச் சீரிய தலைமையாகப் பெற்றிருக்கவில்லையெனில் வளநாடாகாது.

**'நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே**
**மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்'**

என்று பழந்தமிழ்ப் புலவர்கள் குறிப்பிட்டதைப் போல, நல்லாட்சி நடைபெறாத ஒரு நாட்டில், என்ன வளங்கள் இருந்தாலும் பயனில்லை. முடியாட்சிக் காலத்தில், ஒரு நல்ல மன்னன் அரசாட்சி செய்ய வேண்டும் என்று விரும்பியதைப் போல, குடியாட்சி காலத்தில், ஒரு நல்ல ஆட்சித் தலைமை அமைதல் வேண்டும் என்று எடுத்துக் கொண்டு, திருவள்ளுவரின் சிந்தனைகளை இக்கருத்தோடு பொருத்திப் பார்த்துச் சிந்திக்கலாம். ஒரு மன்னன், என்னென்ன சிறப்புக்களை உடையவனாக இருக்க வேண்டும் என்று திருக்குறள் குறிப்பிடுகிறதோ, அந்தந்தச் சிறப்புக்கள் ஆட்சியாளர்களிடத்தில் காணப்படுகிறதா என்று பொருத்திப் பார்க்கலாம்.

## நல்லரசின் தன்மைகள்

படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்று கூறப்படும் ஆறு அங்கங்களையும் உடையவனே அரசரில் ஏறு போன்றவன் ஆவான், என்கிறது திருக்குறள். வலிமை மிகுந்த படை, ஒழுக்கமுடைய மக்கள், செழிப்பான செல்வம், நேர்மை உடைய அமைச்சர்கள், அயல்நாட்டவருடன் நட்புறவு, பாதுகாப்பைத் தரவல்ல கோட்டை கொத்தளங்கள் எனச் சொல்லப்படுகிற ஆறுவிதமான சிறப்புக்களையும் உடையவனே நல்லரசு செய்ய இயலும். இந்த ஆறினுள் ஏதாவது ஒன்று குறைந்தாலும் அரசியல் நிலைத்து நில்லாது. ஆறுவிதமான புறத்து உறுப்புக்களைப் பற்றிப் பேசும் திருவள்ளுவர் நான்கு அகத்து உறுப்புக்களைப் பற்றியும் பேசுகிறார். எதற்கும் பயப்படாத தன்மை, இல்லாதவருக்குக் கொடுத்து உதவும் ஈகைப் பண்பு, அரசியல் பற்றிய தெளிந்த

அறிவு, சோர்வில்லாத, இடைவிடாத முயற்சி இந்த நான்கு சிறப்புக்களும் ஒரு அரசனிடமோ அல்லது ஆட்சியாளனிடமோ குறைவின்றி இருத்தல் வேண்டும்.

> "படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்
> உடையான் அரசருள் ஏறு" (குறள் : 381)

> "அஞ்சாமை ஈகை அறிவுஊக்கம் இந்நான்கும்
> எஞ்சாமை வேந்தற்கு இயல்பு" (குறள் : 382)

## மன்னனின் பண்புகள்

நாட்டை ஆளும் மன்னனிடம் இருக்க வேண்டிய முக்கியமான மூன்று அம்சங்களை எடுத்துரைக்கும் திருவள்ளுவர், அரசு கடமைகளை ஆற்றுவதில் காலம் தாழ்த்தாமையும், அரசின் வினைகளை அறிய உதவி செய்யும் கல்வி அறிவைப் பெறுவதையும், அவ்வினைகளை ஆற்றத் துணைபுரியும் மன உறுதியையும், ஆட்சியாளனுக்கு இருக்க வேண்டிய மூன்று பண்புகளாகக் குறிப்பிடுகின்றார். அவனது தகுதிப்பாட்டினைச் சொல்லவரும்போது, ஆட்சிமுறைக்கென்று வகுக்கப்பட்ட அறநெறியில் தவறாது இருத்தல், அறம் அல்லாத செயல்களை விட்டு விலகுதல், போர் வீரத்தில் குற்றமில்லாத பெருமையுடன் இருத்தல் ஆகிய மூன்று தகுதிகளைக் குறிப்பிடுகின்றார். பகைவர்களாலும், கள்வர்களாலும் மக்களுக்கு ஏற்படும் அச்சத்தைப் போக்கி அவர்களது பாதுகாப்பிற்கான உத்தரவாதத்தை வழங்கும் தகுதி உடையவனே, தகுதி வாய்ந்த தலைவனாவான் என்கிறார் திருவள்ளுவர்.

## நான்கு கடமைகள்

அரசனுக்கென்று இருக்கும் கடமைகளில், முக்கியமான நான்கு கடமைகளைத் திருக்குறள் வலியுறுத்துகிறது. தான் ஆட்சி செய்யும் நாட்டின் பொருளாதாரத்தை இடைவிடாமல் பெருக்கிக் கொண்டே இருப்பது, இவ்வாறு பெருகிய பொருட்களைச் சேர்த்து வைப்பது, சேர்த்த பொருளைப் பிறர் பறித்துவிடாமல் காப்பது, காத்தனவற்றைத் திட்டமிட்டு, பொதுநல செயல்களுக்குப் பகிர்ந்து அளிப்பது.

இந்த நான்கு வினைகளையும் ஒரு ஆட்சியாளர் செம்மையாக ஆற்ற வேண்டும் என்கிறது திருக்குறள். தேவைப்பட்டவர் களுக்குப் பொருளை வழங்கி, எல்லோரிடமும் அன்பு பாராட்டி நேர்மையான முறையில் ஆட்சி நடத்தி குடிமக்களைக் காப்பாற்றும் நான்கு கடமைகளையும் முறையாகச் செய்பவன் அரசர்களுக்குள் ஒளி விளக்கைப் போன்றவன் ஆவான்.

> "கொடைஅளி செங்கோல் குடிஓம்பல் நான்கும்
> உடையான்ஆம் வேந்தர்க்கு ஒளி" (குறள் : 390)

நடுநிலைமை தவறாமல், அரசாட்சிசெய்து, குற்றம் செய்தவர்கள் தன் குடும்பத்து உறுப்பினரானாலும் தண்டித்து, நீதியைக் காப்பாற்றும் ஒரு மன்னனை மக்கள் இறைவனுக்கு நிகராகக் கருதிப் பார்ப்பார்கள். இனிமையாகப் பேசுகின்றவனாகவும், இரந்து வருவாருக்குப் பொருளைக் கொடுத்து உதவுபவனாகவும், தன்னை எந்த நேரத்திலும் மக்கள் எளிதில் காண்பதற்கு எளிமையானவனாகவும் ஒரு ஆட்சியாளன் இருந்தால் அவனை உலகமே போற்றும். இவ்வாறெல்லாம், ஒரு மன்னன் எத்தகைய தன்மை உடையவனாக இருக்க வேண்டும் என திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளாரோ அவை அனைத்தும் இக்காலத்து ஆட்சியாளர்களிடம் இருக்க வேண்டிய பண்புகள் என்று எண்ணிப் பார்க்கலாம்.

## செங்கோன்மை

செங்கோன்மை, கொடுங்கோன்மை ஆகிய இரண்டையும் பற்றிய செய்திகள் திருக்குறளில் இடம் பிடிக்கின்றன. கொடுங்கோன்மையை எதிர்த்து ரூசோ எழுப்பிய குரல்தான் 'சமுதாய ஒப்பந்தம்' என்ற நூல். ஆட்சியாளர்களிடம் மக்கள் என்ன எதிர்பார்க்கிறார்கள், அவர்கள் எவ்வாறு நடந்து கொள்ளுதல் வேண்டும் என்பதைக் குறிப்பிடும் ரூசோ, 'தன் ஆட்சியின் கீழ் வாழும் மக்கள் செய்த குற்றங்களை ஆராய்ந்து, எவரிடத்தும் பாரபட்சம் காட்டாது, நடுநிலைமை தவறாமல் அக்குற்றங்களுக்கு ஏற்ற தண்டனைகள் பொருத்தமாகத்

தீர்மானித்துத் தீர்ப்பு வழங்குவது செங்கோல் முறையாகும். உற்றவர்களே தவறு செய்தாலும், மற்றவர்கள் செய்த தவறு போல் அதைப் பாவித்து உரிய தண்டனை வழங்குவதுதான் செங்கோன்மைக்கு அழகு. குடிமக்களை அன்பினால் அரவணைத்து, ஆட்சி செய்கின்ற மன்னனின் திருவடிகளை மக்கள் விடாது பற்றி நிற்பர். ஒரு மன்னனின் வெற்றிக்கு ஆதாரமாக இருப்பது, அவன் பூண்டு இருக்கின்ற படைக்கருவிகள் அல்ல. போர்க்களத்தில் வெற்றி தருவது வாளும், வில்லும், அம்பும் அல்ல. நெறி தவறாமல் ஒருவன் செய்யும் அரசாட்சியே அவனுக்கு வெற்றியினைக் கொண்டு தரும். நல்லவர்களைக் காப்பதற்காக, தீயவர்களை அழிக்கும் அவசியம் மன்னனுக்கு ஏற்படத்தான் செய்யும்.

"கொலையிற் கொடியாரை வேந்துஒறுத்தல், பைங்கூழ்
களைகட் டதனோடு நேர்" (குறள் : 550)

எனவே தீயவர்களைத் தண்டிப்பதும், நல்லவரைக் காப்பதும் நல்ல அரசின் கடமையாகும்.

## கொடுங்கோன்மை

செங்கோன்மையைத் தொடர்ந்து, கொடுங் கோன்மையையும் திருவள்ளுவர் விளக்குகிறார். தன் அதிகாரத்தினால் குடிமக்களை வருத்தி, அறமற்ற செயல்களைச் செய்யும் அரசன், கொலைத் தொழிலைப் புரியும் பாதகர்களை விட மோசமானவன். ஒரு தேசத்தைக் கேட்டிலிருந்து காப்பாற்ற விரும்பும் மன்னன், நாள்தோறும் நாட்டு மக்களின் போக்கை ஆராய்ந்து, கேடுகளை அகற்றி, அவர்களுக்கு நல்வழி காட்டுதல் வேண்டும்.

"நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாள்தொறும் நாடு கெடும்" (குறள் : 553)

யாரையும் கலந்து ஆலோசிக்காமல், தன் விருப்பம் போல் நடப்பது ஒரு அரசனுக்கு அழகல்ல. உலக வரலாற்றில் பல கொடுங்கோல் மன்னர்கள் யாரையும் கலந்து ஆலோசிக்காமல் தங்கள் விருப்பப்படி செங்கோல் முறையிலிருந்து பிறழ்ந்து வீழ்ந்து போன செய்திகள் ஏராளம் உண்டு. தனக்கு அதிகாரம் உண்டு என்பதற்காகக் குடிகளை

வருத்தி, அறம் அல்லாதனவற்றைச் செய்து நடக்கும் அரசன், கொலை செய்வதையே தொழிலாகக் கொண்டு பிழைப்பு நடத்தும் கொடியவன் ஆவான்.

அறத்தை நம்பாமல் அதிகாரத்தை நம்பி ஆட்சி செய்கின்ற ஒரு மன்னனை, வழிப்பறிக் கள்வனோடு ஒப்பிடுகிறார் திருவள்ளுவர். இரவு நேரத்தில், வேல் போன்ற கருவிகளோடு இருளில் மறைந்து நின்று, அவ்வழிச் செல்வோரை அச்சுறுத்திப் பணத்தைப் பறிக்கும் வழிப்பறிக் கொள்ளைக்காரனுக்கும், தன் சுயலாபத்தைக் கருதி அரசாட்சி செய்யும் ஆட்சியாளனுக்கும் எந்த ஒரு வேறுபாடும் இல்லை. நீதி நெறிமுறைப்படி அரசாட்சி செய்யாத ஒரு மன்னனின் கொடுங்கோலாட்சியில், குடிமக்களின் உடைமைக்கும் உயிருக்கும் கூடப் பாதுகாப்பு இருக்காது. முறைகேடான ஆட்சியை மன்னன் நடத்துவானாகில், அவனது ஆட்சிக் காலத்தில் வானமே பொய்த்துப் போகும் என்கிறார் திருவள்ளுவர். அறம் செழிக்கும் இடத்திலேயே வானம் மழை பொழியும் என்ற கருத்தை,

> "முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
> ஒல்லாது வானம் பெயல்" (குறள் : 559)

என்ற குறள் எடுத்துரைக்கிறது. கொடுங்கோல் ஆட்சிக்கு எதிர்க்குரல் கொடுக்கும் திருவள்ளுவர், அத்தகைய ஆட்சி நிலை பெறாது. வேற்று நாட்டு அரசன் படையெடுத்து வந்துதான் ஒரு கொடுங்கோல் மன்னனை வெற்றிகொள்ள வேண்டும் என்ற அவசியம் இல்லை. அவன் ஆட்சியில் துன்பம் தாங்காமல் மக்கள் வடிக்கும் கண்ணீரே அவன் அரசாங்கத்தை அழித்து விடும் என்கிறார்.

> "அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீரன்றே
> செல்வத்தைத் தேய்க்கும் படை" (குறள் : 555)

கொடுங்கோன்மையின் கொடுமைகளைச் சொல்லும் திருவள்ளுவர், அறம் உணர்ந்து ஆட்சி செய்யும் செங்கோன்மையின் சிறப்பையும் எடுத்துரைக்கிறார். முறைப்படி ஆட்சி செய்யும் மன்னவன் நாட்டில் பருவமழை பொய்க்காது. பருவமழை ஒழுங்காகப் பெய்தால், காலங்களுக்கு உரிய விளைபொருட்களும் தட்டாமல் கிடைத்து மனித

வாழ்வை மேம்படுத்தும். தளர்ந்தவர்களைத் தாங்குவதே ஒரு செங்கோல் மன்னனின் கடமையாகும். ஒரு மன்னனைக் காப்பாற்றுவது அவன் தாங்கி இருக்கும் படைக்கலம் அல்ல. செங்கோல் வளையாத, அவன் அரசாட்சியே ஆகும். நீதி தவறி நெறி பிறழ்ந்து அரசு புரிபவனுக்கு, எத்தனை ஆயுதங்கள் இருந்தும், யாதொரு பயனும் இல்லை. அறம் உணர்ந்த மன்னனின் வெற்றிக்கு ஆதாரம் அவனது வேல் அல்ல; அவனது கோல் என்கிறார் திருவள்ளுவர்.

**"வேல்அன்று வென்றி தருவது; மன்னவன்**
**கோல்அதூஉம் கோடாது எனின்" (குறள் : 546)**

**அரச நீதி**

மற்றவர்கள் தன் குடிமக்களை வருத்தாதவாறு காப்பாற்றித் தன்னால் தன் மக்களுக்கு எந்தத் தீங்கும் நேராதவாறு நடந்து கொண்டு, நடந்தனவற்றை முறையாக ஆராய்ந்து நீதிசெய்து, தவறு செய்பவர்களை உரிய முறையில் தண்டித்து, நடுநிலைமை தவறாமல் ஆட்சிசெய்யும் மன்னவனை அவனது நீதியே காப்பாற்றும் என்கிறது திருக்குறள்.

**"இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை**
**முறைகாக்கும் முட்டாச் செயின்" (குறள் : 547)**

மாறாக, கொடுங்கோல் அரசன் ஆளும் நாடு, கடும் புலி வாழும் காடு என்று பெரியோர்கள் சொல்லி வைத்தனர். அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம், தூங்காமை, கல்வி, துணிவு ஆகிய பண்புகளின் கொள்கலனாக ஒரு மன்னன் இருத்தல் வேண்டும் என்கிறது திருக்குறள். அரச குடும்பத்தில் பிறந்ததனால் மட்டுமே, ஒருவன் ஆட்சி செய்யும் தகுதியைப் பெற முடியும் என்ற நிலை பெரும்பாலும் மாறிப்போன இந்தக் காலத்திற்கும், திருவள்ளுவர் கூறும் அரசியல் அறம் பொருத்தமானதாகவே அமைந்துள்ளது. நீதியின் மேல் நாட்டமும், அறஉணர்வும், நடுநிலைச் சிந்தனையும் அன்புமே ஆட்சியாளனுக்குரிய தகுதியே அல்லாமல், அரச குடும்பத்தில் பிறப்பது மட்டும் தகுதியாகி விடாது. இன்று பேசப்படும் மக்களாட்சி என்னும் ஜனநாயகத்தின் சாயலில்தான் அன்றைய முடியாட்சி இருந்தது. எனவேதான் திருவள்ளுவர்

'குடிதழீஇக் கோலோச்சும் மன்னவன்' என்றும், 'முறைசெய்து காப்பாற்றும் மன்னவன்' என்றும் ஆட்சியாளனைக் குறிப்பிடுகிறார். மக்களின் அனுமதியோடு நடைபெறும் ஆட்சியே ஜனநாயகம் என்பர். (Democracy is the rule with consent of the people).

எனவே குடியாட்சியைப் போன்ற முடியாட்சிக்கான அம்சங்களைத் திருவள்ளுவர் எடுத்துரைத்தாலும், இக்கால அரசியலுக்கும், ஆட்சிமுறைக்கும் அவரது சிந்தனைகள் பொருந்தி வருவதை நம்மால் பார்க்க முடிகிறது. பெரியாரைப் பேணி, மனத்தூய்மை, செய்வினைத் தூய்மை ஆகியனவற்றைக் கைக்கொண்டு, காலம் கருதி இடத்தால் செயல்முடித்து, அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு புருஷார்த்தங்களின் திறம் தெரிந்து, குடி தழீஇ, செய்தக்க செய்து, செங்கோல் செலுத்தும் நல்ல தலைமையிடம் ஆட்சிப் பொறுப்பு இருந்தால் அந்த நாடும் மக்களும் நலம் பெற முடியும் என்று திருவள்ளுவர் கூறும் கருத்துக்களை மன்னராட்சியையும், எதேச்சாதிகாரத்தையும் எதிர்த்துக் குரல் கொடுக்கும் ரூசோவின் எண்ணங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம். 18-ஆம் நூற்றாண்டின் புதிய சிந்தனைகள் என்று போற்றப்பட்டன ரூசோவின் கருத்துக்கள். அவனை விடவும் தெளிவாக, ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, நன்னெறி சார்ந்த அரச நீதி திருவள்ளுவரால் பேசப்படுகிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

## கல்விச் சிந்தனைகள்

ரூசோ எழுதிய நூல்கள் பல. அவை விரிவுரைகள், கடிதங்கள், கட்டுரைகள், சுயசரிதை, உரையாடல்கள், நாவல் என்ற வகையில் அமைந்துள்ளன; இலக்கியம், கலை, விஞ்ஞானம் என்ற வகையில் அமைந்துள்ளன. இலக்கியம், கலை, விஞ்ஞானம், இவைகளைப் பற்றிய விரிவுரை, 'மனிதர்களிடம் ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டதற்கு மூலகாரணம் தான் என்ன?', பிரெஞ்சு சங்கீதத்தைப் பற்றிய கடிதங்கள், நாடக மேடையைப் பற்றிய கடிதங்கள், அரசியல் பொருளாதாரத்தைப் பற்றிய விரிவுரை, ஜீலே அல்லது

புதிய ஹெலாய்ஸே நாவல், எமிலி அல்லது கல்வி, மலைக் கடிதங்கள், குற்ற அங்கிகாரம் (சுயசரிதை), சம்பாஷணைகள், சிந்தனைகள் ஆகிய படைப்புகளைத் தந்தவன் ரூசோ. இவை அனைத்திற்கும் மேலாக, சமுதாய ஒப்பந்தம் என்ற பெயரில் தன் சமத்துவ சுதந்திர சிந்தனைகளை உலகிற்கு வழங்கிய பெருமை உடையவர் ரூசோ.

**கல்வி ஆராய்ச்சி**

அவர் எழுதியுள்ள 'எமிலி' அல்லது 'கல்வி ஆராய்ச்சி' என்ற நூல், எவ்வாறு குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்க வேண்டும் என்பதனைத் தெளிவாக விளக்குகிறது. ஒரு காலத்தில் சம்பிரதாயங்களையும், மூடப் பழக்க வழக்கங்களையும் உள்ளடக்கியதாக விளங்கிய கல்வி முறையைச் சீர்திருத்தும் வகையில் அமைந்திருந்தன ரூசோவின் சிந்தனைகள். எனவே அவனது நூல்கள் ஆட்சியாளர்களால் தீக்கிரை ஆக்கப்பட்டாலும், பிற்காலத்தில் கல்வி முறை எப்படி அமைய வேண்டும் என்று சிந்தித்து எழுதியவர்களுக் கெல்லாம், ரூசோவின் எண்ணங்களே அஸ்திவாரமாக அமைந்தன. இருபது வருடங்களாகச் சிந்தித்து மூன்று வருடங்களில் எழுதிய நூல், என்று இந்த நூலைப் பற்றி ரூசோ குறிப்பிடுகிறார்.

**துன்பத்திலும் சுடர்விட்ட சிந்தனை**

அரசியல் துறையில், கலாச்சாரத் துறையில், பொருளாதாரத் துறையில், இந்தக் காலகட்டத்தில் ஏற்பட்டுள்ள பல்வேறு நல்ல மாற்றங்களுக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்த சிறப்பு ரூசோவுக்கு உரியது. இவைகளில், கல்வித் துறையைப் பற்றி, இடிபாடுகளுடன் கூடிய தன் இளமைக் காலத் துயர வாழ்க்கைக்கு மத்தியிலும், ரூசோவால் தெளிவாகச் சிந்திக்க முடிந்தது என்று எண்ணிப் பார்த்தால் நம்மால் வியப்படையாமல் இருக்க முடியாது. ஒரு சமூகத்தில், காலங்காலமாகப் பழக்கத்தில் இருந்து வரும் சில மூட முறைமைகளை மாற்றி அமைக்க ஒருவர் முயற்சிக்கும் பொழுது, அவர் பல வகையிலும் விரோதத்தைச் சந்திக்க வேண்டிய நிலைதான் ஏற்படும். இந்த நிலைதான்

ரூசோவுக்கு ஏற்பட்டது. இருந்தாலும், நாடு விட்டு நாடு ஓடிச் செல்கிற நிலைமை ஏற்பட்டாலும், தான் கொண்ட கொள்கையை உரக்க உலகிற்குச் சொன்ன பெருமை ரூசோவிற்கு உண்டு.

அவனது கல்விச் சிந்தனைகளைப் பற்றித் தெரிந்து கொண்ட மதகுருமார்களும் மதவாதிகளும் கோபத்தினால் வெந்து தீய்ந்தார்கள். எதைப் பற்றியும் கவலைப்படாமல், தன்னைச் சூழ்ந்து பகை மேகங்களைக் கிழித்துக் கொண்டு வெளிக்கிளம்பியது ரூசோவின் தெளிவான சிந்தனை. பள்ளி சென்று கல்வி பயிலாத ஒருவன், தான் பெற்ற குழந்தைகளைக் கூட அனாதை விடுதியில் வளர விட்ட ஒருவன், கல்வியைப் பற்றி இவ்வளவு தெளிவான சிந்தனைகளை வெளிப்படுத்தி இருக்கிறான் என்பது பலருக்கும் வியப்பை ஏற்படுத்தியது. அவன் எழுதிய 'எமிலி அல்லது கல்வி ஆராய்ச்சி' என்ற நூல் குழந்தைகளுக்கு எப்படிப் பாடம் புகட்ட வேண்டும்; கல்வியின் அத்தியாவசியம் என்ன; ஆண் குழந்தைகள் எப்படி வளர்க்கப்பட வேண்டும்; பெண் குழந்தைகளின் கல்வி, வளர்ப்பு முதலியன எவ்வாறு அமைய வேண்டும் என்பவனவற்றை எல்லாம் தெளிவாக எடுத்துக் கூறுகிறது. ஒரு தாய் வளரும் தன் குழந்தையை எவ்வாறு பராமரிக்க வேண்டும் என்பதைத் தன் நூலில் எடுத்துரைக்கிறான் ரூசோ.

தாயின் குணாதிசயங்கள் குழந்தைகளுக்கு அமைந்து விடுவதால், தனது குழந்தைகளைச் சரியான முறையில் ஒரு தாய் வளர்த்துவர வேண்டும். குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பை வேலைக்காரிகளிடமோ, செவிலித் தாயிடமோ ஒப்படைக்கும் முறை மிகவும் தவறானது என்பது ரூசோவின் கருத்து. சில தாய்மார்கள், குழந்தைகளைக் கவனமாக வளர்ப்பதாக நினைத்துக் கொண்டு, அவர்களை மாறுபட்ட எந்தச் சூழ்நிலைகளுக்கும் உட்படுத்தாமல், மிகவும் பத்திரமாகப் பாதுகாப்பதாகக் கருதி, இறுதியில் விபரீதமான சங்கடங்களுக்கு உள்ளாக்கி விடுகிறார்கள். ஆகவே, ஆபத்துக்களைப் பொறுத்துக் கொள்ளக்கூடிய மனப் பாங்கினை, குழந்தைகள் இழந்து விடுகிறார்கள். எனவே

எல்லாவிதமான வாழ்க்கை அனுபவங்களையும் குழந்தைகளுக்குப் பழக்கப்படுத்த வேண்டியது மிகவும் அவசியமாகும். இளவயதிலேயே சில கஷ்ட நஷ்டங்களை அனுபவிக்கும் வாய்ப்பு குழந்தைகளுக்கு இருந்தால்தான், அவர்கள் வளர வளர, வாழ்க்கையின் மேடு பள்ளங்களைச் சந்திக்கும் மனோ தைரியத்தைப் பெற்று, ஒவ்வொரு கட்டத்திலும் வாழ்க்கையை ரசித்தும், சுவைத்தும் வாழத் தலைப்படுவார்கள்.

**கல்விக்கு அடித்தளம்**

சுயமாகச் சிந்திப்பதற்கு இளம் பிராயத்திலேயே குழந்தைகளைப் பழக்குதல் வேண்டும். சிந்திக்கக் கற்றுக் கொண்டு விட்டால் இந்தப் பழக்கத்தை ஒருவன் ஒருநாளும் கைவிட மாட்டான். உலகத்தையும், இயற்கையையும் பூமியில் உள்ள அனைத்துப் பொருள்களையும் நன்றாக ஊடுருவிப் பார்த்து, பிறகு தனக்குத் தானே சிந்திக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள கல்வி வகை செய்யும். ‘நன்றாக உழைத்தால் உயரலாம்’ என்ற நம்பிக்கையை ஊட்டுவதோடு, ‘உழைப்பினால் சம்பாதிக்கும் பொருள் வயிற்றை நிரப்புவதற்கு அல்ல; சமூகத்தில் உரிய பெருமைகளோடு வாழ்வதற்கு’ என்பதை உணர்த்தி, சிறு வயதிலிருந்தே குழந்தைகள் சுதந்திரமாக வாழ வழிவகுக்க வேண்டும். இயற்கையோடு இயைந்த ஒரு வாழ்வை மாணவனுக்குக் கல்வி அறிமுகப்படுத்த வேண்டும். தன் சொந்த அனுபவங்களின் மூலமாகவே, பல செய்திகளையும் ஒரு மாணவன் புரிந்து கொள்ள வகை செய்து, அவன் மனதில் இரக்க உணர்வையும், பரிவையும் நிலைபெறச் செய்ய வேண்டும் என்கிறார் ரூசோ.

தாய் தந்தையர்களின் மனதில் ஒரு தெளிவை ஏற்படுத்தி, தம் குழந்தைகளுக்கு அவர்கள் ஆற்ற வேண்டிய பல கடமைகளையும் இந்நூல் உணர்த்துகிறது. மனித உள்ளத்தின் தேவைகளைப் புரிய வைத்த இந்த நூல் புதுமை விரும்பிகளால் வரவேற்கப்பட்டாலும், பழமைவாதிகள், இத்தகைய சிந்தனைகளைத் தந்தவனைக் கொளுத்த

முடியாவிட்டாலும், அவன் புத்தகத்தையாவது எரித்துச் சாம்பலாக்குங்கள் என்று அவலக் குரல் எழுப்பினார்கள். ஆயினும், ரூசோவின் காலத்திற்குப் பின்னால், உலகில் நின்று நிலவும் பயனுள்ள பல்வேறு கல்விச் சிந்தனைகளுக்கு ரூசோவின் கல்வி பற்றிய ஆராய்ச்சி, அடித்தளம் அமைத்தது என்றால் அது மிகையாகாது.

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் சில இயற்கையான திறமைகள் உள்ளன. அத்தகைய திறமைகள், அவனுக்குள்ளேயே மடிந்து வீணாகப் போய் விடாமல், அவைகளை உணர்ந்து பயன்படுத்த ஒரு மனிதனுக்குப் பெரிதும் துணைபுரிவது, அவன் கற்கும் கல்வியே ஆகும். அடிப்படையற்ற சம்பிரதாயங்களை விலக்கவும், மூட நம்பிக்கைகளை ஒழித்துக் கட்டவும், மனிதப் பண்பை வளர்க்கவும் கல்வி மிகவும் தேவைப்படுகிறது. 'பண்பாட்டை வளர்க்காதது கல்வி ஆகாது' என்று திட்டவட்டமாய்த் தெரிவிக்கிறான் ரூசோ. ஒரு செடி நன்றாக வளர வேண்டுமானால், அச்செடிக்கு ஆதாரமான மண்ணைக் கிள்ளி, உரிய காலத்தில் உரமிட்டு, தண்ணீரும் பாய்ச்சி, தேவையற்ற பூச்சி புழுக்களால் தொல்லை ஏற்படாதபடி காக்க வேண்டும். அதுபோல மனிதன் உயர்வு பெறுவதற்கு, அவன் கற்கும் கல்வி அவனை நற்பண்புகள் உடையவனாக மெல்ல மெல்லச் செதுக்கி, முழுமை அடையச் செய்ய வேண்டும்.

'கல்வி கரையில; கற்பவர் நாள் சில' என்றனர் நம் பெரியோர். ஒருவன் கல்வியின் கரையைத் தன் வாழ்நாள் முழுதும் முயன்றாலும் காண இயலாது. கற்கக் கற்க மேலும் கற்க வேண்டும் என்ற ஆவலைத் தூண்டுவதே கல்வியின் சிறப்பம்சமாகும். மேலும் கல்வியின் மேல் நாட்டமுடைய ஒருவன் கற்கக் கற்க இன்னும் தான் அறிய வேண்டியது எவ்வளவோ இருக்கிறது என்று உணரத் தொடங்குகிறான். இவ்வுலகில் வாழ்ந்த யாரும் இதுவரை 'அனைத்தையும் கற்று முடித்து விட்டேன்' என்று சொன்னதில்லை. மிகப் பெரிய அறிஞர்களுக்கும் அது சாத்தியமில்லை. கல்வியின் சிறப்பு அத்தகையது.

## கல்வி தரும் சிறப்பு

நாம் பிறக்கும் சமயத்தில் நம்மிடம் இல்லாத பல சிறப்புக்களைக் கல்வி நமக்கு அளிக்கிறது. இந்தக் கல்வியை மூன்று வழிகளில் நாம் பெற முடியும் என்கிறான் ரூசோ. இயற்கையிலிருந்து மனிதன் எவ்வளவோ பாடங்களைக் கற்றுக் கொள்கிறான். தன் சகோதர மனிதர்களின் செயல்கள், பண்புகள் ஆகியனவற்றின் மூலம் கற்றுக் கொள்கிறான். தன் சுற்றுச்சார்பு சூழ்நிலைகளில் இருந்தும் கற்றுக் கொள்ளும் வாய்ப்பு அவனுக்கு ஏற்படுகிறது. சுற்றுச்சார்பும் சூழ்நிலையும் மாறும்போது, ஒரு மனிதனின் பழக்க வழக்கங்களும் மாறிப் போகின்றன என்று காட்டுவதற்கு ஒரு நல்ல உதாரணத்தைக் காட்டுகிறான் ரூசோ. ஒரு செடியை நேராக நிமிர்ந்து இருக்குமாறு செய்தால், அந்தச் செடி நிமிர்ந்து வளரும். குறுக்கே படுக்க வைத்து வளர்த்தால் குறுக்கே வளரும். உயரமாக நேரே வளர்த்தாலும் பக்கவாட்டில் வளர்ந்தாலும், செடியின் தன்மை ஒன்றும் மாறி விடாது. ஆனால் வளர்ப்புக்கு ஏற்றபடி உயரமாகவோ, நீள வாக்கிலோ வளரும், அது போலவே மனிதன் வாழும் சூழ்நிலையையும், சுற்றுச்சார்பையும் ஒட்டியே அவனுடைய பழக்கவழக்கங்கள் அமைகின்றன. கல்வியின் நோக்கம் மனிதன் தன்னை உணர்வதும், தான் வாழும் சூழ்நிலையைப் புரிந்து கொள்வதும்தான் என்கிறான் ரூசோ. எனவே நாம் எப்பொழுது வாழத் துவங்குகிறமோ, அப்பொழுதே கல்வியைக் கற்கத் துவங்குகிறோம் என்று பொருள்.

கல்வியின் மற்றொரு சிறப்பம்சம் என்னவென்றால், கல்வி மனிதனுக்கு மனப் பக்குவத்தைத் தருகிறது. சுகத்தையும், துக்கத்தையும்; செல்வத்தையும், வறுமையையும்; வெப்பத்தையும், பனியையும் ஒரே மாதிரியாகப் பாவிக்கும் மனப்பக்குவத்தை மனிதனுக்கு வழங்குவதே உண்மைக் கல்வி ஆகும் என்பதே ரூசோவின் எண்ணம்.

## கிளிப்பிள்ளைப் பாடம் வேண்டாம்

கல்வி கற்கும் குழந்தைகளுக்கு எளிமையான பழக்கவழக்கங்களையே கற்றுத் தரவேண்டும். ஆடம்பரமான

உடைகளை அணியும் பழக்கத்தைச் சிறு வயது முதலே குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்தினால், அவர்கள் நாளடைவில் பகட்டை மட்டுமே மதிக்கும் பொய்மை நிலைக்குத் தள்ளப்படுவார்கள். குழந்தைகள் வளர வளர, அவர்கள் தங்களைத் தாங்களே கவனித்துக் கொள்ளும் திறனும், பக்குவமும் பெறும்படி செய்ய வேண்டும். உழைப்பின் மேல், சிறுவயது முதலே குழந்தைகள் நம்பிக்கை கொள்ளுமாறு செய்வது மிகவும் அவசியமாகும். தனக்கென்று இந்த உலகில் இருக்கும் இடம் என்ன? தான் செய்ய வேண்டியதுதான் என்ன? என்பதனை மாணவப் பருவத்திலேயே ஒருவன் தெரிந்து கொள்ள, அவன் கற்கும் கல்வி வகைசெய்தல் வேண்டும். இந்தக் காலக் கல்வி முறையில் காணப்படும் மனப்பாடப் பழக்கத்தைப் பெரிதும் கண்டிக்கிறார் ரூசோ. புத்தகத்தில் எழுதி வைக்கப்பட்டுள்ள கருத்துக்களை அப்படியே மனப்பாடம் செய்து, ஒரு வரி விடாமல் எழுதி விட்டால் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்று விடலாம் என்ற நிலையே இன்றைய கல்விமுறையில் ஒரு முக்கிய அங்கம் வகிக்கிறது. ஓர் இயந்திரத்தைப் போல், மனப்பாடம் செய்து மதிப்பெண் பெறுகிறவன், பெரும்பாலும் சுயமாகச் சிந்திக்கும் திறனை இழந்திருப்பான். மனனம் செய்த செய்திகளை, அவன் புரிந்து உள்வாங்கிக் கொண்டுள்ளானா? என்பதே கேள்விக்குறி. மனிதனின் சிந்தனைத் திறத்துக்குத் திரைபோடும் இந்த மனப்பாட முறையை, ரூசோ பெரிதும் கண்டிக்கிறான். இந்தக் கிளிப்பிள்ளைப் பாடம் இன்றும் கூட நடைமுறையில் இருந்து வருவதைப் பார்க்கிறோம்.

**வாழ்க்கைக் கல்வி**

குழந்தைகளை இளவயதிலேயே பல நல்ல பழக்கங்களுக்கு ஆளாக்க வேண்டும். எளிய சாதாரண உணவு வகைகளை அவர்கள் சாப்பிடும்படி பழக்குவது மிகவும் அவசியமானது. அளவறிந்து உண்ணவும், ஓடி விளையாடி மகிழவும், அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தல் வேண்டும் என்கிறார் ரூசோ. குழந்தைகளின் உயிரை மட்டும் காப்பாற்றி விட்டால் போதும் என்று சிலர் நினைக்கிறார்கள்.

இது தவறானது. மாணவப் பருவத்திலேயே தாங்கள் பெரியவர்களான பின்பு, தமது உயிரைக் காப்பாற்றிக் கொள்வது எப்படி என்பதைத் தெரிந்து கொள்ள அவர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். ஆபத்திலிருந்து தன்னை எவ்வாறு காத்துக் கொள்வது என்று குழந்தைகளுக்குப் போதிப்பதோடு, வாழ்வது எப்படி என்று கற்றுக் கொடுப்பதும் அத்தியாவசியமானதாகும். வாழ்க்கை என்பது மூச்சு விட்டுக் கொண்டிருப்பது மட்டுமல்ல. நமது மனதின் ஆற்றலை, பொறிபுலன்களை, நமக்குள் இருக்கும் சக்தியை உணர்ந்து அவற்றை நல்ல முறையில் பயன்படுத்துவதில்தான் வாழ்க்கை சிறப்படைகிறது. நமக்கென்று இந்த உலகில் ஒரு தனித்துவம் இருக்கிறது என்பதை உணர்ந்து, அதனைப் பயன்படுத்தி வாழ்வது தான் வாழ்க்கை ஆகும். நீண்ட நாட்கள் உலகில் வாழ்வது மட்டும் வாழ்வாகாது. ஒவ்வொரு வினாடியும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று உணர்ந்து வாழ்வதே வாழ்க்கை என்கிறார் ரூசோ. கல்வி பற்றிய தன் சிந்தனைகளை உரக்க எடுத்துரைக்கும் ரூசோ நல்லொழுக்கத்தின்பாற் படாத கல்வி கல்வியாகாது என்பதையும் திட்டவட்டமாக எடுத்துக் கூறுகிறார்.

## கேடில் விழுச்செல்வம்

திருவள்ளுவரின் கல்விச் சிந்தனைகளை கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை ஆகிய அதிகாரங்களில் தெளிவாகப் பார்க்கிறோம். கல்வியை மிகப் பெரிய செல்வம் எனக் குறிப்பிடும் திருவள்ளுவர், அழிவில்லாத கல்விச் செல்வத்தைக் ‘கேடு இல் விழுச்செல்வம்’ என்கிறார். பொருட்செல்வங்கள் எல்லாம் இன்று இருக்கும், நாளை அழிந்து போகும். கல்விச் செல்வம் ஒன்றே அழியாத செல்வம் என்று போற்றப்படும் தகுதி உடையது. ‘பொருட்செல்வம் பூரியார் கண்ணும் உள’ என்று பிறிதோர் இடத்தில் பேசுகிறார். மாட மாளிகை, வீடு, வாசல், பணம் என்று பல வகையிலும் செல்வமுடையோராய் வாழ்பவர்கள், ஒரு காலகட்டத்தில், வறுமை நிலை எய்தித் தாழ்ச்சி அடைவதை உலகில்

பார்க்கிறோம். எனவே கல்விச் செல்வத்திற்கு நிகரான வேறு செல்வம் இல்லை என்பதனைத் திருவள்ளுவர்,

"கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடுஅல்ல மற்றை யவை" (குறள் : 400 )

என்கிறார்.

**சாந்துணையும் கல்லாதவாறு**

கற்கக் கற்கத்தான், ஒருவனின் அறிவு விரிவடைகிறது. தொட்டனைத்து ஊறும் மணற்கேணி போல, கற்றனைத்து ஊறும் அறிவு. எனவே கல்வி என்பது மனித வாழ்வில் ஒரு காலகட்டத்தோடு முற்றுப் பெற்றுவிடும் என்று மனிதர்கள் நினைத்தால் அது தவறு. சாந்துணையும் கல்லாதவாறு என்? எனக் கேட்கிறார் திருவள்ளுவர். உண்மைக் கல்வியை உணர்ந்து கற்பவனுக்கு எல்லா நாடும் சொந்த நாடாகும்; எல்லா ஊர்களும் சொந்த ஊர்களாகும். கல்வி ஒருவனுக்கு, உலகளாவிய சிறப்பைத் தரும் என்று தெரிந்தும் சாகும் வரையில் ஒருவன் கல்லாமல் காலங்கழிப்பது எதற்கு என்கிறார் திருவள்ளுவர்.

"யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு" (குறள் : 397)

கல்வி கற்பவனுக்கு இன்பத்தைத் தருவதைப் போல, உலகத்தவரையும் இன்புறச் செய்கிறது. எனவே கற்றறிந்த அறிஞர்கள் மென்மேலும் கல்வியை விரும்புகின்றனர்.

இன்று உலகெங்கிலும் வாழும் மாந்தர்கள் சிரமம் இல்லாமல் தங்கள் வாழ்க்கையை நடத்திச் செல்ல வகைசெய்துள்ள பல்வேறு விஞ்ஞான சாதனங்களைக் கண்டுபிடித்து உலகிற்கு வழங்கியவர்கள், கல்வி கேள்விகளில் துறைபோகிய அறிவியலாளர்களே. கடுங்கோடை அனலிலும் குளிரை அனுபவிக்கும் வசதியையும், நடுங்க வைக்கும் குளிரிலும் வெப்பத்தை அனுபவிக்கும் வசதியையும் கொண்டு தந்தது அறிவியலாளர்களின் அறிவே அல்லவா? நீரியல், நிலத்தியல் தொடங்கி வானியல் வரை ஆய்வு செய்து, மனித வாழ்வு மண்மேல் மகிழ்ச்சி உடையதாய்

அமைய வழி அமைத்தது, கற்ற அறிஞர்களின் சிந்தனைத் திறமல்லவா? மனித இனம் மானிடப் பண்புகளைப் பேணிக் கொண்டு, அறவழியில் வாழ்ந்து சிறக்கவேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு படைக்கப்பட்டுள்ள எண்ணற்ற கருத்துக் கருவூலங்களாகிய நூற்களும், அறிஞர்களின் கல்விச் சிறப்பில் விளைந்தவை அல்லவா? எனவே கற்றவன் மட்டுமல்லாது, அவன் மூலமாக உலகமே பயனடைந்து, மகிழ்ச்சியுற வழியமைப்பது கல்வி என்பதனைத் திருவள்ளுவர்,

"தாம்இன்புறுவது உலகு இன்புறக் கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்" (குறள் : 399)

என்கிறார். ஒரு பிறப்பில் ஒருவன் கற்ற கல்வியானது அந்தப் பிறப்பிற்கு மட்டுமல்லாமல் ஒருவனுக்கு ஏழு பிறப்பிலும் உதவும் தன்மை உடையதாகும் என்கிறார்.

## கேள்விச் செல்வம்

ஒருவன், தான் அறியாதனவற்றைக் கற்றறிந்தோர் வாயிலாகக் கேட்டு அறியும் கேள்வியும் ஒரு செல்வமே ஆகும். சிறந்த நூல்களை, ஒருவன் தானே முன்னின்று கற்கவில்லை என்றாலும், நூல்களைக் கற்ற அறிஞர்களிடம் அவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு கேட்டுப் பெறுவதால் உண்டாகும் அறிவு ஒருவனுக்குத் தளர்ந்த காலத்தில் துணைபுரியும் ஊன்று கோலைப் போலத் துணை செய்யும். உடல் தளர்ச்சி ஏற்படும் போது, நடப்பதற்கே சிரமப்படுவோர், கையில் ஊன்றுகோல் தாங்கி நடப்பதைப் பார்க்கிறோம். ஊன்றுகோலின் பலமே தம் பலமாக கருதிக் கொண்டு நடப்பர். அதுபோலத் தாம் கற்றுணராதவற்றைக் கற்றறிந்தோரிடம் கேட்டுத் தெளிவு பெறுதல் அவசியமாகும்.

வழுக்கும் சேற்று நிலத்தில் நடக்க வேண்டிய நிலை வரும் போதும், கால்கள் இடறி வழுக்கி வீழ்ந்து விடாமல் இருப்பதற்கு ஊன்றுகோலின் துணையை நாடுகிறோம். அதைப் போலவே மனிதர்கள், தங்கள் வாழ்க்கையில் பல சிரமங்களைச் சந்திக்க வேண்டிய துன்பமான காலம் நேரும் போது, அத்தகைய துன்பங்களில் இருந்து தங்களைக்

காப்பாற்றிக் கொண்டு, இன்னலைத் தீர்த்துக் கொள்ள விழைவர். அத்தகைய காலகட்டங்களில் ஒழுக்க நெறி தவறாத பெரியோர்களின் துணையை நாடுதல் வேண்டும். அத்தகைய சான்றோர்களே நல்வழி காட்டும் தகுதியுடையவராவர். அவர்களது அனுபவத்தாலும் கல்வியாலும் விளைந்த அறிவார்ந்த சொற்களை, நாம் செவிமடுக்கும் போது, நாம் நம் இன்னல்களிலிருந்து விடுபட வழிபிறக்கிறது. துன்பத்திலிருந்து நாம் விடுபடுவதற்கு, அத்தகைய பெரியோர்களின் நல்லுரைகளைக் கேட்பதே நமக்கு உற்றதுணை புரியும் என்கிறார், திருவள்ளுவர்.

> **“கற்றிலன் ஆயினும் கேட்க அஃதுஒருவற்கு**
> **ஒற்கத்தின் ஊற்றாம் துணை”** (குறள் : 414)

> **“இழுக்கல் உடைஉழி ஊற்றுக்கோல் அற்றே**
> **ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல்”** (குறள் : 415)

எனவே எந்த அளவிற்கு நாம் கேள்விச் செல்வத்தைப் பெறுகிறோமோ அந்த அளவிற்கு அது நமக்குப் பெருமையைத் தரும்.

> **“எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்**
> **ஆன்ற பெருமை தரும்”** (குறள் : 416)

கல்வி, கேள்வி ஆகிய இரண்டு சிறப்புக்களையும் பெறாதவர்கள் வாழ்ந்தும் பயனில்லை. கல்லாதவர்கள் உயிரோடு இருக்கின்றனர் என்று மட்டுமே சொல்லும் தகுதி உடையவர்ளாக இருக்கின்றனர். கல்லாதவன் ஒன்றும் விளையாமல் கிடக்கும் களர் நிலத்திற்குச் சமமாவான் என்கிறது திருக்குறள். இத்தகைய கல்வியாலும் கேள்வியாலும் மனிதன் அறிவைப் பெறுகிறான். ஒருவனுக்கு அழிவு ஏற்படாமல் காக்கும் கருவிகளில் அறிவுக்கு நிகரானது ஒன்றுமில்லை. அறிவுக்கு விளக்கம் தர வந்த திருவள்ளுவர், மனதை அது போகின்ற போக்கில் விட்டுவிடாமல், எது நல்லவழியில் செலுத்துகிறதோ, எது தீமையைத் தவிர்க்கிறதோ அதுவே அறிவு ஆகும் என்கிறார். மனம் என்பது நினைத்த போக்கில் போகும் ஒரு யானையைப் போன்றது. அதனை அறிவு என்னும் அங்குசத்தால்

கட்டுப்படுத்தா விட்டால் பெருந்துன்பம் விளையும். நல்லறிவானது ஒழுக்கம் பண்புகளோடு இணைந்ததாக இருக்க வேண்டும். மக்கட்பண்பற்ற வெறும் அறிவினால் எந்தப் பயனும் இல்லை என்பதனைத் திருவள்ளுவர்

“அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட் பண்பில்லா தவர்” (குறள் : 997)

என்கிறார். மனிதநேயமும் மக்கட்பண்பும் இல்லாதவனுடைய அறிவு அறிவென்றும், அவன் கற்ற கல்வியை கல்வி என்றும் ஏற்றுக் கொள்ளத் திருவள்ளுவர் தயாராக இல்லை.

## எழுச்சிமிகு எண்ணங்கள்

### ஒழுக்கம் உயர்வு தரும்

திருவள்ளுவரைப் போலவே ரூசோவும் தன் கட்டுரையில் ஒழுக்கமே ஒரு அறிவார்ந்த சமுதாயத்தின் அடிப்படையாக இருக்க வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுகிறார். கலைகளும், தத்துவ விஞ்ஞானங்களும் அபிவிருத்தி அடைந்திருப்பதால், ஒழுக்கம் உயர்ந்திருக்கிறதா? அல்லது வீழ்ந்திருக்கிறதா? என்ற கட்டுரையில் ரூசோ, “நமது நாகரிக வளர்ச்சி எப்படி அமைந்திருக்கிறதென்றால் இங்குத் திறமைக்குத்தான் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறதே ஒழிய பண்புக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. ஒரு மனிதன் நேர்மையானவனா என்பதைப் பற்றி யாரும் கவலைப்படுவதில்லை; அவன் திறமைசாலியா என்று மட்டுமே பார்க்கிறார்கள். இந்த நிலைதான் தொன்று தொட்டு, சமூகத்தில் தோன்றும் பல்வேறு குழப்பங்களுக்குக் காரணமாய் அமைந்துள்ளது” என்கிறார்.

ரூசோ மற்றவர்களைவிடச் சற்று வித்தியாசமாகச் சிந்தித்தான். எல்லோரும் வாழ்க்கையில் சுகங்கள் நாளுக்கு நாள் பெருக வேண்டும் என்று எண்ணுவர். மாறாக ரூசோ, “எந்த இனத்திற்கு கலாச்சாரப் பகட்டிலே பிடிப்பு உண்டாகி விடுகிறதோ, அந்த இனம் தன் போராட்ட குணத்தை இழந்து விடுகிறது. வாழ்க்கையின் சுகங்கள், அதிகமாகப் பெருகப் பெருக, கலைகள் பூரணத்துவத்தை அடைய அடைய,

ஆடம்பரம் அதிகரிக்க அதிகரிக்க, உண்மையான வீரமும், ஒழுக்கங்களும் முற்றிலுமாக அகற்றப்பட்டு விடுகின்றன" என்கிறான்.

திருவள்ளுவர் ஒழுக்கத்தின் மேன்மை பற்றிப் பேசும்போது ஒழுக்கம் இல்லாதவனுக்கு வாழ்வில் உயர்வில்லை என்கிறார். ஒழுக்கம் தவறுவதால் ஒருவன் பெரும் பழியை அடைய நேரிடுகிறது.

**"ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை, இழுக்கத்தின்**
**எய்துவர் எய்தாப் பழி" (குறள் : 137)**

என்கிறார். உயிரைவிடச் சிறந்தது ஒழுக்கமே என்கிறார் திருவள்ளுவர். அதைவிடவும் ஒழுக்கத்தின் உயர்வைச் சிறப்பித்துச் சொல்ல இயலாது. ஒழுக்கத்தைப் பற்றிப் பேசும் ரூசோ, ஒழுக்கம் என்பது மனித வாழ்க்கையை மேம்படச் செய்கிறது. அத்தகைய ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடித்து வாழ்வது என்பது பலருக்கு சிரமமான ஒன்றாக இருக்கிறது. மனம்போன போக்கில், எந்த ஒரு கட்டுப்பாடும் இல்லாமல் இயங்குவது என்பது மனிதர்களுக்கு மிகவும் எளிமையான ஒன்று என்பதைப் பார்க்கிறோம். ஒழுக்கம் என்ற உயர் பண்பு கடைப்பிடிப்பதற்குக் கடினமானது என்று பலர் எண்ணுகின்றனர். அவர்கள் எண்ணம் சரியானதல்ல. பிழைகளையும் தவறுகளையும் புரிவதையே வாடிக்கையாய் ஆக்கிக் கொண்ட மனிதர்களுக்கு மட்டுமே ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பது சிரமமாக இருக்கிறது.

## இன்பமும் துன்பமும்

மனித வாழ்க்கைக்குத் தேவையான பல பொதுவான நல்லறங்களைப் பேசும் ரூசோவின் எழுத்துக்களை, திருவள்ளுவரின் சிந்தனையோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம். இன்பதுன்பம் இரண்டும் இணைந்ததுதான் மனித வாழ்க்கை. மனிதனுக்கு முழுமையான இன்பத்தைத் தரக்கூடிய பொருள் எதுவும் உலகில் இல்லை. அதே நேரத்தில், நமக்குத் துன்பம் தருவது எது என்பதையும் நம்மால் சரியாகத் தீர்மானிக்க இயலாது. இன்ப துன்பங்களின் கலவைதான் மனித வாழ்க்கை. ஒரு மனிதன் சேர்ந்தாற்போல ஒருநாள் கூட

முழுவதும் மகிழ்ச்சியாய் இருப்பதில்லை. நன்மை தீமை இரண்டுமே மனிதர்களுக்குப் பொதுவானவை. இதில் குறைந்த துன்பத்தை அனுபவிப்பவன், தான் மகிழ்ச்சியானவன் என்று தன்னை எண்ணிக் கொள்கிறான். வாழ்க்கையின் மிகக் குறைந்த இன்பத்தை அனுபவிப்பவன் வேதனை மிகுந்தவனாகத் தன்னை எண்ணிக் கொள்கிறான்.

எல்லோர்க்கும் பொதுவான அனுபவம் ஒன்று இருக்கிறது. அது யாதெனில் மக்கள் பெரும்பாலும் இன்பத்தை விட துன்பத்தையே அனுபவிக்கிறார்கள். துன்பத்தை அனுபவிக்கும் மனிதன் அந்தத் துன்பம் விரைவில் தீர்ந்து விடாதா என்று எண்ணுகிறான். இன்பத்தை அனுபவிக்கும் மனிதனோ, தனக்கு ஒரு துன்பம் வந்துவிடக் கூடாது என்று எண்ணுகிறான். இன்பம் துன்பம் இரண்டையும் ஒன்றுபோல் பாவிக்கும் மனத்தைப் பண்பட்ட கல்வியின் மூலமாக பெறலாம் என்பது ரூசோவின் கருத்து. தன் சொந்த வாழ்வில் பல இன்னல்களைச் சந்தித்தவன் ரூசோ. இருப்பினும் தன் சிந்தனைக்கும் ஆற்றலுக்கும், அத்தகைய இன்னல்கள் ஊறு விளைவிக்காதவாறு மனத் திண்மையை வளர்த்துக் கொண்டவன். ரூசோவின் கருத்துக்கள் அவனது அனுபவத்திலிருந்து விளைந்தவை. உலகியலில் இன்பம் துன்பம் ஆகியனவற்றின் நிலை என்ன என்பதனை ரூசோ எடுத்துக்காட்டுகிறான்.

### இடுக்கண் வருங்கால் நகுக

திருவள்ளுவரோ துன்பத்தைக் கண்டு துவண்டு போகாமல் இருப்பது அறிவுடையோர் செயல் என்றும், எத்தகைய துன்பம் வந்தாலும் மனம் கலங்காது துன்பத்தை எதிர்த்துச் செல்லும் ஆற்றலைப் பெற வேண்டும் என்றும் அறிவுறுத்துகிறார். ஒரு செயலைச் செய்யும் போது, துன்பம் குறுக்கிடுமானால் மனம் கலங்கி, எடுத்த செயலையே தொடராது, கைவிட்டு விடும் நிலையைப் பலரிடம் பார்க்கிறோம். தனக்கே உரிய தனித்துவத்தோடு, திருவள்ளுவர் துன்பம் வரும்போது, அத்துன்பத்தையே ஒருவன் எள்ளி நகையாடிவிட்டால், அந்தத் துன்பத்தை

அவன் வென்றவனாகிறான் என்கிறார். துன்பத்தினை எதிர்த்து வெல்ல, இடுக்கண் வருங்கால் நகுதலைப் போல் வேறு உபாயம் இல்லை.

துன்பத்தைத் தோல்வியுறச் செய்வதில், விடா முயற்சிக்கும் பெரும்பங்கு உண்டு. மேடு பள்ளங்களைப் பற்றிக் கவலைப்படாமல், விடாமுயற்சியோடு பாரம் நிறைந்த ஒரு வண்டியை இழுத்துச் செல்லும் எருதைப் பார்க்கும்போது, எதிர்ப்படும் துன்பங்களைப் பற்றிக் கவலைப்படாமல், முயற்சியுடன் ஒரு செயலைத் தொடரலாம் என்ற பாடத்தை ஒருவன் அறியலாம். அடுக்கடுக்காகத் துன்பங்கள் வந்தாலும், கலங்காமல் இருக்கும் ஆற்றல் ஒருவனுக்கு இருந்தால் அவன் துன்பப்படுவதில்லை. அவனைத் தேடி வந்த துன்பமே துன்பப்படும். இதனை நல்லவண்ணம் உணர்ந்திருக்கும் பெரியோர்கள், துன்பம் வரும்போது கலங்குவதனால் பயனில்லை என்று தெரிந்து கலக்கத்தை விட்டொழிப் பார்கள். இன்பம் வரும் காலத்தில், அதனை மிகவும் விரும்பிப் போற்றாதவன், துன்பம் வந்த காலத்தில் பெரிதும் துன்பம் அடைவதில்லை.

> **"இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்**
> **துன்பம் உறுதல் இலன்"** (குறள் : 629)

'இடுக்கண் அழியாமை' என்னும் அதிகாரத்தில், திருவள்ளுவர் தரும் பத்து குறட்பாக்களையும் சரிவர உணர்ந்து கற்கும் ஒருவன், துன்பத்தைக் கண்டு துவண்டு போகாமல், கலக்கம் அடையாமல், துன்பத்தையே இன்பமாகக் கருதிக் கொள்ளும் மனப்பக்குவத்தைப் பெறுவான்.

> **"இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகுந்தன்**
> **ஒன்னார் விழையுஞ் சிறப்பு"** (குறள் : 630)

இன்பமும் துன்பமும் ஒருவனின் மனப்பக்குவத்திற்கு ஏற்றபடி மாறுபடும் தன்மை உடையவை என்பதனால், முயற்சியும் உறுதியும் உடைய மனத்தவன் துன்பத்தையும் வெல்வான்.

## அன்பே ஆக்கம் தரும்

அன்பைப் பற்றிக் குறிப்பிடும் திருவள்ளுவர் 'அன்பின் வழியது உயிர்நிலை' என்கிறார். மனிதனிடம் இருக்க வேண்டிய உயர்ந்த பண்புகளில் தலையாயது அன்பேயாகும். மனிதன் உயிரும் உடம்புமாய் இணைந்து வாழ்வதே அன்பு பாராட்டுவதற்குத்தான் என்கிறார் திருவள்ளுவர்.

"அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு" (குறள் : 73)

மனதில் அன்பு இல்லாமல் வாழும் உயிர் வாழ்க்கை கொஞ்சமும் வளமை இல்லாத பாலை நிலத்தில் பட்ட மரம் தளிர்த்தது போன்றது.

"அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரம்தளிர்த் தற்று" (குறள் : 78)

என்ற குறளுக்குப் பாலை நிலத்தில், பசையில்லாத மரங்கள் தளிர்த்து வளர்வதில்லை; அதுபோல, உள்ளத்தில் அன்பு இல்லாத உயிர்கள், இவ்வுலகில் செழித்து வாழ முடியாது என்றும் பொருள் கொள்ளலாம். உடம்பின் அகத்து உறுப்பாகிய அன்பு இல்லாத ஒருவனுக்கு, புறத்து உறுப்புகள் இருந்தும் யாதொரு பயனும் இல்லை என்கிறார் திருவள்ளுவர். அன்பைப் பற்றிப் பேசும் ரூசோ, அன்பை விடப் பெரிய ஞானம் வேறெதுவும் இல்லை என்கிறார்.

## பொறுமை என்னும் வல்லமை

திருவள்ளுவர் கூறும் உயர் பண்புகளில் ஒன்று பொறுமை. பிறர் செய்யும் தீங்குகளைப் பொறுமையுடன் பொறுத்துக் கொள்வது, வல்லமையுள் எல்லாம் வல்லமையானது என்று பொறுமைக்குத் தனிச் சிறப்புச் சேர்க்கிறார் திருவள்ளுவர். தமக்குத் தீமை செய்கின்றவர்களையும் பொறுமை என்னும் பண்பினால் வென்றுவிட வேண்டும் என்கிறார் திருவள்ளுவர். வரம்பு கடந்து நடப்பவரின் வாயிலிருந்து புறப்படும் கொடுஞ்சொற்களைக் கூடப் பொறுத்துக் கொள்ளும் அளவிற்கு ஒருவனுக்குப் பொறுமை இருக்குமானால், அத்தகைய பொறுமை

உடையவர் துறந்தவர்களைப் போலத் தூய்மை உடையவர் ஆவர் என்கிறார் திருவள்ளுவர்.

"துறந்தாரின் தூய்மை உடையர் இறந்தார்வாய்
இன்னாச்சொல் நோற்கிற் பவர்" (குறள் : 159)

பொறுத்தாற்றிக் கொள்பவர்களை, பூமியில் உள்ளோர் பொன்னைப் போல் மதித்துத் தங்கள் மனதில் வைத்துப் போற்றுவர். தங்களுக்குத் தீங்கு செய்தவர்களைப் பொறுத்துக் கொள்ளாமல், அவர்களை வருத்தினவர்க்கு ஒருநாள் தான் இன்பம்; பிழையைப் பொறுத்தார்க்கு உலகம் அழியும் வரை புகழ் உண்டு.

"ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ்" (குறள் : 156)

பொறுமை என்பது ஒரு மனப் பண்பு. முயன்றுதான் அப்பண்பை ஒருவன் பெறுதல் வேண்டும். வரம்பு கடந்து தகாத சொற்களை ஒருவன் பேசும்போதும் பொறுமை காக்க வேண்டும் என்ற தத்துவம் கேட்பதற்கும் சொல்வதற்கும் சிறப்பானதாக இருக்கலாம். பயிற்சி செய்து பார்ப்பது மிகவும் கடினம். எனவேதான் பொறுமையை 'வல்லமையுள் வல்லமை' என்றார் திருவள்ளுவர். உண்ணும் உணவைத் துறந்து, நீரும் பருகாமல் நோன்பு மேற்கொள்வதைவிட, பிறர் சொல்லும் வசைமொழிகளைப் பொறுத்துக் கொண்டு அமைதி அடைகிறவர்கள் மிகச் சிறப்பானவர்கள் என்று சொல்லும் வள்ளுவர், பொறுமையையும் ஒருவிதத் தவம் என்று குறிப்பாய்ச் சொல்கிறார். பொற்றுமையைப் பற்றிப் பேசும் ரூசோ, கடைப்பிடிப்பதற்குக் கடினமான பண்பு என்பதனால் பொறுமை கசப்பானதுதான் என்கிறார். ஆயினும் அத்தோடு நிறுத்திக் கொள்ளாமல், அந்தப் பொறுமையின் விளைவு மிகவும் இனிமையானது. அந்த இனிமையை, பொறுமையைக் கடைப்பிடித்தால் மட்டுமே அனுபவிக்க முடியும் என்கிறான்.

## தன் குற்றம் உணர்தல்

மனிதனிடம் இருக்கும் தீய குணங்களில் ஒன்று, தனது குற்றங்களை மறந்து விட்டு மற்றவர்களின் குற்றங்களைப்

பெரிதுபடுத்துவது. தன் பார்வையில் தான் செய்யும் செயல்கள் தவறுடையவைகளாக மனிதனுக்குத் தோன்றுவதில்லை. அதே செயலை, மற்றொருவர் செய்யும் போது அச்செயல் குற்றமுடையதாக ஒருவனுக்குத் தோன்றுகிறது. திருவள்ளுவர்,

"ஏதிலார் குற்றம்போல் தங்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு?" (குறள் : 190)

என்கிறார். அயலாருடைய குற்றத்தைக் காண்பது போல், ஒருவன் தன் குற்றத்தையும் காண்பானாகில் நிலைபெற்ற உயிர் வாழ்க்கைக்குத் துன்பம் இல்லை என்று இக்குறளுக்கு பொருள் உரைக்கிறார் டாக்டர் மு. வரதராசனார். தன்னிடம் இருக்கும் சிறிய குற்றத்தைக் கூட பெரிதாகக் கருதி வருந்துவது, பழிக்கு அஞ்சுகிறவர்களின் பண்பாகும். தம்மிடம் இருக்கும் தினை அளவு குற்றத்தைக் கூடப் பனை அளவாக கருதி வருந்துவர் பண்பாளர்கள். மாறாக, பண்பற்றவன் தன் குற்றத்தை மறைத்து, பிறர் குற்றத்தைப் பெரிதுபட பேசுவான். மற்றவர்களின் குற்றத்தை ஆராய நினைக்கிறவன், முதலில் தன்னிடமுள்ள குற்றத்தை உணர்ந்து அதைப் போக்கிக் கொள்ள வேண்டும் என்கிறார் திருவள்ளுவர்.

"தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார்" (குறள் : 433)

"தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்ற மாகும் இறைக்கு" (குறள் : 436)

## தவறை நேசித்தல் தவறு

இக்கருத்தை, ரூசோவின் எழுத்துக்களில் மற்றொரு கோணத்தில் காண முடிகிறது. தங்களது குற்றங்களை மறந்து விட்டு, மற்றவர்களின் குற்றங்களைக் கண்டுபிடிக்க முயல்வது, மிகவும் தவறான முறை என்கிறான் ரூசோ. இக்கருத்தை விவிலியமும் 'உன் கண்ணில் உள்ள உத்திரத்தைப் பற்றிக் கவலைப்படாமல் மற்றவன் கண்ணில் உள்ள துரும்பைப் பற்றி ஏன் கவலைப்படுகிறாய்? என்று கேட்கிறது.. மனிதர்கள் தங்கள் தவறுகளைப் பற்றிப் பெரும்பாலும் கவலைப் படாதவர்களாகவே இருக்கிறார்கள். அவர்கள் செய்யும் பெரிய தவறுகளும் அவர்களுக்குத் தவறுகளாகத்

தெரிவதில்லை. மேலும் மேலும் அவர்கள் தவறுகளைப் புரிவதற்குக் காரணம், தங்கள் தவறுகளை வெறுத்து ஒதுக்காமல், அவைகளையே நேசித்து வருவதுதான் என்கிறான் ரூசோ. தவறுகளை வெறுத்து ஒதுக்குவதற்குப் பதிலாக, அவைகளையே நேசிக்கத் தொடங்கினால், மேலும் மேலும் குற்றங்களும் குழப்பங்களுமே விளையும். இதன் விளைவாக ஒருவன் செய்யும் செயலானது தவறு என்று சுட்டிக் காட்டப்படும்போது கூட, அதை ஏற்றுக் கொள்ளாமல், அந்தச் செயல் நடந்ததற்கான காரண காரியங்களை எடுத்துரைத்து, சமாதானம் தேடுவதிலேயே தவறு செய்தவன் முனைகிறான். எனவே தவறையே நியாயப்படுத்தும் அளவிற்கு, அவன் தவறினை நேசிக்கத் தொடங்குகிறான். இத்தகைய மனோபாவம் சமூகத்தின் ஆரோக்கியத்தைக் கெடுக்கும் என்பது ரூசோவின் கருத்து.

மனிதர்களிடம் காணப்படும் தற்பெருமை என்னும் தீய பண்பினைச் சாடுகிறான் ரூசோ. கற்றறிந்த சான்றோர்கள், தாங்கள் எவ்வளவுதான் அறிந்திருந்தாலும், இன்னும் தெரிந்து கொள்ள வேண்டியது எவ்வளவோ உண்டு என்று எண்ணி அடங்கி இருப்பர். ‘அறிவின் பயனே அடக்கம்தான்’ என்கிறார் திருவள்ளுவர். அந்த அடக்கமானது உயர்ந்தவர்களால் பாராட்டப்படுகின்ற சிறப்பை ஒருவனுக்குத் தரும்.

> “செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்து
> ஆற்றின் அடங்கப் பெறின்” (குறள் : 123)

பணிதல் என்னும் அடக்கமுடைமை எல்லோர்க்கும் எந்நிலையிலும் நலன் தருவதாகும். ‘கற்றுவிட்டோம்’ என்று ஆணவம் கொள்ளாது, அடங்கி இருத்தலே சிறப்பு. பார்ப்பதற்குப் பெரிதாகத் தோன்றும் மலையைவிட, அடக்கமுடையவனின் புகழ் உயர்ந்ததாகும். தன் நிலையில் மாறுபடாமல் அடங்கி இருப்பவனின் சிறப்பை,

> “நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
> மலையினும் மாணப் பெரிது” (குறள் : 124)

என்ற குறளில் தெளிவுபடுத்துகிறார் திருவள்ளுவர்.

## தற்பெருமை என்னும் தீங்கு

திருவள்ளுவரின் இந்தச் சிந்தனையை ஒத்திருக்கும் ரூசோவின் கருத்தைப் பார்க்கும் போது, உயர்ந்தவர்கள் ஒன்றுபோல் சிந்திக்கிறார்கள் என்று நமக்கு எண்ணத் தோன்றுகிறது. மனிதரிடம் இருக்கும் தவறான குணங்களில் ஒன்று, தனக்கு எவ்வளவுக்கு எவ்வளவு குறைவாகத் தெரிந்திருக்கிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு அதிகமாகத் தெரிந்திருப்பதாக தன்னை ஏமாற்றிக் கொள்வது. அடக்க மின்மையால் விளையும் இத்தீமையை, தற்பெருமை என்றும் கூறலாம். தற்பெருமை உடையவனைத் திருத்துவது என்பது யாராலும் இயலாத ஒன்று. ஒருவன் பைத்தியக்காரனாக இருந்தால், அவன் செய்யும் செயலின் தவறுகளைச் சுட்டிக் காட்டிப் புரியவைத்துத் திருத்துதல் என்பது இயலாது. மனிதன் பைத்தியமாய் இல்லாத பட்சத்தில், எந்தத் தவறையும் மிகுந்த முயற்சி எடுத்துக் கொண்டால் திருத்தி விடலாம். ஆனால் ஒருவன் தன் அளவில் தற்பெருமை உடையவனாக இருந்தால், அவனைத் திருத்துவது பைத்தியக்காரனைத் திருத்துவதைவிட சிரமமானது என்கிறான் ரூசோ.

## உடல்நலம் போற்றுதல்

ஒருகாலத்தில், மாயாவாதம் புரிந்த பலர், 'நம் உடலும் மாயை; உலகமும் மாயை' என்று சொல்லி 'தேக பலத்தால் சாதிக்கக் கூடியது எதுவும் இல்லை' என்று மக்கள் மனதில் மாயை பற்றிய எண்ணத்தை விதைத்தார்கள். பின்னால் வந்த திருமூலர்,

"உடலார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே"

என்று பாடினார். இக்கருத்துக்கு மாறாக வேறு பல சித்தர்கள் 'காயமே இது பொய்யடா; காற்றடைத்த பையடா' என்றனர். பிற்காலத்தில் வந்த விவேகானந்தர், மனித உடல் இறைவன் குடியிருக்கும் கோயில். அதைத் தூய்மையாகவும்,

வலிமையாகவும் பேணிக் கொள்ள வேண்டும் என்றார். விளையாட்டு மைதானத்திற்குச் சென்று, கால்பந்தை உதைத்து, கைகால்களை வீசி, ஆடி ஓடி விளையாடி, தேக பலத்தைச் சரியாக வைத்துக் கொள்வது, இளைஞர்களுக்கு உள்ள கடமைகளில் ஒன்று என்கிறார். உறுதியான உடம்பில்தான், உறுதியான மனம் இருக்க முடியும் என்கிறார் விவேகானந்தர். அறப்பண்புகளைப் பற்றிப் பேசும் திருவள்ளுவர், உடம்பையும் உணவையும் பற்றித் தன் கருத்துக்களைத் திருக்குறளில் தெளிவாக எடுத்துரைக்கிறார். அளவறிந்து உண்ண வேண்டும் என்றும், உண்ட உணவு செரிமானமான பின்னரே, அடுத்து உண்ண வேண்டும் என்றும், உடல்நலம் பேண அளவாய் உண்ணுதல் அவசியம் என்றும் எடுத்துரைப்பதைப் பார்க்கிறோம்.

மாறுபாடு இல்லாத உணவை அளவு மீறாமல் உண்டால், உயிர் உடம்பில் வாழ்வதற்கு இடையூறு ஏற்படுத்தும் நோய்கள் வாரா என்பது திருவள்ளுவரின் கணிப்பு.

> "மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்
> ஊறுபாடு இல்லை உயிர்க்கு" (குறள் : 945)

உடலைப் பற்றிப் பேசும் ரூசோ, உடலின் பலத்தை நன்றாகப் பேணிக் கொள்ளுதல் வேண்டும். உடல் வலு இழந்தால், உள்ளமும் வலு இழக்கும் என்கிறான். நல்ல பலமுள்ள தேகத்தில்தான் உறுதியான மனம் இருக்க முடியும் என்று, தான் திட்டவட்டமாக நம்புவதாகக் குறிப்பிடுகிறான்.

பதினெட்டாம் நூற்றாண்டில் உலகம் பல்வேறு விதமான வளர்ச்சிகளைப் பல்துறைகளிலும் கண்ட பின்னர், சுதந்திரமும், சமத்துவமும், உரிமையும் உடைய மக்கள் வாழும் சமுதாயத்தை உருவாக்கி, மக்கள் நன்னெறியில் நடக்க வகை செய்ய வேண்டும் என்று விழைந்தான் ரூசோ. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, மானுட சமூகம் அன்பாலும் செயல்திறத்தாலும் சிறந்தோங்கவும், அறமுணர்ந்து நன்னெறியில் வாழவும் தன் பங்களிப்பைச் செய்த பெருமை திருவள்ளுவருக்கு உண்டு.

# பேக்கனும் திருவள்ளுவரும்

## பேக்கன் - ஓர் அறிமுகம்

இங்கிலாந்தில் தோன்றியுள்ள கட்டுரையாளர்கள் யாவருக்கும் முன்னோடியாகத் தன் சிந்தனைகளைத் தொகுத்துத் தெளிவாகவும் எளிமையாகவும் கட்டுரை வடிவில் தந்த பெருமை கட்டுரையாளர் பிரான்ஸிஸ் பேக்கனுக்கு உண்டு. 1561-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இருபத்திரண்டாம் நாள் நிக்கோலாஸ் பேக்கன் என்பாரின் மகனாக லண்டனில் பிறந்தார். கேம்பிரிட்ஜில் உள்ள டிரினிடி கல்லூரியில் பயின்று, அக்கல்லூரியை விட்டு மூன்று ஆண்டுகள் கழித்து வெளியே வரும்போது, அன்றிருந்த திருப்தியற்ற கல்வி முறையைப் பற்றிய ஒரு கசப்பான உணர்வோடு வெளியே வந்தார். பிரான்சுக்குச் சென்று சட்டம் பயின்று, தன் பல்துறைத் திறனையும் வளர்த்துக் கொண்டு, பிரெஞ்சு மொழியையும் நல்லவண்ணம் கற்றுத் தெளிந்தார் பேக்கன். தந்தையின் மறைவிற்குப் பிறகு, இங்கிலாந்துக்குத் திரும்பி வந்து, பல அரசுப் பதவிகளை வகித்தார்.

இருபத்துமூன்று வயதில், பாராளுமன்ற உறுப்பினராக இருந்து தன் பேச்சாற்றலுக்காகப் பாராட்டுப் பெற்றார். 1606-ஆம் ஆண்டு அலிஸ் பிரான்ஹேம் என்ற பெண்ணை மணந்து 1607-ஆம் ஆண்டு சொலிஸிட்டர் ஜெனரல் (Solicitor General) ஆகவும், 1615-ஆம் ஆண்டு அட்டர்னி ஜெனரல் (Attorney General) ஆகவும், பின்னர் லார்ட் சான்ஸ்லர் (Lord Chancellor) ஆகவும், 1617 - 1618 முதல் பேரன் வெருவலம் Baron Verulam ஆக உயர்ந்தார். அவருக்கு விஸ்கவுன்ட் செயின்ட் அல்பானா (Viscount St. Albana) விருது 1621-இல் கிடைத்தது. எந்த அளவில் பதவிகளில் உயர்ந்து சென்றாரோ, அந்த அளவு பல அவமானங்களையும் அவர் வாழ்வில் சந்திக்க நேர்ந்தது. நீதித்துறையில் ஊழல் புரிந்துவிட்டதாக அவர்மேல் குற்றச்சாட்டுகளும் விசாரணைகளும் தொடர்ந்தன. தம் வாழ்நாளில் பெரும்

பகுதியை அறிவியல் ஆராய்ச்சியிலும், ஆழ்ந்த படிப்பிலும் செலவிட்டார் பேக்கன். இலக்கிய உலகில் அவர் புகழ் பரவிட அவரது ஆழ்ந்த படிப்பு பெருந்துணை புரிந்தது. பல்துறை சிந்தனை நூல்களைத் தன் வாழ்நாளில் உலகிற்குத் தந்த கல்வியாளன் பிரான்ஸிஸ் பேக்கன், 1626-ஆம் ஆண்டு மறைந்தார். தன் எழுத்துக்கள் தன் வாழ்நாட்களுக்குப் பிறகும், உலகில் நின்று நிலவும் என்ற எண்ணம் பேக்கனுக்கு இருந்தது என்பது, அவரது உயிலில் காணப்படும் வரிகளில் தொனிக்கிறது.

'I bequeath my soul to God. For my name and memory I leave it to men's charitable speeches, and to foreign nations and the next age.'

**எழுதிய நூல்கள்**

ஆங்கிலத்திலும், லத்தினிலும் பிரான்சிஸ் பேக்கன் பல நூல்களை எழுதியுள்ளார். அட்வான்ஸ்மென்ட் ஆப் லேர்னிங் (Advancement of Learning, 1605) இரு பாகங்கள், ஏழாம் ஹென்றியின் வரலாறு (History of Henry VII, 1622), நியூ அட்லாண்டிஸ் (The New Atlantis 1622 - 1624) என்ற அறிவியல் புதினம், இவைகள் தவிர பேக்கனின் உலகப் புகழ் பெற்ற கட்டுரைகள், ஆகியன பேக்கனின் அறிவைப் பறைசாற்றும் எழுத்தோவியங்கள்.

**பேக்கனின் கட்டுரைகள்**

பேக்கனின் ஐம்பத்தெட்டு கட்டுரைகளில் பெரும் பாலானவை பொது வாழ்வைப் பற்றியவை. அவர் காலத்து ஆளும் வர்க்கத்தினரின் செயல்பாடுகள், அரசியல் சமூகப் பிரச்னைகள் பல கட்டுரைகளில் விவாதிக்கப்பட்டுள்ளன. ஏனைய கட்டுரைகள், தனி மனிதன் தெரிந்து கொள்ள வேண்டிய ஒழுக்கக் கோட்பாடுகள், கல்வி, உடல்நலம், நட்பு, மனித உணர்வுகள், உறவுகள் ஆகிய பொது விஷயங்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றன.

பேக்கனின் கட்டுரைகள், பல தனி மனிதர்களின் வாழ்வில், அவர்தம் குணநலன்களைச் சீரமைக்கப்

பயன்பட்டுள்ளது. சுருக்கமாகவும் அதே நேரத்தில் தெளிவாகவும் கூறப்பட்டுள்ள கருத்துக்களால், பேக்கனின் கட்டுரைகள் புகழ்பெற்றன. கருத்துக்களை வலியுறுத்து வதற்காக மட்டுமே பயன்படுத்தப்படும் தேர்ந்தெடுத்த உவமைகள் கட்டுரைக்கு மேலும் மெருகூட்டுகின்றன. நடைமுறைப்படுத்த முடியாத தத்துவங்களையோ, கருத்துக்களையோ எடுத்துச் சொல்லாமல், அனைவரும் ஏற்றுக் கொள்ளத்தக்க நடைமுறை சாத்தியமான விஷயங்களை பேக்கன் எடுத்துக் கூறியுள்ளது பேக்கனின் சிறப்பாகும். உவமானங்கள், உவமேயங்கள், எடுத்துக் காட்டுகள் தகுதியான முறையில் தான் சொல்ல வந்த கருத்தை விளக்குவதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. பொதுவாக அறிவுரைகளைக் கேட்பது மக்கள் விரும்பாத ஒன்று என்ற அபிப்ராயம் இருந்தாலும், தான் சொல்ல வந்த பயனுள்ள அறிவுரைகளைச் சொல்ல, பேக்கன் தவறவில்லை. அவரது கட்டுரைகளின் செய்திகளைக் கற்கும் மனிதர்கள் தங்களது குணநலன்களைச் செப்பம் செய்து, தங்களை ஒரு படி பண்பில் உயர்த்திக் கொள்ள, பேக்கனின் சிந்தனைகள் துணைபுரிகின்றன என்பதனை மறுக்காமல் ஏற்றுக் கொள்வர். சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் தன்மை உடைய பேக்கனின் கட்டுரைகள் அவரை ஒரு தத்துவச் சிந்தனையாளராக, நம் முன் நிறுத்துகிறது. மனிதர்களுக்குத் தேவையான பல நல்ல பண்புகளை அவரது கட்டுரைகளில் காணலாம்.

சொல்ல வேண்டியதைச் சுருக்கமாகவும், அழுத்தமாகவும் சொல்வதற்குத் தனித் திறமை வேண்டும். ஒவ்வொரு வாக்கியமும் அடர்த்தியான பொருளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. ஒவ்வொரு வாக்கியத்தையும் பல வாக்கியங்களாக விரிவாக்கம் செய்யுமளவுக்கு, பொருள் பொதிந்த வாசகங்களை உள்ளடக்கியது பேக்கனின் கட்டுரைகள். பேக்கனின் பல வாசகங்கள் கல்வி கற்றோர் மத்தியில், அதிகம் பயன்படுத்தப்படும் சிறப்பைப் பெற்றுள்ளன. எடுத்துக் கொண்ட தலைப்பை விட்டு, கொஞ்சமும் நழுவிச் செல்லாமல், சொல்ல வந்த கருத்துக்களைத் தக்க ஆதாரத்துடன் தெளிவாக எடுத்துச்

சொல்வது பேக்கனின் தனிச்சிறப்பாகும். பேக்கனின் உலகியல் அனுபவங்களின் விரிவும், ஆழமும் எத்தகையன என்பதனை அவர்தம் கட்டுரைகளில் காணலாம்.

திறனாய்வாளர்களில் சிலர், 'பேக்கனின் கட்டுரைகளில் காணப்படுபவை அவரது சிந்தையில் உதித்த கருத்துக் குவியல்கள்; அக்கருத்துக்கள் அவர்தம் மனதில் உதித்த வண்ணமே எழுத்துக்களாக்கப்பட்டுள்ளனவே தவிர, அந்தக் கருத்துக்கள் ஒருமுகமாக வரிசைப்படுத்தப்படாத நிலையில் உள்ளன' என்று தெரிவித்துள்ளனர். இன்னும் சிலர், 'சுருக்கமாகச் செய்தியைச் சொல்ல வேண்டும் என்ற பேக்கனின் விழைவு, சில வேளைகளில் கருத்துக்களைப் புரிந்துகொள்ள இயலாத சிரமத்தை ஏற்படுத்தி விடுகிறது' என்கின்றனர். 'ஒரே நேரத்தில் பேக்கனின் கட்டுரைகள் அனைத்தையும் படித்து அனுபவிக்க இயலாது. ஏனெனில் அவர் தம் கட்டுரைகள் மிகவும் உயர்ந்த சத்துணவைப் போன்றன. அதிக அளவு சத்துணவை ஒருவன் ஒரே நேரத்தில் உண்டால், அந்த உணவு செரிமானம் ஆகாமல் அவனுக்குச் சிரமம் ஏற்படும். அதுபோலத்தான் பேக்கனின் கருத்துக்கள் முழுவதையும், ஒரே நேரத்தில் மனதிற்குள் திணிக்க முயற்சி செய்வதும் சிரமமானது. ஏனெனில், மனதிற்கும் அறிவிற்கும் ஊட்டம் தரும் பல சிறந்த கருத்துக்களை உள்ளடக்கியது பேக்கனின் எழுத்தோவியம்' என்பதே பேக்கனைப் பற்றிய பொதுவான அபிப்பிராயம். புத்தகங்களைப் பற்றிப் பேசும்போது பேக்கனே குறிப்பிடுகிறார். 'சில புத்தகங்கள் நன்றாக மென்று உண்டு சீரணிக்க வேண்டிய உணவைப் போன்றவை' என்று. பேக்கனின் கட்டுரைகள் அந்த வகையில் அடங்கும் என்கின்றனர் திறனாய்வாளர்கள். ஆயினும் நடைமுறைத் தத்துவங்களை உள்ளடக்கிய, மக்களுக்குத் தேவையான கருத்துக்களைத் தரும் சுருக்கமான கட்டுரைகளை பேக்கனைப்போலத் தெளிவாக வேறு யாரும் எழுதவில்லை.

குறைந்த சொற்களைப் பயன்படுத்தி, நிரம்பச் செய்திகளைச் சொல்லியிருக்கும் பாங்கு, பேக்கனுக்கு என்று ஆங்கில இலக்கிய உரைநடையில் ஒரு தனி இடத்தைப் பெற்றுத் தந்துள்ளது. இக்கருத்தையே (Hudson) ஹட்சன்

என்னும் ஆங்கில அறிஞர் "An essay of Bacon consists of a few pages of concentrated wisdom" - பேக்கனின் கட்டுரைகளில் அடர்த்தியான ஞானம் அடங்கியுள்ளது என்கிறார். பேக்கனின் கட்டுரைகளின் முதல் பதிப்பு 1597-இல் வெளியானது. முதலில் வெளிவந்த கட்டுரைத் தொகுப்பில் மொத்தம் பத்து கட்டுரைகளே இடம் பெற்றிருந்தன. என்றும் நினைவில் நிற்கும் பல்வேறு உயர்ந்த நெறிகள் பேக்கனின் கட்டுரைகளில் காணப்படுகின்றன.

## பொய்யா விளக்கு

வாய்மையே வெல்லும் என்பது நம் தேசத்தின் தாரக மந்திரம். இந்த நாட்டின் உயரிய இலக்கியங்கள் யாவும் 'அறம் வெல்லும், பாவம் தோற்கும்' என்ற தத்துவத்தை அடிப்படையாக வைத்தே எழுதப்பட்டவையாகும். உண்மையைத் தவிர வேறு எதையும் பேசுவதில்லை என்ற விரதத்தைக் காப்பாற்ற தன் சுகங்கள் யாவையும் துறந்து, அடுக்கடுக்கான துன்பங்களைச் சுமந்த அரிச்சந்திரன் என்ற சூரியகுல மன்னனின் வாய்மை வரலாறு இன்று வரையிலும் மக்கள் மனதில் நீங்காத இடம் பெற்றுள்ளது. வாய்மை என்னும் உன்னதப் பண்பு, திருவள்ளுவரால் மிகவும் அழுத்தந்திருத்தமாக வலியுறுத்தப்பட்டுள்ளது. உள்ளதை உள்ளது எனவும், இல்லாததை இல்லை எனவும் சொல்வதற்குப் பெயர்தான் வாய்மை என்று மக்கள் எண்ணிக் கொண்டிருந்த நிலையை மாற்றி, உண்மைக்கு உண்மை விளக்கம் தந்துள்ளார் திருவள்ளுவர். ஒருவன் சொல்லும் சொல்லானது, பிற உயிர்க்குத் தீமையோ துன்பத்தையோ உண்டாக்காத வண்ணம் அமைந்திருந்தால் அதுவே வாய்மை என்கிறார் திருவள்ளுவர்

> "வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
> தீமை இலாத சொலல்" (குறள் : 291)

### உண்மைப் புகழ்

தன் மனம் நன்றாக அறிந்ததை ஒருவன் மறைத்துவிட்டு, அதற்கு மாறான ஒரு செய்தியைக் கூறுதல் கூடாது. அவ்வாறு கூறினால், அவனது மனமே சான்றாய்

நின்று, அவனுக்குப் பெருந்துன்பத்தை விளைவிக்கும். எனவே மறந்தும் ஒருவன், உண்மையை மறைத்துத் தவறாகக் கூறுதல் கூடாது. ‘தன் நெஞ்சு அறிவது பொய்யற்க’ என்கிறது திருக்குறள். வாழும் காலத்தில் தாங்கள் செய்யும் கொடையினாலும், தங்களிடம் விளங்கும் வீரத்தாலும் புகழ் பெறுவர். இத்தகைய புகழ்ச்சியை விட, ஒருவன் பொய்யாமை அறத்தைக் கடைப்பிடித்தால் ஏற்படும் புகழே, உண்மையான புகழாகும். அத்தகைய புகழைப் பெறும் ஒருவனை நாடி, ஏனைய அறங்கள் எல்லாம், தானே வந்து சேரும். எனவே, அனைத்து அறங்களிலும் தலையாயது பொய்யாமையே என்கிறார் திருவள்ளுவர். அந்த அறத்தை ஒருவன் இடைவிடாது போற்றி வருதல் வேண்டும். பொய்யாமை என்னும் அறத்தைக் கைவிட்டுவிட்டு ஏனைய அறத்தை மனிதன் கைக்கொள்வதால், பிற அறங்கள் எதுவும் அவனுக்குப் பயன்படா. தன் மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் மனம் பொருந்துமாறு, உண்மையை உரைக்கின்ற ஒருவன் தானமும் தவமும் செய்வாரைவிடச் சிறந்தவன் ஆவான். சிலர் புலன்களை அடக்கித் தவம் செய்து உயர்வு பெறுவர்; மற்றும் சிலர் தாங்கள் முயன்று சேர்த்த பொருளை மற்றவருக்கு மனமுவந்து வழங்கி பெருமை பெறுவர். புலனடக்கத்தின் மூலமாகவும் ஈகையின் மூலமாகவும், ஒருவன் அடைகின்ற பயனை, வாய்மையின் மூலம் பெற முடியும். வாய்மையைக் கைவிட்டுவிட்டு, தானதர்மத்திலும், தவத்திலும் ஒருவன் ஈடுபடுவதால் எந்தப் பலனும் இல்லை. உள்ளத்தில் இருந்து, பிறப்பதுவே உண்மை. எனவே தான் உள்ளத்தால் பொய்யாது ஒழுகுபவரை, உலகத்தார் எக்காலத்திலும் தங்கள் உள்ளத்தில் வைத்துப் போற்றுவர் என்கிறது திருக்குறள்.

> **“உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்**
> **உள்ளத்து ளெல்லாம் உளன்”** (குறள் : 294)

**அகத்தூய்மை**

ஒருவனின் அகத்தைத் தூய்மை செய்வதில் வாய்மைக்கு நிகரானது யாதொன்றும் இல்லை. புறத் தூய்மைக்குத் தண்ணீர் எவ்வளவு இன்றியமையாததோ,

அதுபோல உள்ளத் தூய்மைக்கு இன்றியமையாதது வாய்மை. இருள் சூழ்ந்திருக்கும் போது நம்மைச் சுற்றி இருக்கும் பொருள்கள் கூட, நம் கண்களுக்குச் சரியாகப் புலப்படுவதில்லை. விளக்கின் ஒளியைத் துணை எனக் கொண்டு, அருகில் இருக்கும் பொருட்களைக் கண்டு தெளிகிறோம். பகலிலும் இரவிலும் உலகைச் சூழ்ந்திருக்கும் இருளை, முறையே சூரிய சந்திரன் என்னும் இரு பேரொளிகள் மாற்றி அமைத்து நம்மை மகிழ்விக்கின்றன. புற உலகைச் சூழ்ந்திருக்கும் இருளை விட அடர்த்தியானது மனத்தைச் சூழ்ந்திருக்கும் அக இருள். இத்தகைய அக இருளை நீக்கி, மனதில் ஒளி ஏற்றி மெய்ப்பொருளை நாம் அறியும்படி விளக்கும் பொய்யாமை என்னும் மெய் விளக்கத்திற்கு நிகரான விளக்கில்லை.

> **"எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்**
> **பொய்யா விளக்கே விளக்கு"** (குறள் : 299)

## வாய்மை எனப்படுவது யாது?

'வாய்மை' என்னும் அதிகாரத்தில் தெள்ளத் தெளிவாக வாய்மை என்ற சொல்லின் பொருளை நாம் புரிந்து கொள்ள வேண்டும் என்பதில் திருவள்ளுவர் தனி அக்கறை காட்டுகிறார். மற்றவர்களுக்கு எந்த ஒரு தீமையும் ஏற்படுத்தாமல், பிறர்க்கு ஏற்படும் கேட்டையோ, உயிர் ஆபத்தையோ விலக்குவதற்காக, அறிவுடையோரால் சொல்லப்படும் பொய்மை கூட வாய்மையின் இடத்தில் வைக்கப்படும் என்கிறார் திருவள்ளுவர். மற்றவர்களுக்கு நன்மை செய்யும் பட்சத்தில், பொய்மையும் வாய்மையாம் என்று திருவள்ளுவர் குறிப்பிடுவதாக, பல உரையாசிரியர்கள் பொருள் கண்டுள்ளனர். திருவள்ளுவரோ, பொய்மையும் வாய்மையின் - என்று குறிப்பிடாமல், மற்றவர்களுக்கு நன்மை செய்வதற்காகச் சொல்லப்படும் பொய்மை, வாய்மையின் இடத்தில் (Substitute) வைக்கப்படும் என்கிறார். தனிப்பட்ட நன்மைக்காக, ஒருவன் பொய்யைச் சொல்லிவிட்டு அது உண்மையின் பாற்படும் என்று சொன்னால், அதை ஒரு நாளும் ஏற்றுக் கொள்ளமுடியாது என்பது இத்திருக்குறளின் உட்பொருளாய் தொனிப்பதைப் பார்க்கலாம்.

"பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்" (குறள் : 292)

உண்மையைப் பற்றி, பேக்கன் பேசும்பொழுது மனிதர்கள் பெரும்பாலும் உண்மையும் பொய்யும் கலந்து பேசுபவர்களாக இருக்கிறார்கள் என்று பொதுவாகக் குறிப்பிடுகிறார். வாய்மையான உண்மையைக் காட்டிலும் அதோடு சேர்க்கப்படும் புனைந்துரைகள் என்னும் பொய், சொல்லும் செய்திக்கு ஒரு பளபளப்பைத் தந்து அதனை மெருகேற்றுகிறது என்று குறிப்பிடுகிறார். உள்ளதை எப்பொழுதும் உள்ளபடியாக உரைக்கவும், எண்ணிப் பார்க்கவும் இயல்பாகவே மனித மனம் தயங்குகிறது என்பது பேக்கனின் சிந்தனை. இந்தக் கருத்தை உள்வாங்கிக் கொண்டு, நாம் சிந்திக்கத் தொடங்கினால், சில உதாரணங்கள் பேக்கனின் இந்த அனுபவ வாசகத்திற்கு விளக்கமாக அமையும். நோய்வாய்ப்பட்டு, தன் வாழ்வு முடியும் தருவாயை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் மனிதனிடத்தில் "நீ இரண்டு நாளில் இறந்து போவாய்" என்று சொல்ல முடியுமா? வேறு வழி இல்லாமல் அவனை ஆறுதல் அடையச் செய்வதற்காக "நீ பிழைத்துக் கொள்வாய்" என்றல்லவா சொல்ல வேண்டி இருக்கிறது. தன் முயற்சியில் வெற்றி அடைய வாய்ப்பே இல்லாத ஒருவனைப் பார்த்து, இன்றைய தோல்வி நாளை உனக்கு வெற்றி வாய்ப்பாக மாறும் என்று சொல்வதைத்தான் தவிர்க்க முடியுமா? நாள்தோறும், ஆதாரமில்லாத நம்பிக்கைகளையும், கற்பனைகளையும், தவறான மதிப்பீடுகளையும் நம்பித்தான் நிறைய மனிதர்கள் சோகத்திலிருந்தும் துன்பத்திலிருந்தும் தற்காலிகமாகத் தங்களை விடுவித்துக் கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

'A mixture of a lie doth ever add pleasure. Doth any man doubt, that if they were taken out of men's minds, vain opinions, flattering hopes, false valuations, imaginations as one would, and the like, but it would leave the minds of a number of men poor shrunken things full of melancholy and indisposition and unpleasing to themselves?

இவ்வாறு நடைமுறை வாழ்க்கையில் தவிர்க்க முடியாமல் அனுமதிக்கப்படும் பொய்மையைப் பற்றிப் பேசினாலும், வாய்மையின் சிறப்பையும் தனித்தன்மையும் எடுத்துக்காட்ட பேக்கன் தவறவில்லை.

**பொய்மையும் உண்மையும்**

பொய்மை என்பது ஒரு மனிதனைத் தாழ்வடையச் செய்யும். அவனுக்கு அவமானத்தையும் கொண்டு வந்து சேர்க்கும். மனம் அறிந்து பொய் உரைப்பவனுக்கு உரிய நேரத்தில் தண்டனையும் வந்து சேரும். இக்கருத்தை வலியுறுத்தும் பொருட்டு பிரெஞ்ச் எழுத்தாளர் மான்டேகுவின் கருத்தை எடுத்துரைக்கிறான் பேக்கன். தவறு செய்யாதவனைப் போல், தன்னைக் காட்டிக் கொள்ள வேண்டும் என்பதற்காக மனிதன் பொய் உரைக்கிறான். தான் சொல்வது முற்றிலும் பொய் எனத் தெரிந்தும் துணிந்து சொல்கிறான். இவ்வாறு பொய் சொல்லும் மனிதன் இறைவனுக்குப் பயப்படாதவனாகவும், மனிதனுக்குப் பயப்படுகிறவனாகவும் இருக்கிறான்.

'If it be well weighed, to say that a man lieth, is as much as to say that he is brave towards God, a Coward towards men. For a lie faces God, and Shrinks from man.'

உண்மை என்பது பகலில் ஒளிவீசும் முத்தைப் போன்றது. மெழுகுவர்த்தி வெளிச்சத்திலும், செயற்கை வெளிச்சத்திலும் ஜொலிக்கும் வைரத்தைப் போன்றது பொய்.

'This same truth is a naked and open daylight, that doth not show the masks and mummeries and triumphs of the world, half so stately and daintily as candle lights. Truth may perhaps come to the price of a pearl that showeth best by day; but it will not rise to the price of a diamond or carbuncle that showeth best in varied lights.'

உண்மை என்பது பட்டப்பகல் வெளிச்சத்தைப் போன்றது என்றும், பொய்ம்மை என்பது, ஒரு செயற்கை வெளிச்சம் என்றும் வேறுபடுத்திக் காட்டுகிறான் பேக்கன். உண்மையுடன் ஒரு பொய்யைச் சேர்த்துச் சொல்வது

என்பது, தங்கத்துடன் வெள்ளியைச் சேர்ப்பது போல, இந்த உலோகக் கலப்பு, ஒரு நெகிழ்ச்சியை உண்டாக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால், தங்கத்தின் தரம் குறைந்து விடும் என்பதையும் மறந்து விடக் கூடாது. எனவே உண்மையுடன் துளி அளவு பொய் கலந்தாலும், உண்மையின் தரம் குறைந்து விடும் என்பதை ஒரு சிறு உதாரணத்தின் மூலம் எடுத்துக் காட்டுகிறான் பேக்கன்.

'That mixture of falsehood is like alloy in a Coin of Gold and Silver, which may make the metal work the better, but embaseth it'

உலகத்தில் எத்தனையோ விதமான நம் மகிழ்ச்சிக்கு ஆதாரமான விஷயங்கள் உள்ளன. கடற்கரையில் நின்று கொண்டு, அலைவீசும் கடலில், ஆடிவரும் கப்பல்களைப் பார்ப்பதில், நமக்கு ஒரு தனி மகிழ்ச்சி ஏற்படுகிறது. மாளிகையின் சாளரத்தின் வழியாக வீரம் செறிந்த போர் வீரர்களின் சாகசங்களைக் காண நேர்ந்தால், மகிழ்ச்சி அடைகிறோம். உண்மை என்ற அஸ்திவாரத்தின் மேல் நின்றுகொண்டு, தீமையை விலக்கி, நல்வழியில் நடப்பதில் கிடைக்கும் மகிழ்ச்சி, வேறு எதிலும் கிடைத்து விடாது என்ற கருத்தை,

'It's a pleasure to stand upon the shore and to see ships tost upon the sea; a pleasure to stand in the window of a castle and to see a battle and the adventures thereof below; but no pleasure is comparable to the standing upon the vantage ground of Truth and to see the errors and wanderings and mists and tempests in the vale below.'

என்ற வரிகளில் தெரிவிக்கிறான் பேக்கன். பேக்கனின் இந்தக் கருத்தினை அழுத்தந்திருத்தமாக, ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ள திறம் எண்ணிப் பார்க்கத் தகுந்தது.

## இளமையும் முதுமையும்

இளமையைப் பற்றித் தன் கருத்தை எடுத்துச் சொல்ல வந்த பேக்கன் இளமை என்பது எதிர்பாராத தவறுகளுக்கு

ஆளாகும் பருவம், பக்குவப்படாத சிந்தனைகளுக்கு ஆளாகும் காலம் என்கிறான். இருப்பினும் சிறந்த கண்டுபிடிப்புகள், துணிச்சலான வீரதீரச் செயல்கள், சோதித்தறியும் ஆற்றல், கற்பனை விரிவு ஆகியவை இளமையின் இனிய வரங்கள் என்பதைக் குறிப்பிடவும் தவறவில்லை. குறைந்த வயதிலும், நிறைந்த அனுபவத்தோடு பக்குவப்பட்டவர்களாகக் காணப்படும் இளைஞர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு. அனுபவக் குறையும், அவசர முடிவும் இளமைக்கே உரிய குணங்கள். தெரியாத துறைகளையும் தெரிந்து கொள்ளலாம் என்ற துணிச்சலையும், எதையும் செய்து முடிக்கும் ஆற்றலையும் இளவயதில் மனிதன் பெறுகிறான். இளமைக் காலத்தில் அனுபவக் குறைவினால் பல தவறுகள் ஏற்படுகின்றன. தன் தகுதிக்கு மீறியவைகளைச் செய்து முடித்து விடலாம் என்கின்ற துணிச்சல் இளைஞர்களிடம் காணப்படுகிறது.

வெற்றிக்கனியை எட்டிப்பறிக்கும் ஆர்வத்தில், இடையில் குறுக்கீடு செய்யும் தடைகளை அலட்சியப் படுத்துதல், தங்களது செயல்களின் வெற்றியோடு பொருந்தாத சில குறையுள்ள கோட்பாடுகளைப் பற்றிப் பிடித்தல், திடீரென்று தங்கள் செயல்பாடுகளில் எந்தச் சலனங்களுமில்லாமல் மாற்றங்களை ஏற்படுத்தி விட்டு, அதன் விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாமல் இருத்தல், சில தவறான முடிவுகளால் சிரமம் உண்டாகும் போது எந்த ஆலோசனையுமின்றி அதை மாற்றுவதற்கு வேறொரு தவறான முடிவு எடுத்தல், எக்காலத்திலும் தங்கள் தவறை ஏற்றுக்கொள்ள மறுத்தல், தன் முடிவு தவறு என்று தெரிந்தும், அதில் தோல்வி ஏற்பட்டாலும் தன் வழிியை மாற்றாமல் அதிலேயே பிடிவாதமாக நிற்றல், இத்தகைய குணாதிசயங்கள் பெரும்பாலும் இளைஞர்களிடம் காணப்படுகின்றன என்கிறான் பேக்கன்.

**முதுமை**

அதிகக் கவனத்துடனும் எச்சரிக்கையுடனும் நடப்பது, எதனையும் திறனாய்வு செய்வது; குறை காண்பது; எதிலும் எளிதில் மனநிறைவு அடையாமல் இருப்பது;

மறுத்துச் சொல்வது, ஞானத்தோடு நடந்து கொள்வது; துணிந்து ஒரு செயலைச் செய்வதற்குத் தயக்கம் காட்டுவது, எந்தப் பரிசோதனைகளுக்கும் இணங்காமல் இருப்பது; புதிய துறைகளில் இறங்குவதற்கு எப்பொழுதும் தடைவிதிப்பது; கொஞ்சம் வெற்றி கிடைத்தாலும் அதில் முழு திருப்தி அடைவது என்று முதுமைக்கே உரிய சில குணாதிசயங்கள் உள்ளன. ஆக இளமைக்கென்றும், முதுமைக்கென்றும் சில நல்ல குணங்களும் சில ஏற்றுக் கொள்ளத்தகாத குணங்களும் இருதரப்பாரிடமும் இருக்கிறது. எனவே இரண்டு தரப்பாரையும் ஒன்றாக இணைத்து, ஒன்றாகச் செயல்பட்டால் ஒருவரிடமுள்ள தவறை இன்னொருவர் ஈடுகட்டிக் கொள்ள முடியும்.

வியாபாரத் துறையில் தகுந்த திறமையைப் பெறுவதற்கு அனுபவசாலிகளான பெரியவர்களிடமிருந்து இளைஞர்கள் முதலில் சில பாடங்களைக் கற்றுக் கொண்டு, பின்னர் அவர்களது அனுபவத்தையும், ஞானத்தையும், தொலைநோக்குச் சிந்தனைகளையும் பயன்படுத்தி தாங்களே நல்ல திறமையையும் அனுபவத்தையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். இளைஞர்களின் திறமையும், பெரியவர்களின் ஞானமும் ஒன்றாக இணைந்து செயல்பட்டால் பல்வேறு சிறப்புக்களைப் பெறலாம்.

Young men, in the conduct and manage of actions embrace more than they can hold; stir more than they can quite; fly to the end, without consideration of the means and degrees pursue some few principles which they have chanced upon absurdly, care not to innovate, which draws unknown inconveniences, use extreme remedies at first, and that which doubleth all errors, will not acknowledge or retract them; like an unready horse, that will neither top nor turd.

Men of age object too much, cosult too long, adventure too little, repeat too soon, and seldom drive business home to the full period, but content themselves with a mediocrity of success. Certainly it is good to compound employments of both; for that will be good for the present because the virtues of either age may correct the defects of both.

## பெரியாரைப் பிழையாமை

திருவள்ளுவர், அனுபவம் மிகுந்த பெரியார்களை எப்பொழுதும் துணையாகக் கொள்வதே சிறப்புடையது என்பதனைப் "பெரியாரைத் துணைக்கோடல்" மற்றும் "பெரியாரைப் பிழையாமை" என்ற இரண்டு அதிகாரங் களிலும் எடுத்துச் சொல்கிறார். ஒரு மனிதன் தன்னைவிட அனைத்தையும் நன்கு அறிந்த, அறம் உணர்ந்த பெரியவர்களை, மூதறிவாளர்களைத் துணையாகக் கொள்ளுதல் வேண்டும். அத்தகைய அனுபவசாலிகளின் உறவும் தொடர்பும் அவ்வளவு எளிதாகக் கிடைத்து விடாது. நல்ல தகுதிவாய்ந்த பெரியவர்களைப் பேணி, அவர்களைத் தமக்கு உற்றவர்களாகச் செய்து கொள்ளுவது, ஒருவன் பெறும் அனைத்துப் பேறுகளிலும் தலைசிறந்ததாகும்.

பொருளதிகாரத்தில், அரசனுக்கென்று திருவள்ளுவர் சொல்லும் செய்திகள், தனிமனிதனுக்கும் பொருந்தும். அனுபவக் குறைவினால் ஒருவருக்கு ஏற்படும் துன்பங்களைப் போக்கி, அதே துன்பம் மீண்டும் வராமல் தடுத்துக் காப்பாற்றுகின்ற தகுதி பெரியோர்களுக்கு உண்டு. தவறு செய்யும்போது, அதனைச் சுட்டிக்காட்டித் திருத்துகின்ற தன்மை உடைய பெரியோர்களை, ஒருவன் போற்றி வாழத் தெரிந்து கொண்டால், அவனை யாரும் கெடுத்துவிட முடியாது. ஒருநாட்டை அரசாளுகின்ற மன்னருக்குப் பெரியோர்களின் துணை எவ்வளவு அத்தியாவசியமானது என்று, திருவள்ளுவர் எடுத்துரைக்கும் போது, பெரியோர்களின் மேன்மைப் பண்புகளையும் கோடிட்டுக் காட்டுகிறார். உலகில் வாழும் காலம் வரை பகையின்றி மனிதர்கள் வாழ வேண்டும். வேறு வழியில்லாமல் பகை கொள்ளுகிற நிலை சிலருக்கு வந்தாலும் வரலாம். அவ்வாறு பகையைச் சம்பாதிப்பதை விட, நல்லோர்களின் நட்பை இழப்பதுதான் மனிதர்களுக்குப் பலமடங்கு கெடுதலைச் சேர்க்கும் எனவே எக்காரணத்தை முன்னிட்டும் பெரியவர்களின் நட்பை இழந்து விடுதல் கூடாது.

"பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்" (குறள் : 450)

## மூத்தோர் சொல்

பெரியவர்களை மதிக்காமல் இருப்பதனால் ஏற்படும் தீமைகளையும் எடுத்துச் சொல்லத்த தவறவில்லை. எடுத்த காரியத்தை முடிக்கக் கூடிய திறம் படைத்த பெரியவர்களை மதித்து நடக்க வேண்டும். கெட்டுப்போக விரும்புகிறவன்தான் பெரியவர்களின் சொல்லைக் கேட்காமல் நடப்பான். "கெடல் வேண்டின் கேளாதுசெய்க" என்கிறது குறள். நெருப்பால் ஒருவன் எரிக்கப்பட்டால் கூடப் பிழைத்துக் கொள்வான்; ஆனால் பெரியவர்களுக்கு குற்றம் இழைத்து நடப்பவன் பிழைக்கவே மாட்டான்.

"எரியால் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்
பெரியார் பிழைத்தொழுகு வார்" (குறள் : 896)

இத்தகைய பெருமையுடைய பெரியோர்களை மதித்து, அவர்களது தன்மையைத் தாம் பின்பற்ற வேண்டும் என்ற எண்ணம், சிறியவர்களிடம் ஏற்படுவதில்லை. பெருமையிற் சிறந்த பெரியாரைப் பேணிக் கொள்ளாத வர்களைச் சிறியார் என்கிறார் திருவள்ளுவர்.

"சிறியார் உணர்ச்சியுள் இல்லை பெரியாரைப்
பேணிக்கொள்வேம் என்னும் நோக்கு" (குறள் : 976)

பெருமைக் குணமுடையவர்க்ள் பெரியோர்கள். அந்தப் பெருமைக் குணமாவது செருக்கில்லாமல் இருத்தல்; சிறுமைக் குணம் எனப்படுவது செருக்குடன் இருத்தல். பெருந்தன்மையுடைய பெரியோர்கள், மற்றவர்களின் குணக்குறைவுகளைப் பிறரிடம் மறைக்க முயல்வார்கள். குற்றத்தை மறைத்து நல்லகுணத்தைப் பறைசாற்றுவது பெரியோர்களின் இயல்பு. சிறியோர்களோ, ஒருவர் செய்த நன்மையை மறைத்து, அவர்களது குற்றத்தை ஊரறியத் தூற்றி விடுவார்கள். உலக ஞானமும், தேர்ந்த அறிவும், அனுபவமும் கொஞ்சங் கொஞ்சமாக மனிதர்களைப் பண்படுத்தி, அவர்களைப் பெருந்தன்மை உடையவர்களாய்ச் செய்கிறது. வயதில் குறைந்த இளைஞர்கள், வாழ்க்கையைச் செம்மையாய் நடத்திச் செல்லத் தேவைப்படும் பொறுமை, அன்பு, அடக்கம், அழுக்காறாமை, தெரிந்து வினை செய்தல்,

ஒப்புரவு, வாய்மை, முயற்சி ஆகியனவற்றைச் சான்றாண்மை உடைய பெரியோர்களிடமிருந்து சிறியோர்கள் கற்றுக் கொள்ள வேண்டும்.

## நல்குரவும் செல்வமும்

வறுமையினால் வரும் துன்பத்தை 'நல்குரவு' என்னும் அதிகாரத்தில் எடுத்துரைக்கிறார் திருவள்ளுவர். வறுமை போலக் கொடுமையானது வேறெதுவுமில்லை எனச் சொல்லும் வள்ளுவர், வறுமையைவிட துன்பம் தருவது எது எனக் கேட்டால் வறுமை போலத் துன்பம் தருவது வறுமையே ஆகும் என்கிறார். ஒருவனுக்கு வறுமை ஏற்பட்டால், வாழ்வில் அவன் தன் தேவைகளை நிறைவேற்ற இயலாமல் சிரமப்படுவான். தனது நடைமுறைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளப் பொருள் அற்ற ஒருவன், இல்லாதவர்களுக்கு வழங்கும் அறத்தைக் கடைபிடிக்கவும் இயலாது. எனவே பொருளின்மையால் ஈதல் முதலான அறங்களை அவன் ஆற்றுவதும் சாத்தியமல்ல. ஒருவன் சிறந்த பண்பு நலன்களைப் பெற்றிருந்தாலும், அவன் வறுமை அடைய நேர்ந்தால், அந்த வறுமையானது அவனது பண்புகளையும், புகழையும் ஒருசேரக் கெடுக்கும்.

### எளியவன் சொல்

வறுமையின் பிடியில் இருப்பவன் இல்லாமையினாலும், சோர்வினாலும் இழிவான சொற்களைப் பேசவும் நேரிடும். வறுமை என்ற ஒரு துன்பத்திற்குள் பல்வேறு துன்பங்கள் ஒன்று திரண்டிருக்கும் நிலையைப் பார்க்கலாம். பொருளில்லாதவர்க்கு இன்பம் ஏது? சுற்றமும் மனைவி மக்களும் கூட, பொருளில்லாதவரை இகழத் தொடங்குவர். எவ்வளவுதான் நல்ல நூல்களைக் கற்று உணர்ந்து, அவற்றின் நன்னெறிகளைப் பிறருக்கு எடுத்துச் சொன்னாலும், வறியவன் சொல்லும் சொற்களை மதித்துக் கேட்பார் யாருமில்லை. எளியவன் சொல் அம்பலத்தில் ஏறாது என்ற நடைமுறை வாசகம், காலங்காலமாக மக்கள் மத்தியில் புழங்கி வருகிறது. நிரம்பப் பொருள் படைத்தவன், தவறாகச் சொன்னாலும் அவன் சொன்னது சரியென்று, அவனிடம்

உள்ள பொருளுக்காக மக்களை அவனைப் போற்றிப் புகழ்வதையும் பூமியில் காண்கிறோம்.

## கொல்லும் வறுமை

வறுமையோடு வாழ வேண்டியவனின் நிலை மிகவும் பரிதாபகரமானது. உயிரையே பறிப்பது போல நேற்று வருத்திய வறுமை இன்றும் என்னை வருத்துமோ? என்று வறுமையாளன் எப்பொழுதும் அச்சத்தின் பிடியில் கலங்கி நிற்பான்.

> "இன்றும் வருவது கொல்லோ நெருநலும்
> கொன்றது போலும் நிரப்பு" (குறள் : 1048)

வறுமையின் கொடுமையைத் துல்லியமாக எடுத்துச் சொல்லும் திருவள்ளுவரின் சிந்தனை, நம்மை மேலும் மேலும் சிந்திக்கத் தூண்டுகிறது. வறுமையுடன் போராடுவது நெருப்பில் தூங்குவதைப் போல் ஆகும் என்று சொல்லும் திருவள்ளுவர், நெருப்பிலும் கூடத் தூங்க இயலும்; ஆனால் வறுமையில் வாடுகிறவனால் நிம்மதியாய்த் தூங்க இயலாது என்கிறார். இவ்வாறு இல்லாமையோடு போராடுகிற மனிதன் தான், மற்றவர்களிடம் பொருளை யாசித்துப் பெறுகிற இழிநிலைக்குத் தள்ளப்படுகிறான். மக்களை அலைக்கழிக்கும் வறுமையின் மேல் திருவள்ளுவருக்கு ஏற்பட்ட கோபம் தான், 'இன்மை என ஒரு பாவி' என்று அவரைப் பேச வைத்தது. தனி மனிதப் பண்பை சிதைத்து, ஒருவன் அடைய வேண்டிய புகழையும் கெடுத்து, மற்றவர்களால் இகழப்படும் நிலைக்கு ஒருவனைத் தள்ளும் வறுமை சமூகத்திற்குக் கேடு விளைவிக்கும். அத்தகைய வறுமையாளர்கள், பிறரிடம் சென்று கேட்பது என்ற இழிநிலைக்கு ஆளாகாமல், தங்கள் முயற்சியால் பெற்றதை மட்டும் அனுபவித்து அமைதி காண்பதுதான் சால்புடையது என்கிறார் திருவள்ளுவர்.

## கொடுத்து வாழ்

இரப்போரே இல்லாத ஒரு சமூகம் உருவாக வேண்டும் என்று திருவள்ளுவர் விரும்பினாலும், அத்தகைய

சமூகம் உருவாதற்குரிய நடைமுறை சாத்தியக் கூறுகள் இல்லை என்று தெரிந்து கொண்டதனால், ஒளிக்காமல் இரப்போருக்கு வழங்குகிற நல்ல மனம் படைத்தோர், ஒரு சமூகத்தில் இருக்க வேண்டும் என்று விரும்புகிறார். அதே நேரத்தில் பிறரிடம் பெற்றுப் பிழைக்கும் சிறுமதியை, இரப்பவன் புறம் தள்ளவேண்டும் என்றும் வலியுறுத்துகிறார். யாசிக்கச் செல்கிறவனைப் பார்த்துச் செல்வந்தன் இல்லை என்ற சொல்லைச் சொல்லும் போது, இரப்பவன் தன் உயிர் போய்விட்டதைப் போல் உணர்கிறான். ஆனால் பொருளை வைத்துக் கொண்டு இரப்போருக்கு ‘இல்லை’ என்ற சொல்லைப் பயன்படுத்தும் மனிதர்களுக்கு உயிர் எங்குத்தான் ஒளிந்திருக்குமோ? என்று கேட்கிறார் திருவள்ளுவர்.

“கரப்பவர்க்கு யாங்குஒளிக்கும் கொல்லோ இரப்பவர்
சொல்லாடப் போஒம் உயிர்” (குறள் : 1070)

இத்தகைய வறுமைக்கு மாமருந்தாய் அமைவது, மனமுவந்து பிறர்க்கு உதவி செய்து வாழ நினைக்கும் நல்லோரின் கொடைக் குணம். பிறருக்கு உதவாமல், தன் பொருளைத் தானே கட்டிக்காத்துக் கொண்டு இருப்பவனின் செல்வம் யாருக்கும் உதவாது. அத்தகையவனின் செல்வம் ஊர் நடுவில் இருக்கும் ஒரு நச்சு மரத்தைப் போன்றதாகும்.

“நச்சப் படாதவன் செல்வம் நடுஊருள்
நச்சு மரம்பழுத் தற்று” (குறள் : 1008)

## பூமிக்குப் பாரம்

சிலர் பிறரிடம் அன்பு பாராட்டினால், தங்களது செல்வம் குறைந்து விடக் கூடும் என்று எண்ணி அன்பு செலுத்துவதையும் விட்டுத் தங்களையும் வருத்திக் கொண்டு, அறத்தையும் பேணாமல், பொருளை மட்டும் சேர்த்து வைப்பர். தானும் நுகராமல், தகுதியானவர்க்கும் தாராமல் பொருளைப் பூதம் காப்பது போல் காத்துக் கொண்டு வாழ்கிறவன், அந்தச் செல்வத்திற்கு ஒரு நோயைப் போன்றவன் ஆவான். மற்றவர்க்குக் கொடுப்பதனால் கிடைக்கும் புகழைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப்படாமல், சேர்த்து வைப்பதையே குறியாகக் கொண்டவன் நிலத்துக்கே

பாரம் ஆவான். இவ்வாறு வறியவர்க்கு ஒன்றும் கொடுக்காமல் செல்வத்தைக் கட்டிக் காத்துக் கொண்டிருப்பவனை, அழகும் இளமை நலமும் இருந்தும் மணம் முடிக்காமல் தனியே வாழ்ந்து முதுமையுற்ற பெண்ணுக்கு ஒப்பிடுகிறார் திருவள்ளுவர்.

**"அற்றார்க்குஒன்று ஆற்றாதான் செல்வம் மிகநலம்**
**பெற்றாள் தமியள்மூத் தற்று" (குறள் : 1007)**

தானம் செய்வதற்குச் செல்வமே ஆதாரமாக அமைந்திருப்பதால், மக்கள் அந்தச் செல்வத்தை அருளோடும், அன்போடும் பொருந்தித் தேடுதல் வேண்டும். அருளையும் அன்பையும் கைவிட்டு, மக்களை வருத்திப் பொருளைச் சேர்ப்பது அழிவையே கொண்டு தரும். அற வழியில் ஈட்டிய செல்வத்தின் துணையால் வறியோரையும், துறவியரையும் காத்தல் வேண்டும். விருந்து செய்தல், இறைவழிபாடு செய்தல் போன்ற அறங்களை இயற்றுவதற்குப் பொருளே ஆதாரமாக இருக்கிறது. பகை என்னும் இருளைக்கூட விரைந்து போக்கும் ஆற்றல் உடையது, பொருள் என்னும் பொய்யா விளக்கு என்கிறார் திருவள்ளுவர். இவ்வாறு அறவழியில் பொருளைத் தேடுதல் வேண்டும் என்றும், முயன்று தேடிய செல்வத்தின் மூலமாக அறங்களைச் செய்ய வேண்டும் என்றும், அந்தச் செல்வத்தின் மூலமாக வறுமையைப் போக்கலாம் என்றும் திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்.

### செல்வத்தின் நிலை

செல்வத்தைப் பற்றிய பேக்கனின் சிந்தனைகளையும் சற்று எண்ணிப் பார்க்கலாம். பணம் தனக்குத் தேவை என்று மனிதன் நினைப்பதற்கு ஒரு பெரிய காரணம் உண்டு. அது என்னவென்றால், என்ன துன்பம் வந்தாலும் சமாளித்துக் கொள்ளலாம் என்ற தன்னம்பிக்கையைப் பணம் மனிதனுக்குத் தருகிறது. செல்வத்துடன் இருக்கும் மனிதன், தனக்கு ஒரு பாதுகாப்பு இருப்பதாக உணர்கிறான் என்று சொல்லும் பேக்கன், பணத்தைப் பற்றிய இத்தகைய எண்ணங்கள், மனிதர்களின் மனதில் இருந்தாலும், அது

ஒரு கற்பனையான நம்பிக்கையே ஆகும் என்கிறான். செல்வம் படைத்தவர்கள் எல்லாம் துன்பம் இல்லாமல் இருக்கிறார்களா? என்று பார்த்தால் நிரம்பச் செல்வம் படைத்த பல பேர் பலவிதமான துன்பங்களை பூமியில் அனுபவிக்கிறார்கள். அவர்களைப் பணம் துன்பத்திலிருந்து காப்பாற்றி விடாது. எனவே மனிதன் தன் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் அளவிற்குச் செல்வம் பெற்றிருந்தால், அதுவே போதுமானது.

அளவுக்கு அதிகமான செல்வம் ஒருவனிடம் இருந்தாலும், அந்தப் பணமும் செல்வமும் எந்தப் பயன்பாடும் இன்றி அவனிடம் செயல்படாமல்தான் இருக்கும். நேர்மையாக உழைத்துப் பொருள் ஈட்டுகிறவன் விரைவில் செல்வந்தன் ஆவதில்லை. எனவே தான் குறுக்கு வழியில் சென்றாவது, பணம் சம்பாதிக்கலாம் என்று, ஏமாற்று வேலை செய்பவன் நினைக்கிறான். பட்டாளத்து வீரன், எங்குச் சென்றாலும் தன் முதுகில் மிகப் பெரிய ஒரு பையைச் சுமந்து கொண்டுதான் செல்வான். அவன் நடக்கவும், ஓடவும் அந்தப் பை அவனுக்கு எப்பொழுதும் தடையாகவே இருக்கும். அதுபோலத்தான் நல்ல பண்புகளை வளர்த்துக் கொள்வதற்கு, அதிகப்படியான செல்வம் எப்பொழுதும் இடையூறாகவே இருந்து வந்திருக்கிறது. இதனை பேக்கன்,

'For as the baggage is to an army, so is riches to virtue' என்ற அழகிய வரியில் எடுத்துரைக்கிறான்.

எனவே படோடோபத்திற்காகப் பணம் தேடாமல், தேவைக்கு நியாயமான முறையில் பணம் சம்பாதித்து, உதவி தேவைப்படுவோருக்கு மகிழ்ச்சியுடன் கொடுத்து உதவி, தன் தேவைகளுக்கும் அளவாய் உபயோகித்து, பூமியை விட்டுச் செல்லும் போது தேடிய செல்வத்தை அளவிற்கு அதிகமாய் விட்டுப் போக நேர்ந்ததே என்ற வருத்தம் உண்டாகாத வகையில், பணத்துடன் பழகுவது தான் சிறந்தது என்கிறான் பேக்கன்.

'Seek not proud riches but such as thou mayest get justly, use soberly, distribute cheerfully and leave contentedly'.

## அறம் செய்வதற்கே செல்வம்

செல்வத்தைப் பெற்ற ஒரு மனிதன், அதன் மூலமாகத் தான் ஆற்ற வேண்டிய அறங்களைக் காலதாமதமின்றிச் செய்ய வேண்டும். தான் விட்டுப் போன செல்வத்தை வைத்துக் கொண்டு, மற்றவர்கள் அறம் செய்யட்டும் என்று எண்ணாமல், தான் வாழ்கின்ற காலத்திலேயே ஒருவன் உரியவர்க்கு வழங்கி அறம் செய்வதே சிறப்புடையதாகும். நாளை நாளை என்று செய்ய வேண்டிய அறத்தை ஒருவன் தள்ளிப் போடுவதும் சரியல்ல. இக்கருத்தையே திருவள்ளுவர், பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ணாமல் காலத்தோடு அறம் செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகிறார்.

**"அன்றுஅறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றுஅது**
**பொன்றுங்கால் பொன்றாத் துணை"** (குறள் : 36)

திருவள்ளுவரின் சிந்தனையோடு பேக்கனின் 'And defer not charities till death' என்ற வாசகத்தை ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

## பணம் தேடும் வழிகள்

பணம் சம்பாதிக்கும் பல வழிகள் பெரும்பாலும் நேர்மையற்றனவாகவே உள்ளன. கொஞ்சமாகச் செலவழித்தோ, செலவைக் குறைத்தோ பணம் சேர்ப்போர் உண்டு. அவ்வாறு செல்வம் சேர்க்கும் பழக்கம் உடையோர் மற்றவர்களுக்கு உதவுவதும் ஒருவகைச் செலவுதான் என்று எண்ணி, அறச் செயலில் ஈடுபட மாட்டார்கள். நிலத்தை உழுது பண்படுத்தி பயிர் வளர்த்துப் பணம் தேடும் முறை இயற்கையானது. நிலத்தில் விவசாயம் செய்து பொருளை ஈட்டுதல் தன் சுய கௌரவத்திற்குக் குறைந்தது என்று சிலர் எண்ணுவது தவறான சிந்தனையாகும். தன்னை நாடி நின்று உழைப்பவனுக்கு, மண்மகள் பல நலன்களைத் தருகிறாள். 'எதுவும் செய்வதில்லை' என்று நிலத்தையும் வைத்துக் கொண்டு, வெற்றுப் பொழுதைப் போக்கும் மனிதனைக் கண்டால் நிலமகளே நாணமடைவாள். நிலத்தைச் சென்று கூடப் பார்க்காமல் சோம்பித் திரிகிறவனை நிலமானது

வெறுத்து அவன் மனைவியைப் போல, அவனுடன் பிணங்கி விடும் என்கிறார் திருவள்ளுவர்.

**"செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து**
**இல்லாளின் ஊடி விடும்"** (குறள் : 1039)

இங்கிலாந்தில் மிகப் பெரிய பிரபுக்களும் மாட்டுப் பண்ணை உரிமையாளர்களாக இருந்து பொருளைத் தேடி உள்ளனர். எனவே நேர்மையான வழியில் பணத்தைச் சம்பாதிக்கவும், சம்பாதித்த பணத்தைப் பெருக்கவும் தெரிந்து வைத்திருக்க வேண்டியது அவசியம் என்று தெரிவிக்கிறான் பேக்கன். கொஞ்சப் பணம் சேர்ப்பதுதான் கடினம்; அதிகப் பணம் சேர்த்த பின்பு பெருக்குவது ஒன்றும் கடினமல்ல என்பது பேக்கனின் சிந்தனை. பகட்டுக்காக ஒருவன் பணம் சம்பாதிப்பது. தேவையற்றது. அதிகமாக ஒருவன் செல்வத்தைச் சேர்த்ததற்காக, அதிகமாகச் செலவு செய்து விடலாம் என்று எண்ணுவதும் தவறு. தன் வாழ்நாட்களுக்குப் பிறகு, செல்வத்தைப் பெருமளவில் விட்டுச் செல்ல வேண்டி உளதே என்று வருத்தப்படும் அளவுக்குப் பணத்தைத் தேட வேண்டிய அவசியம் இல்லை. தன் தேவைக்குச் செலவு செய்து மற்றவர்களுக்கும் உதவுகிற அளவில் பணம் சாம்பாதித்தால் போதுமானது. அதே நேரத்தில் பணத்தைப் பொருத்த அளவில், ஒரு துறவு மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற அவசியமுமில்லை. பணத்தை வெறுத்துப் பேசும் பலர், தங்களால் பணத்தைத் தேட முடியாத காரணத்தினாலேயே அவ்வாறு நடந்து கொள்கின்றனர் என்றெல்லாம் உலகியலில் பணத்தின் நிலைமை என்ன என்பதனைத் தெளிவாக எடுத்துரைக்கிறான் பேக்கன்.

தானம் கொடுப்பதற்காக, உன்னை விற்க வேண்டிய நிலை வந்தாலும் கவலைப்படாதே என்று சொன்னவர் திருவள்ளுவர். தகுதிக்கு அதிகமாகக் கொடை கொடுப்பது தேவையற்றது என்று சொன்னவர் பேக்கன். வேறுபட்ட இந்த இரண்டு கருத்துக்களையும் நாம் சீர்தூக்கிப் பார்க்கலாம். எனினும் செல்வத்தைப் பற்றிப் பேசுகின்ற பேக்கனின் கருத்துக்கள், திருவள்ளுவரின் கருத்துக்களோடு

ஒத்துப்போகும் பல இடங்களை 'செல்வம்' என்ற தலைப்பில் அமைந்த பேக்கனின் கட்டுரையில் காணலாம். அத்தகைய ஒத்த சிந்தனைகளில் ஒன்றுதான் பேராசைக்காகச் செல்வத்தைச் சேர்ப்பதை விட்டுவிட்டு, மற்றவர்களுக்கு உதவுவதற்குச் செல்வத்தைப் பெறுவது சிறப்புடையது என்று சொல்லும் பேக்கனின் வாசகம்.

'பல்வேறு சிறப்புக்களைத் தர வல்லது செல்வம்' என்பதை மக்கள் அனைவரும் அறிவர். எனவே வாழுங் காலத்தில் செல்வத்தைச் சேர்த்துக் கொண்டு, அந்தச் செல்வத்தின் உதவியால் ஒரு துன்பமுமின்றி இருக்கலாம் என்றும் எண்ணுகின்றனர். சேர்ந்த செல்வத்தை வைத்துக் கொண்டு ஒருவன் அறத்தைப் போற்றுவதும், செல்வம் சேர்ந்துவிட்ட காரணத்தினால் அறத்தைப் புறந்தள்ளுவதும் அவரவர் மனப்பண்புக்கு ஏற்றவாறு அமைகிறது.

**வறுமையும் நன்றே**

ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால், வறுமையும் துன்பமும் கூட ஒருவன் தன் வாழ்வைத் திருத்தி அமைத்துக் கொள்ளப் பல விதங்களிலும் உதவி புரிவதைப் பார்க்கிறோம். செல்வத்துடன் வாழ்வது பல பொருளாதார வசதிகளை ஒருவனுக்குத் தந்து, அவன் உலக இன்பங்களை அனுபவிக்க வழிசெய்யும். ஆனால் (adversity) துன்பமும் வறுமையும் ஒருவனது மனப்பண்பையும் நல்லொழுக்கத்தையும் வளர்த்து, அவனது உள்ளத்தில் உறுதியை உண்டாக்கும். சேக்ஸ்பியர் தன்னுடைய (As you like it) அஸ் யூ லைக் இட் என்ற நாடகத்தில் வறுமையின் பயன்கள் இனிமையானவை என்று குறிப்பிடுவதில் பொருள் இல்லாமல் இல்லை.

"Sweet are the uses of adversity which like the toad ugly and venomous wears but a precious jewel in his head"

விஷத்தை உடைய, பார்க்க அருவருக்கத்தக்க தோற்றமுடைய (toad) தேரையின் தலையிலும் ஒரு மணி இருப்பதைப் பார்க்கலாம் என்கிறான்.

உள்ளத்தின் ஆற்றலைப் பெருக்கித், துணிவையும் மன உறுதியையும் தரவல்லது வறுமை. பொடி செய்யப்படும்போது

மணப்பொருட்கள் எவ்வாறு மணம் கமழ்கின்றனவோ, நெருப்பில் போடப்படும் சாம்பிராணி எவ்வாறு மணம் கமழுமோ அதுபோலத் துன்பத்தாலும் வறுமையாலும் இறுக்கப்படும்போது மனிதனின் மன உறுதியும் செம்மைப் பண்புகளும் விளக்கப் பெறுகின்றன.

Certainly Virtue is like precious odours most fragrant when they are incensed or crushed for Prosperity doth best discover vice, but adversity doth best discover virtue.

அதிகப்படியான செல்வத்தை அனுபவிக்கும் மனிதன் தவறான பாதையில் நடந்து சில பழக்கவழக்கங்களுக்கு அடிமையாகும் வாய்ப்பைப் பெறுகிறான்.

ஒரு மனிதன் வறுமைத் துயரில் துவளும் போது, அவன் பல உண்மைகளைத் தெரிந்து கொள்ளவும், உலகியலைப் புரிந்து கொள்ளவும் வாய்ப்பு ஏற்படுகிறது என்கிறான் பேக்கன். வறுமையுடன் தொடர்புடைய சில நல்ல அம்சங்கள் பாராட்டுதலுக்குரியது என அறிஞன் செனேகா கூறும் வாசகத்தைத் தன் கருத்துக்கு ஆதாரமாக எடுத்துரைக்கிறான் பேக்கன்.

"It was a high speech of seneca that good things which belong to prosperity are to be wished but the good things that belong to adversity are to be admired:"

செல்வத்திலிருந்து பிறக்கும் நன்மைகள் விரும்பத் தகுந்தன. ஆனால் வறுமையில் இருந்து பிறக்கும் நன்மைகளே ரசிக்கத் தகுந்தன. வறுமை ஒருவனுக்கு மன உறுதியைத் தருகிறது. அந்த மன உறுதி என்பது அனைத்து வீரப் பண்புகளிலும் தலையானது. இறைவனின் ஆசீர்வாதத்தினால் கிடைப்பதுதான் செல்வம் என்று பைபிளின் பழைய ஏற்பாடு பேசுகிறது. வறுமையும் ஒருவகையில் இறைவனின் ஆசீர்வாதம்தான் என்று புதிய ஏற்பாடு குறிப்பிடுகிறது.

ஜோபை போன்ற ஒருவனின் உள்ள உறுதியும், அவன் இறைவன் மேல் கொண்டிருந்த அழுத்தமான நம்பிக்கையும், அவன் துன்பப்பட்ட காலத்தில்தான் பெரிதும்

வெளிப்பட்டதாக காட்டுகிறது பைபிள். வசதியான வாழ்விலும் பயம், அதிருப்தி போன்ற அம்சங்களைப் பார்க்கிறோம். அதே நேரத்தில் (adversity) வறுமையிலும், துன்பத்திலும் சில நன்மைகளுக்கும் வசதிகளுக்கும் நம்பிக்கைகளுக்கும் இடமுண்டு.

Prosperity is not without many fears and distastes and adversity is not without comforts and hopes.

ஆனால் வறுமையிலும் துன்பத்திலும் சிக்கி இருக்கும் மனிதன், எப்படியாகிலும் கடினமாக உழைத்துத் தன் வறுமையை வெற்றி கண்டு விட வேண்டும் என்று விடாப் பிடியாய் மன உறுதியுடன் முயற்சிக்கிறான். அவனது பொறுமையும், தொடர்ந்த உழைப்பும், வறுமையிலும் அவனுக்குக் கைகொடுக்கத் தொடங்குகின்றன. எனவே வறுமையும் மனிதனுக்குப் பல நல்ல பாடங்களைக் கற்பிக்கிறது என்கிறான் பேக்கன்.

## பொறாமை என்னும் நெருப்பு

பொறாமை என்பது ஒரு தீய குணம். இக்குணம் பரவலாக மக்களிடம் காணப்படுகிறது. நல்லியல்புகள் இல்லாதவனே பொறாமைப்படுவான்.

"A man that hath no virtue in himself, ever envieth virtue in others" என்று பேக்கன் குறிப்பிட, திருவள்ளுவரோ, நெஞ்சில் பொறாமை இல்லாதவனே சிறந்த ஒழுக்கம் உடையவன் ஆவான் என்கிறார். எனவே பிறருடைய நலன்களைக் கண்டு பொறாமை கொள்ளும் தீய பண்பானது தன் நெஞ்சத்திற்குள் புகுந்து விடாமல் ஒருவன் பார்த்துக் கொள்வது நல்லது.

"ஒழுக்காறாக் கொள்க ஒருவன் தன்நெஞ்சத்து
அழுக்காறு இலாத இயல்பு" (குறள் : 161)

பொறாமை என்னும் குணத்தைப் 'பாவி' என்றழைக்கும் திருவள்ளுவர், பொறாமை ஒருவனது செல்வம் அனைத்தையும் அழித்து அவனைத் தீய நெறியில் செலுத்தும் என்கிறார். பகைவர்கள்கூட ஒருவனுக்குத்

தீங்கு செய்வதை விட்டொழிக்கலாம்; ஆனால் பொறாமை உடையவனுக்கு அந்தப் பொறாமையே தீமையைக் கொண்டு வந்து சேர்க்கும். எனவே பொறாமையைப் போல கொடுமையான பகைவன் வேறு யாருமில்லை. பொறாமை உடையவனை விட்டுத் திருமகள் நீங்கி விடுவதோடு, தன் தமக்கையை அவனிடம் கொண்டு சேர்த்து விடுவாள்.

திருவள்ளுவர் தம் தார்மீக சினத்தை அழுக்காறு பற்றிப் பேசும்போது வெளிப்படுத்துகிறார். இல்லாதவர்களுக்குத் தரப்படும் பொருட்களைப் பார்த்து ஒருவன் பொறாமை கொள்ள நேர்ந்தால், பொறாமைப்படுபவனுடைய சுற்றம், உண்ண உணவும் உடுத்த உடையும் இல்லாமல் துன்பமடையும் என்கிறார்.

**"கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்**
**உண்பதூஉம் இன்றிக் கெடும்"** **(குறள் : 166)**

எனவே யாரிடமும் பொறாமை கொள்ளாத நிலையில் வாழ்தல் வேண்டும். அத்தகைய வாழ்வே சிறந்த வாழ்வாகும். உலகத்தில் பொறாமை கொண்டவர்கள், தம் சிறுமை நீங்கிப் பெருமை பெறுதலும் இல்லை; அதுபோல் பொறாமை கொள்ளாதவர் உயர்ந்த நிலையில் இருந்து தாழ்ந்து, அற்ப நிலையை அடைவதும் இல்லை; அழுக்காறு கொள்கிறவன் வறுமை நீங்கி, செல்வ வளம் பெறுவதும் இல்லை; பொறாமைக் குணம் இல்லாத நல்லவன், தன் செல்வத்தை இழந்து வறுமையுறுவதும் இல்லை என்கிறார் திருவள்ளுவர்.

### பொறாமைக்கு ஏது ஓய்வு

அழுக்காற்றினால் அடுத்தவருக்குத் துன்பத்தைச் செய்வதிலேயே பொறாமை பிடித்த மனிதன் குறியாயிருப்பான். பொறாமைக்கு ஓய்வே இல்லை. 'Envy takes no holidays' என்கிறார் பேக்கன். எல்லா விதத்திலும் பிறரைப் போலவே சிறந்து விளங்க இயலாது; அத்தகைய திறமைகள் தங்களிடம் இல்லை என்பதை நல்லவண்ணம் தெரிந்து வைத்திருப்பவர்கள் பொறாமைப்பட்டுப் பயனில்லை என்று எண்ணி விடுவார்கள். தங்களுக்குச் சமமானவர்கள், தங்களை விட உயர்ந்த நிலையை எட்டிப் பிடிக்கும்போது,

பொறாமையும் அளவு கடந்து அவர்களிடம் தலைதூக்கத் தொடங்குகிறது.

Again envy is ever joined with the comparing of a man's self and where there is no comparison no envy; and therefore kings are not envied but by kings.

பொறாமைக் குணம் ஒருவனுக்கு வந்து விட்டால், அதை மாற்றுவது மிகவும் அரிது. சூன்யக்காரிகளிடம் அகப்பட்டுக் கொண்டவன் அலைக்கழிக்கப்படுவது போல, பொறாமை ஒருவனை அலைக்கழிக்கும். தாங்கள் சொல்வ தெல்லாம் சரி என்றும், மற்றவர்கள் செய்வதெல்லாம் தவறு என்றும் எண்ணும் மனோபாவமுடைய மனிதனின் மனம், எப்பொழுதும் தன்னிடம் உள்ள நல்லனவற்றையும், மற்றவர்களிடம் உள்ள குற்றங்களையுமே நினைத்துக் கொண்டிருக்கும்.

For men's minds will either feed upon their own good, or upon other's evil.

பயிரை நாசப்படுத்தும் களையைப் போல, எப்பொழுதும் மற்றவர்களின் ஆர்வத்தையும் புகழையும் குறைப்பதற்குப் பொறாமைக்காரர்கள் ஏதாவது செய்து கொண்டே தான் இருப்பார்கள். எனவே பொறாமை என்பது சாத்தானிடம் இருந்து மனிதன் பெற்றுக் கொண்ட விரும்பத் தகாத குணம் என்று பேக்கன் எடுத்துரைக்கிறான்.

It is the proper attribute of the devils who is called the envious man, that soweth tares amongst the wheat by night; as it always cometh to pass, that envy worketh subtilly and in the dark, and to the prejudice of good things such as is the wheat.

வாழ்க்கையில் மனிதன் கடைப்பிடித்து நடக்க வேண்டிய பல நன்னெறிகளை எடுத்துச் சொல்லும் பேக்கனின் தனிப்பட்ட பண்புநலன்களைப் பற்றிய திறனாய்வாளர்களின் அபிப்பிராயம் வரவேற்கக் கூடிய விதமாக இல்லை. பேக்கனின் வாழ்வுக்கும், அவனது வாசகங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்கிறார்கள் விமர்சகர்கள். மிக உயர்ந்த அரசுப் பதவிகளைப் பயன்படுத்திக் கொண்டு,

தான் செய்த ஊழல்களை ஒரு காலகட்டத்தில் பேக்கனே ஏற்றுக் கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்திருக்கிறான் என்ற செய்தியைப் பார்க்கும்போது, இவன் எடுத்துச் சொன்ன கருத்துக்கள் எல்லாம் மற்றவர்களுக்குத்தானா? என்று நாம் எண்ண வேண்டியிருக்கிறது. நட்பு, நேர்மை ஆகிய உன்னதப் பண்புகள் பேக்கனிடம் மிகவும் நலிந்தே காணப்பட்டன. பேராசை பிடித்த, மனச்சாட்சியில்லாத ஒரு அரசியல்வாதியாகவே பல வேளைகளில் பேக்கன் நடந்து கொண்டான். அவனது தனிப்பட்ட பண்பு பாராட்டும் விதத்தில் இல்லாததால், அறிவில் சிறந்தவன்; ஆனால் ஒழுக்கத்தில் குறைந்தவன் என்று பேக்கனை விமர்சனம் செய்தனர். அறிவும் குணமும் உடைய கீழ்த்தர மனிதன் என்று கூட விமர்சித்தனர்.

பேக்கன் ஒரு சட்ட வல்லுனனாக, அரசியல்வாதியாக, தத்துவம், விஞ்ஞானம், வரலாறு அறிந்த ஒரு தலைசிறந்த எழுத்தாளனாக இருந்தான். ஆயினும் நல்ல பண்பாளன் என்ற பெயரை அவனால் பெற முடியவில்லை. எனினும் மொழிநடையில் மக்களுக்குப் பயன்படும் பல வாழ்வியல் நெறிகளைத் தந்து சென்ற பிரான்சிஸ் பேக்கனின் எழுத்துக்களின் தெளிவும் வலிமையும், அவன் வழங்கி யிருக்கும் கருத்துக்களில் காணப்படும் உண்மையும் என்றும் மனித சமுதாயத்திற்குப் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

## தீதின்றி வந்த பொருள்

அறவழிப்பட்டு ஒருவன் ஈட்டுகிற செல்வமானது ஒருவனுக்கு அறத்தையும் கொடுக்கும்; இன்பத்தையும் கொடுக்கும் என்றும் மற வழியில் வரும் பொருள் பாவத்தையும், துன்பத்தையும் தரும் என்றும் திருக்குறள் எடுத்துரைக்கிறது. வாழ்க்கைக்குப் பொருள் அத்தியாவசிய மானதாக இருந்தாலும், அதனைத் தீய வழியில் தேடுதல் கூடாது. மனிதர்களின் பலவீனத்தைக் காசாக்கும் கயமைத் தொழில்களிலிருந்து பெறப்படும் வருவாயை "தீதோடு வரும் பொருள்" என்பதாகச் சொல்கிறது குறள். திருவள்ளுவரால் கடிந்துரைக்கப்படும் கள்ளுண்ணுதல், சூதாட்டம் போன்ற தீய பழக்கங்கள், வணிகம் என்ற மாறுவேடத்தில் வலம் வந்து

கொண்டிருக்கும் சூழ்நிலையில், அத்தகைய இழிதொழில் களால் பெறப்படும் பொருள் தீதின்றி வந்த பொருள் அல்லாது வேறேது? எனவே பொருள் ஈட்டுவது வாழ்வாதாரக் கடமையாக இருப்பினும், அந்தப் பொருளைத் தீதற்ற நல்வழியில் ஈட்டுவதே நல்லது என்கிறது குறள். வழியைப் பற்றிக் கவலைப்படாமல், முடிவு மட்டும் லாபகரமானதாக இருந்தால் போதும் என நினைத்துத் தவறான வழியில் ஈட்டிய செல்வங்கள் பழியைச் சேர்த்ததோடு, அவ்வாறு ஈட்டியவரின் தலைமுறைக்குப் பயன்படாமல் போன கதைகளையும் கண்டு கொண்டிருக்கிறது உலகம். எனவே நன்னெறியால் வந்த பொருள், தப்பாமல் அறமும் இன்பமும் வழங்கும்.

**"ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்**
**ஏனை இரண்டும் ஒருங்கு" (குறள் : 760)**

## அன்பென்னும் தாய்

அறங்கள் செய்வதற்கும் பொருள் தேவைப்படுகிறது. ஒருவரிடம் அன்பிருந்தால், அந்த அன்பு பரந்து விரிந்து அருளாகி மணம் பரப்பும். அந்த அருள்மனம், மற்றவர்களுக்கு உதவ வேண்டும் என்று எண்ணும்போது, அதை நிறைவேற்றிக் கொள்ளப் பொருள் தேவைப்படுகிறது. இதைத் திருக்குறள் மிக அழகான ஓவியமாய் நம் கண்முன் தீட்டுகிறது. அன்பு என்னும் ஒரு தாய் இருந்தாள். அவள் அருள் என்னும் ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தாள். அந்தக் குழந்தையைச் செல்வம் என்கின்ற செவிலித்தாய் வளர்த்தெடுத்தாள்.

**"அருள்எனும் அன்புஈன் குழவி பொருள்என்னும்**
**செல்வச் செவிலியால் உண்டு" (குறள் : 754)**

எனவே, அன்பு அருளாகி, அருள் ஈகையாய்ப் பரிணமிக்க, அறவழியில் ஈட்டிய செல்வம் துணை புரியும் என்கிறார் திருவள்ளுவர்.

## பகை கடியும் ஆயுதம்

பகைவர்களது செருக்கையும் தருக்கையும் அழிக்க வல்ல கூர்மையான ஆயுதம் பொருளைக் காட்டிலும்

வேறெதுவுமில்லை. எனவே பொருளைத் தேடிச் சேர்க்க வேண்டும் என்கிறார். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே கள்ளுண்பது, சூதாடுவது முதலான செயல்களைச் சான்றோர்கள் வெறுத்து ஒதுக்கும் குற்றங்களின் பட்டியலில் சேர்த்தவர் திருவள்ளுவர். பொருள் வரும் வழி குற்றமற்றதாகவும், நேர்மையானதாகவும் இருக்க வேண்டுமென்பதைத் திருவள்ளுவர் வலியுறுத்துகிறார். சேர்த்த செல்வத்தைக் கொண்டு ஒருவன் ஆற்றும் அறப்பணியினால், அவனுக்குப் புகழ் வரவேண்டுமே அல்லாது, தான், தனது என்று மட்டும் வாழ்ந்து பொருள் வைத்து இழக்கும் வன்கணாளனாக, பழிபடர்ந்த வாழ்வைப் பொருள் மூலம் ஒருவன் தேடிக் கொள்ளுதல் அழகல்ல என்று தெளிவாய் எடுத்துரைக்கிறார் வள்ளுவர்.

**மனைத்தக்க மாண்பு**

பொருளாதாரம் என்பது வீட்டில் தொடங்கி உலகம் வரை விரிகின்ற தேவையாகும். வீட்டில் மனையறம் பேணும் பெண், கணவனது வருவாய்க்குத் தக்கபடி செலவு செய்ய வேண்டுமென்று, வீட்டுச் செலவைக் கட்டுக்குள் வைக்க வேண்டிய பொறுப்பைத் திருவள்ளுவர் பெண்ணிடம் தருகிறார். அவ்வாறு வருவாய்க்குள் வளமான வாழ்க்கை நடத்தும் பெண்மணி சிறந்த வாழ்க்கைத் துணை நலம் ஆவாள்.

> **“மனைத்தக்க மாண்புடையளாகித் தற்கொண்டான்**
> **வளத்தக்காள் வாழ்க்கைத் துணை” (குறள் : 51)**

அரும்பெரும் பண்புகளோடு, சான்றோர்களாய் தம் மக்கள் திகழவேண்டும் என்பதைக் கருத்தில்கொண்டு, அரும்புகளாய்க் குழந்தைகள் வளருகிற காலத்திலேயே அவர்களுக்கு நல்லெண்ணங்களையும், பண்புச் சிறப்புக் களையும் ஊட்டி வளர்க்கின்ற பாசறைகளாகத் தமிழ்க் குடும்பங்கள் பன்னெடுங்காலமாக இருந்து வருகின்றன. புற உலகில் சென்று, பொருள் தேடி வரும் ஆடவனைவிட, மனைக்குள் இருந்து அறம் வளர்க்கும் பெண்ணின் பொறுப்பு மிகவும் அதிகம். தம் செம்மாந்த பண்புகளால், கொண்டவனின் குணநலன்களை மேம்படச் செய்து, குழந்தைகளையும் சான்றோர்களாக்கி நல்ல சமூகத்தை

உருவாக்கும் பெரிய பொறுப்பு பெண்ணிடமிருக்கிறது. எனவே வாழ்க்கைத்துணை எனப்பட்ட குடும்பத்தலைவியின் கைகளில் வருவாய்க்குத் தக்கபடி செலவு செய்யும் பொறுப்பை திருவள்ளுவர் வழங்கி உள்ளார். "மங்கலம் என்ப மனை மாட்சி" என்கிறார். இவ்வாறு வீட்டில் தொடங்கி, நாட்டின் பொருளாதாரம் வரை திருவள்ளுவர் பேசும் பான்மை எண்ணிப் பார்க்கத் தகுந்தது.

அரசுப் பொருளாதாரத்தைப் பொருத்தவரையில் ஒரு சிறந்த பொருளாதார நிபுணரைப் போல் பேசுகிறார் திருவள்ளுவர். ஒரு அரசானது நாட்டின் செலவினங்களுக்குத் தேவையான பொருள் வரும் வழிகளை முதலில் உண்டாக்கிக் கொள்ளவேண்டும். இரண்டாவதாக, பொருள் வரும் வழிகள் அமைந்த பின்னால், பொருளைச் சேர்ப்பதில் கவனம் செலுத்துதல் வேண்டும். மூன்றாவதாக, சேர்த்த பொருளைத் திறமையாகப் பாதுகாத்தல் வேண்டும். நான்காவதாக, பாதுகாத்து வைத்த பொருளை என்னென்ன நல்ல வழிகளில் செலவு செய்ய வேண்டுமென்பதைப் பகுத்து வைத்துச் செயல் நடத்த வேண்டும்.

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு" (குறள் : 385)

பொருளைப் பற்றிய முழுமையான விவரங்களையும் திருக்குறள் விளக்கமாகப் பேசுகிறது.

## செலவு

செலவு என்ற தலைப்பில் அமைந்த பேக்கனின் கட்டுரையில், நாம் தெரிந்து கொள்ள வேண்டிய செய்திகள் பல உள்ளன. பணத்தைச் செலவு செய்யும் போது பார்த்துச் செலவு செய்ய வேண்டும். நல்ல செயலுக்காகத் தேவையான அளவில் செலவழிக்கப்படுவதே, பணத்தின் மதிப்புத் தெரிந்தவனின் அடையாளம். பின்னால் வரும் அவசியத் தேவைகளுக்காக ஒருவன் பணத்தைச் சேமிக்க வேண்டும். அத்யாவசியமாகச் செலவழித்தாக வேண்டிய சூழ்நிலைகளில், தாராளமாகத் தேவை கருதிச் செலவு செய்யலாம்.

**வரவும், செலவும்**

எப்பொழுதும் செலவு வருமானத்திற்குள் இருக்க வேண்டும். வருமானத்தில் ஒரு குறிப்பிட்ட தொகையைத்தான் செலவு செய்ய வேண்டும். வருவாய்க்கு மீறிச் செலவு செய்வதற்குப் பதிலாக, செலவைக் குறைப்பதே ஒரு வருவாய்தான். செலவழிப்பதற்கென்று சில விதிமுறைகளை ஏற்படுத்திக் கொண்டு, பணத்தைக் கையாள வேண்டும். செலவைப் பற்றிய கவலை இல்லாமல், பணத்தைக் கவனக் குறைவாக கையாளுவது சரியானதல்ல. ஒவ்வொரு நேரமும், நமது கையிருப்பு எவ்வளவு என்பதைத் தெரிந்து வைத்துக் கொண்டு, எதிர்ப்படும் செலவினத்தை எப்படிச் சமாளிப்பது என்று எண்ணிச் செயல்பட வேண்டும். ஏதாவது ஒரு வகையில் செலவழிக்க நேர்ந்தால் மற்றொரு வகையில் செலவைக் குறைக்க வேண்டும். சின்னச்சின்னச் செலவுகளைக் கூடக் கட்டுப்பாட்டுக்குள் வைக்க வேண்டும்.

Riches are for spending, and spending for honour and good actions. Therefore extraordinary expense must be limited by the worth of the occasion; for voluntary undoing may be as well for a man's country as for the kingdom of heaven.

A man had need, if he be plentiful in some kind of expense, to be as saving again in some other.

இவ்வாறு சிறந்த அறிவுரையைப் பணத்தைக் கையாளுவது பற்றித் தெளிவாக எடுத்துச் சொல்லும் பேக்கன், தன் வாழ்க்கையில் இவைகளைக் கடைப்பிடிக்கத் தவறிவிட்டான் என திறனாய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள். அவர் இறக்கும் போது இருபத்து இரண்டாயிரம் பவுண்டு கடனுடன்தான் மறைந்தார்!

**அளவறிதல் நன்று**

பொருளை எவ்வாறெல்லாம் பேணிக்காக்க வேண்டுமென்று, தனித்தன்மையுடன் திருவள்ளுவர் எடுத்துரைக்கின்றார். தனது வருவாயின் அளவை அறிந்து, அதற்கு ஏற்றது போல ஒருவன் வாழ வேண்டும். தனது பொருளின் அளவை அறியாமல், தன் விருப்பம் போல்

வாழ்பவனின் வாழ்க்கை, உள்ளது போலத் தோன்றினாலும், பிறகு இல்லையென ஆகிவிடும். தன் பொருள் அளவைப் பற்றிக் கவலைப்படாமல் வாழ்கின்ற ஒருவன் தான் சிறப்பாக வாழ்வதாக நினைத்துக் கொண்டிருக்கும் போதே அவன் உள்ளதிலிருந்து இல்லாததை நோக்கிப் பயணப்பட்டுக் கொண்டிருப்பான். நாட்டு வழக்கில் இந்தச் செய்தியைத்தான் 'விரலுக்குத் தகுந்தபடி வீங்க வேண்டும்' என்பார்கள். ஒருவனுக்கு வருவாய் வருகின்ற வழி சிறியதாகக் கூட இருக்கலாம். ஆனால் அவனது கையிலிருந்து பொருள் செல்லும் வழி பெரிதாகாமல் இருக்க வேண்டும்.

> "ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
> போகா றகலாக் கடை" (குறள் : 478)

> "அளவறிந்து வாழாதான் வாழ்க்கை யுளபோல
> இல்லாகித் தோன்றாக் கெடும்" (குறள் : 479)

## பொருள் என்னும் விளக்கு

பொருள் என்பது வாழ்க்கையின் அத்தியாவசியமான தேவை. அந்தப் பொருளைப் பெறுவதற்குப் பலவகையிலும் மனிதர்கள் முயன்று வெற்றி பெறவேண்டும் என்பதை "பொருள் செயல்வகை" என்ற அதிகாரத்தில் மிகத் தெளிவாக நாம் காண்கிறோம். ஒரு பொருளாக யாராலும் மதிக்கப்படாத மனிதரும் பொருளைச் சேர்த்து விட்டால், அவர்களை மற்றவர்கள் மதிக்கத் தொடங்கி விடுகிறார்கள். பிறர் நம்மை மதிக்க வேண்டுமென்பது, மனிதர்களிடம் இயல்பாகக் காணப்படும் எண்ணம். மதிப்பிழந்து நிற்பவனுக்கும் மதிப்பளிப்பது செல்வம். 'பொருளற்றவரை பொருளாகச் செய்யும்' என்கிறார் திருவள்ளுவர். பெரும் பொருள் படைத்தவனை உலகில் எல்லோரும் சிறப்புச் செய்வதையும், பொருளில்லாதவனை எல்லோரும் இகழ்வதையும் நாள்தோறும் பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றோம். பொருள் படைத்தவனை நண்பனாகச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று பலரும் விரும்புவர். பணம் படைத்தவன் பகை நமக்கெதற்கு? என்று பகை மறந்து உறவு கொள்வர். பகை என்பது இருள் போன்றது என்றால்,

செல்வம் என்பது அந்த இருளைப் போக்கும் அணையாத விளக்கு. எனவே பொருள் என்னும் விளக்கு பகையென்னும் இருளை விலக்கும் என்கிறது திருக்குறள்.

"பொருள்என்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று" (குறள் : 753)

## உடல் நலம்

நம்மைச் சிந்திக்கத் தூண்டும் உடல் நலம் பற்றிய பல கருத்துக்களைப் பேக்கன் நம்முடன் பகிர்ந்து கொள்கிறார். ஒரு மனிதனின் உடல் நலம் என்பது அவன் பெற்றுள்ள எல்லாச் செல்வங்களிலும் தலையாயது. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்கின்றனர். எனவே உடல் நலம் ஒருவனால் சரியாகப் பேணப்பட வேண்டும். தன் அனுபவத்தின் மூலமாகத் தனது நலத்தைக் கெடுக்கும் அம்சம் எது? என்பதை மருத்துவரிடம் செல்வதற்கு முன்னால், தானே ஒருவன் தெரிந்து கொள்ள வேண்டும். ஒரு மனிதனின் தனிப்பட்ட அனுபவம், ஒரு சிறந்த மருத்துவரைப் போல அவனுக்குப் பயன்படும். உணவுப் பழக்கத்தைப் பொருத்தவரையிலும், உடற்பயிற்சி, உடை ஆகியனவற்றைப் பொருத்தமட்டிலும் திடீர் மாற்றங்களைச் செய்வது ஏற்றுக் கொள்ளத் தகுந்தது அல்ல. இந்த மூன்றும் மாறுபடும்போது ஏனைய வாழ்க்கை முறைகளையும் ஒருவன் மாற்றி அமைக்க வேண்டிய நிலைமைக்கு ஆளாகிறான்.

### மனநலமும் மகிழ்வும்

எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்கப் பழகுவது, உடல் நலத்திற்கு உகந்தது. எல்லையற்ற உணர்ச்சிகளின் பிடியில் சிக்கிக் கொள்வதும், எரிச்சல் முதலான உணர்வுகளோடு வாழ்வதும், உடல் நலத்தைக் கெடுக்கும். சிலர் ஏதாவது மகிழ்ச்சியான சம்பவங்கள் நடைபெறு மானால், அந்த மகிழ்ச்சியிலேயே தொடர்ந்து அதிகமாகத் திளைத்துக் கொண்டிருப்பார்கள். மகிழ்ச்சியையும் அளவோடு அனுபவிப்பதுதான் நன்மை பயக்கும். மருந்து உண்ணும்

போதும், அளவோடு உண்ணுதல் வேண்டும். நோய்வாய்ப் பட்டால், சுகம் பெறுவதற்காக மருத்துவரின் உதவியை நாடுகிறோம். நோயின்றி வாழும் போது, உடற்பயிற்சி செய்ய வேண்டுமென்பதை மறந்து விடுகிறோம். உடலை நலத்துடன் வைத்திருக்கும் நல்ல மருந்து உடற்பயிற்சியே ஆகும்.

உணவை உண்பதில் குறிப்பிட்ட அளவைக் கடைப் பிடிப்பதோடு, சில வேளைகளில் உணவைத் தவிர்ப்பதாலும் உடல்நலத்தைப் பெருக்கலாம். மருத்துவர் உதவியை நாடுவதற்கு முன்னால், அவர் நமது உடல் நிலையைப் பற்றி நன்றாகத் தெரிந்தவர்தானா என்பதையும், அவர் தம் துறையில் நல்ல பயிற்சியும், அறிவாற்றலும், திறமையும் உடையவரா? என்பதையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். தன் பேச்சால் நோயாளிகளைக் கவரக் கூடிய தன்மையும், நாகரீக நடவடிக்கைகளும் உடையவராய் இருப்பது மட்டுமே ஒரு மருத்துவருக்கான தகுதி என்று மக்கள் தவறாக நினைக்கிறார்கள். வயது முதிர்ந்த பின்னால்ஒருவன் உடல் நலத்துடனும், மன அமைதியுடனும் வாழ வேண்டுமானால், அவன் தனது இளமைக் காலத்தில், தன்னைக் கட்டுப்பாட்டுடன் நடத்திக் கொள்ளும் அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு உணவைப் பற்றியும், உடல் நலத்தைப் பற்றியும், மருத்துவத்தைப் பற்றியும் தன் சொந்த அனுபவத்தின் மூலமாக பேக்கன் சிறப்பாக எடுத்துரைக்கிறான்.

As for the passions and studies of the mind, avoid envy, anxious fears, anger fretting inwards, subtile and knotty inquisitions; toys and exhilarations in excess; sadness not communicated.

Examine thy customs of diet, sleep, exercise, apparel and the like; and try, in anything thou shalt judge hurtful, to discontinue it by little and little; but so, as if thou dost find any inconvenience by the change, thou come back to it again; for it is hard to distinguish that which is generally held good and wholesome, from that which is good particularly and fit for thine own body.

Physicians are some of them so pleasing and comformable to the humour of the patient, as they press not the true cure of the disease and some other are so regular in proceeding according to art of the disease, as they respect not sufficiently the condition of the patient.

**அளவுக்கு மிஞ்சினால்**

உணவையும் மருந்தையும் பற்றி திருவள்ளுவர் தரும் தெளிவான சிந்தனைகள் எக்காலத்திற்கும் பொருத்தமானது. இன்றுவரை அனைத்து மருத்துவர்களும் ஏற்றுக் கொள்ளும் உடல் நலம் பற்றிய செய்தியினை முதற்குறிப்பாக திருவள்ளுவர் வைக்கிறார்.

வாதம், பித்தம், கபம் ஆகிய மூன்றும் ஒருவனது உடம்பிற்கு ஏற்ற அளவில் இல்லாமல் குறைந்திருந்தாலும், கூடினாலும் நோயை உண்டாக்கும் என்பது மருத்துவர்கள் சொல்லும் உண்மை. திருவள்ளுவர் இந்த உண்மையை மிகுந்தாலும், குறைந்தாலும் நோய் வரும் என்கிறார். ஒருவன் தான் உண்ணும் உணவின் அளவைக் குறைத்து உண்பது நல்லது என்பதை அறிந்து, உணவை உண்டால் அவன் நலம் பெறலாம். தேவைக்கு அதிகமான உணவை உட்கொள்பவனுக்கு மிஞ்சுவது நோய் மட்டும்தான். உணவுப் பழக்கத்திற்கும் நோய்க்கும் தொடர்பு உண்டு. எனவேதான் நோய்வாய்ப்பட்டவர்கள் மருத்துவரை அணுகும் போது, மருத்துவர் அவர்களது உணவுப் பழக்கத்தைப் பற்றி முதலில் கேட்டுத் தெரிந்து கொள்கிறார். அதற்குப் பின்னால் இன்னின்ன உணவு வகைகள் உண்பதைத் தவிர்க்க வேண்டுமென்றும், இன்னவகை உணவுகளை உண்ண வேண்டுமென்றும் அறிவுறுத்துகிறார். உணவின் மேல் அதிக விருப்பமுடையவரும் அளவிற்கு மீறி உண்ட பிறகு 'ஐயோ கொஞ்சம் குறைத்து உண்டிருக்கலாமே' என்று அங்கலாய்ப்பர்; 'நடக்க முடியவில்லை' என்பர். அதிகம் உண்டால் துன்பம்; குறைவாக உண்பது இன்பம் என்று அழகுபடச் சொல்கிறார் திருவள்ளுவர்.

**"இழிவறிந் துண்பான்கண் இன்பம்போல் நிற்கும்**
**கழிபே ரிரையான்கண் நோய்"** (குறள் : 946)

உடம்பிற்கு ஏற்றவாறு, உடம்பிற்கு ஒத்த உணவை உண்ணுதல் வேண்டும். சிலர் இன்னும் கொஞ்சம் உண்ணலாம் என்ற எண்ணம் வரும் போதே, அந்த எண்ணத்தை மாற்றி, செரிக்கும் அளவு உணவைத்தான் உண்ண வேண்டும் என்று தெளிவர். அத்தகையோருக்கு, பிணியினால் ஏற்படும் துன்பம் ஏற்படாது. உண்ட உணவு செரிமானமான பிறகு தான், அடுத்த உணவை உண்ண வேண்டும். அவ்வாறு உண்டால், மருந்து உண்ண வேண்டிய அவசியமில்லாது, அவன் நீண்ட நாள் உயிர் வாழலாம். முழுவதும் பசித்த பிறகே உண்ண வேண்டும் என்பதைச் சொல்ல வந்த திருவள்ளுவர், 'துவரப் பசித்து' என்ற சொல்லைக் கையாளுகிறார்.

## நோய்கள் நீங்க வழி

நோய்வாய்ப்பட்ட ஒருவன் நோய்க்கு மருத்துவம் செய்யும் போது, அந்த நோய் இன்னது என்று தெரிந்து கொண்டு, அந்த நோய்க்குக் காரணம் என்ன என்பதை அறிந்து, பின்னர் அதனை நீக்கும் வழியைத் தெரிந்து கொண்டு பிழையின்றிச் செயல்பட வேண்டும்.

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்" (குறள் : 948)

நோயுற்றவனின் நிலைமையையும் நோயின் தன்மையையும், மருந்தையும், மருந்து கொடுக்கும் காலத்தில், நன்கு அறிந்தவனாக ஒரு மருத்துவன் இருத்தல் அவசியம். அத்தகைய மருத்துவனே நோய் நீக்கும் முயற்சியில் வெற்றி பெறுவான்.

"உற்றான் அளவும் பிணிஅளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல்" (குறள் : 949)

ஒரே விதமான நோயினால் இரண்டு பேர் பாதிக்கப் பட்டிருந்தாலும், அவர்கள் இருவருக்கும் ஒரே அளவான மருந்தை மருத்துவன் கொடுப்பதில்லை. இருவரின் உடல் அமைப்பும், மருந்தினை ஏற்றுக் கொள்ளும் தகுதி உடையவனாக அமைந்துள்ளதா என்று சீர்தூக்கிப் பார்த்து, வேறு நோய்களால் அவர்களது உடம்பு பாதிப்பு அடைந்திருக்கிறதா என்று ஆராய்ச்சி செய்து, குறிப்பிட்ட

நோயின் பிடியில் சிக்கியிருக்கும் காலத்தின் அளவையும் கணக்கெடுத்து, எவ்வளவு காலத்திற்கு மருத்துவம் தேவைப்படும் என்பதையும் ஆராய்ந்து பார்த்து, மருந்தளிப்பவனே நல்ல மருத்துவன் ஆவான். ஒரே நோயினால் அவதிப்படும் பலருக்கும், ஒரே மருந்தை, ஒரே அளவில் தருதல் பயன் அளிக்காது. மருத்துவம் என்பது நான்கு பகுதிகளை உள்ளடக்கியது. நோயுள்ளவன், நோய் தீர்க்கும் மருத்துவன், நோய்க்குத் தரப்படும் மருந்து, மருத்துவனுக்குத் துணை செய்வோன் ஆகிய நான்கு அம்சங்களும் மருத்துவத்தில் அடங்கும். உணவும், மருந்தும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையதாக இருப்பதனால் உடல் நலம் பற்றி பேசும் பேக்கன், உணவையும், மருந்தையும், மருத்துவரையும் பற்றி ஒரே கட்டுரையில் குறிப்பிடுகிறான். அதுபோலவே திருவள்ளுவரும் மருந்து என்ற அதிகாரத்தில் உணவையும் மருத்துவர்களையும் பற்றிக் கூறுகிறார்.

"உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்று
அப்பால்நாற் கூற்றே மருந்து" (குறள் : 950)

## நட்பு

நட்பு என்பது மனித இனம் போற்றி மகிழும் உயர்ந்த உறவு. இந்த உறவு ஒத்த உணர்வு உடையவர்கள் எங்கிருந்தாலும் அவர்களை ஒன்றிணைக்கும் உறவாகும். நல்ல நண்பனை அடைதல், வாழ்வில் ஒருவனுக்குக் கிடைக்கும் பரிசுகளில் ஒன்று. சந்தர்ப்பவசத்தால் தீயவனை நண்பனாகச் சேர்த்துக் கொள்ளுதல் ஒருவன் வாழ்வில் ஏற்படும் மிகப் பெரிய கேடு. நட்பைப் பற்றி 'நட்பு, நட்பு ஆராய்தல், தீ நட்பு, கூடா நட்பு, பழைமை' என்ற ஐந்து அதிகாரங்களில் எடுத்துரைக்கிறார் திருவள்ளுவர். நட்பைப் போன்ற அருமையான உறவு வேறெதுவுமில்லை. அதுபோல, ஒருவன் எடுத்துக் கொண்ட செயலுக்குப் பகைவரால் கேடு உண்டாகாமல் காப்பதற்கு நட்பைப் போல அருமையான காவல்கள் வேறு இல்லை.

"செயற்கரிய யாவுள நட்பின்? அதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு?" (குறள் : 781)

**உண்மை நட்பு**

உண்மையான நட்பின் தன்மை என்ன என்பதனைத் திருவள்ளுவர் குறிப்பிடும் போது, ஒருவருடன் நட்பு கொள்வதற்கு ஓரிடத்தில் கூடிப் பேசி உறவாட வேண்டும் என்ற அவசியமில்லை. பழகும் இருவருக்கும் ஒன்றுபட்ட உணர்ச்சி இருக்குமாயின், அதுவே, நண்பராவதற்குரிய உரிமையைத் தரும். உண்மையான அன்பு என்பது நம் அகத்தை மலரச் செய்யும் அன்பாகும். அக மலர்ச்சி இன்றி முகம் மட்டும் மலரும் நட்பு, உண்மை நட்பு ஆகாது.

"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு" (குறள் : 786)

நண்பனுக்குத் துன்பம் வரும் போது, அவன் கேட்காமலேயே சென்று உதவி, அத்துன்பத்தை நீக்குவது உண்மையான நட்பின் அடையாளமாகும். ஆடை அவிழும் போது, கையானது ஓடிச் சென்று சரி செய்வதைப்போல, நண்பனுக்குத் துன்பம் வரும் போது, உடனே சென்று உதவுதல் உண்மையான நட்பு.

"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு" (குறள் : 788)

நட்பினர் இருவருள் ஒருவர், நன்னெறி தவறி நடக்கும் போது, அவரை அறிவு நிறைந்த இன்னொருவர் முந்திச் சென்று கடிந்து, திருத்துவதற்குப் பயன்படும் நட்பு, ஆக்கம் சேர்க்கும் நட்பாகும். தீய வழியில் நண்பன் செல்லத் தொடங்கினால், அதிலிருந்து அவனைக் காத்து, அவனை நல்ல நெறியில் நடக்குமாறு செய்து, அழிவு வந்த காலத்தில் உடன் இருந்து, துன்பத்தைப் பங்கிட்டுக் கொள்வதே உயர்ந்த நட்பாகும். ஒருவன் கற்கக் கற்க, ஒரு நூலின் நற்பொருளை அறிந்து, மேலும் மேலும் அவன் இன்பம் அடைவதைப் போல, பழகப் பழக பண்புடையவர்களின் நட்பு, இன்பம் பயக்கும். இத்தகைய, சிறந்த நட்பினைப் பெறுவதற்கு முன்னால், தகுந்த நட்பினரை ஆராய்ந்து அறிதல் வேண்டும் என்கிறார் திருவள்ளுவர். ஒருவரது பண்புகளையும் செயல்களையும் பலவகையிலும் ஆராயாமல் செய்து

கொள்ளும் நட்பானது துன்பத்தில் முடியும். அறிவு இல்லாதவருடன், ஆராயாமல் நட்புச் செய்ய நேர்ந்தால், அதை எவ்வளவு விரைவாக நீக்கிக்கொள்ள வேண்டுமோ, அவ்வளவு விரைவாக நீக்கிக் கொள்ள வேண்டும். துன்பம் வந்தபோது, தூர நிற்பவனின் நட்பையும் விலக்குதல் வேண்டும். உள்ளத்தால் பொருந்தாதவரின் நட்பை, அவர் விரும்பிய பொருளைக் கொடுத்தாவது நீக்கி விடுதல் வேண்டும். ‘குடிப் பிறந்து, தன் கண் ப்ழி நாணுவானை கொடுத்தும் கொளல் வேண்டும்’ என்று சொன்ன திருவள்ளூர், பொருந்தாத நட்பை, ஒன்றைக் கொடுத்தாவது விலக்குதல் வேண்டும் என்றுரைத்தது கவனிக்கத் தக்கது.

“மருவுக மாசற்றார் கேண்மைஒன் றீந்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு” (குறள் : 800)

## நட்பினால் உருவாகும் உரிமை

நல்ல நட்பின் இயல்புகளைச் சொன்ன திருவள்ளுவர் பழைமையான நட்பின் சிறப்புரிமை பற்றியும் பேசுகிறார். நமக்கு உறுப்பு ஆவது கெழுதகைமை என்னும் உரிமை. உப்பானது உணவிற்குத் துணையாகி சுவை ஊட்டுவதைப் போல, உரிமையானது, நட்பிற்குத் துணையாய் அமைகிறது. பழமையான நட்பிற்கு உரிய ஒருவர், வருந்தத்தக்க செயல்களைச் செய்தாராயினும், அதற்குக் காரணம், அவர் தம்மிடத்தில் கொண்ட மிகுந்த உரிமையோ, அல்லது அறியாமையோ என்று எடுத்துக் கொள்ளல் வேண்டும்.

“பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுணர்க
நோதக்க நட்டார் செயின்” (குறள் : 805)

அன்புடன் காலங்காலமாகத் தொடர்ந்து வரும் நட்பினை உடைய தம் நண்பர், தனக்கு அழிவு தரும் செயல்களைச் செய்வதாய் இருந்தாலும், அவரிடம் என்றும் அன்பு நீங்காமல் இருப்பவரே, உண்மையான நட்பிற்கு உரியவர். மற்றவர்கள் நண்பனைப் பற்றித் தவறாக எடுத்துரைத்த போதிலும், அதனைப் பெரிதுபடுத்தாமல், நட்புரிமை பாராட்டும் நண்பனை அனைவரும் மதித்துப் போற்றுவர் என்கிறார் திருவள்ளுவர். இவ்வாறு நட்பின்

முக்கியமான அங்கமாக விளங்கும் உரிமையைப் பற்றிப் பேசும் திருவள்ளுவர் யாருடன் நட்புச் செய்தல் கூடாது என்பதையும் தெளிவுபடுத்துகிறார்.

### பயன் கருதும் நட்பு

அதிக அன்புடையவர் போல் வெளியில் காட்டிக் கொண்டு, உள்ளத்தில் பண்பு நலன் சிறிதும் இல்லாத மனிதர்களுடன் நட்புச் செய்வதைப் போன்ற ஆபத்து வேறெதுவுமில்லை. அத்தகைய தீ நட்பு வளர்ந்து பெருகுவதைக் காட்டிலும் தேய்ந்து குறைவதே நல்லது. நெஞ்சகத்து நற்பண்பு இல்லாதவனின் இயல்புகள் எவ்வாறு அமைந்திருக்கும் என்பதை, திருவள்ளுவர் நமக்குச் சுட்டிக் காட்டுகிறார். தனக்குப் பயன் இருக்கும் வரையில், ஒருவருடன் நட்புச் செய்து கொண்டு, பயனில்லாதபோது அவரை விட்டு நீங்கி விடுபவன் நண்பன் அல்லன். நண்பனின் அன்பைக் கருதிப் பார்க்காமல், அவனால் தான் அடையும் பயனை மட்டுமே எண்ணிப் பார்க்கும் மனிதனுக்கும், தரப்படும் பொருளுக்காக அன்பு பாராட்டுவதைப் போல் நடிக்கும் விலைமகளுக்கும், பொருள் இழப்பால் ஒருவர் எவ்வளவு துன்பப்படுவார் என்பதைக் கொஞ்சமும் எண்ணிப் பார்க்காமல் பொருள்களைத் திருடும் திருடனுக்கும் எந்த வேறுபாடும் இல்லை. அகத்தில் அன்பில்லாதவனுடைய நட்பை விட, பகைவரால் வரும் துன்பம் கூட பத்து கோடி மடங்கு நன்மை உடையதாகும்.

### உறவாடியும் கெடுப்பர்

சிலர் நண்பர்கள் போல் நடித்து, முடியும் செயலைக் கூட முடியாதபடி செய்து கெடுப்பர். அத்தகையோரின் நட்பை ஒன்றும் சொல்லாமலேயே, தளரச் செய்து, கைவிட்டு விடுதல் வேண்டும். சிலர் சொல்லும் சொல்லில் நட்பையும், செய்யும் செயலில் விரோதத்தையும் காட்டி நிற்பர். அன்னாரது நட்பு, ஒருவனுக்குக் கனவில் கூடத் துன்பம் செய்யும். இன்னும் சிலர் தனியாய் இருக்கும்போது, நண்பனுக்குச் சாதகமாய் இருப்பதைப் போலப் பொருந்தி இருந்து விட்டு, பலர் கூடி இருக்கும் இடத்தில் மற்றவருடன்

சேர்ந்து கொண்டு பழி கூறுவர். அத்தகையோரின் நட்பும் அபாயகரமானது. தீயவனோடு கூடும் நட்பானது எவ்வாறு செயல்படும் என்று விளக்குவதற்கு திருவள்ளுவர் சிறந்த உவமை ஒன்றைக் கையாளுகிறார். போர் தொடங்குவதற்கு முன்னால் தன் முதுகில் அமர வைத்து, ஒரு போர் வீரனை அழைத்துச் செல்லும் குதிரை, போர் தொடங்கிய பிறகு வீரனைக் கீழே தள்ளி விட்டு ஓடிப்போனால் எப்படி இருக்குமோ, அப்படிப்பட்ட காலை வாரிவிடும் குதிரையைப் போல நண்பன் மகிழ்ச்சியாகவும் வசதியாகவும் இருக்கும் போது, அவனுடன் இருந்து, அவனுக்குத் துன்பம் வந்த போது அவனை விட்டு ஓடி விடும் நட்பை 'தீ நட்பு' என்கிறார் திருவள்ளுவர்.

"அமரகத்து ஆற்றறுக்கும் கல்லாமா அன்னார்
தமரின் தனிமை தலை" (குறள் : 814)

தீ நட்பைப் பேசும் திருவள்ளுவர், வெளியில் நண்பன் போல் நடந்து கொண்டு, உள்ளுக்குள் பொறாமை வளர்க்கும் பொய்யான நட்பின் தன்மைகளை எடுத்துரைக்கிறார். அத்தகைய மனிதர்களிடம் மிகவும் கவனமாக நடந்து கொள்ளுதல் வேண்டும். உள்ளன்பு என்பது உன்னதமானது. அது ஒரு மனிதனுக்கு இயல்பாக இருக்க வேண்டிய பண்பாகும். பலப்பல நூல்களை நல்லவண்ணம் கற்றுத் தேர்ந்த போதிலும், அவற்றின் பயனாக நல்ல மனம் படைத்தோராய் விளங்குவது, மாண்புடையாருக்கே உரியது.

"பலநல்ல கற்றக் கடைத்தும் மனநல்லர்
ஆகுதல் மாணார்க்கு அரிது" (குறள் : 823)

## ஆராய்ந்து நட்புச் செய்

வெளியில் பேசப்படுகின்ற சொற்களை வைத்து, ஒருவனை நண்பன் என்று முடிவு செய்துவிடல்ஆகாது. மனதில் வஞ்சகத்தை வைத்துக் கொண்டு, வாயினால் இனிமை கலந்த சொற்களைப் பேசும் மனிதர்களை, அவர்தம் வாய்ச்சொற்களை வைத்து எடை போடுவது சரியல்ல. சிலர், ஒருவரைப் பார்க்கும்பொழுது, முகத்தில் முழுவதுமாக மகிழ்ச்சியையும், இனிமையையும் காட்டி சிரித்து சிரித்துப்

பழகுவர். அவர்தம் அகத்தில் வஞ்சகமும், தீமையும், அழுத்தமாய் இடம் பிடித்திருக்கும். அத்தகையோர் உண்மை நண்பர்களைப் போல நடித்து, நன்மைதரக் கூடியனவற்றைப் பேசினாலும், அவர்கள் உள்ளத்தில் இருக்கும் பகைத்தன்மை எப்படியோ வெளிப்பட்டு விடும். எனவே நண்பர்கள் போலவும், நல்லனவற்றைச் சொல்வதைப் போலவும் நடித்தாலும் அதைக் கேட்கிறவன், சொல்பவன் உள்ளத்தைத் துல்லியமாய்ப் புரிந்து கொள்வது நல்லது. சிலர் பணிவாக வணங்கிக் கொண்டே தீமை செய்வர். அவர்கள் வணங்கிச் சொல்லும் பணிவான சொற்களைக் கேட்டு மற்றவர்கள் ஏமாற்றம் அடைவர்; சிலர், வில் வளைவதைப் போலத் தங்கள் உடலையே வளைத்து வணங்கி நிற்பர்; அந்தப் பொய்யான வில் வணக்கத்திற்கும் சொல் வணக்கத்திற்கும், உள்ளே மறைந்து நிற்கும் வஞ்சனை. என்வேதான் பகைவர்கள் கையெடுத்து வணங்குகிறார்கள் என்று மயங்கி விடாமல், அந்தக் கைகளுக்குள்ளும் கொல்லப் பயன்படும் படைக்கருவி மறைந்திருக்கும் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். நெகிழ்ச்சியினால், கண்ணீர் வருவதாக ஒரு பகைவன் காட்டிக்கொள்ளும்போது, அந்தக் கண்ணீருக் குள்ளும் விரோதம் மறைந்திருக்கும் என்று எண்ணிப் பார்ப்பதே அறிவுடைமை என்று எச்சரிக்கிறார் திருவள்ளுவர்.

> **"சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க வில்வணக்கம்**
> **தீங்கு குறித்தமை யான்"** **(குறள் : 827)**

> **"தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்**
> **அழுத கண்ணீரும் அனைத்து"** **(குறள் : 828)**

## கூடா நட்பை நீக்குதல் நன்று

இவ்வாறு கூடா நட்பின் தன்மைகளைக் குறிப்பிடும் திருவள்ளுவர், அத்தகையோரைத் தவிர்க்க முடியாத நிலை ஏற்படும் போது எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிடுகிறார். சில மனிதர்கள், கொஞ்சம் கூட தங்கள் நெஞ்சத்துப் பகையை வெளியே காட்டிக் கொள்ளாமல், வெளியே மிகுதியாக நட்புச் செய்வதைப் போல் காட்டிக்கொள்வர். மனதில் தங்களைப் பற்றி இழிவாக

எண்ணும் அத்தகைய பகைவரைத் தாமும் வெளிப்படையாக நட்புப் பாராட்டி, அவர் மகிழும் வண்ணம் நடந்து கொண்டு, மனத்தளவில் அத்தகைய தொடர்பு சாகும்வண்ணம் நடந்து கொள்ள வேண்டும். நேரடிப் பகைவர்களாக இருந்தவர்கள் நண்பர்களாக மாறும் காலம் வரும் போது அவர்களைப் போலவே முகத்தளவில் நட்புக் கொண்டு, அகத்தளவில் கொஞ்சமும் நட்பு இல்லாமல் பிறகு அத்தொடர்பை, கொஞ்சம் கொஞ்சமாகக் கைவிட்டு விடுதல் வேண்டும். பகைவர்களை வெளிப்படையாக நீக்க முடியாத சூழ்நிலை இருக்கும் போது, உடனே பகைத்து விடாமல், புறத்தளவில் நண்பனைப் போல் இருந்து, பிறகு தொடர்பை முடித்துக் கொள்வதே சாலச் சிறந்தது.

"பகைநட்பாம் காலம் வருங்கால் முகநட்டு
அகநட்பு ஒரீஇ விடல்" (குறள் : 830)

### அன்புடை நண்பன்

நட்பின் பல பரிமாணங்களைத் திருவள்ளுவர் ஐந்து அதிகாரங்களிலும் படம் பிடிக்கிறார். திருவள்ளுவரின் நட்புப் பற்றிய அனைத்துச் சிந்தனைகளையும் பேக்கனிடம் காண இயலாது. ஒரு சில குறட்பாக்களின் சாரத்தை, பேக்கனின் நட்பு என்னும் கட்டுரையில் காணலாம். எப்பொழுதும் தனிமையை விரும்பும் மனிதன், ஒன்று கடவுளாக இருக்க வேண்டும், இல்லையென்றால் மிருகமாக இருக்க வேண்டும் என்ற அரிஸ்டாட்டிலின் சிந்தனையோடு தொடங்குகிறது பேக்கனின் நட்பு என்னும் கட்டுரை. ஆன்மீகக் காரணங்களுக்காகத் தனிமையை விரும்புவதாகப் பலர் குறிப்பிட்டுள்ளனர். இறையுணர்வுடன் கூடிய உன்னதமான வாழ்க்கைக்குத் தனிமை பெரிதும் துணை செய்யும் என்பது பலரின் எண்ணம். இது ஒரு பொதுவான சிந்தனையாக இருந்தாலும், நண்பர்களே இல்லாமல் தனிமையில் இருக்கும் மனிதன் ஒரு காட்டில் தனித்து வாழ்பவனைப்போல் ஆகி விடுவான். தன் மனதின் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ள, மனிதனுக்கு நல்ல நண்பன் தேவைப்படுகிறான். தன்னுடைய துன்பம், இன்பம், பயம், நம்பிக்கை இவைகளை ஒரு நண்பனிடம் பகிர்ந்து

கொள்ள முடியும். நண்பர்களே இல்லாதவர்கள் தங்கள் மனதைத் திறந்து காட்ட ஆளில்லாமல், தவித்துப் போவார்கள். அவர்களின் துன்பம் அவர்கள் மனதிற்குள்ளேயே கூடுகட்டிக் கொண்டு அவர்களைத் துன்பத்தில் ஆழ்த்தி, மன அழுத்தத்தில் கொண்டு சேர்க்கும். நண்பர்கள் இல்லாத வாழ்க்கை, ஒரு வறண்ட பாலைவனம் போன்றது என்கிறார் பேக்கன். 'It is a mere and miserable solitude to want true friends, without which the world is but a wilderness. நண்பன் என்பவன் திருவள்ளுவர் குறிப்பிடுவதைப் போலவே நெஞ்சில் உண்மை அன்புடையவனாக இருக்க வேண்டும் என்பதை பேக்கனும் எடுத்துரைக்கிறான்.

அன்பில்லாதவர்கள் நம்மைச் சுற்றிக் கூட்டமாக இருந்தாலும், அவர்களால் யாதொரு நன்மையும் ஏற்படாது. மனதில் கொஞ்சமும் அன்பில்லாமல், கூட்டமாக நம்மைச் சுற்றி இருக்கும் மனிதர்களின் முகங்கள் வெறும் வரைபடங்களைப் போன்றது. அவர்களின் பேச்சு வெறும் வெற்றோசை அன்றி வேறில்லை.

For a crowd is not company and faces are but a gallery of pictures and talk but a tinkling cymbal where there is no love.'

நண்பர்களால் ஒரு மனிதனின் மகிழ்ச்சி அதிகரிக்கிறது. நண்பர்கள் இல்லாதவன், தன் துன்பத்தைப் பகிர்ந்து கொள்ள வழி இல்லாததால் அவன் துன்பம் பல மடங்காகிறது.

For there is no man that imparteth his joy to his friends but he joyeth the more, and no man that imparteth his grief to his friend but he grieveth the less.

தன் கட்டுரைகளில் பேக்கன் பெரும்பாலும் நட்பினால் உண்டாகும் பல நன்மைகளையே எடுத்துரைக்கின்றார். ஒரு மனிதன் தன் கடமைகளை ஒழுங்காக நிறைவேற்ற ஒரு நல்ல நண்பன் தேவை. மனதின் நலத்திற்கு நட்பு பெரிதும் துணை செய்கிறது. சூழ்நிலைகளையும், உலகையும் புரிந்து கொள்ளும் தன்மையை நட்பு வளர்க்கிறது. நண்பர்களுடன் பல கருத்துக்களைப் பற்றிய உரையாடல்களில் ஈடுபட்டிருக்கும் போது, அந்த மனம்திறந்த உரையாடல்தான்

கருத்துக்களுக்கு முழு வடிவும் கொடுத்து, மனத் தெளிவையும் ஏற்படுத்துகிறது. ஒருவரோடு ஒருவர் கருத்துப் பரிமாற்றம் செய்வதனால் எண்ணங்கள் விரிவடைவதோடு, புத்தியும் கூர்மை அடைகிறது. 'பயன்பாட்டைக் கருதி நட்பு கொள்வது, சிறந்த நட்பல்ல' என்பது வள்ளுவரின் கருத்து. உள்ளத்தில் உண்டாகும் ஒத்த உணர்வினால் ஏற்படும் நட்பு, காலப்போக்கில் இருசார்பாருக்கும் இயல்பாகவே பல பயன்பாடுகளைக் கொண்டு வந்து சேர்க்கிறது என்கிறார். கூடிச் சிரித்து மகிழ்ந்திருப்பதற்காக மட்டுமல்லாமல், நெறிதவறிச் செல்லும் போது, ஒருவரைக் கண்டித்துத் திருத்துவதற்கும் நல்ல நட்பு துணை செய்கிறது என்பதனைத் திருவள்ளுவர்,

> "நகுதற் பொருட்டன்று நட்டல்; மிகுதிக்கண்
> மேற்சென்று இடித்தற் பொருட்டு" (குறள் : 784)

என்கிறார்.

## நன்மை செய்வான் நண்பன்

ஒரு நண்பனிடமிருந்து பெறக்கூடிய ஆலோசனையைப் போல பயனுள்ளது ஏதுமில்லை. தவறுகளை நண்பன் கண்டிக்கும் போது அது ஒருவனின் மன நலத்திற்குப் பெரிதும் துணை புரிகிறது. தங்களுக்கு நல்லவிதமாக ஆலோசனை சொல்லவோ, தவறு செய்யும்போது திருத்தவோ ஆளில்லாதவர்கள், மிகப் பெரிய தவறுகளைச் செய்யவும், முட்டாள்தனமான செயல்களில் ஈடுபடவும் பல சமயங்களில் நேரிடுகிறது. நட்பு இல்லாத வாழ்வு முழுமை பெறாது. ஆலோசனை என்கின்ற பெயரால் ஒவ்வொரு முறையும், வேறு வேறு மனிதர்களை, வேறு வேறு விஷயங்களுக்காகத் தேர்ந்தெடுப்பதை விட்டுவிட்டு, எல்லா நிலையிலும் தனக்கு உண்மையான நண்பனின் ஆலோசனையை ஏற்று நடப்பதே சாலச் சிறந்தது. ஒவ்வொரு முறையும், மனிதர்கள் மாற்றி மாற்றி ஆலோசனை பெறும் போது, ஆலோசனை அளிப்பவர், கேட்பவரின் சூழ்நிலைகளையும், வாழ்வு முறைகளையும், மன நிலையையும் பற்றிச் சரியாக அறிந்திருக்க வாய்ப்பு இருக்காது. சூழ்நிலைகளையும் மனநிலைகளையும் பற்றித் தெரிந்து

கொள்ளாதவன் அறிவுரை சொல்வது, உடல்நிலை பற்றி எதுவும் தெரியாத மருத்துவனிடம் சென்று வைத்தியம் செய்வதைப் போன்றதாகும். எனவே எல்லா நிலையிலும், தகுதியான நண்பனின் ஆலோசனையைப் பெற்று, அதன்படி நடப்பதே சிறப்புடையதாகும் என்கிறான் பேக்கன். சில காலகட்டங்களில் தன்னால் எடுத்துச் சொல்ல முடியாத பல செய்திகளை, குறிப்பிட்டவருக்குத் தன் நண்பன் மூலமாக ஒருவன் தெரிவிக்கலாம். தன் வாழ்நாளில் ஒருவன் செய்யத் தொடங்கி நிறைவேறாமல் விட்டுப் போன நல்ல செயல்களை, ஒரு நண்பன் இருந்தால் அவன் தொடர்ந்து செய்து முடிப்பான். எனவேதான் நல்ல நண்பன் என்பவன் ஒருவனின் மற்றொரு பதிப்பு என்கிறான் பேக்கன்.

'A friend is another himself.'

மனிதர்களுக்கு ஏற்படும் விதவிதமான நோய்களுக்குப் பல மருத்துவ முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மூச்சுத் திணறல் ஒரு மனிதனை அபாயகரமான நிலைக்குக் கொண்டு சென்று விடும். இதயத்தை நெருக்கிக் கொண்டிருக்கும் கவலை சூழ்ந்த எண்ணங்கள், நண்பனிடம் பகிர்ந்து கொள்ளப்படாதவரை, மன அழுத்தத்திற்கும், உடல் நோய்க்கும் வழிவகுக்கும்.

'A principal fruit of friendship is the ease and discharge of the fullness and swellings of the heart which passions of all kinds do cause and induce.

கணையத்திலும் கல்லீரலிலும் கோளாறுகள் ஏற்படும் போது அறுவைச் சிகிச்சையின் மூலமாக அக்கோளாறுகளை மருத்துவர்கள் சரி செய்கிறார்கள். மூச்சுத்திணறலைப் போக்குவதற்கு, கந்தகப் பொடி துணை செய்கிறது. இதயத்தின் எண்ண இறுக்கங்களைத் தளர்த்துவதற்கு, எந்தக் கத்தியும் கந்தகமும் பயன்படாது. அதற்குத் தேவை, தன் மனத் துன்பத்தையும், மகிழ்ச்சியையும், பயத்தையும், நம்பிக்கையையும், சந்தேகத்தையும், எண்ணங்களையும், தன் வாய்மொழியாகக் கேட்டு சரியான விதத்தில் புரிந்து கொள்ளும் நண்பனே ஆவான். அத்தகைய நல்ல நட்புக்கு ஈடு இணை வேறு எதுவும் இல்லை. எல்லா நலத்திலும்

சிறந்தது மனநலம். அந்த மனநலம் ஒரு சிறந்த நண்பனின் அறிவுரையினால் கிடைக்கிறது.

To keep the mind in health is the faithful admonition of a friend. We know diseases of stopping and suffocations are the most dangerous in the body and it is not much otherwise in the mind you may take sarze to open the liver, steal to open the spleen, flour of sulphur for the lungs, castoreum for the brain; but no receipt openeth the heart but a true friend to whom you may impart griefs, joys, fears, hopes, suspicions, counsels and what so ever lieth upon the heart to oppress it, is a kind of civil shrift of confession.

பல சிறந்த செய்திகளை நட்பு என்னும் கட்டுரையில் நமக்கு எடுத்துரைக்கும் பேக்கன், நண்பன் இல்லாத வாழ்வு ஒரு வாழ்வல்ல; நண்பன் இல்லாதவன் வாழ்ந்தும் பயனில்லை எனச் சொல்லி நிறைவு செய்கிறார்.

Where a man cannot fitly play his own part, if he have not a friend, he may quit the stage.

## கற்றல் நன்று

மனித வாழ்க்கையில், மிக முக்கியமான அம்சமான கல்வியைப் பற்றிய தன் எண்ணங்களை பேக்கன் நம்முடன் பகிர்ந்து கொள்கிறார்.

கற்பது மகிழ்ச்சியைத் தருகிறது. மூன்று விஷயங்களுக்காக, நாம் கல்வி கற்கிறோம். தனிமையில் நாம் இருக்கும்போது, நம் கல்வி நமக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது. நம் எழுத்தும், பேச்சும் திறமையாக வெளிப்படும் போது, நம் கல்வி சமுதாயத்தில் ஒரு அணிகலனாக மதிக்கப்படுகிறது. உண்மைகளை எடுத்துச் சொல்லும் போதும், சூழ்நிலைகளுக் கேற்ப நடந்து கொள்ளும் போதும் சரியாகத் தீர்மானம் செய்யும் ஆற்றலைப் பெறும்போதும், கல்வி செயல் திறமையாக வெளிப்படுகிறது. நாம் செய்யும் செயல்கள் சிறப்படையவும், வாழ்வைச் செம்மைப்படுத்தவும் நம்முடைய அறிவைப் பயன்படுத்த வேண்டும். அவ்வாறு பயன்படுத்தும்

போது அந்தக் கல்வி உழைக்கின்ற ஆர்வத்தை நமக்கு வழங்கும்.

வாழ்க்கையோடு சம்பந்தப்படாத வெறுங்கல்வி, சோம்பேறித்தனத்தை வளர்ப்பதோடு உழைப்பில் வெறுப்பையும் உண்டாக்கும். வெறும் கல்வியையே ஒருவன் கற்றுக் கொண்டிருந்தால், மற்றவர்களுக்கு முன்னால் தன் அறிவை வெளிக்காட்டிக் கொள்வதிலேயே அவன் நேரத்தைச் செலவழிப்பானே அல்லாது, அவன் அறிவு பயன்பாடுடையதாகாது. வெறும் புத்தகப் புழுவாக இருப்பதற்குப் பெயர் கல்வி அல்ல. புத்தகங்களையே வாழ்நாள் முழுவதும் படித்துக் கொண்டு உலக ஞானம் கொஞ்சமும் இல்லாமல் வாழ்ந்து மறைந்தவர்கள் நிறையப் பேர் உண்டு.

**படிப்பதற்கான சில வழிகாட்டுதல்கள்**

திறந்த மனதுடன் ஒரு புத்தகத்தைப் படிக்கத் துவங்க வேண்டும். சில புத்தகங்களை, ஒரே தடவையாக படித்து முடித்து விடாமல், கொஞ்சங் கொஞ்சமாக சுவைத்துப் படிக்க வேண்டும். சில புத்தகங்களை, அப்படியே எடுத்து விழுங்கியதைப் போல மேலோட்டமாகப் படிக்க வேண்டும். இன்னும் சில புத்தகங்களைக் கவனமாக அசைபோட்டு, மனதினால் உள்வாங்கிக் கொண்டு படிக்க வேண்டும். சில புத்தகங்களின் சுருக்கங்களைப் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டும்.

Some books are to be tasted, others to be swallowed and some few to be chewed and digested; that is, some books are to be read only in parts; others to be read but not curiously; and some few to be read wholly, and some with diligence and attention.

புத்தகங்களை வாசிப்பது என்பது அறிவைப் பெருக்குவதற்கான சிறந்த வழியாகும். வாசிப்பது ஒருவனை முழு மனிதனாக்கும்; அவன் அறிவையும் வளர்க்கும். நன்றாக உரையாடத் தெரிந்த ஒருவனது அறிவு, எப்பொழுதும் தயார் நிலையிலிருக்கும். நன்றாக எழுதத் தெரிந்தவன் சிறந்த

அறிஞனாக கருதப்படுவான். "Reading maketh a full man; conference a ready man; and writing an exact man" என்கிறார் பேக்கன். எனவே வாசித்தல், உரையாடல், எழுதுதல் ஆகிய அனைத்தும் கல்வியின்பாற்படும். சரித்திரம் கற்பதனால் ஞானமும், கவிதை கற்பதனால் கூர்த்த மதியும், கணிதம் கற்பதனால் நுண்ணறிவும், தத்துவம் படிப்பதனால் ஆழ்ந்த ஞானமும், தர்க்கம் பயில்வதனால் விவாதத் திறமையும் பெறலாம். கல்வி என்பது மனநலத்திற்கான ஒரு மாமருந்தாகும். உடற்பயிற்சியின் மூலமாக உடல் நலம் பெறுவது போல், கல்வியின் மூலமாக மனம் நலம் பெறும். கல்வியைப் பற்றி பேக்கன் கொண்டுள்ள அற்புதமான சிந்தனைகள், நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன. படிக்கத் தொடங்கும் போதே, படைப்பாளியின் கருத்தை மறுக்க வேண்டுமென்றோ, ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றோ, நம்ப வேண்டுமென்றோ, அப்படியே எடுத்துக் கொள்ள வேண்டுமென்றோ, எந்த முன்தீர்மானமும் இல்லாமல் புத்தகத்தை விருப்பு வெறுப்பின்றிப் படித்து எடைபோட வேண்டும் என்று அறிவுறுத்துகிறார் பேக்கன்.

Read not to contradict and confute; nor to believe and take for granted; not to find talk and discourse; but to weigh and consider.

திருவள்ளுவர் பொருட்பாலில் கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை என்று நான்கு அதிகாரங்களில் கல்விச் சிறப்பைக் குறிப்பிடுகின்றார். கல்வி என்னும் அதிகாரத்திற்கு முன்னால், இறைமாட்சியைப் பற்றிப் பேசும் திருவள்ளுவர், ஒரு அரசனுக்கு நான்கு தன்மைகள் சிறப்பாக அமைதல் வேண்டும் எனச் சொல்லும்போது, அச்சமின்மையையும், கொடையையும், அறிவையும், ஊக்கத்தையும் வரிசைப்படுத்துகிறார். நாடாளுகின்ற மன்னரை விட்டு நீங்காமல் இருக்க வேண்டிய மூன்று பண்புகளைக் குறிப்பிட்டுச் சொல்லும் போதும், விடாமுயற்சி, கல்வி, துணிவு ஆகியனவற்றைக் கோடிட்டுக் காட்டுகிறார். பொருட்பாலின் தொடக்கத்திலேயே கல்வி பற்றி திருவள்ளுவர் தெளிவாக எடுத்துரைக்கிறார்.

**கல்வியே அழியாச் செல்வம்**

ஒருவனுக்கு அழியாத உயர்ந்த செல்வமாவது கல்வியே ஆகும். மற்றைய செல்வங்களைப் போல, கல்விச் செல்வம் அழிந்து போகும் தன்மையுடையது அல்ல.

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை" (குறள் : 400)

ஒருவன் வாழ்நாள் முழுவதும், உழைத்துச் சேர்த்த பணத்தைப் பொன்னாக மாற்றி, பின்நாளில் பயன்படுமென்று பேணிக் காக்கிறான். அவன் தேவைப்படும் போது, பொன்னைக் காசாக மாற்றும் போது, உலக அளவில் பொன்னின் மதிப்பீடு குறைவுபட, அவன் எதிர்பார்த்த பணம் கிடைக்காமல் ஏமாற்றம் அடைகிறான். மற்றொருவன் பணத்தைப் பணமாகவே சேமித்து வைத்துப் பல ஆண்டுகள் கழித்து, சேர்த்த பணத்தின் மதிப்பு குறைந்து போனதை நினைத்து இடர்ப்படுகிறான். களஞ்சியத்தில் நெல்லாகவும், புல்லாகவும் பூட்டி வைத்திருந்த ஒருவன், பாதிக்குமேல் பூச்சிகளால் பாழானதை நினைத்து மனம் வருந்துகிறான். மிகப்பெரிய கட்டடங்களை உருவாக்குவதில், காசைச் செலவழித்தவன், சில நாள் கழித்து, பாழ்பட்டுப் போன மாளிகைகளைச் சீர்படுத்தவே செலவழித்து அலுத்துப் போகிறான். இவ்வாறு காலவெள்ளத்தில் ஏனைய செல்வங்கள் எல்லாம் கரைந்து போகும் போதும், நின்று நிலைப்பது அழிவில்லாத கல்விச் செல்வம்தான். எனவே திருவள்ளுவர், அத்தகைய செல்வத்தை அழிவில்லாதது என்றும், உயர்ந்த செல்வம் என்றும் குறிப்பிடுகின்றார்.

**கற்றபின் நிற்க**

கல்வி என்பது கற்பதற்காக மட்டுமல்லாது, நன்னெறியிலே ஒருவன் நிற்பதற்கும் பயன்பட வேண்டும். நூல்களைக் கற்க வேண்டுமென்று சொல்லி, அதனைக் கசடறக் கற்க வேண்டுமென்கிறார். கற்கும் போது ஏற்படும் சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக் கொண்டு கற்க வேண்டும். கல்வி கற்கும்போதே, கற்பவன் மனதில் இருக்கும் கசடு என்ற மாசு நீங்குமாறு ஒருவன் கற்க வேண்டுமென்பதைக், 'கசடற'

என்ற சொல்லால் குறிப்பிடுகிறார். கற்பனவற்றைப் பழுதறக் கற்றுத் தேர்ந்தால் மட்டும் போதாது; கற்றனவற்றைக் கொண்டு, தன் வாழ்வை ஒருவன் திருத்தமாக அமைத்துக் கொள்ளவும் வேண்டும் என்று சொல்லும் திருவள்ளுவரின் பாங்கு தனித்துவம் வாய்ந்தது.

கல்வி கற்பதற்கான வழிமுறைகளையும், கற்க வேண்டியவனது தகுதியையும் எடுத்துரைக்கும்போது, 'பொருள் கேட்டுக் செல்லும் வறியவன் செல்வந்தனிடம் எவ்வளவு தாழ்மையுடனும், பணிவுடனும் நடந்து கொள்கிறானோ அதுபோலக் கற்றவர்களிடம் மரியாதையுடனும், தாழ்மையுடனும் நடந்து கொண்டு அறிய வேண்டியதை அறிந்து கொள்ள வேண்டும்' என்று கூறுகிறார்.

## மண் பதுமையும் மணமில்லா மலரும்

ஒரு நூலைக் கற்கும் போது மிக நுட்பமாகக் கற்று, அந்நூலின் கருத்துக்களைத் தெளிவாகப் புரிந்து கொள்ளும் அறிவினைப் பெறுவது மிகவும் அவசியம். அவ்வாறு நுட்பமாய் ஆராய்ந்து பார்த்துத் தெரிந்து கொள்ளும் அறிவில்லாதவனது கல்வியானது, மண்ணால் சிறப்பாகச் செய்து வைக்கப்பட்ட உயிரற்ற பதுமையைப் போன்றது. அவனது எழில் நலமும் மண்பதுமையின் எழில் நலமும் ஒன்றுதான். பதுமைக்கு அழகிருந்தும் உயிரில்லாதது போல, இவனுக்குத் தோற்றப் பொலிவிருந்தும், ஆய்ந்து பார்க்கும் அறிவு இல்லை. எனவே நுணுகிக் கற்கும் திறம் வேண்டும். கல்வியில் நுனிப்புல் மேயும் பழக்கம் கூடாது. நன்றாகக் கற்றால் நன்றாக விரித்துரைக்க முடியும். கொத்தாக மலர்ந்திருந்தும், மணம் பரப்பாதிருந்தால், அம்மலருக்கு மாண்பில்லை. அதுபோலத்தான் கற்றிருந்தும் விரித்துரைக்கத் தெரியாமல் ஒருவன் இருந்தால், அவன்- கல்வியால் ஏது பயன்? அவனும் மணமற்ற மலரும் ஒன்றுதான் என்கிறார் திருவள்ளுவர்.

"இணரூழ்த்தும் நாறா மலரனையர் கற்றது
உணர விரித்துரையா தார்" (குறள் : 650)

எனவே சிறந்த கல்வி நல்ல சொல்வன்மையைத் தருதல் வேண்டுமென்பது திருவள்ளுவரின் எண்ணம்.

ஒருவன் கற்கும் கல்வி வெறும் கல்வியாக இல்லாமல், வாழ்வின் செம்மைக்கு ஆதாரமான கல்வியாக இருத்தல் வேண்டும். நல்ல அறிவுடையவன் தான் துன்பப்பட நேர்ந்தாலும், அதனைத் தீர்த்துக் கொள்வதற்கு எந்த ஒரு இழிவான செயலையும் செய்யத் துணிய மாட்டான். அத்தகைய பண்பாளன் கலங்காத அறிவுடையவன் எனப்படுவான். எனவே கல்வி என்பது, ஒருவனைச் செம்மையான வழியில் நடத்திச் செல்வதற்குத் துணை நிற்க வேண்டும். தான் சொல்லக் கூடிய சொற்களை வரிசைப் படுத்தி, இனிமையாகச் சொல்லும் திறமை பெற்றிருந்தால், உலகமே அவன் சொல்வதைக் கேட்டு விரைந்து தொழிற்படும். எனவே அத்தகைய சொல்வன்மையைத் தருகின்ற கல்வி எத்துணை சிறப்பு மிகுந்தது என்பதை நம்மை உணர வைக்கிறார் திருவள்ளுவர்.

"விரைந்து தொழில்கேட்கும் ஞாலம்; நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்" (குறள் : 648)

கல்வியில் நாட்டமுடைய ஒருவன், தன்னைவிட மிகுதியாகப் படித்தவர்களிடமிருந்து, பலவற்றைத் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். தாம் கற்றனவற்றைக், கல்வியில் சிறந்தாரிடத்தில், அவர் மனம் கொள்ளும்படிச் சொல்லி மகிழ வேண்டும். நன்கு நூல்களைக் கற்றவன், தக்கோரின் அவையிலே அவர்கள் ஏற்றுக் கொள்ளும்படி, கற்றதை எடுத்துரைக்க வேண்டும். அவ்வாறு செய்ய இயலாதவன் பல நூல்களைக் கற்றும் பயன் இல்லாதவன் ஆவான்.

"பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையுள்
நன்கு செலச்சொல்லா தார்" (குறள் : 728)

**அவை அஞ்சாமை**

அதுபோலவே, நன்கு படித்துத் தெளிந்திருந்தாலும், தக்கோர் அவையினிலே எடுத்துரைக்க முடியாமல் அஞ்சுகிறவர்கள், படிக்காதவர்களை விட மிகவும்

இழிந்தவர்கள் என்கிறார் திருவள்ளுவர். கல்வி என்பது, அவைக்கு அஞ்சாமல் எடுத்துரைக்கும் திறமையையும், பிறர் உணர விரித்துரைக்கும் சொல்வன்மையையும் உள்ளடக்கியது. வெற்றிகரமாகச் செயல்படுவதற்கும், தூய்மை நெறியில் வாழ்வதற்கும், கல்வி துணை நிற்க வேண்டும் என்கிறார். ஒரு மனிதன் பெறும் சிறந்த நூலறிவு, அவனுக்கு இயற்கையாய் அமைந்திருக்கும் நுட்பமான அறிவுடன் இணைந்து செயல்படத் தொடங்கும் போது, அவனை எந்த உபாயத்தாலும் வெற்றிகொள்ள முடியாது.

"மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்
யாஉள முன்னிற் பவை" (குறள் : 636)

கற்றார்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பர். எந்த நாடும், கற்றவனுக்குச் சொந்த நாடாகும்; எந்த ஊரும் கற்றவனுக்குச் சொந்த ஊராகும். இத்தகைய சிறப்பைக் கல்வி தரும்போது, சாகும்வரையும் ஒருவன் கல்வி கற்க வேண்டும். தோண்டத் தோண்ட, மணலில் தோண்டிய ஊற்று நீரைச் சுரப்பது போலக் கற்கக் கற்க ஒருவனது அறிவு சுரக்க வேண்டும்.

அறிவின் திறத்தைச் சொல்லவந்த திருவள்ளுவர் மனதைப் போன போக்கில் செல்லவிடாமல் தடுத்து, நன்மையின் பால் செலுத்த அறிவு துணை செய்ய வேண்டும். துன்பம் ஏற்படும் போது ஒருவனைக் காக்கும் கருவி, அறிவைப் போல் வேறெதுவுமில்லை. "அறிவு அற்றம் காக்கும் கருவி" பின்னால் வரக்கூடிய துன்பத்தை முன்னதாகவே அறிந்து கொண்டு, தன்னை ஒருவன் காத்துக் கொள்வான் என்றால், அவனே அறிவுடையவன் ஆவான். அப்படிப்பட்டவன் நடுங்கும்படியாக வரும் துன்பம் எதுவுமில்லை. கல்வி, அறிவு என்ற இணையற்ற இந்த இரு சொற்களைத் திருக்குறள் விளக்கம் செய்வது போல வேறு எந்த நூலிலும் காண இயலாது. மனிதர்களை நன்னெறியில் செலுத்தும் அத்தகைய அறிவுடையாரையே, எல்லாம் உடையார் என்கிறார்.

"அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்" (குறள் : 430)

## இசைபட வாழ்தல்

“தோன்றிற் புகழோடு தோன்றுக” என்பார் திருவள்ளுவர். ஒருவருடைய திறமையையும், நன்னடத்தையையும் பொறுத்து, அவர் புகழ் அமைகிறது. மனிதர்களில் இருவகை உண்டு. ஒரு சாரார், ஒரு செயலைச் செய்யும் போது, அதன் விளைவாகத் தங்களுக்கு என்ன புகழ் ஏற்படும் என்று எண்ணிச் செய்வதுண்டு. மற்றொரு சாரார் எவ்வளவோ திறமைகளும், நற்குணங்களும் இருந்தும் தங்களை வெளிப்படுத்திக் கொள்ள விரும்பாமல், ஒரு கூட்டுக்குள்ளேயே இருக்க விருப்பப்படுவர். ஒரு மனிதன், தனது சிறப்பியல்புகளைப் பற்றி மிகச் சிறப்பாக தானே மதிப்பீடு செய்வதும், தனது சிறப்பியல்புகளைக் குறைத்து மதிப்பீடு செய்வதும் தவறு.

மதிப்பைப் பெறுவதற்கு விரும்பும் மனிதன் நடந்து கொள்ள வேண்டிய முறைகள் என்ன என்பதனை, புகழ் என்ற கட்டுரையில் பேக்கன் தெரிவிக்கின்றான்.

The winning of honour is but the revealing of a man's virtue and worth without disadvantage. For some in their actions do woo and affect honour and reputation; which sort of men are commonly much talked of, but inwardly little admired. And some contrariwise, darken their virtue in the show of it; so as they be undervalued in opinion.

ஒருவன் எந்த ஒரு செயலையும் சிறப்பாகச் செய்ய முயல வேண்டும். மற்றவர்களைப் போலவே தானும் செயல்பட்டால் போதும் என்று எண்ணாமல், செயல் முடித்தல் வேண்டும். சற்று வித்தியாசமாக, ஆனால் சிறப்பாக, சுயசிந்தனையைப் பயன்படுத்தி, ஒரு செயலைச் செய்தல் வேண்டும். தோல்வியையோ, அவமதிப்பையோ கொண்டு வந்து சேர்க்கும் செயல்களில் இறங்காமல், எப்பொழுதும் புகழையும், மதிப்பையும் சேர்க்கும் செயல்களைச் செய்தல் வேண்டும். ஒரே துறையில் இருக்கும் பிற போட்டியாளர்களுடன், ஆரோக்கியமான முறையில் போட்டியிட்டு, வெற்றிபெற வேண்டும். காலம் அறிந்து

செயலாற்றுகின்ற பணியாட்களைத் துணைக்கு வைத்துக் கொள்வதன் மூலம், புகழைப் பெற முடியும். Discreet followers and servants help, much to reputation. புகழ்பெற வேண்டும் என்பதில் இருக்கும் ஆர்வத்தைக் காட்டிலும், தகுதியை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று ஒருவருக்கு ஆர்வம் அதிகமாக இருக்க வேண்டும். மற்றவர்களின் விமர்சனங்களையும், பொறாமை உணர்வுகளையும் பலமிழக்கச் செய்துவிட்டு, பெறுகின்ற புகழையும், பெருமையையும் இறைவனுக்கு அர்ப்பணம் செய்தல் வேண்டும். Envy which is to the canker of honour, is best extinguished by declaring a man's self in his ends rather to seek merit than fame; and by attributing a man's successes rather to divine providence and felicity, than to his own virtue of policy. இன்னொரு மனிதனின் தோல்வியைத் தன் வெற்றியாகக் கருதுகிறவன் ஒருநாளும் உண்மைப் புகழைப் பெற மாட்டான். எனவே ஒருவருக்குப் புகழ் வருவதானால், அதனைத் தேடித் திரியாமல், அப்புகழ் தேடி வருமாறு தகுதிப்பாட்டை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

வாழ்ந்தால் புகழோடு வாழ வேண்டும். புகழ் இல்லாதவன் வாழ்வு வாழ்வாகாது என்கிறார் பேக்கன். திருவள்ளுவரும் புகழ்பட வாழும் வாழ்வின் பல பரிமாணங்களை எடுத்துரைக்கிறார். புகழைப் போல் அழியாதது எதுவுமில்லை. உலக வாழ்வு முடிந்த பிறகும், தலைசிறந்த மனிதர்களின் புகழ் உலகில் நின்று கொண்டு தான் இருக்கிறது.

"ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன்று இல்" (குறள் : 233)

உலகத்தில் தோன்றும் போதே புகழோடு தோன்ற வேண்டும். அவ்வாறு தோன்றாதவர்கள், தோன்றாமல் இருப்பதே நல்லது எனச் சொல்ல வந்த திருவள்ளுவர்,

"தோன்றிற் புகழோடு தோன்றுக; அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று" (குறள் : 236)

என்கிறார்.

## இகழ்வாரை நோவது ஏன்?

உலகத்தில் ஒருவன் பிறக்கும் போதே புகழோடு பிறக்க முடியுமா? என்கின்ற கேள்வி இக்குறளைக் கற்பாரது மனதில் எழாமல் இருக்காது. தோன்றுவது என்பதற்குப் பலரால் அறியப்படுவது என்றும் பொருள் கொள்ளலாம். எந்த ஒரு துறையில் இறங்கிப் பணி செய்யத் தொடங்கி னாலும், இந்தத் துறை நமக்குப் பொருத்தமானதுதானா? இத்துறையில் நாம் சிறப்பாகச் செயல்பட முடியுமா? புகழ்பெற முடியுமா? என்பதை எல்லாம் சீர்தூக்கிப் பார்த்துத்தான் இறங்க வேண்டும். இல்லையெனில் அத்துறையில் புகுந்து, தோன்றாமலிருப்பது நல்லது என்றும் பொருள் கொள்ளலாம்.

சிலர் தங்களுக்குப் புகழ் உண்டாகும்படி வாழ மாட்டார்கள். அவ்வாறு புகழ் பெறாத நிலைக்குத் தங்களது நடவடிக்கைகளே காரணம் என்பதைச் சற்றும் எண்ணிப் பார்க்க மாட்டார்கள். மற்றவர்களே தாங்கள் புகழ்பெறாமற் போனதற்குக் காரணம் என்பார்கள். அதே நேரத்தில் தங்களுக்கென்று புகழ் வந்து சேர்ந்தால், அதற்கு மற்றவர்கள் எந்தவிதத்திலும் காரணமாக மாட்டார்கள்; தாங்களே காரணம் என்பார்கள். புகழும், இகழும் நம்மிடமிருந்துதான் தோன்றுகின்றன. எனவே பிறரை நொந்து கொள்வது எந்தப் பயனையும் தாராது என தெளிவாய்ப் பேசுகிறது திருக்குறள்.

"புகழ்பட வாழாதார் தம்நோவார் தம்மை
இகழ்வாரை நோவது எவன்?" (குறள் : 237)

வாழ்வு நிலையற்றது என்பதை உலகில் அனைவரும் அறிவர். புகழ் பெறுவதற்கு ஆதாரமாய் இருக்கும் பொருட்களும்கூட ஒருகாலத்தில் அழிந்து போகும். எல்லா மனிதருக்கும் சாவு என்பது சர்வ நிச்சயமானது. இவ்வாறு நிலையில்லாம லிருக்கும் உலகத்தில், ஒருவன் வாழ்ந்து மறைந்து போவான் என்றால், அவனது வாழ்வு பொருளற்றது ஆகிவிடும். எனவே அறிவாற்றல் உடையவர்கள், வாழ்வு நிலையற்றது என்று தெரிந்து, வாழும் காலத்திலேயே, நிலைத்த புகழைத் தேடிக் கொள்வர். நிலையற்ற உலகில் வாழ்ந்தாலும் நிலைத்த புகழோடு வாழ வேண்டும் என்கிறது திருக்குறள்.

"நத்தம்போல் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது" (குறள் : 235)

**புகழ் வரும் வழி**

இத்தகைய புகழைப் பெறுவதற்கான வழிகளையும் திருவள்ளுவர் எடுத்துரைக்கிறார். வறியவர்களுக்குப் பொருளைக் கொடுத்து அந்தத் தாளாண்மையின் மூலம் ஒருவன் பெறும் புகழைவிடச் சிறந்தது வேறெதுவுமில்லை. சிறந்த மனிதர்களைப் பற்றி அவர்கள் காலத்திற்குப் பிறகும், உலகம் பேசும் போதெல்லாம், 'இரப்பாருக்கு இரங்கிய ஈகை உள்ளம் படைத்தவர்" என்று தான் பேசும். அதற்கு நிகரான புகழ் இல்லை.

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு" (குறள் : 231)

"உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்கொன்று
ஈவார்மேல் நிற்கும் புகழ்" (குறள் : 232)

வாய்மை என்னும் அதிகாரத்தில், பொய்யாமை ஒருவனுக்குப் புகழ் சேர்க்கும் என்கிறார் திருவள்ளுவர். ஒருவன் புகழ் பெறுவதற்குக் காரணமாய் அமைந்திருக்கும் எல்லா அம்சங்களிலும் தலையானது பொய்யாமைதான்.

"பொய்யாமை அன்ன புகழில்லை எய்யாமை
எல்லா அறமும் தரும்" (குறள் : 296)

ஒருவன் தனது உள்ளத்தால், எந்த ஒரு தீங்கும் யாருக்கும் நினைக்காமல், பொய்யற்ற மனத்தனாய் வாழும் போது, அவனை உயர்ந்தவர்கள் எல்லாம் தங்கள் மனதில் நிறுத்திப் புகழ்வர் எனச் சொல்லும் திருவள்ளுவரின் கருத்தை எண்ணிப் பார்க்கும் போது, வாழ்நாள் முழுவதும் வாய்மை அறத்தைக் கடைப்பிடித்த பெரியோர்களின் நினைவு நமக்கு வரும். 'எதை இழந்தாலும் வாய்மையை இழப்பதில்லை' என்று வாழ்ந்த சூரியகுல மன்னன் அரிச்சந்திரனின் வாழ்க்கையைப் பற்றிய நாடகத்தைப் பார்த்த மகாத்மா காந்தியடிகள், வாழ்நாளில் பொய்யே பேசுவதில்லை என்று முடிவு செய்தார். காந்திஜியின் புகழ் இன்றுவரை நின்று

நிலவுவதற்கு அவர் கட்டிக்காத்த வாய்மை அறமே காரணம். மகாத்மா காந்தி நல்ல தேக பலமுடையவர் என்றோ, சிறந்த செல்வந்தர் என்றோ, மிகப் பெரிய அறிஞர் என்றோ கருதி உலகம் அவருக்குப் புகழ் மாலை சூட்டவில்லை. வாழும் காலத்தில், எல்லையற்ற செல்வங்களுக்கு அதிபதிகளாக இருந்த பல கோடீஸ்வரர்கள் காலவெள்ளத்தில் கரைந்து போய்விட்டார்கள், அவர்களின் சுவடுகளும் அழிந்து போய் விட்டன. அவ்வாறு இருக்கும் போது, அஹிம்சை என்ற ஆத்ம பலமும், வாய்மை என்னும் தூய மரபும் தான் மகாத்மா காந்திக்கு அழியாத புகழைச் சேர்த்தது.

"உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்" (குறள் : 294)

அற உணர்வோடு, ஒரு மனிதன் வாழும்போது, அந்த அறம் அவனுக்கு இன்பத்தோடு புகழையும் கொண்டு வந்து சேர்க்கும். அறநெறி பிழைபட வாழ்ந்து, இன்பத்தை ஒருவன் துய்க்க எண்ணினால் அவன் துன்பத்தையும், பழியையும்தான் அடைவான். நன்னெறியுடன் வாழ்வதே உண்மையான புகழுக்கு ஆதாரம்.

"அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்
புறத்த புகழும் இல" (குறள் : 39)

ஒரு பெண்ணுக்குப் புகழ் என்பது கற்போடு வாழும் வாழ்க்கை. அத்தகைய பெண்ணை மனைவியாக அடைந்த ஒருவன், தன்னை இகழ்ந்து பேசும் பகைவர்களுக்கு முன்னால் கூட, ஒரு ஆண்சிங்கத்தைப் போலப் பெருமிதமாகப் பீடுநடை போடலாம் என்பார் திருவள்ளுவர்.

"புகழ்புரிந்த இல்லிலோர்க்கு இல்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை" (குறள் : 59)

வசையின்றி இசையோடு வாழ்தலின் அவசியத்தை வலியுறுத்தும் போது, வசையில்லாமல் வாழ்கிறவர்கள் தாம் உயிரோடு வாழ்கிறவர்கள். வசையுடன் வாழ்வார் இறந்தவர்களுக்குச் சமமாவர். வசையின்றி புகழோடு வாழாத மனிதர்களைச் சுமந்து கொண்டிருக்கிற நிலம் சரியாக விளையாது என்கிறார் திருவள்ளுவர். நெஞ்சறிந்த தீமையைத்

துணிந்து செய்கின்ற மனிதனைச் சாதாரண மக்கள் 'இவன் கால்பட்ட இடத்தில் புல் முளைக்காது' என்பர். திருவள்ளுவரோ, நிலத்தின் வண்பயன் குன்றும் என்கிறார்.

"வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா
யாக்கை பொறுத்த நிலம்" (குறள் : 239)

இவ்வாறு புகழின் தன்மையையும், புகழ்பட வாழவேண்டியதன் அவசியத்தையும், நிலைத்த புகழைப் பெறும் வழிகளையும், வசையின்றி வாழ்வதே வாழ்வு என்பதையும் திருவள்ளுவர் மிகச் சிறப்பாய் நம் மனங்களில் பதிய வைக்கிறார்.

புகழ்பெற விரும்பும் மனிதன், தன் தகுதிப்பாட்டை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்கிறார் பேக்கன். எந்தத் துறையில் ஈடுபட முனைந்தாலும் தன்னால் வெற்றியும் புகழும் அடைய முடியுமா என்று சிந்தித்து, அந்தத் துறையில் இறங்க வேண்டும் என்கிறார் திருவள்ளுவர். இவ்விருவரின் சிந்தனைகளையும் ஒப்பு நோக்கி மகிழலாம்.

## ஒத்ததறிவான் உயிர்வாழ்வான்

திருக்குறளில் காணப்படும் 'ஈகை', 'ஒப்புரவறிதல்' என்ற இரண்டு அதிகாரங்களும், நம்மால் ஆன நலன்களைச் செய்தல் வேண்டும் என்பதை நமக்கு வலியுறுத்துகின்றன. 'தான், தனக்கு' என்று மட்டும் வாழாமல், பிறர் நலம் கருதி வாழும் மேன்மைப் பண்புகளையே ஒப்புரவு என்றும், ஈகை என்றும் அழைக்கின்றோம்.

மனிதர்களுக்கு மழைநீரைத் தந்து உதவும் மேகங்களுக்கு நாம் யாரும் கைம்மாறு செய்வதில்லை. ஆயினும், எந்தப் பயனையும் எதிர்பாராமல், யாவர்க்கும் மேகங்கள் மழை தந்து உதவுவதைக் காண்கின்றோம். ஒப்புரவின் சிறப்பை உணர்ந்த பெரியோரும், எந்தப் பயனும் கருதாமல் யாவர்க்கும் எப்பொழுதும் உதவி நிற்பர். கொடுத்து மகிழும் சிறப்பை உணராத மனிதர்கள்தாம், தாங்கள் ஈட்டிய பொருள்களைத் தாம் மட்டுமே துய்த்து மகிழ்வர். தகுதி படைத்தவர்கள், தாம் பெற்ற செல்வத்தை

மற்றவர்களுக்கு உதவி, பேரின்பம் பெறுவர். ஒப்புரவு செய்பவனின் செல்வம் உலகிற்கே பயன்படும். ஊருணியில் நிறைந்திருக்கும் நீர் ஊருக்கெல்லாம் பயன்படுவதைப் போல, ஊருக்குள் இருக்கும் பழ மரத்தின் இலை, தளிர், மலர், காய்; கனி, பட்டை, வேர் ஆகிய அனைத்தும் மக்களின் நோய் தீர்க்கப் பயன்படுவது போல, ஒப்புரவாளனின் செல்வமும் அனைவருக்கும் பயன்படும் என்கிறார் திருவள்ளுவர்.

பிறருக்கு உதவி செய்து வாழ்பவனை ‘பேரறிவாளன்’ என்றும், ‘நயனுடையான்’ என்றும், ‘பெருந்தகையான்’ என்றும் அழைக்கிறார். அத்தகைய பண்பு நலன் உடையவன், ‘தான் அனுபவிக்கப் பொருள் இல்லையே’ என்று வருந்துவதில்லை. பிறருக்கு உதவுவதற்கு, தன்னிடம் பொருள் இல்லையே என்றுதான் வருந்துவான். தன்னால் முடிந்த அளவில், மற்றவர்க்கு உதவி செய்து வாழ்பவனே உயிர் வாழ்பவன் ஆவான். பிறர்க்கு உதவிசெய்து வாழாதவன் செத்தவனுக்குச் சமமாவான் என்று சற்றுக் கடுமையாகவே திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்.

“ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்” (குறள் : 214)

பொதுவாக, ஒரு பொருளும் இல்லாதவர்களுக்குப் பொருள் தந்து உதவுவதே ஈகை எனப்படும். பெரும்பாலும் உலகத்தில், மற்றவர்களுக்கு உதவிசெய்யும் மனிதர்கள், காலம் வரும் பாது, தங்களுக்கு, தங்களிடம் உதவி பெற்றவர்கள் உதவ முன் வருவார்கள் என்று எதிர்பார்ப்பது வழக்கம். அவ்வாறு எதிர்பார்த்துச் செய்யும் உதவி உதவியாகாது என்பது திருவள்ளுவர் தீர்ப்பு.

“வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து” (குறள் : 221)

இல்லாத ஒருவனுக்கு, பொருளை வழங்குவதன் மூலமாக, அதனைப் பெற்றவன் மட்டுமல்லாது, வழங்கியவனும் மகிழ்ச்சி அடைவான். கொடுப்பதில் இத்தகைய மகிழ்ச்சி உண்டு என்பதை அறியாதவர்கள்தாம், மற்றவர்களுக்கு ஈயாது, தாமே பொருளை வைத்திருந்து பின்னர், அதனையும்

இழந்து நிற்கும் இரக்கமற்றவர் ஆகின்றனர். புகழுக்கு ஆதாரமே ஈகைதான் எனச் சொல்கிறது திருக்குறள்.

**ஈதலே நன்று**

தன்னிடம் பொருள் நாடி வருபவர்க்கு ஒருவன் வேண்டியதைத் தரும் போது அதைப் பெறுபவரின் முகம் மலர்வதைக் காணும் வரையிலும், ஒரு கொடையாளனின் உள்ளம் மகிழ்வடையாது. இரப்போர் முகம் மலர்வதைக் காண்கின்ற போதுதான் ஈகை செய்பவனின் அகம் மலரும். ஈகைப் பண்பின் மேன்மையை வலியுறுத்தும் திருவள்ளுவர், கொடுத்து மகிழும் இயல்புடைய ஒருவனுக்கு, வறியவர்க்குக் கொடுக்க இயலாத நிலை ஏற்படும்போது தோன்றும் துன்பமே கொடியதாகும். அத்தகைய துன்பத்தை அனுபவிப்பதை விட உயிரை விடும் துன்பம் பெரிதல்ல என்கிறார்.

**"சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்**
**ஈதல் இயையாக் கடை"** **(குறள் : 230)**

இரப்போருக்கு இல்லை எனச் சொல்வது, சாதலை விடத் துன்பமானது எனச் சொன்ன வள்ளுவர், கொடுப்பவருக்கு மேலுலகம் இல்லை என்ற நிலை வந்தாலும் கொடுப்பதே நன்மை பயப்பதாகும்; பொருளை ஏற்பது, மேலுலகிற்கு ஏற்ற நன்னெறி என்று கூறினாலும், அது தீயதே அகும் என்கிறார். எனவே, மேலுலகம் இல்லை என்ற நிலை வந்தாலும் ஈகை செய்தல் வேண்டும் எனச் சொல்லும் திருக்குறளின் பொருள் விரிவை எண்ணி எண்ணி இன்புறலாம்.

**"நல்லாறு எனினும் கொளல்தீது மேலுலகம்**
**இல்லெனினும் ஈதலே நன்று"** **(குறள் : 222)**

பிறருக்கு உதவ வேண்டும் என்பதில் உறுதியாய் இருப்பவர், தாம் வறுமை உற்ற காலத்திலும், தங்களது செல்வத்தை இழந்தாலும், மற்றவர்க்கு உதவுவதை நிறுத்திக் கொள்வதில்லை. பிறர்க்கு உதவி செய்து வாழும் ஒப்புரவைப் போன்ற வேறு அறங்களைத் தேவர் உலகத்திலும், இவ்வுலகத்திலும் பெறுதல் அரிதாகும் என்கிறார்

திருவள்ளுவர். இவ்வாறு, பிறருக்குப் பயன் கருதாமல் உதவும் நற்பண்பின் சிறப்பு ஒப்புரவறிதல், ஈகை ஆகிய இரு அதிகாரங்களிலும் திருவள்ளுவரால் பேசப்படுகிறது. திருவள்ளுவரின் இந்தச் சிந்தனையை பேக்கனின் வாசகங்களோடு இணைத்து நாம் சிந்தித்து மகிழலாம்.

The parts and signs of goodness are many. If a man be gracious and courteous to strangers, it shows, he is a citizen of the world and that his heart is no island cut off other lands, but a continent that joins to them. If he be compassionate towards the afflictions of others, it shows that, his heart is like the noble tree that is wounded itself when it gives the balm. If he easily pardons and remits offences, it shows that his mind is planted above injuries, so that he cannot be shot. If he be thankful for small benefits it shows that he weighs men's minds and not their trash.

**அன்பின் அடையாளங்கள்**

அனைவருக்கும் அன்பு பாராட்டும் இனிய பண்பும், பிறர் துன்பத்தைத் தன் துன்பமாகப் பாவிக்கும் கருணையுமே அன்பின் அடையாளங்கள். இதனையே திருவள்ளுவர்,

> **"அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்**
> **தன்நோய்போல் போற்றாக் கடை"** **(குறள் : 315)**

என்கிறார்.

பேக்கன் பட்டியலிடும் நல்ல குணங்களில், ஒப்புரவு முக்கியம் இடம் பெற்றிருக்கிறது.

'Of all virtues and dignities of mind, goodness is the greatest, being the character of the deity; and without it, man is a busy mischievous wretched thing, no better than a kind of Vermin.'

ஒப்புரவினால் கேடு வரும் என்றால், அக்கேடு ஒருவன் தன்னை விற்றாவது வாங்கிக் கொள்ளும் தகுதி உடையதாகும்.

"ஒப்புரவி னால்வரும் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து" (குறள் : 220)

என்ற குறளுக்கு, டாக்டர் மு. வரதராசனார், உதவி செய்வதனால் ஒருவனுக்கு வறுமை வந்து சேர்ந்தாலும், அதைப் பற்றிக் கவலைப்படாமல், மற்றவர்களுக்கு வழங்க வேண்டும் என்று உரை விளக்கம் செய்கிறார். சுட்டாலும் வெண்மை தரும் சங்கைப் போல, கெட்டாலும் சான்றோர் தங்கள் மேன்மைக் குணங்களை இழந்து விடுவதில்லை என்பதைத் தெள்ளத் தெளிவாய் உணர்த்துகிறது திருக்குறள். பிறருக்கு உதவுவதைப் பற்றி, இரு வேறு கருத்துக்கள் பேக்கனிடம் காணப்படுகின்றன. தாராள மனதுடன் உதவுவதற்கு எந்த அளவும் கிடையாது என்று ஒரு இடத்தில் குறிப்பிடும் பேக்கன், தகுதிக்கு மீறி தானம் செய்யலாகாது என மற்றொரு இடத்தில் குறிப்பிடுகிறார். அதிகாரத்தின் மேல் உள்ள அளவு கடந்த ஆசையினால், வானத்து தேவதைகள் சொர்க்கத்திலிருந்து விரட்டப்பட்டார்கள். ஆனால், தாராளமாக உதவுவதற்கும், இரக்கம் காட்டுவதற்கும் எந்த அளவும் கிடையாது என்பதனை,

The desire of power in excess caused the angels to fall; the desire of knowledge in excess caused man to fall, but in charity there is no excess, neither can angel nor men come in danger by it.'

என்ற வரிகளில் தெரிவிக்கிறான் பேக்கன்.

## கேடும்கூட ஆக்கமே

பிறிதோர் இடத்தில், கொடுக்கும் போது தகுதியானவர்க்குத்தான் கொடுக்கிறோம் என்ற தீர்மானத்தின் அடிப்படையில் கொடுக்க வேண்டும் என்கிறார். பெறுபவனுக்கு என்ன தேவையோ அதை அறிந்து கொடுக்க வேண்டும். சேவலுக்குத் தேவை பார்லி அரிசி என்று இருக்கும் போது, அதன் முன்னால் விலைமதிப்பற்ற கற்களை வீசி என்ன பயன்? பொதுவான நன்மைகள் எல்லோருக்கும் பொதுவானது என்று இருந்த போதிலும், சிறப்பான நன்மைகள் தகுதியானவர்க்கு மட்டுமே தரப்படுதல் வேண்டும்.

மழையையும், சூரிய வெளிச்சத்தையும் எல்லோரும் பொதுவாக அனுபவிக்க இடமளித்த இறைவன், செல்வத்தையும் புகழையும் நற்பண்புகளையும் சில பேருக்கு மட்டுமே வழங்கி இருக்கிறான் என்ற கருத்தை,

'Neither give thou Aesop's Cock a gem, who would be better pleased and happier if he had a barley corn. The example of god teacheth the lesson truly, He sendeth his rain and maketh his sun shine upon the just and the unjust, but doth not rain wealth nor shine honour and virtues upon men equally. Common benefits art to be communicate with all; but peculiar benefits with choice.'

என்ற வரிகளில் குறிப்பிடுகிறான் பேக்கன்.

தகுதிக்கு மீறி ஒருவன் தானம் செய்யும் போது, அவனுக்கு என்று ஒன்றுமில்லாமல் போய், இறுதியில் அவன் கொடை கொடுப்பதற்குத் தேவையான பொருள் அனைத்தையும் இழந்து வறுமையாளனாகி விடுவான் என்கிறான் பேக்கன். இவ்வாறு, பிறர்க்கு உதவி செய்தல் பல்வேறு நல்ல குணங்களிலும் தலைசிறந்தது எனச் சொல்லி, தாராளமாக உதவுவதற்கு எந்த அளவும் கிடையாது என்று சொன்ன பேக்கன், தகுதிக்கு மீறி தானம் செய்தல் கூடாது என்ற எச்சரிக்கையையும் எடுத்துரைக்கின்றான். திருவள்ளுவரைப் பொருத்தவரையில் கொடுப்பதனால் ஒருவன் கெட்டுப்போனால், அந்தக் கேடும் கூட ஆக்கம் தான் என்கிறார். இந்த இரு வேறு சிந்தனையாளர்களின் கருத்துக்களை ஒப்பீடு செய்யும்போது, உன்னத நெறிகளோடு கூடிய ஓர் இலட்சிய வாழ்க்கைக்குத் திருவள்ளுவர் நம்மை அழைத்துச் செல்ல விழைகிறார். பேக்கனோ, உயர்நெறிகளைப் பேசிக் கொண்டிருக்கும் போதே, அது நடைமுறை சாத்தியமா? என்ற கேள்வியை தனக்குள்ளேயே எழுப்பிக் கொள்வதால், நடைமுறை சாத்தியக் கூறுகளிலேயே அதிகம் ஈடுபடுகிறார். எனவே கட்டுரையில், சிற்சில இடங்களில், தன் கருத்தையே பேக்கன் மறுத்து மொழிவதைப் போன்ற முரண்பாடுகள் தவிர்க்க முடியாதனவாக அமைந்துள்ளன.

# பிளேட்டோவும் திருவள்ளுவரும்

## பிளேட்டோ வாழ்க்கை வரலாறு - ஒரு பார்வை

இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னால், மனித சமூகம் பெரிதும் நாகரிகம் அடையாத காலத்தில், கிரேக்க நாட்டில் உள்ள ஏதென்ஸ் நகரத்தில் ஏறத்தாழ கி.மு. 427-இல் பிளேட்டோ பிறந்ததாக வரலாறு குறிப்பிடுகிறது. கிரேக்க நாடு உலக நாகரிகத்தின் தொட்டில் என்று பலராலும் அழைக்கப்படுகிற நாடாகும். உலகின் பல நாடுகள், பண்பாடு, கலாச்சாரம், அறிவாற்றல் ஆகியனவற்றில் வளர்ச்சி அடையாத காலத்திலேயே கிரேக்க நாடு பலவகையிலும் வளர்ச்சி அடைந்திருந்தது. மத்திய தரைக் கடலை ஒட்டிக் காணப்படும் ஒரு சிறிய தேசம் வீரத்திலும், கலையிலும், அறிவாற்றலிலும் மற்ற தேசங்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தது. அநாகரிகமான உலகத்தில் நாகரிக வெளிச்சம் பரப்பி நின்ற சிறு உலகமாக கிரேக்க நாடு விளங்கிற்று. எனவே, இலக்கியவாணர்கள், அரசர்கள், அறிஞர்கள், கலை விரும்பிகள் எனப் பலருக்கும் கிரேக்க நாடு ஒரு கனவு தேசமாக விளங்கிற்று.

உலகின் பல நாடுகளில் முடியாட்சியும், எதேச்சாதி காரமும் தலைதூக்கி நின்ற காலத்தில், கிரேக்க தேசத்தில் மட்டும் குடியாட்சி அமைப்பு காணப்பட்டது. ஏராளமான சின்னஞ்சிறு மலைகளையும், ஆறுகளையும் உடைய பூகோள அமைப்பில் கிரேக்க தேசம் இருந்ததால், சுலபமாக உள்நாட்டில் ஓரிடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்குச் செல்ல முடியாத நிலை நிலவி வந்தது. அதன் காரணமாகவே அங்குச் சிறு சிறு ராஜ்யங்கள் தோன்றின. ஏதென்ஸ், ஸ்பார்ட்டா போன்ற நகர ராஜ்யங்கள் உருவானதற்கு இந்தப் பூகோள அமைப்பும் ஒரு காரணமாகும். மத்திய அரசு என்ற அதிகாரம் எதுவும் இல்லாமல், சின்னச்சின்னத் தன்னரசுகளாக, முழு அதிகாரம் பெற்று சுய தேவையைப் பூர்த்தி செய்யும் தகுதி உடையனவாக நகர ராஜ்யங்கள் விளங்கின. அப்படிப்பட்ட நகர ராஜ்யங்களில் ஒன்றுதான்

ஏதென்ஸ் நகரம். அந்த நகரமே பிளேட்டோவின் பிறப்பிடமாகும்.

### ஏதென்ஸ் நகரம்

'கிரேக்க நாட்டின் தலைவாசல்' என்று ஏதென்ஸை அழைப்பார்கள். அங்கிருந்த துறைமுகத்தின் வழியாகவே, வேற்று நாட்டுத் தொடர்பை வளர்த்துக் கொண்டு, வணிகத்தில் சிறந்து விளங்கியது ஏதென்ஸ் நகரம். சிறியதொரு நாட்டில் நூற்றுக்கணக்கான மத நம்பிக்கைகளும், விதவிதமான சர்ச்சைகளும் அந்தக் காலத்திலேயே கரைபுரண்டவண்ணம் இருந்தன. பிற நாட்டு வணிகத் தொடர்பினால் ஏற்பட்ட நாணயப் பரிவர்த்தனை, கணிதம் வளரக் காரணமாயிற்று. அதைப்போலவே, கடல் பயணங்கள் வான சாஸ்திரத்தை வளர்க்கத் துணை புரிந்தன. பெரும்பாலான மக்கள் செல்வ வளத்துடன் வாழ்ந்து, நல்ல ஓய்வை அனுபவித்தனர். எனவே அமைதியான சூழலில் வாழ்ந்தவர்கள் கடவுளையும் ஆத்மாவையும் பற்றிய தத்துவ சாஸ்திரங்களில் ஈடுபட்டனர். ஒரு சாரார் இயற்கையின் விளைவுகளான இடி, மின்னல், பூதம் ஆகியனவற்றைக் கண்டு பயந்து, அவற்றையே கடவுளின் குரல்கள் என்றும், செயல்கள் என்றும் நம்பி, அதன் தொடர்பாகப் பல்வேறு மூட நம்பிக்கைகளை வளர்த்துக் கொண்டார்கள்.

மக்களின் மூட எண்ணங்களை ஆதாரமற்றவை என்று சொன்ன அறிவுஜீவிகள் விஞ்ஞான ரீதியிலான ஆராய்ச்சியில் இறங்கினார்கள். மனிதர்களின் மத சம்பந்தமான ஒவ்வொரு நம்பிக்கையும் எங்கிருந்து தொடங்கியது என்று ஆராய்ச்சி செய்யத் தலைப்பட்டனர். 'ஏன்? எதற்கு? என்ற கேள்விக்கணைகள் மூலம் உண்மைப் பொருளைக் கண்டறியலாம்' என்று சொன்ன பேரறிஞன் சாக்ரடீசின் எழுச்சி மிகுந்த சிந்தனைகள், பல மாய வேலைகளுக்கும், தந்திரங்களுக்கும், அர்த்தமற்ற சடங்குகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கத் தொடங்கின. இதனால் விளைந்த கோபமே பழமைவாதிகளால் 'நாத்திகன்' என்று பெயர் சூட்டப்பட்டு, விஷம் கொடுத்துக் கொல்லப்படுகின்ற நிலைக்குச் சாக்ரடீஸை ஆளாக்கியது.

## தத்துவஞானி சாக்ரடீஸ்

பிளேட்டோவின் ஆசிரியரான சாக்ரடீஸ், உலகமே மூடத்தனத்தில் மூழ்கிக் கிடந்த காலத்தில், எந்தத் தயக்கமும் இன்றித் துணிந்து தம் சிந்தனைகளை வெளிப்படுத்திய தத்துவ ஞானி ஆவார். ஒருவன் தான் சிந்திப்பதை எடுத்துச் சொல்வதைத் தடுப்பதற்கு யாருக்கும் உரிமை இல்லை என்று உலகிலேயே முதன்முதலாகக் குரல் கொடுத்தவர் சாக்ரடீஸ். சிந்தனை உரிமைக்கான வித்தினை, உலகில் முதலில் ஊன்றிய பெருமை சாக்ரடீஸையே சாரும். 'நம்பிக்கை இருந்தால் மட்டும் போதாது; சிந்திக்கவும் வேண்டும்' என்று சொன்ன சாக்ரடீசின் வாசகமே அவர் குடித்த விஷத்தைக் காட்டிலும் பலருக்குக் கசப்பாய் இருந்தது. குடியாட்சி என்ற போர்வையில்தான் சாக்ரடீசிற்குத் தண்டனை அளிக்கப்பட்டது. சாக்ரடீசைத் தண்டிக்கலாமா என்று ஓட்டெடுப்புச் செய்தபோது அவரைத் தண்டிக்க வேண்டும் என்று ஓட்டளித்தவர்கள் இருநூற்று எண்பத்தொரு பேர். 'அவர் குற்றவாளி அல்லர்' என்று ஓட்டளித்தவர்கள் இருநூற்று இருபது பேர். அறுபத்தொரு ஓட்டுக்கள் குறைவாகப் பெற்றதால், அவர் குற்றவாளி அல்லர் என்று கூறியவர்களின் குரல் வலுவிழந்து போயிற்று. அதன் விளைவாகச் சிறையில் அடைக்கப்பட்ட சாக்ரடீஸ் மரண தண்டனையை எதிர்கொள்ள நேர்ந்தது. கருத்துச் சுதந்திரத்தைத் தம் உயிரைக் கொடுத்து, இந்த உலகில் முதலில் நிலைநிறுத்தியவர் என்ற பெருமை பெற்ற சாக்ரடீசின் மாணவன்தான் பிளேட்டோ. உண்மையான தத்துவஞானி யார்? என்ற கேள்விக்கு "உண்மை ஒளியில் நாட்டமுடையவனே உண்மையான தத்துவஞானி. தத்துவம் வியப்பில்தான் தொடங்குகிறது, வியப்புத்தான் ஒரு தத்துவஞானியின் உணர்வு என்கிறார்" பிளேட்டோ.

Who then are the real philosophers. Those, I said, who are lovers of the vision of truth. Wonder is the feeling of a philosopher and philosophy begins in wonder.

தம் ஆசிரியர் சாக்ரடீஸைப் போலவே, பிளேட்டோவும் தலைசிறந்த தத்துவஞானியாக விளங்கினார்.

சாக்ரடீஸ் வாழ்ந்த காலத்தில் அவர் தம் சிந்தனைகள் எதையும் எழுதி வைக்கவில்லை. வாய்மொழியாகத்தான் மக்களிடையே பரப்பி வந்தார். ஒரு சாதாரண சிற்பத் தொழிலாளிக்கும், மருத்துவத்தைத் தொழிலாகக் கொண்ட ஒரு பெண்ணுக்கும் மகனாகப் பிறந்த சாக்ரடீஸ், தன் எழுபதாவது வயதில் மரண தண்டனை விதிக்கப்படும்வரை தான் சந்தித்தவர்களை எல்லாம் கேள்வி கேட்டுக் கொண்டே இருந்தார். சாக்ரடீஸ் கொலைத் தண்டனைக்கு உட்படுத்தப் படும்போது அவரது மாணவனான பிளேட்டோவுக்கு இருபத்தெட்டு வயதுதான் ஆயிற்று. ஆரவாரம் எதுவும் இன்றி அமைதியாகத் தன் கருத்துக்களை எடுத்துச் சொன்ன தன் ஆசிரியரான சாக்ரடீஸ் மேல், பிளேட்டோவுக்கு அளவுகடந்த அபிமானம் இருந்தது. சாக்ரடீசின் மரண தண்டனை நிறைவேற்றப்படுவதற்கு முன்னால், அவர் சிறையில் இருக்கும்போதே பிளேட்டோ சாக்ரடீசைக் காப்பாற்ற முயன்றார் என்று அரசாங்கம் பிளேட்டோ மேல் சந்தேகம் கொண்டது. அரசாங்கக் கெடுபிடிகளில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காகப் பிளேட்டோ ஏதென்ஸ் நகரை விட்டு வெளியேறி உலக யாத்திரையை மேற்கொண்டார்.

## பிளேட்டோவின் உலக யாத்திரை

அவர் விஜயம் செய்த நாடுகளைப் பற்றிப் பல்வேறு கருத்துக்கள் சரித்திர ஆராய்ச்சியாளர்கள் மத்தியில் இன்று நிலவி வருகிறது. இதில் ஒரு சிலர், பிளேட்டோ இத்தாலிக்குச் சென்று அங்குத் தத்துவஞானி பித்தகோரஸ் நிறுவிய அறிஞர் குழுமம், பொதுவுடைமைக் கொள்கை களோடும் தனித்துவத்தோடும் ஒரு தனி இனமாக வாழ்வதைக் கண்டார் என்று குறிப்பிடுகிறார்கள். தென் ஆப்பிரிக்காவுக்கு விஜயம் செய்து அங்குள்ள தேர்ந்த அரசியல்வாதிகளின் மூலமாக சோசலிசத்தைக் கற்றுக் கொண்டார் என்றும், எகிப்து நாட்டிற்குச் சென்று அங்குப் பெரும்பான்மையான விவசாயக் குடிமக்கள் மீது, கற்ற ஒரு சிறுபான்மையினர் ஆட்சி செலுத்துவதைக் கண்டார் என்றும் சிலர் குறிப்பிடுகின்றனர். இன்னும் சிலர், பாரத தேசத்திற்கு விஜயம் செய்து சனாதன தர்மத்தைப் பற்றியும்,

ஆத்மாவின் உயர்வைப் பற்றியும், வருணாசிரம தர்மத்தைப் பற்றியும் தெரிந்து கொண்டார் என்றும் குறிப்பிடுகின்றனர். அவ்வாறு உலக யாத்திரையை மேற்கொண்டிருக்கும் போது, பிளேட்டோ சந்தித்த அறிஞர்கள் சிலர், ஏதென்ஸ் நகரம் ஒரு தெளிவற்ற கலாச்சாரத்தோடு இருப்பதாகவும், அங்குச் சமுதாயக் கட்டுப்பாடு நிலைநிறுத்தப்படாமல் இருப்பதாகவும் எடுத்துச் சொன்னதைக் கேட்டு, பிளேட்டோ சிந்திக்கத் தொடங்கினார். ஏதென்ஸ் நகரில் நடந்துவந்த போலித்தனமான குடியாட்சித் தேர்தல் முறை மீதும், உணர்ச்சிகளுக்கு மட்டுமே அடிமைப்பட்டுக் கிடந்த பொதுஜனங்கள் மீதும் அவருக்குத் தார்மீகக் கோபம் உண்டாயிற்று. எனவே குடியாட்சி முறையைச் சீர்திருத்தம் செய்து, அறிவுத் திறன், செயல் திறன், சிந்தனைத் திறன், விவேகம் ஆகிய பண்புகளைக் கொண்ட மனிதர்களின் உறுதுணையோடு ஒரு புதிய ஆட்சிமுறையை ஏற்படுத்த வேண்டும் என்று பிளேட்டோ விழைவு கொண்டார்.

## அறிவுத் தேடல்

'மனதில் எழுந்த எண்ணத்திற்குச் செயல்வடிவம் தரக்கூடிய விதமாக ஓர் அரசியல் திட்டத்தை எவ்வாறு தயார் செய்வது? அந்தத் திட்டத்தை நிறைவேற்றும் தகுதி படைத்த மனிதர்களை எவ்வாறு உருவாக்குவது?' என்ற சிந்தனைகள் பிளேட்டோவின் மனதை ஆக்கிரமித்தன. எனவே பல தேசங்களுக்கும் சுற்றி அலைந்து அறிவைத் தேடித்தேடிச் சம்பாதித்து, ஒவ்வொரு சமயக் கோட்பாடுகளையும், சமூகக் கலாச்சாரங்களையும் ஆராய்ச்சி செய்து தமது தெளிந்த ஆய்வின் மூலமாக ஒரு நல்ல முடிவுக்கு வந்தார் பிளேட்டோ. அரசியல் அனுபவமும் அறிவும் வாய்ந்தவர்கள் மக்களை ஆட்சி செய்ய வேண்டும் என்றும், அவ்வாறு ஆட்சி செய்பவர்கள் பற்றற்றவர்களாக இருக்க வேண்டும் என்பது மிகவும் முக்கியமானது என்றும், தனி மனிதர்களின் மனம் பண்பட வேண்டும் என்றும் முடிவுக்கு வந்தார் பிளேட்டோ. 'தனி மனிதனின் பண்பாட்டை வளர்ப்பதற்குப் படிப்பும் தத்துவ சிந்தனையும் தேவை' என வலியுறுத்தினார்.

பல ஆண்டுகால இடைவெளிக்குப் பிறகு, ஏதென்ஸ் நகரத்திற்குப் புதிய சிந்தனைகளோடு திரும்பி வந்தார் பிளேட்டோ. அவரது சிந்தனைகள் குடியாட்சி நடைபெறும் அனைத்து நாடுகளிலும் இன்று பேசப்படுவதைப் பார்க்கிறோம். சிந்தனையாளர்கள் கார்ல் மார்க்ஸ், டார்வின், இங்கர்சால், ரூசோ, நீட்ஸ் ஆகியோரின் புரட்சிமிகு சிந்தனைகளுக்குப் பிளேட்டோவின் சிந்தனைகளே அடித்தளம் அமைத்துள்ளது என்பது மிகையாகாது. இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னால் மதம், மொழி, இனம், தேசம் என்ற எல்லைக்கோடுகளை எல்லாம் தாண்டி, உலக நலனை முன்னிறுத்தி ஒரு தனி மனிதன் செயலாக்கம் பெறவல்ல சிந்தனைகளை வழங்கினான் என்பது நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. அரசியல், சமூகம் ஆகிய இரு துறைகளில் மட்டுமல்லாது, இலக்கியத்திலும் கால் ஊன்றிய பெருமை பிளேட்டோவுக்கு உண்டு. ஸ்பென்ஸர், ஷேக்ஸ்பியர், ஷெல்லி, கோல்ரிஜ், வேர்ட்ஸ்வொர்த் முதலான கவிஞர்களிடத்திலும் பிளேட்டோவின் தாக்கம் இருப்பதைப் பார்க்கும்போது, அவர் தொடாத துறை இல்லை என்று நாம் எண்ணவேண்டிய நிலை ஏற்படுகிறது.

### கலைக் கழகம்

மனித சமுதாயம் துன்பச் சூழ்நிலைகளுக்கு மத்தியில் உழன்று கொண்டிருக்கும் நிலையிலிருந்து விடுபட ஒரு நல்ல வழி பிறக்க வேண்டும் என்று பேரவா கொண்டிருந்தார் பிளேட்டோ. மனிதர்கள் இன்புற்று வாழ அவர்களுக்கு உகந்த அரசியல் நெறி எது? அவர்களுக்கு ஏற்ற சமுதாய அமைப்பு எப்படி இருத்தல் வேண்டும்? என்றெல்லாம் இடைவிடாது எண்ணிப் பார்த்த பிளேட்டோ, ஏதென்ஸ் மாநகரில் ஒரு மாளிகையையும் ஒரு பூந்தோட்டத்தையும் விலைக்கு வாங்கி ஒரு கலைக் கழகம் (அகாடமி - Academy) அமைத்து, அதன் மூலமாகத் தம் சிந்தனைகளை மாணவர்களுக்குப் போதித்தார். அரசியலையும், சமுதாயத்தையும் மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு நன்னெறியில் நடத்திச் செல்லும் மனிதர்களைப் பயிற்சியின்

மூலம் உற்பத்தி செய்து அனுப்புவதுதான் அக்கலைக் கழகத்தின் முக்கியமான நோக்கமாகும். கிரேக்க நாட்டில் பெருமளவில் கணித சாஸ்திரமும், வான சாஸ்திரமும் வளர்ந்தமைக்கு இக்கலைக் கழக மாணவர்களின் ஆராய்ச்சி பெருந்துணை புரிந்தது. அலெக்ஸாண்டருக்குப் பேராசிரியராக விளங்கிய உலகம் வியந்து போற்றும் அரிஸ்டாட்டில், இக்கலைக் கழகத்தில் பிளேட்டோவின் மாணவராகக் கல்வி பயின்றவரே.

பிளேட்டோ எடுத்துச் சொன்ன அரசியல் சித்தாந்தங்களை. ஏற்றுக்கொள்ள முடியாதவர்களால் பிளேட்டோ பெருந்தொல்லைக்கு ஆளான கதையும் உண்டு. சிசிலி நாட்டின் தலைநகரான சிராக்கூஸ் நகர மன்னனிடமிருந்து பிளேட்டோவுக்கு அழைப்பு வந்தது. ஏழைகளும் இன்புற்று வாழும்படியான ஒரு அரசியல் அமைப்பிற்கு பிளேட்டோ ஒரு திட்டம் கண்டுபிடித் துள்ளார் எனக் கேள்விப்பட்ட டையோனியஸ் என்ற மன்னன் பிளேட்டோவை வரவழைத்தான். பிளேட்டோவின் வருகையால் தங்களின் முக்கியத்துவம் குறைந்து விடக்கூடும் என்று அந்த மன்னனுடன் இருந்த பலரும் எண்ணினர். பிளேட்டோவோ, கோழையாகவும் பெண்பித்தனாகவும் முட்டாளாகவும் இருந்த டையோனியஸை மனத்தளவில் முதலில் பக்குவப்படுத்த வேண்டும் என்று எண்ணினார். மக்களால் வெறுக்கப்படாதவனாகவும், தேசத்தின் தந்தையாகவும் ஒரு மன்னன் பிரஜைகளால் மதிக்கப்பட வேண்டும். ‘பிரஜைகளின் அன்புதான் ஒரு அரசனின் பலமே தவிர, வெறும் மெய்க்காவல் படை அல்ல’ என்று தன் போதனையைத் தொடங்கினார். பிளேட்டோவின் சிந்தனைகளுக்கு மன்னர் முழுவதுமாகச் செவிசாய்த்து விடக்கூடும் என்று நினைத்த மன்னனின் அரசியல் துணைவர்கள், சிராக்கூஸ் நகரை அதுவரை வெல்ல முடியாத ஏதென்ஸ் நகரம் பிளேட்டோ போன்ற ஒரு ஞானியின் மூலமாக அழியப்போகிறது என்று எடுத்துரைத்து, பிளேட்டோவை வரவழைக்க விரும்பிய மன்னன் டையோனியஸின் மாமனான டியோனையும் நாடு கடத்த வகை செய்தனர்.

தவறான கருத்துக்களுக்குச் செவிசாய்த்த மன்னன், பிளேட்டோவை அடிமைச் சந்தைக்கு இழுத்துப் போய் ஏலம் விடும்படியாக ஆணை பிறப்பித்தான். பிளேட்டோவை மீட்பதற்குப் பணம் புரட்டும் முயற்சி ஏதென்ஸில் நடக்கும்போது, பணம் கொடுக்க யாரும் முன்வரவில்லை. கடைசியில் பிளேட்டோவின் மாணவனான அன்னெனசெரிஸ் என்பவன்தான், பிளேட்டோவை ஏலம் எடுத்துத் தாய்நாட்டிற்குத் திரும்ப அழைத்துச் சென்றான்.

## பிளேட்டோ எழுதிய நூல்கள்

ஏறக்குறைய 56 நூல்களாக பிளேட்டோவின் எழுத்தோவியங்கள் பிரிக்கப்பட்டுள்ளன. அரசியல், சமூகம், தத்துவம், பகுத்தறிவு, கல்வி, மொழி, கவிதை, ஆண்-பெண் உறவு முதலான பல துறைகளைப் பற்றி ஆழச் சிந்தித்துத் தன் கருத்துக்களைத் தெளிவாக வெளியிட்டவர் பிளேட்டோ. பிளோட்டோவின் 'குடியரசு' அல்லது 'இலட்சிய ராஜ்யம்' (Republic or Ideal State) என்னும் நூல் இன்றளவும் மிகப் பெரிய சிந்தனைக் களஞ்சியமாகக் கருதப்படுகிறது. உரையாடல் முறையைப் பின்பற்றித் தம் சிந்தனைகளின் பல பரிமாணங்களையும் எழுத்துக்களில் வடிவமைத்தவர் பிளேட்டோ. 'முப்பது சம்பாஷணை' என்ற நூலில், சாக்ரடீஸையே ஒரு கதாபாத்திரமாக்கித் தன் கருத்துக்களை எல்லாம் அப்பாத்திரத்தின் மூலம் பேச வைத்தவர் பிளேட்டோ. 'ஆத்மீகக் காதல்' (Symposium), 'சட்டங்கள்' (Laws), 'வாக்குமூலம்' (Apology), 'கிரிட்டோ' (Crito), 'டிம்டியஸ்' (Timdeus), 'கிரிட்டியஸ்' (Critias), 'ஸொபிஸ்ட்' (Sophists) என்னும் நூல்களைத் தவிர, வீரம், காதல், சான்றாண்மை, பக்தி, தர்க்கம், நட்பு, தன்னடக்கம் போன்றவற்றைப் பற்றியும் தன் கருத்துக்களை எழுத்துக்களில் வடித்துள்ள பெருமை உடையவர் பிளேட்டோ. தீமை செய்பவர்களுக்குத் தீமை செய்வது அறமாகாது என்பதை கிரிட்டோ (Crito) என்ற நூலில் எடுத்துரைக்கிறார். அரசியல் அநீதிகளால் ஒரு சமுதாயம் ஒருவனுக்குத் தீங்கிழைத்து, அதனால் அவன் உயிர்துறக்கும் நிலை வந்தாலும் கவலைப் படத் தேவையில்லை எனச் சொன்னவர் பிளேட்டோ. தன் வாழ்நாள் முழுவதும் தான் கொண்ட கொள்கைகளையும்,

அவற்றைத் தன்னிடம் பயின்ற மாணவர்களையும் மிகவும் நேசித்தவர். சமூகத்தில் ஒரு உறுப்பினன் என்கிற முறையில் தன் பொறுப்பில் இருந்து தவறுதல் கூடாது என்பதை 'கிரிட்டோ' (Crito) என்ற நூலில் வலியுறுத்துவதைப் பார்க்கிறோம். உலக உற்பத்தியைப் பற்றிய செய்திகளை டிம்டியஸ் (Timdeus) என்ற நூலிலும், ஏதென்ஸ் நகரத்தின் பழங்கால வரலாற்றை கிரிட்டியஸ் (Critias) என்ற நூலிலும் விரித்துரைக்கிறார் பிளேட்டோ. மிகப்பெரிய அரசியல்வாதிகளும், சமுதாயச் சீர்திருத்தவாதிகளும், தத்துவஞானிகளும், கற்றறிந்தோரும் மீண்டும் மீண்டும் படித்துத் தங்கள் சிந்தனைத் திறத்தை வளர்த்துக் கொள்ளும் வகையில் அமைந்துள்ளன பிளேட்டோவின் நூல்கள்.

தன் மாணவர்களிடத்தில் இடைவிடாமல் கேள்வி கேட்டுக்கேட்டு, உரிய பதிலைச் சொல்ல வைத்து அவர்களது சிந்தனையை விரிவுபடுத்திய பெருமை பிளேட்டோவிற்கு உண்டு. பிளேட்டோவின் இயற்பெயர் அரிஸ்டோக்கிளீஸ் என்பது. ஆனால் அவர் உலகோர் அனைவராலும் பிளேட்டோ என்றே அழைக்கப்பட்டார். கிரேக்க மொழியில் 'பிளேட்டோ' என்றால் 'விசாலம்' என்று பொருள். பரந்து விரிந்த உலகளாவிய அறிவுபெற்ற ஞானியை பிளேட்டோ என்று அழைத்தது பொருத்தமானது. தள்ளாத வயதிலும் கொஞ்சமும் அறிவுத்திறன் குறையாமல், மாணவர்களுடன் தன் சிந்தனைகளைப் பகிர்ந்து கொண்டு, யாருக்கும் சிரமம் இல்லாமல் அன்றிரவே நாற்காலியில் அமர்ந்தபடியே மீளா நித்திரைக்குச் சென்றார். தம் கடைசிக் காலத்தில் பிளேட்டோ ஓர் உயில் எழுதி வைத்தார். அவர் விட்டுச் சென்ற சொத்துக்களைப் பற்றிய பட்டியலும், தமக்குப் பின்னால் காரியஸ்தர்களாக நியமிக்கப்பட்டவர்களின் பட்டியலும் அடங்கிய உயிலில் ஒரு வாசகம் - 'நான் கொடுக்க வேண்டிய கடன் பாக்கி எதுவும் கிடையாது.' பிளேட்டோ, தாம் யாருக்கும் கடன்படவில்லை என்று உயில் எழுதினார். ஆம்! அவர் யாருக்கும் கடன்படவில்லை. மானுட சமூகத்தின் மகிழ்ச்சிக்கு ஆதாரமான குடியாட்சியை அறிமுகப்படுத்திய பிளேட்டோவுக்குத்தான் உலகம் கடன்பட்டிருக்கிறது.

## பிளேட்டோவின் 'குடியரசு' (Republic)

பிளேட்டோ எழுதிய நூல்களில் உலகளாவிய புகழ் பெற்றதும், அரசியல் சிந்தனையாளர்களை ஈர்த்ததும் பிளேட்டோவின் 'குடியரசு' என்ற நூலாகும். இந்த நூலுக்குக் 'குடியரசு' அல்லது 'இலட்சிய ராஜ்யம்' என்று பெயர் வைத்தார் பிளேட்டோ. வாழும் மாந்தரை நல்வழிப் படுத்துவதற்கான அறங்களைப் போதிக்கும் நூல்கள் ஒவ்வொரு தேசத்திலும் தகுதிபெற்ற சிந்தனையாளர்களால் எழுதப்பட்டுள்ளன. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னால், அறத்தின் மாண்பை உலகிற்குப் பறைசாற்றிய திருவள்ளுவர், அறத்தை விட மனிதகுலத்திற்கு ஆக்கம் தருவது வேறெதுவு மில்லை; அறத்தைப் போற்றாமல் மறுப்பதை விட கொடுமை வேறு எதுவும் இல்லை என்கிறார்.

**"அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை, அதனை**
**மறத்தலின் ஊங்கில்லை கேடு"** (குறள் : 32)

திருவள்ளுவர் உரைக்கும் 'அறம்' என்ற சொல்லின் பொருளை உள்ளடக்கிய 'நீதி' என்ற சொல்லைப் பிளேட்டோ பயன்படுத்துகிறார். நீதியைப் பற்றிக் குறிப்பிடும்போது, 'நீதிக்கு நான் மிக உன்னதமான ஒரு இடத்தைக் கொடுத்திருக்கிறேன். ஆத்மாவின் நல்ல பண்பு நீதி; ஆத்மாவின் தீய பண்பு அநீதி. நீதியாய் நடந்து கொள்ளும் மனிதர்கள் நிம்மதியுடன் வாழ்கிறார்கள். அநீதியாய் நடந்து கொள்பவர்களோ கவலையுடன்தான் வாழ்கிறார்கள். இறைவன் நீதி உள்ளவர்களைத்தான் நேசிக்கிறான். அநீதி புரிபவர்கள் இறைவனுக்கே எதிரிகள். மனிதர்கள் மத்தியில் அநீதி, சண்டை-சச்சரவுகளையே உண்டாக்குகிறது. நீதியோ, தான் இருக்கும் இடத்தில் தோழமையை வளர்க்கிறது' என்று கூறுகிறார். நீதியைப் பற்றிய சிறந்த கருத்துக்களை நமக்கு எடுத்துரைத்து, அவற்றை நம் மனதில் பதியச் செய்ய வேண்டும் என்பதற்காகப் பிளேட்டோ நீதியைப் பற்றிய ஒரு சம்பாஷனையை, சாக்ரடீஸை மையமாக வைத்துக்கொண்டு, ஏனையோர் கேள்வி பதிலில் பங்கேற்கும் முகமாக, நடத்திக் கொண்டு செல்கிறார்.

அறிஞர்கள் கூடியிருக்கும் இடத்தில் தர்க்கவாதம் தொடங்குகிறது. பாலிமார்க்கஸ் என்பவன் 'உரியவர்களுக்கு அவர்களின் உடைமையைக் கொடுப்பதுதான் நீதி' என்று விவாதத்தைத் தொடங்குகிறான். பைத்தியம் பிடித்த ஒருவன் கையில் அவனுக்கு உடைமையான கத்தியைக் கொடுப்பது சரியா? என்று சாக்ரடீஸ் பதில் கேள்வி தொடுப்பதாக உரையாடல் தொடர்கிறது. திராசிமார்ஸ் என்பவன் 'வலிமையுடைய ஓர் அரசாங்கம் தனக்குச் சாதகமான சட்டங்களை உருவாக்குகிறது. அவ்வாறு சட்டங்களை மீறக்கூடியவர்களைத் தண்டிக்கிறது. எனவே வலிமை யானவனுக்கு எவையெல்லாம் சாதகமாக இருக்கின்றனவோ அவையெல்லாம் பலமற்றவர்களுக்குப் பாதகமாக இருக்கின்றன. எனவே வலிமைதான் நீதி' என்கிறான். உடனே விவாதத்தை இடைமறித்து 'ஒரு பயில்வான் தன் உடல் வலிமைக்காக மாட்டிறைச்சியை உண்டால், ஒரு நோயாளியும் அதைத்தான் சாப்பிட வேண்டும் என்று சொல்வது நீதியாகுமா?' எனக் கேட்கிறார் சாக்ரடீஸ். 'அறநூல், நீதி சாஸ்திரம் என்றெல்லாம் சொல்கிறோம்! அவற்றால் உண்டாகும் பயன் என்ன? நண்பர்களுக்கு நன்மையும் பகைவர்களுக்குத் தீமையும் செய்வது நீதியாகுமா?' என்ற கேள்வி பிறக்கிறது. நண்பனாய் இருந்தாலும், பகைவனாய் இருந்தாலும், வேறு யாரொருவராய் இருந்தாலும், எவரொருவக்குத் தீங்கு செய்தாலும் அது அநீதியே ஆகும். வாதப் பிரதிவாதங்களில் இடம்பெறும் கேள்விகளும் பதில்களும் நல்லதொரு அறக்கருத்தை நோக்கி நம்மை அழைத்துச் செல்வதைப் பிளேட்டோவின் சம்பாஷணைகளில் பார்க்கலாம். யாருக்கும் தீமை செய்யாமல், யாரையும் தீங்கு சொல்லாமல் வாழும் அறத்தைத் திருவள்ளுவர் தெள்ளத் தெளிவாக எடுத்துரைக்கிறார்.

'இந்த உலகில் அநீதி செய்கிறவன் வலிமையும் வசதியும் உடையவனாக இருப்பதைப் பார்க்கும்போது, அநீதியே மக்களுக்கு இயல்பான குணமாகவும் ஆதாயமான தாகவும் இருக்கிறது. நீதி என்பது எதுவும் செய்ய இயலாதவர்களின் புகலிடம். தவறு செய்து தேடிய

பொருளில் ஒரு பங்கைச் செலவு செய்து இறைவனுக்குப் பூசனைகள் புரிந்துவிட்டால் இறையருள்கூடக் கிடைத்துவிடும் போல இருக்கிறது. ஒரு பை அளவு நீதியை விட, ஒரு கை அளவு வலிமை இருந்தால் போதும். எனவே வலிமையே நீதி' என்று நிறுவ முயற்சி செய்கிறான் திராஸிமார்ஸ். 'நீதிதான் மனிதனின் தலைசிறந்த பண்பு என்றால் அதனை விளக்கம் செய்ய வேண்டும்' என்று ஒருவன் கேட்க, நீதியைப் பற்றிய தன் கருத்தை பிளேட்டோ பதிவு செய்கிறார்.

'சமுதாய அமைப்பை ஒட்டிய ஓர் ஒழுங்குதான் நீதி என்னும் பண்பாகிறது. ஒரு சமுதாயத்தில் தனி மனிதனும் பண்புடையவனாக இருத்தல் அவசியம். பண்புடைய தனி மனிதர்கள் ஒன்று சேர்ந்த சமுதாயம் அறவழிப்பட்ட சமுதாயமாக இருக்கும். ஒரு நல்ல அரசியல் அமைப்பு உருவாவதற்குத் தனி மனித ஒழுக்கம் மட்டும் அல்லாது, சமுதாய அரசியல் ஒழுக்கங்களும் சரியான முறையில் அமைதல் வேண்டும்' என்கிறார் பிளேட்டோ. தன்னுடைய உடலுக்குக் கேடு செய்யும் நோய் ஒருவனுக்கு வரும்போது, அவனுக்கு முதலில் தரப்படும் அறிவுரை, அவனது பழக்கவழக்கங்களை மாற்றிக் கொள்ள வேண்டும் என்பதுதான். பழக்கவழக்கங்களை மாற்றிக் கொள்ளாமல், மருந்தை மட்டும் உண்டு கொண்டிருப்பதால் நோய் தீர்ந்து விடாது. எனவே தனி மனித வாழ்க்கை சில ஒழுங்குக் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டது. அதனைத் தனிமனித அறம் என்றும் குறிப்பிடலாம். ஒரு நாட்டின் நலனுக்காகச் சில சட்டதிட்டங்கள், ஒழுங்குமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அத்தகைய நெறிமுறைகளுடன் நடைபெறும் அரசே நல்லரசாகும்' என்று அரசியல் அறம் பற்றிப் பிளேட்டோ தம் 'குடியரசில்' குறிப்பிடுகிறார்.

அரசியல் அறம் பற்றித் திருவள்ளுவர் பிளேட்டோவைக் காட்டிலும் தெளிவாகப் பல்வேறு சிந்தனைகளை வழங்கியுள்ளார். அவை பலாத்காரப் போக்கும், அதிகார வெறியும் கொண்ட ஆட்சியாளர்களுக்குப் பாடம் புகட்டுவது போல் அமைந்துள்ளன.

**அரசியல்**

பொதுவாக மனிதர்களின் அடிப்படைத் தேவைகளாக இருப்பவை உணவு, உடை, உறைவிடம் ஆகியன. ஆதிகாலத்தில் மனிதன் இலைதழைகளை உடுத்திக் கொண்டு வேட்டையாடிய மிருகங்களின் தோல்களையே ஆடை ஆக்கிக் கொண்டான். காட்டில் கிடைக்கும் காய், கனி, கிழங்கு வகைகளையும் பிராணிகளின் மாமிசங்களையும் உண்டு, மரக்கொம்புகளிலும் குகைகளிலும் வாழ்ந்து வந்தான். ஆதிமனிதன் தன் தேவைகளைத் தானே நிறைவேற்றிக் கொள்ளும் நிலையில் இருந்தான். காலம் செல்லச்செல்ல சக மனிதர்களின் துணையும் உதவியும் இல்லாமல் வாழ முடியாத நிலை மனிதர்களுக்கு ஏற்பட்டது. இந்த நிலை வந்தபிறகு, ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு விதமான தொழிலைச் செய்து ஒருவரால் ஒருவர் பயனடைந்து, ஒன்றுபட்டு வாழத் தொடங்கினார்கள்.

உழவுத் தொழில், நெசவு, வீடுகளை உருவாக்குதல் ஆகிய தொழில்களில் தொடங்கி, ஆடு மேய்ப்பது, தச்சுத் தொழில் செய்வது, கொல்லர் தொழில் என்று புதுப்புதுத் தொழில்களைப் பல்வேறு மனிதர்கள் செய்யத் தொடங்கினார்கள். பொருள் உற்பத்தி ஏற்பட்டதால் அவைகளை விற்பது, வாங்குவது, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது, அங்கிருந்து இறக்குமதி செய்வது என்கின்ற அவசியம் ஏற்பட்டது. ஆகவே 'வணிக வகுப்பு' என்று ஒரு பிரிவினர் உருவாயினர். பொருட்களை வாங்கவும், கொடுக்கவும் நாணய முறை அறிமுகப்படுத்தப் பட்டதால், பல செல்வந்தர்கள் உருவானார்கள். கட்டிடம் கட்டும் திறன், நகை செய்யும் நுட்பம் இவைகளைத் தெரிந்து கொண்டு ஒரு பிரிவினர் கலைஞர்கள் ஆனார்கள். நாட்டில் மக்கள்தொகை பெருகியதால் உணவுப் பற்றாக்குறை ஏற்படத் தொடங்கியது. எனவே, தேவைக்கு வேண்டிய பொருளைப் பெறுவதற்காக அந்நிய நாடுகளோடு போர் செய்யத் தொடங்கினார்கள். எனவே போர் வீரர்கள் என்ற ஒரு பிரிவு உண்டாயிற்று. உள்நாட்டில் மக்கள் பாதுகாப்பாக வாழவும், கொலை, கொள்ளைபுரிவோரிடம் இருந்து தங்களைக்

காத்துக் கொள்ளவும், சில சட்டதிட்டங்கள் உருவாக்கப் பட்டன. போர் வீரர்களுக்குச் சில கட்டுப்பாடுகளை விதித்து, நாட்டுமக்களைச் சரியான முறையில் நிர்வாகம் செய்ய அரசாங்கமும், ஆளும் வகுப்பும் தேவைப்பட்டது. எனவே, 'ஆட்சி செய்வோர்' என்று ஒரு பிரிவு உண்டாயிற்று.

உழவுத் தொழில் செய்வோர், தொழில் முனைவோர், வணிகர் ஆகிய வகுப்பினரே ஆளப்படும் பொதுமக்களாக இருந்தனர். இராணுவ வகுப்பு, ஆட்சி வகுப்பு என்ற இரு சாராரும் மக்களை ஆட்சிசெய்யும் அதிகாரத்தோடு விளங்கினர். எனவே ஆளப்படுவோர் எண்ணிக்கை அதிகமாகவும், ஆட்சிசெய்வோர் எண்ணிக்கை குறைவாகவும் இருந்தன. அதிக எண்ணிக்கை உடைய ஆளப்படுவோரின் உரிமைகள் குறைவு. குறைந்த எண்ணிக்கை உடைய ஆட்சி செய்வோரின் உரிமைகளோ அதிகம். இவ்வாறு, ஒவ்வொரு பிரிவைச் சேர்ந்தவர்களும் தங்களுக்கு ஒரு கடமை இருக்கிறது என்பதை உணர்ந்து ஆற்றலோடு செயல்படுதல் வேண்டும். கடமை உணர்வும், ஆற்றலும் உடைய பிரஜைகளின் கூட்டமைப்புதான் நீதியுள்ள ஒரு ராஜ்யமாக இருக்க முடியும். ஆளப்படுபவர்களின் நன்மைக்காக ஆட்சி அமைதல் அரசியல் நீதியாகும். ஆட்சி செய்கிறவன் கொஞ்சமும் பொதுமக்களைப் பற்றிக் கவலைப்படாமல், தன் சுயமுன்னேற்றத்திற்காகவும், சுயநலனுக்காகவும் தன் அதிகாரத்தையும் பணபலத்தையும் செல்வாக்கையும் பயன்படுத்தினால் அதுவே அரசியல் அநீதி எனப்படும்.

## ஐந்து வகை ஆட்சி முறை

ஐந்து விதமான அரசியல் ஆட்சி முறைகளைப் பற்றி பிளேட்டோவின் குடியாட்சி (Republic) நூல் குறிப்பிடுகிறது. 'ஆற்றலாலும், அறிவினாலும் இயங்கும் மேற்குடி மக்கள் நடத்தும் ஆட்சி. இதனை மேன்மக்கள் ஆட்சி (Aristocracy) என்றோ, தம்மாட்சி (Autocracy) என்றோ அழைக்கலாம். இரண்டாவது இராணுவ ஆட்சி (Military State), மூன்றாவது போட்டி மனப்பான்மை கொண்ட ஒரு சிலர் புரியும் ஆட்சி (Oligarchy) அல்லது செல்வந்தர்கள் செய்யும் 'செல்வர் ஆட்சி' (Plutocracy) நான்காவது பொதுக் குடி ஆட்சி (Democracy) ஐந்தாவது எதேச்சாதிகாரமுடைய ஆட்சி

(Despotism) அல்லது கொடுங்கோலாட்சி (Tyranny). இராணுவ ஆட்சியும், தம்மாட்சியும் அடிப்படைக் கொள்கைகளில் எல்லைமீறிப் போனால் அழிந்து போகும் என்கிறார் பிளேட்டோ. "இராணுவ ஆட்சியில் ஆட்சியாளர்கள் அறிவைவிட, உணர்ச்சிகளுக்கே முக்கியத்துவம் தருவதாலும், கலைப் பயிற்சியைவிட தேகப்பயிற்சிக்கு முக்கியத்துவம் தருவதாலும், அவர்களிடம் இருக்கவேண்டிய மனிதத்தன்மை குறைந்து விலங்குத் தன்மை மேலோங்கி நிற்கும். தம்மாட்சி செய்வாரோ விவேகமும் நேர்மையும் உடையவராக இருப்பின், மக்களை நல்லவண்ணம் ஆட்சி செய்யலாம். ஆனால் அவர்கள் பெரும்பாலும் தன்னலமும், பேராசையும், அதிகார வெறியும், தங்களுக்குப் பின்னால் தங்கள் பரம்பரையே ஆள வேண்டும் என்ற சூழ்ச்சி உணர்வும் உடையவர்களாக இருப்பதால் ஒருவகையில் கொடுங்கோலர் களாகவே மாறி விடுகிறார்கள்" என்கிறான் பிளேட்டோ.

## எல்லை மீறினால் தொல்லை

ஒருவர் கையில் இருக்கும் அதிகாரங்களுக்கு ஒரு எல்லையும் வரையறையும் இருத்தல் அவசியம். அளவுக்கு மீறிய பாரத்தைக் கப்பலில் ஏற்றினால் கப்பல் எப்படி நீருக்குள் மூழ்கிவிடுமோ, அதுபோல அளவற்ற அதிகாரம் படைத்த அரசாங்கம் விரைவில் வீழ்ந்து போகும். தன் உடம்பிற்கு எவ்வளவு உணவு தேவை என்று ஒவ்வொரு மனிதனுக்கும் தெரியும். அந்த அளவை மீறினால் ஒருவன் நோய்வாய்ப்பட நேரிடும். அதுபோல அதிகாரமும் அளவுக்கு மீறிவிட்டால் ஒருவன் அதனைத் துஷ்பிரயோகம் செய்யும் வெறியனாகி விடுவான். உட்கொள்ளும் உணவுக்கு என்று ஒரு அளவு இருப்பதைப் போல அதிகாரத்திற்கும் ஒரு அளவு இருக்கிறது. திருவள்ளுவர் 'மருந்து' என்னும் அதிகாரத்தில் உணவைப் பற்றிக் குறிப்பிடும் போது 'ஒருவனின் பசித்தீயை ஆற்றுகிற அளவின்படியே ஒருவன் உணவு கொள்ளல் வேண்டும். மிகுதியாக உண்டால் நோய்களும் மிகுதியாக வந்து சேரும்' என்கிறார்.

"தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோயள வின்றிப் படும்" (குறள் : 947)

## செல்வர் ஆட்சி

'செல்வர் ஆட்சி' என்பது ஒரு சில பணக்காரர்கள் ஆட்சியாளர்களாகவும், நல்லவர்களாய் இருக்கும் ஏழைகள் அடிமைகளாகவும் இருக்கும் நிலை. எனவே ஏழைகள், பணக்காரர்கள் என்ற இரு தரப்பாரும் உட்பகையை வளர்த்துக் கொண்டு, ஒருவரை ஒருவர் வீழ்த்துவதற்குச் சூழ்ச்சி செய்து கொண்டே இருப்பர். ஒருவனது சொந்தத் திறமையையும் ஆற்றலையும் கணக்கில் எடுத்துக்கொள்ளாமல், அவனது செல்வத்தை மட்டும் கருதி ஆட்சியாளனாக்குதல், கடலில் கப்பலை எவ்வாறு செலுத்த வேண்டும் என்பதைப் பற்றிச் சிறிதும் தெரியாத ஒருவனை மாலுமி ஆக்குவதைப் போன்ற அறிவற்ற செயலாகும். ஒரு காலகட்டத்தில் பணக்காரர்களால் நசுக்கப்பட்ட ஏழைகள் பணக்காரர்களைக் கொன்று குவித்துப் பழிதீர்த்துக் கொள்வர். இவ்வாறு 'செல்வர் ஆட்சி' என்பது செல்வத்தின் மேல் அதிகப்படியான நாட்டம் வைப்பதனால் அழிந்து வீழ்ந்து போகிறது. இத்தகைய ஆட்சி ஒரு காலகட்டத்தில் ஒரு சிலர் ஆட்சியாக (Oligarchy) மாறுகிறது. எதேச்சாதிகாரமோ மக்கள் துன்பப்படுவதைப் பற்றி சிறிதும் கவலைப்படாமல் அதிகப்படியான அதிகார மோகத்தினால் வீழ்ந்துபடுகிறது.

## பொதுக் குடியாட்சி

அடுத்து, 'பொதுக் குடியாட்சி' என்பது ராஜ்யத்தில் அனைவரும் சமமான உரிமை உடையவர்கள், எல்லோரும் எந்தப் பதவியையும் வகிக்கலாம் என்று முழக்கமிடுகிறது. இந்த முழக்கம் வெளிப்பார்வைக்குச் சரியானதாகத் தோன்றும். ஏனென்றால் படிப்பறிவு இல்லாத பாமர ஜனங்களுக்குத் தங்களை ஆட்சி செய்பவர்கள் திறமை யானவர்களாக மட்டுமல்லாமல் நல்லவர்களாகவும் இருக்க வேண்டும் என்று எண்ணிப் பார்க்கத் தெரியாது. இரண்டு முட்டாள்கள் தேர்தலில் நின்றால், அந்த இருவரில் ஒரு முட்டாளைத் தேர்ந்தெடுப்பர். இத்தகைய ஆட்சி முறையில், பலதரப்பட்ட அரசியல் கொள்கைகளும் கட்சிகளும் தலைதூக்கும். எந்த ஒரு திட்டத்தைச் செயல்படுத்த வேண்டியிருந்தாலும் ஏராளமான விமர்சனங்கள் எழும்.

அதற்கு மத்தியிலும், திட்டத்தை நிறைவேற்ற ஒப்புதல் பெற வேண்டும். அதிகாரிகளின் அதிகாரங்கள் ஆட்சியாளர்களின் கைகளுக்கு மாறும். அதிகாரிகள் வெறும் நாற்காலிப் பொம்மைகளாக இருப்பார்கள். ஒவ்வொரு கட்சியினரும் ஒருவரோடு ஒருவர் மோதிச் சண்டையிட்டுக் கொள்வார்கள்.

'கப்பலை நான்தான் செலுத்துவேன்' என்று பத்து கண்பார்வையற்ற மாலுமிகள், ஒரு முடிவுக்கும் வராமல் சண்டை போட்டுக்கொண்டே இருந்தால் கப்பல் ஒரு அடிகூட நகராது. ஆனால் சண்டைக்கு இடையிலேயே, பயணத்திற்காகக் கப்பலில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் உணவுப்பண்டங்களை மட்டும் தின்று தீர்த்து விடுவார்கள். அதுபோலத்தான், கேட்பாரற்ற ஒரு குடியாட்சியைக் 'கிடைத்தது லாபம்' என்று அனைத்துக் கட்சிகளும், நலன்களைச் சுரண்டிச் சாப்பிட்டுக் கொண்டிருக்க, தேசமாகிய கப்பலோ ஒரு அடிகூட முன்னேறிச் செல்ல வழியில்லாமல் நின்ற இடத்திலேயே நின்று தவித்துக் கொண்டிருக்கும்.

இந்த அனைத்து விதமான ஆட்சி முறைகளிலும் கொடுமையானது எதேச்சாதிகார அரசியலமைப்பேயாகும். ஒரு கொடுங்கோலன் தன்னைச் சர்வவல்லமை உடையவன் என்று மக்கள் நினைக்கும் சூழலை உருவாக்குவான். பிறகு, திறமைசாலிகள் எதிரியாக இருந்தால் அவர்களைச் சமூகத் துரோகிகள் என்று குற்றஞ்சாட்டி ஒழித்துக் கட்டுவான். இராணுவத்தையும், தன் மெய்க்காவல் படையையும் பெருக்கிக் கொள்வான். எதிரிகளை ஒழித்துவிட்டுத் தன்னை எதிர்ப்பதற்கோ, மறுத்துப் பேசுவதற்கோ ஆளில்லை என்ற நிலையை உருவாக்குவான். புதுப்புது வரிகளைத் திணித்து மக்களிடம் பணம் பறிப்பான். தன் பலாத்காரத்தைப் பயன்படுத்தி நினைத்ததைச் சாதிப்பான்.

The people always have some champion whom they set over them and nurse into greatness.... This and no other is the root from which a tyranny springs. When he first appears above ground, he is a protector. In the early days of his career he is full of smiles, and he salutes everyone he meets, he is to be called a tyrant, who is making promises in the public and also

in private; liberating debtors, and distributing land to the people and followers, and wanting to be so kind and good to everyone.

But when he has diposed of foreign enemies, by conquest of treaty, and there is nothing to fear from them, then he is always stirring up some war or other, in order that the people may require a leader.

He has another object which is that they may be impoverished by payment of taxes and thus compelled to devote themselves to their daily wants and therefore less likely to conspire against him. And if any of them are suspected by him of having notions of freedom and of resistance to his authority, he will have a good pretext for destroying them by placing them at the mercy of the enemy; and for all these reasons, the tyrant must always be getting up a war.

எனவே, எதேச்சாதிகாரம் மிக மிகத் தீமையானது. அது ஒரு அநீதியான அரசியலமைப்பு என எடுத்துக்காட்டி, ஐவகை ஆட்சிமுறைகளையும் அவற்றின் நிலைப்பாடுகளையும் வரிசைப்படுத்துகிறார் பிளேட்டோ.

அரசியல் பதவிகளுக்கு உரியவர்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை எதையும் பகுத்துணரத் தெரியாத, எளிதில் எதையும் நம்புகிற பாமர ஜனங்களின் கையில் கொடுப்பது தவறு என்று திட்டவட்டமாக எடுத்துரைக்கிறார் பிளேட்டோ. அவன் காலத்தில் நிலவி வந்த குடியாட்சி, நியமன முறையில் நடைபெற்ற குடியாட்சியாகும். எனவே, பல சுயநலமிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு பொதுமக்கள் வேட்டையாடப்பட்டனர். யார் பெருவாரியாக ஓட்டுக்கள் பெறுகிறானோ அவன் அறிவிலியாக இருந்தாலும், அவனே ராஜ்யத்தை ஆளத் தெரிந்தவன் என்றும், நல்ல மனிதன் என்றும் தவறாக எடைபோட்டார்கள். இதைவிடத் தவறான அணுகுமுறை வேறெதுவுமில்லை என்கிறார் பிளேட்டோ.

தம் உடம்புக்கு நோய் என்றால், அந்த நோயைச் சரி செய்யும் ஆற்றலும் அறிவும் உடைய ஒரு மருத்துவரைத்தான்

அணுக வேண்டுமே தவிர, மருத்துவர் அழகாய் இருக்கிறார் என்பதற்காக அவரிடம் போய் வைத்தியம் செய்தால் உயிரே போய்விடும். நம் செருப்பைத் தைக்க வேண்டும் என்றால், அதைப் பற்றித் தெரிந்த செருப்புத் தொழிலாளியிடம் தான் போக வேண்டுமே தவிர, அந்த வேலை தெரியாதவனிடம் போனால் உள்ளதும் கெட்டுப் போகும். அதுபோல ஒரு நாட்டை நல்ல விதம் ஆட்சி செய்ய, நிர்வாகப் பொறுப்பும், திறமையும், பொதுநலனில் அக்கறையும், நேர்மையும் உடைய ஆட்சியாளர்கள் இருக்க வேண்டும். மாறாக, சுயநலமிகளும், போக்கிரிகளும், வஞ்சகர்களும் ஆட்சியாளர்களாக மாறினால், ஒரு நாடு ஒட்டுமொத்தமாக அழிவை நோக்கிச் சென்று விடும். எனவே மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு, கொஞ்சமும் சுயநலமில்லாமல் ஆட்சி நடத்தும் தகுதிப்பாடு உடையவர்களைக் கண்டுபிடிக்க ஒரு திட்டம் தீட்ட வேண்டும். அவ்வாறு செய்தால் அரசியல் நீதி காப்பாற்றப் படும் என்கிறார் பிளேட்டோ.

## இலட்சிய அரசு

இலட்சிய அரசைப் பற்றிப் பேச வந்த பிளேட்டோ, நல்லதொரு குடியாட்சியின் தன்மைகள் எப்படி அமைந்திருக்க வேண்டும் என்று எடுத்துரைக்கிறார். மனிதர்களை அங்கத்தினர்களாகக் கொண்டதுதான் அரசியல். முடியாட்சியில் "எவ்வழி மன்னர்; அவ்வழி மக்கள்" என்கிற நிலை. குடியாட்சியிலோ "மக்கள் எவ்வழியோ, அவ்வழி அரசு" என்ற நிலை. ஒரு சிறப்பான அரசு அமைவதற்கு நல்ல பண்புகளோடு கூடிய சிறந்த மனிதர்கள் தேவை. நற்பண்புகள் உடையவர்களாக குடிமக்கள் இருந்தால் ஓர் அரசும் மக்களுக்கு நன்மை செய்யும் நல்லரசாக அமையும். அரசியலுக்கு ஒரு நீதி என்றும், தனி மனிதனுக்கு ஒரு நீதி என்றும் இருப்பது பொருத்தமற்றது. ஆளப்படும் மக்களை விட ஆட்சி செய்பவர்களின் எண்ணிக்கை எந்த ஆட்சியிலும் குறைவாகத்தான் இருக்க முடியும். ஆனால் அறிவாற்றல் மிகுந்தவர்கள் ஒரு நாட்டில் குறைவாக இருக்கும்போது, அவர்கள் அதிக அளவிலான மக்களை ஆளும் நிலை இயற்கையாகவே உருவாகிறது. மனித உடலிலேயே, உள்ளம்

மனிதனது உடலை ஆட்சி செய்வதாகவும், உடல் உள்ளத்திற்கு ஆட்படுவதாகவும்தான் அமைந்துள்ளது. உள்ளம் சிறியதானாலும், அறிவாற்றலில் உடலைவிடப் பெரியது. எனவே ஒரு குடியாட்சியில் உடலைப் போல ஆளப்படும் வர்க்கத்தினரை, உள்ளத்தைப் போன்ற ஆளும் திறம் படைத்தோர் ஆட்சி செய்வது தவிர்க்க முடியாததாகிறது.

## அடிப்படைக் குணங்கள்

மனிதர்களின் குணபாவங்களை மாற்றி அமைப்பது ஒரு நல்லரசு அமைவதற்குத் தேவை எனச் சொல்லும் பிளேட்டோ, மனிதனின் அடிப்படைக் குணங்களாக காமம் (desire), உணர்ச்சி (emotion), பகுத்தறிவு (Knowledge) என மூன்று விதமாகப் பிரிக்கிறார். ஆசை அல்லது காமம் என்று சொல்லப்படும் முதலாவது குணம், மனிதனின் உடம்பை இருப்பிடமாகக் கொண்டது. ஆற்றல் உணர்ச்சி என்னும் உத்வேக குணமோ, மனிதனின் உள்ளத்தை இடமாகக் கொண்டது. பகுத்தறிவுக்குணமோ மூளையை இருப்பிடமாகக் கொண்டது. இந்த மூன்று விதமான குணங்களும், எல்லா மனிதர்களிடமும் காணப்படுகின்றன. ஒவ்வொரு குணங்களின் விகிதாச்சாரம் மட்டும் ஒவ்வொரு மனிதனிடத்திலும் வேறுபட்டு இருப்பதைப் பார்க்கலாம்.

ஆசையின் வயப்பட்டு இருக்கும் மனிதர்கள், தாமச குணமுடையவர்கள். இவர்களிடம் தன்னலம், போட்டி, சச்சரவு, பொறமை இவை அனைத்தும் காணப்படும். ஆற்றல் உணர்ச்சியின் பாற்படுபவர்களை ரஜோ குணத்தவர் எனலாம். கோபம், வெறுப்பு, பகை என்று மாறிமாறி உணர்ச்சியின் பிடிகளுக்குள் சிக்குவார்கள். அவர்கள் விரும்புவதெல்லாம் லட்சியத்திற்காகப் போராடுவதும், அதன் பயனாக வெற்றி அடைவதும் மட்டும்தான். பகுத்தறியும் குணம் உடையவர்களை சத்வ குணத்தவர் எனலாம். இவர்கள்தாம் மெய்யறிவில் நாட்டம் உடையவராய் இருப்பர். ஒரு விதத்தில் சொல்லப் போனால் ஆராய்ச்சிகளிலும், சிந்தனைகளிலும் ஈடுபடுகின்ற தத்துவ ஞானிகளாக உலக சப்தங்களைப் புறந்தள்ளவிட்டு ஒதுங்கி வாழ விரும்புவர். இத்தகைய ஞானம் உடையவர்களை

ஒரு நாட்டின் அரசியலில் பயன்படுத்திக் கொள்ளாமல் இருப்பது வருத்தத்திற்குரியது.

ஆசை என்னும் பண்பு, ஆற்றல் பண்புக்கு அடங்கியதாகவும், ஆற்றல் என்னும் பண்பு, அறிவுப் பண்புக்கு அடங்கியதாகவும் இருக்க வேண்டும். அளவுக்கு அதிகமான ஆசைகளைக் கட்டுப்படுத்தி, ஆற்றல் உணர்ச்சியைப் பயன்படுத்தி, அறிவுக் குணம் செயல்படும் போது, மனிதன் செம்மை அடைகிறான். இந்த மூன்று பிரிவினரின் இயல்புகளையும் பற்றித் தெளிவாக எடுத்துச் சொல்லும் பிளேட்டோவின் குடியரசு, இந்த மூன்று பிரிவினரின் கடமையையும் எடுத்துரைக்கிறது. ஆசைக் குணத்தோடு கூடிய பிரிவினர் மற்றவர்களுக்குப் பணிந்து நடந்து, பொருள்களை உற்பத்தி செய்தும், விவசாயம் செய்தும், தங்கள் வேலைகளைக் கவனித்துக் கொள்வார்கள். ஆற்றல் வகுப்பினர் இராணுவ வகுப்பினராக நாட்டைப் பாதுகாப்பார்கள். பகுத்தறிவாளர்களான ஞானிகளே நாட்டை ஆட்சி செய்வார்கள்.

தான் செய்த தொழிலின் மூலம் நிறையப் பணம் சம்பாதிக்கும் ஒரு செல்வந்தன் ஆள்பவனாக நேர்ந்தால், ஆட்சிய செய்ய வந்த பிறகும், அவன் தன் இயல்பை மாற்ற இயலாதவனாகி, எப்படிப் பணம் சம்பாதிக்கலாம் என்பதிலேயே கவனம் செலுத்துவான் என்று பிளேட்டோ குறிப்பிடுகிறார். ஆற்றல் வகுப்பைச் சேர்ந்தவன் ஆட்சிக்கு வந்தால், எந்த நிலையிலும் தனது தைரியத்தையும் வீரத்தையும் மட்டும் வெளிக்காட்டிக் கொள்வதில் முனைந்திருப்பானே தவிர, மக்களுக்கு நன்மை செய்ய மாட்டான். அதுபோலத் தொழில் வகுப்பைச் சார்ந்தவன் பொருளாதாரத் துறையில் சிறந்து விளங்குவான்; இராணுவத்தைச் சார்ந்தவன் போர்க்களத்தில் மட்டுமே சிறந்து விளங்குவான்; இவ்விரு தரப்பாரும் அரசாட்சிக்குள் அடி எடுத்து வைத்தால் அந்த ஆட்சி சீர்கெட்டுப் போகும்.

ஆட்சி செய்வது என்பது அறிவும் மனமும் சார்ந்த ஒரு தனிக்கலை. அதைப் பிறவித் திறமை என்றும் குறிப்பிடலாம். இந்த மூன்று தரப்பாரும் ஒருவரோடு ஒருவர்

இணைந்து ஒழுங்காக இயங்கும்போது உண்டாகும் ஒழுங்கு நியதிகளைத்தான் பிளேட்டோ 'நீதி' அல்லது அறம் என்று குறிப்பிடுகின்றார். தனி மனிதனின் விரிவுதான் ஓர் அரசு; அரசின் மிக முக்கியமான ஒரு சிறு உறுப்புதான் மனிதன் எனக் கூறும் பிளேட்டோ அரசியல் தலைமைத்துவமும், மெய்யறிவும் ஒரு மனிதனிடத்தில் ஒன்றாக அமைந்திருந்தால் அவன் ஆளும் அரசில் மக்களுக்கு எந்தத் துன்பமும் இருக்காது என்கிறார்.

**மெய் உணர்தல்**

பிளேட்டோவின் இந்தக் கருத்தைச் சிந்திப்போர் மனதில் ஒரு பெரிய கேள்வி எழலாம். 'மெய்ஞானிகளை நம்பி அரசியலை ஒப்படைக்க வேண்டும்' என்று பிளேட்டோ கூறுவது சரிதானா? என்பதே அக்கேள்வி. எனவே இக்கேள்விக்குப் பதிலுரைக்கும் முகமாக மெய்ஞானி என்பவன் யார்? என்பதையும் பிளேட்டோ தெளிவு படுத்துகிறார். பொய்யும் மெய்யும் கலந்துதான் இந்த உலகில் உலா வருகின்றன. இந்தக் கலப்பில் பொய் எது எனக் கண்டுபிடித்து, அதனை நீக்கி உண்மையைக் கண்டறிவதுதான் மெய்யறிவு. எந்தவிதமான ஐயப்பாட்டிற்கும் இடமளிக்காத உண்மை அறிவே மெய்யறிவாகும். மெய்யறிவாளர்கள் இயல்பிலேயே பொய்மையை வெறுத்து, ஐம்பொறிகளையும் தங்கள் கட்டிற்குள் வைத்துப் பணத்தின் மேல் பேராசை அற்றவர்களாய் விளங்குவார்கள். அவர்களிடம் நேர்மையும், நீதியும், அறிவாற்றலும், ஞாபக சக்தியும் நிரம்பி இருக்கும். இத்தகைய குணம் படைத்தோரே மெய்யறிவாளர்கள் அல்லது மெய்ஞானிகள் எனப்படுவர்.

But, whether true or false my opinion is that in the world of knowledge, the idea of good appears last of all, and is seen only with an effort, and when seen is also inferred to be the universal author of all things beautiful and right, parent of light and of the lord of light in this visible world and the immediate source of reason and truth in the intellectual, and that this is the power upon which who would act rationally either in public or private life must have his eye fixed.

## பிறவித் திறன்

தொழில் வகுப்பு, இராணுவ வகுப்பு, ஆளும் வகுப்பு என்று பிளேட்டோ குறிப்பிடுகின்ற பிரிவுகளை நிலை நிறுத்துவது எவ்வாறு? என்ற அடுத்த கேள்வி பிறக்கிறது. 'இந்த வகுப்பு முறைகள் பிறப்பை ஒட்டி அமைதல் கூடாது' என்கிறார் பிளேட்டோ. ஒரு செருப்புத் தொழிலாளியின் மகன் நாட்டை ஆளும் திறமை கொண்ட பிறவி மேதையாக இருக்கலாம்; ஒரு விவசாயியின் மகன் மகா காவியங்களைப் படைக்கும் பிறவித் திறன் உடையவனாக இருக்கலாம்; ஓர் ஆட்சியாளனின் குழந்தைக்கு வண்ணவண்ணச் சாயங்களைக் கண்டுபிடிக்கும் திறமை இருக்கலாம்; வீரம் மிகுந்த இராணுவ அதிகாரியின் மகன் கோழையாய் இருக்கலாம்; தத்துவ ஞானியின் மகன் ஞானசூன்யமாய் இருக்கலாம். எனவே ஒருவன் பிறக்கின்ற குடும்பத்திற்கும், அவனது பிறவித் திறமைக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இனத்தை வைத்து சமூகத்தைப் பிரிப்பது போன்ற தீமை வேறெதுவும் இல்லை. அவ்வாறு பிரிப்பதனால் பல்வேறு மனிதர்களின் பிறவித் திறமைகள் வெளிவராமல் வீணாகின்றன. இதனால் ஒரு தேசமே தன் சக்தியை இழந்து பாழ்படும் என்கிறார் பிளேட்டோ.

உலக சிந்தனையாளர்கள் அனைவருமே உலகின் பல பாகங்களில் நடைபெறும் ஆட்சிமுறைகளை அலசிப் பார்த்து, அதன் ஏற்றத்தாழ்வுகளை சரிசெய்யும் முறைகளைப் பன்னெடுங்காலமாக ஆராய்ச்சி செய்து வந்துள்ளனர். இவை அனைத்திற்கும் அடிப்படையான பல செய்திகளைப் பிளேட்டோவின் குடியாட்சியில் பார்க்கலாம். இலட்சியக் குடியரசில் ஒரு நாட்டை ஆளக் கூடியவனை ஓட்டுப்போடும் தேர்தல் முறையினால் தேர்ந்தெடுக்கக் கூடாது. கல்வி அறிவு இல்லாதவனும் பொதுமக்களின் வாக்குகளைப் பெற்று விட்டால், ஆட்சி பீடத்தில் அமரலாம் என்றிருக்கும் இன்றைய குடியாட்சி முறையை பிளேட்டோ ஏற்றுக் கொள்ளவில்லை.

## அறிவற்றவன் ஆள்வதா?

'ஆட்சிக்கும் கல்விக்கும் ஒரு தொடர்பிருக்கிறது' என்பதே பிளேட்டோவால் வலியுறுத்தப்படும் கருத்தாகும்.

கல்விக்கூடத்தில் பரீட்சைகளில் தன் திறமையை நிலைநாட்டி வென்றவனே ராஜ்யத்தை ஆளும் தகுதியும் உரிமையும் பெறுவான்; பயிற்சி இல்லாத யாரும் பதவிகளில் அமர முடியாது. சில நாடுகளில் அரசியல் தலைமைப் பதவிகளில் தகுதியற்றவர்கள் இருந்துகொண்டு, அவர்களுக்குப் பின்னணியில் இருக்கும் கற்றறிந்தோரின் நிர்வாக அதிகாரங்களைக் கொண்டு ஆட்சி நடத்துவார்கள். இந்த முறை குடியரசுக்கு ஏற்றதல்ல என்கிறார் பிளேட்டோ.

இனவாரியாக ஆட்சி நடத்தும், நிர்வாக அதிகாரங்களை நியமனம் செய்கிற முறையையும் பிளேட்டோ ஏற்றுக் கொள்ளவில்லை. 'கல்வியிலும், செயல் திறமையிலும் உயர்ந்து விளங்கும் ஒரு சிலரே ஆட்சிப் பொறுப்பில் இருப்பார்கள்' என்று பிளேட்டோ கூறுவதை ஏற்றுக் கொள்ளாதவர்கள், 'பிளேட்டோவின் எண்ணப்படி ஆட்சி அமைந்தால் அது ஒரு சிலரின் அதிகார ஆட்சியாக (authoritative state or aristocracy) அல்லவா இருக்கும்' என்றனர். இந்தக் கேள்விக்கு விடைசொல்லும் பாவனையில் பிளேட்டோ எடுத்துரைக்கும் செய்தி கவனத்தில் கொள்ளத் தகுந்தது. பிளேட்டோ குறிப்பிடும் குடியாட்சியில் பரம்பரை உரிமைக்கு இடம் கிடையாது. அரசியல் பதவிகளைத் தங்கள் இனத்தவர்க்கோ, வாரிசுகளுக்கோ தயார் செய்து வைக்கும் அவலம் கிடையாது. வகுப்புவெறிக்கும் இடமில்லை. செருப்புத் தைப்பவனின் மகன் கல்வி அறிவும், செயல் திறமும் பெற்றிருந்தால் அவன் ராஜ்யத்தை ஆளும் வகுப்பில் சேர்க்கப்படுவான். ஆட்சி செய்பவனின் மகன் பரீட்சைகளில் தோற்று, செயல்திறமையும், அறிவு மேம்பாடும் அற்றவனாக இருந்தால், அவன் தொழில் வகுப்பில் சேர்க்கப்படுவான். குலம் எதுவானாலும் முதலிடம் திறமைக்கே அளிக்கப்பட வேண்டும் என்பது பிளேட்டோவின் அரசியல்.

**கேள்வியும் பதிலும்**

'தத்துவ ஞானிகளாய் இருக்கும் அனுபவசாலிகளே ஆட்சிப் பொறுப்பில் இருக்கத் தகுந்தவர்கள்' என்று சொல்லும் பிளேட்டோவின் கருத்தை மறுத்து மொழிவோரும் உண்டு. 'ஐம்பது வயதைத் தாண்டியவர்களுக்கு மற்றவர்களுக்கு

இணங்கிச் செல்லும் தன்மை குறைந்து, பிடிவாத குணம் மேலோங்கி நிற்கும். அவர்கள் பெரும்பாலும் பழைமை விரும்பிகளாகவே இருப்பர். அவர்களால் ஒரு அரசை எவ்வாறு முன்னெடுத்துச் செல்ல முடியும்?' என்பது பிளேட்டோவை மறுப்பவர்கள் வாதம். அதற்குப் பதில் சொல்லும் பிளேட்டோ, தத்துவஞானிகள் என்போர் சுயநலமிகளாகவோ பிடிவாதக்காரர்களாகவோ இருந்தால் அவர்கள் தத்துவஞானிகள் அல்லர். தத்துவப் பயிற்சியும், வாழ்க்கைப் பயிற்சியும் பெற்ற அனுபவசாலிகளே ஆளும் தகுதி உடையவர்கள். வெறும் சிந்தனைகளோடு நிறுத்திக் கொள்ளாமல் சிந்தனைகளைச் செயல்படுத்தும் தீரர்களாகவும், குடிமக்களை உயர்த்த வேண்டும் என்ற உன்னத நோக்கம் உடையவர்களாகவும், தன்னலமற்றவர் களாகவும் இருப்பவர்களே ஆட்சி செய்யும் தகுதி படைத்தவர்கள்.

Until philosophers are kings or the kings and princess of this world have the spirit and power of philosophy and political greatness and wisdom meet in one, and those commoner natures, who pursue either to the exclusion of the other are compelled to stand aside, cities will never have rest from their evils - no, nor the human race as I believe and then only will, this our state have possibility of life and behold the light of day.

ஒரு சிலர் கைகளில் அதிகாரங்கள் குவிக்கப்படும் போது, ஒரு காலகட்டத்தில் அவர்கள் தங்களது விருப்பங்களைப் பூர்த்தி செய்து கொண்டு, நிரம்ப செல்வத்தையும் சேர்த்துக் கொண்டு, பின்னர் தங்கள் சந்ததிகளை வளர்த்து, அரசியலுக்குள் புகுத்துகின்ற நிலைக்கு வரமாட்டார்களா? என்ற ஒரு கேள்வியும் பிறக்கிறது. இந்தக் கேள்விக்கு மிகவும் தெள்ளத் தெளிவான விளக்கத்தை பிளேட்டோ பதிலாகத் தருகிறார். ஆற்றல் வகுப்பு, தொழில் வகுப்பு ஆகிய இரண்டையும் விட்டுவிட்டு ஆளும் வகுப்புக்கு மட்டும் பொதுவுடைமையைப் புகுத்த வேண்டும். ஆளும் வகுப்பினரில் யாருக்கும் தனிப்பட்ட எந்தச் சொத்தும் இருக்கக் கூடாது. சொந்த வீடும் இருத்தல் கூடாது. அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட கூலியே தரப்பட வேண்டும்.

சொந்தத் தேவையை முன்னிட்டு, ஒரு ஊரில் இருந்து இன்னொரு ஊருக்குச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் அதற்கு அரசாங்கத்திடம் எந்தப் பணமும் பெறக்கூடாது. பொன்னையோ, பொருளையோ சொந்தமாக வைத்திருக்கக் கூடாது என்கிறார். ஆளும் வகுப்பினருக்குத் தனியாக மனைவி குழந்தை என்று இருக்கக் கூடாது. இன்ப துன்பங்களைச் சொந்தப் பொறுப்பில் தனித்தனியாக ஒவ்வொருவரும் அனுபவிப்பதனால்தான் மொத்தமாய் இருக்கும் மனிதர்கள் தனித்தனியாகப் பிரிந்து விடுகிறார்கள். எனவே 'என் குழந்தை', 'என் மனைவி', 'நான்' என்ற பாசத்தளைகள் அனைத்திலுமிருந்தும் விடுபட வேண்டும். ஆளும் வகுப்பினருக்குத் தங்குமிடம், உண்ணும் உணவு, மனைவி மக்கள் அனைத்துமே பொதுவாக்கப்பட வேண்டும் என்று சொல்லும் பிளேட்டோவின் கூற்று சற்றுக் கடினமாகத் தெரிகிறது. ஆனால் பிளேட்டோவோ இந்தப் பொதுவுடைமைக்கு ஆளும் வகுப்பினர் கட்டுப்பட்டே தீர வேண்டும் என்கிறார். ஆளும் வகுப்பினரில் யாராவது சொந்த வீடோ, நிலமோ, பணமோ, மனைவியோ, மக்களோ வைத்துக் கொள்ள விரும்பினால், அவன் ஆளும் வகுப்பை விட்டு விட்டு தொழில் வகுப்பில் சென்று சேர்ந்து கொண்டு, சாதாரண குடிமகனாக மாறிவிடுதல் வேண்டும் என்கிறார் பிளேட்டோ.

ஆள்வோருக்கு மட்டும் இவ்வளவு கடுமையான பொதுவுடைமையைச் சொல்லிவிட்டு, தொழில் வகுப்பினர் மட்டும் சொத்து சுகங்களும் குடும்பமும் வைத்திருக்கலாம் என்கிறார் பிளேட்டோ. இந்த நிலையை எண்ணிப் பார்க்கும் போது, தனி ஒருவரிடம் அதிகமான பணம் சேர்ந்தால் ஆபத்தல்லவா? என்ற ஒரு கேள்வி பிறக்கிறது. அதற்குப் பதில் சொல்ல வந்த பிளேட்டோ, தனி மனிதனிடம் அதிகமான செல்வமும் பெரும்பான்மையினரிடம் வறுமையும் ஏற்படாமல் தடுக்க, தொழிலும் வணிகமும் ஆள்பவர் மேற்பார்வையில் சிறப்பாக நடைபெற வேண்டும். ஒரு சாதாரண குடிமகனின் சொத்தைப் போல நான்கு மடங்குக்கு மேல் யாராவது சொத்துக்கள் வைத்திருந்தால், அதை அரசாங்கம் பறிமுதல் செய்யும் என்கிறார். இவ்வாறு ஒரு

குடியாட்சி அமையும் போது, 'ஆளும் வர்க்கத்திற்கு வேறு எந்த வசதியும் இல்லையே?' என்கின்ற கேள்வி எழும். அதற்கும் பதில் தரும் பிளேட்டோ 'நன்றாக அரசு புரிகிறோம்' என்ற பெருமையையும், அதனால் கிடைக்கும் அந்தஸ்தையும் விட அவர்களுக்கு வேறு எந்தத் தனித்துவமும் தேவை இல்லை என்கிறார். ஆள்பவர்கள் பொதுநலத்தை முன்னிறுத்தி ஆட்சி புரிவதைத் தவிர, அவர்களுக்கு வேறு எந்த இலக்கும் இருத்தல் கூடாது என்ற நிலை உருவாகும்போது, 'ஆட்சி செய்யும் ஒரு சாரார், தங்கள் சொந்த சுகங்களை இழக்க வேண்டிய நிலை ஏற்படுமே?' என்ற வினாவும் எழுகிறது. இந்த வினாவை ஒரு தகுதியான பதிலின் மூலம் சந்திக்கிறார் பிளேட்டோ. 'நாம் ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்துவதன் நோக்கம், ஒரு சிலரின் சுகத்துக்காக அல்ல; பொதுநலனுக்காக. ஒவ்வொரு பிரிவினரும் தங்கள் கடமைகளைத் தங்கள் தங்கள் எல்லைக் கோட்டை மீறாமல் செயல்படுத்துவார்களேயானால், ஒரு அரசானது உண்மையான குடியரசாகும்' என்கிறார்.

### குடியரசும் சம உரிமையும்

பிளேட்டோ குறிப்பிடுகின்ற குடியரசின் அங்கங்களைச் சீர்தூக்கிப் பார்க்கும்போது, அந்தக் குடியரசும், குடியாட்சியும் மேன்மக்கள் ஆட்சியும் இணைந்த ஒரு கலவை போலத் தோன்றுகிறது (A mixture of democracy and aristocracy). சுருங்கச் சொன்னால், தேர்தல் என்ற பெயரால் மக்களின் வாக்குகளைப் பெற நினைக்கும் மனிதர்களில் ஒருவனைத் தேர்ந்தெடுப்பதுதான் குடியாட்சி என்று மக்கள் நினைத்துக் கொண்டிருப்பது முற்றிலும் தவறானது என்கிறார் பிளேட்டோ. 'ஒரு நாட்டில் வாழும் எல்லோரும் கல்வி கற்பதற்கும், அரசாட்சி செய்யும் திறம் பெறுவதற்கும் சமமான சந்தர்ப்பம் அளிக்கும் உரிமைக்குப் பெயர்தான் குடியரசு' என்கிறார். 'குடியரசு பற்றிய பிளேட்டோவின் கருத்துக்கள் அனைத்தையும் இக்காலத்தில் ஏற்றுக்கொள்ள இயலுமா?' என்ற கேள்வியும் எழாமல் இருக்காது. இருப்பினும் இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னால், அரசியலையும் சமூகத்தையும்

பற்றிய சிறப்பான சிந்தனைகளை எடுத்துரைத்த ஒரு மகோன்னதமான அறிஞன் பிளேட்டோ என்பதை யாரும் மறந்துவிட முடியாது. உலகம் முழுவதிலும் வாழ்கின்ற ஆட்சியாளர்கள் கருத்தில் கொள்ள வேண்டிய உயர்ந்த சிந்தனைகள் பிளேட்டோவின் எழுத்துக்களில் மிளிர்வதைப் பார்க்கிறோம். அவற்றுள் சில மறக்க முடியாத வாசகங்கள் காணப்படுகின்றன. "படிப்பறிவில்லாதவர்களையும், உண்மையை அறிய முடியாதவர்களையும், வாழ்க்கை முழுவதையும் படிப்பதிலேயே கழிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறவர்களையும் (book worms) அரசாட்சி செய்பவர்களாக நியமித்தல் கூடாது. எந்த நாட்டில் ஆட்சி செய்வோர் திறமையுடனும், பற்றற்றவர்களாகவும், நேர்மை யானவர்களாகவும் இருக்கிறார்களோ அங்கு அமைதியும் மகிழ்ச்சியும் இருக்கும். எந்த நாட்டில் ஆள்வோருக்கு அதிக அதிகாரம் செலுத்த வேண்டும் என்ற வெறி ஏற்படுகிறதோ அங்கே குழப்பம்தான் மிச்சப்படும்." இவ்வாறு குடியரசின் தன்மைகளைத் தெள்ளத் தெளிவாக பிளேட்டோ எடுத்துரைக்கிறார்.

## கடவுள் கொள்கை

உலகம் இயங்கத் தொடங்கிய நாளிலிருந்தே கடவுள் இருக்கிறார் என்று ஒரு சாராரும், இல்லை என்று ஒரு சாராரும் வாதிட்டுக் கொண்டே இருக்கிறார்கள். 'பௌதீகவாதிகள் உலகைப் படைத்தது இறைவன் அல்ல; தற்செயலாகச் சம்பவித்த இயற்கையின் தொழில்தான் படைப்பு' என்கின்றனர். 'நெருப்பு, நீர், நிலம், காற்று, ஆகாசம் ஆகியனவும், தங்கள் சொந்தப் பொறுப்பிலேயே இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்த ஐந்தின் இயக்கமும் இறைவனின் விளையாடல் என்று சொல்வது சரியல்ல. சூரியன், பூமி, நட்சத்திரங்கள், கிரகங்கள் ஆகிய அனைத்துமே தற்செயலான இயக்கத்தில் தொழிற்படுகின்றன. பஞ்சபூதங்கள் எனச் சொல்லப்படும் மூல பூதங்களின் கூறுகள், தங்களது நியமங்களின்படி ஓடி அலைந்தபோது வானம், பூமி, சூரியன், சந்திரன், கிரகங்கள், நட்சத்திரங்கள் ஆகியன உருவாயின. காலம் செல்லச்செல்ல பிராணிகள்,

செடி கொடிகள், தாவரங்கள், ஏனைய ஜீவராசிகள் என்று இயற்கை ஒரு பரிணாமத்தை உருவாக்கியதே அல்லாமல், கடவுளுக்கும் படைப்பிற்கும் தொடர்பு இல்லை' என்கின்றனர்.

பௌதீகவாதிகள் கடவுளுக்கு என்று ஒரு இயல்பும் இல்லை, இயக்கமும் இல்லை என்பர். அப்படியாயின் இன்று உலகில் காணப்படும் பல்வேறு சமயங்களின் கடவுளர்கள் எங்கிருந்து வந்தனர்? எனக் கேட்டால், அவர்களெல்லாம் மனிதர்களின் கற்பனைகளையும் சம்பிரதாயங்களையும் ஒட்டி உருவான கலாசிருஷ்டிகள் என்கின்றனர். கடவுளே உலகைச் சிருஷ்டித்தார் எனச் சொல்லும் சமயவாதிகளின் கருத்து ஏற்றுக் கொள்ளத் தகுந்ததல்ல என்று வாதம் செய்யும் பௌதீகவாதிகளின் கூற்றைப் பிளேட்டோ தர்க்கரீதியாக மறுத்து மொழிகிறார். 'இயற்கைதான் மூல சிருஷ்டி சக்தி' எனச் சொல்லும் பௌதீகவாதிகளின் கூற்று முற்றிலும் தவறானது என்கிறார் பிளேட்டோ. உண்மையை உணராமல் சிலர் இந்த உலகின் சிருஷ்டிக்கு மூலகாரணம் வெறும் காமம்தான் என்கின்றனர். மற்றொரு சாரார், பிராணனே உலக சிருஷ்டிக்குக் காரணம் என்கின்றனர். இன்னும் சிலர் பஞ்சபூதங்களே மூல சிருஷ்டிக்கு முக்கிய காரணம் என்கின்றனர். இவை அனைத்தையும் ஏற்றுக்கொள்ளத் தகுந்த கருத்தல்ல என்று நிராகரிக்கிறார் பிளேட்டோ. பௌதீகவாதிகள் இந்த உலகில் காணப்படும் சகலவிதமான உயிருள்ள உயிரற்ற பொருட்கள் அனைத்திற்கும் நெருப்பு, நீர், நிலம், காற்று, ஆகாசம் ஆகிய பூதங்களே மூலப் பிரகிருதி அம்சங்கள் என்று கருதுகின்றனர். இதனை ஒட்டுமொத்தமாக இயற்கை எனக் குறிப்பிட்டு, இயற்கையினால்தான் ஜீவன் உருவாயிற்று என்கின்றனர். இதனைப் பற்றிக் கருத்துத் தெரிவிக்கும் பிளேட்டோ, மூல காரணத்தைப் பௌதீகவாதிகள் பின்னால் வைத்துவிட்டு, பின்னால் வைக்க வேண்டிய பஞ்சபூதங்களை முன்னால் வைக்கின்றனர். உடம்புக்கு முன்னால் உயிர் என்பதைப் புரிந்துகொள்ளாமல் உயிருக்கு முன்னால் உடல் என்று விவாதிக்கிறார்கள். இந்தப் பிழையின் காரணமாக அறிவுஜீவிகள் என்று தங்களைச் சொல்லிக் கொள்ளும் சிந்தனையாளர்கள் ஆத்மாவின் சுபாவத்தையும், சக்தியையும்,

தத்துவத்தையும் உணரத் தவறிவிட்டார்கள். ஆத்மாதான் ஆதி மூலப்பொருள் என்பதை அவர்கள் தெரிந்து கொள்ளவில்லை என்கிறார்.

உலகில் காணப்படும் பொருட்களும், உயிர்களும் தோன்றுவதற்கு முன்பே ஆத்மா இருந்தது. பஞ்சபூதங்களின் இயக்கம், பூமி, சூரிய சந்திரன், நட்சத்திரம் ஏனைய கிரகங்களின் இயக்கம், ஜடப் பொருள்களில் காணப்படும் மாறுதல்கள், தாவரங்கள், உயிரினங்களின் பரிணாம வளர்ச்சி இவை அனைத்திற்கும் ஆத்மாதான் காரணம் என்கிறார் பிளேட்டோ. எனவே ஆத்மாதான் மூலமே தவிர, நெருப்பு, காற்று போன்ற பூதங்கள் அல்ல என்பதனைத் தெளிவுபடுத்துகிறார்.

பிளேட்டோவுக்குப் பல நூற்றாண்டுகளுக்குப் பின் தோன்றிய விஞ்ஞானி சார்லஸ் டார்வின் 'ஜீவராசிகளின் மூலம்" (Origin of Species) என்னும் ஆராய்ச்சி நூலைப் படைத்தார். உலகில் உள்ள அனைத்து விஞ்ஞானிகளையும் கவர்ந்திழுத்த டார்வினின் பரிணாம வளர்ச்சி பற்றிய செய்திகள், அறிவியல் உலகிற்கு ஒரு புதுத் தெம்பையும், தெளிவையும் தந்தது. ஆழச் சிந்தித்தால் டார்வினின் பரிணாம வாதத்தின் மூலவித்து, பிளேட்டோவிலிருந்துதான் அவருக்குக் கிடைத்திருக்க வேண்டும். 'ஆத்மாவே ஆதிமூலம்' எனச் சொல்லும் பிளேட்டோவின் கருத்தை, இந்திய தேசத்தின் இணையற்ற பொக்கிஷமான உபநிஷதம் எடுத்துரைக்கிறது. பிரம்மமாகிய ஆத்மாவிடமிருந்து தான் ஆகாசம் தோன்றியது. ஆகாசத்திலிருந்து வாயுவும், வாயுவிலிருந்து அக்னியும், அக்னியிலிருந்து நீரும், நீரிலிருந்து மண்ணும், மண்ணிலிருந்து செடி கொடி, பயிர் வகைகளும், அன்னமும் உருவாயின. அன்னத்திலிருந்தே மனிதன் உருவானான். அவ்வாறு தோன்றிய மனிதன் அன்ன மயமானவன் என்று சொல்லும் உபநிஷத வாக்கியங்களைப் பிளேட்டோவின் சிந்தனைகளோடு ஒன்றுபடுத்திப் பார்க்கலாம். இக்கருத்தை ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்களுக்கும் முதற்பொருளாக வைக்கிறார் திருவள்ளுவர். எழுத்துக்களெல்லாம் அகரத்தை அடிப்படையாகக்

கொண்டிருக்கின்றன; அதுபோல உலகம் கடவுளை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு" (குறள் : 1)

'கடவுளைப் பற்றிய உண்மையான நிலையை அறியாதவர்களாகவே பல மாந்தர்கள் பூமியில் வாழ்கின்றனர். அதற்குரிய காரணங்களில் ஒன்று, சில ஆஷாடபூதிகள் தரம் தாழ்ந்த தங்களது இழிசெயல்களால் கடவுள் என்ற தத்துவத்தையே கொச்சைப்படுத்தி வருகிறார்கள். கடவுள் அருளைத் தாங்கள்தான் பெற்றுத்தர முடியும் என்று சிலர் செல்வந்தர்களை ஏமாற்றிப் பணம் பறிக்கும் வேலையையும் நடத்திக் கொண்டுதான் இருக்கிறார்கள். இது மட்டுமல்லாமல், பாவங்கள் செய்தவனை அதன் விளைவுகளிலிருந்து காப்பாற்ற முடியும் என்று தவறான செய்திகளைச் சொல்லி வருகிறார்கள். தெய்வங்களுக்குப் பலி கொடுப்பதனாலோ, காணிக்கை செலுத்துவதனாலோ பாவங்களிலிருந்து விடுபடலாம் என்று, செல்லுபடியாகாத வழிகளைக் காட்டுகிறார்கள். குறிப்பிட்ட மந்திர உச்சாடனங்களின் மூலமாக இறைவனையே வழிக்குக் கொண்டு வந்து விடலாம் என்கிறார்கள். குறிப்பிட்ட சூனிய வித்தைகளால் பகைவர்களையும் பலமிழக்கச் செய்யலாம் என்று மனிதர்களுக்குத் தீயவழி காட்டுகிறார்கள். இத்தகைய ஆஷாடபூதிகளை நம்பி நிற்கும் மக்கள், அறிவு வடிவினனாகிய இறைவனை அறிந்து கொள்ளும் தகுதியை இழந்து விடுகிறார்கள் என்கிறான் பிளேட்டோ. இந்த வாசகங்கள் பிளேட்டோவின் கடவுள் நம்பிக்கையையும், கடவுளின் பெயரைச் சொல்லி ஏமாற்றிப் பிழைப்போர் மேல் அவர் கொண்டுள்ள வெறுப்பையும் வெளிப்படுத்துகிறது.

கடவுளைப் பற்றிப் பேசும் பிளேட்டோ, 'சத்தியம்தான் கடவுள்; ஒளிதான் அவர் நிழல்' என்கிறார். கடவுள் மாயாஜாலம் புரிபவர் அல்லர். அவர் நினைத்த பொழுதெல்லாம் விதவிதமான வடிவங்கள் எடுப்பவரும் அல்ல. என்றைக்கும் ஒரே விதமாக இருப்பவர்,

எளிமையுடையவர், உண்மையானவர், பூரணமானவர், அவர் அசரீரியாக வந்து யாருக்கும் வாக்குக் கொடுப்பதில்லை. கனவிலோ, நனவிலோ வந்து யாரையும் ஏமாற்றுவதில்லை.

In that God is simple and true in word and deed, he does not change himself nor does he delude others, either in phantasies or words, or by sending signs, whether in waking moments or in dreams.

"இறைவன் அறிவுவடிவானவன்; இந்தப் பிரபஞ்சத்தைப் படைக்கும்போது உடம்புக்குள் ஆத்மாவையும், ஆத்மாவுக்குள் அறிவையும் வைத்தார்" என்கிறார். 'பிரஞ்ஞானம் பிரம்மம்' என்கிறது ரிக் வேதம். பகுத்தறிவுதான் கடவுள் என்பதே இதன் பொருள். உலகமே பகுத்தறிவினால் நடைபெறுகிறது. இதனை ஐதரேய உபநிஷதமும் வழிமொழிகிறது. திருவள்ளுவர் கடவுள் வாழ்த்து என்னும் அதிகாரத்தில் இறைவனை 'வாலறிவன்' என்ற சொல்லால் குறிப்பிடுகிறார்.

**"கற்றதனால் ஆய பயன்என்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்"** **(குறள் : 2)**

அறியாமையின் காரணமாகவே இருவகை வினையும் விளைகின்றன. அந்த இரு வினைகளும் கடவுளின் உண்மைப் புகழை விரும்பி அன்பு செலுத்துகிறவர்களிடம் ஒருநாளும் சேரா.

**"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்**
**பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு"** **(குறள் : 5)**

பிளேட்டோவோ சில மனிதர்கள் கடவுள் என்றொருவரில்லை என்கிறார்கள். இன்னும் சிலர் கடவுள் இருக்கிறார்; ஆனால் அவர் யாரையும் பற்றிக் கவலைப் படுவதில்லை என்கிறார்கள். மற்றொரு சாரார், நாம் பலிகொடுத்துக் காணிக்கைச் செலுத்துவதாக இருந்தால், கடவுள் நம்மைக் கவனிப்பார் என்கிறார்கள். இந்த மூன்று விதமான கூற்றுக்களுமே நாத்திகவாதம் செய்பவர்களின் கூற்றுக்கள்தாம். 'கடவுளே இல்லை' எனச் சொல்பவன் தீயவன் (அசத்து). பிரம்மம் உண்டு என்பவன் சாது (சத்து)

என்று உபநிஷதம் உரைக்கிறது. ‘கடவுள் இல்லை என்பவனும், கடவுள் பெயரை பாமர மக்களை ஏமாற்றுவதற்குப் பயன்படுத்துகிறவனும் நாத்திகன்தான் என்கிறார். நீதி, சுயநலமின்மை, ஞானம், தன்னடக்கம் ஆகிய நற்பண்புகளனைத்தும் இறைப் பண்புகளாகும். மூன்று காலங்களும் இறைவனுக்குக் கட்டுப்பட்டவை. இறைவனோ நீதியின் நாயகன். தெய்வத்தை யாருடனும் ஒப்பிட முடியாது. இருந்தாலும் நாம் புரிந்து கொள்ளக் கூடிய விதமாக ஒப்பீடு செய்கிறார் பிளேட்டோ. சேனைகளுக்குத் தளபதியைப் போலவும், நோய்க்கு வைத்தியரைப் போலவும், விளை நிலத்தைக் கண்காணிக்கும் விவசாயியைப் போவும், ஆட்டுமந்தைகளைக் காப்பாற்றும் மேய்ப்பனைப் போலவும் தெய்வம் நம்மைக் காக்கிறது என்று சொல்லலாம். யார் யார் நேர்மையற்றவர்களாக இருக்கிறார்களோ அவர்களை இறைவன் கண்டிக்கிறார். இளமையாலோ, செல்வத்தாலோ, அழகாலோ அகங்காரம் கொள்கிறவன் கடவுளால் கைவிடப்படுவான். கடைசியில் அவன் குழப்பத்தையும், சர்வ நாசத்தையும் சந்திக்க நேரிடும். நேர்மையான மனம் படைத்தவனைக் கடவுளின் நண்பன் என்றே சொல்லலாம். மனிதன் உன்னதமான குணங்களோடும் சீலத்தோடும் இருக்க வேண்டும் என்பது இறைவனின் எதிர்பார்ப்பு. கடவுளின் அன்புக்கு ஆட்பட விழைபவன், தன்னால் முடிந்தவரை இறைவனிடம் குடிகொண்டிருக்கும் நற்பண்புகளைச் சுவீகரித்துக் கொள்ள வேண்டும். வழிபாட்டின் மூலம் இறைவனோடு இரண்டறக் கலத்தல் வேண்டும் என்ற சிந்தனையை தனது சட்டங்கள் (Law) என்ற நூலில் தெரிவிக்கிறார் பிளேட்டோ. பீட்ரஸ் (Phaedrus) என்ற நூலில் காணப்படும் “தெய்வங்களே! என் அந்தராத்மாவிற்கு அழகு தாருங்கள். இறைவா! மனிதனும் உள்ளும் புறமும் ஒரே மாதிரியாக இருக்கட்டும்.” என்ற வாசகமும் நற்பண்புகளே ஒருவனை இறைவனுக்கு உகந்தவனாக்கு கின்றன என்பதைத் தெரிவிக்கிறது.

இறைவனைப் பற்றிக் கடவுள் வாழ்த்தில் குறிப்பிடும் திருவள்ளுவர், குறளின் பல இடங்களில் இறைவனைத் தொடர்புபடுத்திப் பல்வேறு செய்திகளை நமக்கு வழங்குகிறார்.

நீதி, நேர்மை ஆகியனவற்றை உணர்ந்து தன் மக்களைக் குறையின்றிச் சிறப்புற ஒரு மன்னன் ஆட்சி செய்வானாகில், அவனது மாண்பு இறைத்தன்மை உடையது எனச் சொல்கிறார் திருவள்ளுவர்.

> "முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
> இறையென்று வைக்கப் படும்" (குறள் : 388)

என்கிறார். 'குடி செயல் வகை' என்னும் அதிகாரத்தில் தன் குடியை உயர்த்துவதற்கு முயற்சி செய்யும் ஒருவனுக்குத் தெய்வமே ஆடையை இறுக்கிக் கட்டிக்கொண்டு, தானே முன் வந்து துணை செய்யும் என்கிறார்.

> "குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
> மடிதற்றுத் தான்முந் துறும்" (குறள் : 1023)

இவ்வாறு பிளேட்டோ, திருவள்ளுவர் ஆகிய இருவரின் கடவுள் கொள்கைகளையும் இணைத்து சிந்தித்து மகிழலாம்.

## கல்விச் சிந்தனைகள்

தனது 'சட்டங்கள்' என்ற நூலில் பிளேட்டோ சரியான முறையில் கல்வி கற்பிக்கப்படுவோர் நல்ல மனிதர்களாக உருவாகிறார்கள் என்ற கருத்தைத் தெரிவிக்கிறார். மனிதர்களின் வாழ்வை மேம்படுத்துவதில் கல்வி மிக முக்கியமான பங்கு வகிக்கிறது என்பதை அனைவரும் அறிவர். ஒருவன் கல்வி கற்காமல் வாழ்வது காலில்லாமல் வாழ்வது போன்றது என்கிறார். திருவள்ளுவரோ கல்வி கற்காமல் வாழ்வது என்பது கண்ணில்லாமல் வாழ்வதற்குச் சமம் என்கிறார். 'கண் உடையார் என்பவர் கற்றோர்' என்ற திருவள்ளுவரின் வாக்கு எண்ணிப்பார்க்கத் தகுந்தது.

வரலாற்றிலேயே அனைத்து மக்களுக்கும் கட்டாயமாகக் கல்வி கற்பிக்க வேண்டும் என்ற அவசியத்தை முதல்முதலாக உணர்த்தியவர் பிளேட்டோ. பிளேட்டோவின் கல்விச் சிந்தனைகளை 'தலைசிறந்த கல்விப் பரிசிலனை' என்று பிரான்ஸ் நாட்டுச் சிந்தனையாளர் ரூசோ போற்றிப் புகழ்கிறார்: எந்தவிதமான ஏற்றத்தாழ்வையும் கணக்கில்

எடுத்துக் கொள்ளாமல், எல்லாக் குழந்தைகளுக்கும் கல்வி பெறும் வாய்ப்பினை அளிக்க வேண்டும். குழந்தைகளைத் தன் சொந்தப் பொறுப்பில் அரசாங்கம் ஏற்றுக்கொண்டு கல்வி புகட்ட வேண்டும். குழந்தைகளின் பெற்றோரிடத்தில் காணப்படும் தேவையற்ற பழக்கவழக்கங்கள் குழந்தைகளைப் பாதிக்காமல் இருப்பதற்கு இதுவே சிறந்த வழியாகும். ஒரு குழந்தையின் திறமை முழுவதும் வெளிப்படுமாறு கற்பிக்க வேண்டும். தகப்பன் செய்யும் குலத்தொழிலைத்தான் ஒரு குழந்தையும் செய்ய வேண்டும் என்ற முறை தரமான கல்வியினால் மாற்றப்பட வேண்டும். ஏறத்தாழ இருபத்து மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னால் பிளேட்டோவைப் போல் கல்வியின் நோக்கத்தையும், பயன்பாட்டையும் பற்றித் தெளிவாக எடுத்துரைத்தவர்கள் வேறு யாரும் இல்லை.

**மணற்கேணி**

கல்வி கற்பதற்கான ஆற்றல் எல்லா மனிதர்களுக் குள்ளும் ஏற்கெனவே இருக்கிறது என்று குறிப்பிடும் பிளேட்டோ, கல்வி புகட்டுவது என்பது இல்லாத ஒன்றைத் திணிப்பது போன்றதல்ல; இருக்கும் ஒன்றை மேலும் கூர்மையாக்குவது போன்றது. கண்ணில்லாதவனுக்குப் பார்வையைத் திணிப்பது போன்றதல்ல கல்வி; ஏற்கனவே இருக்கும் கண்பார்வையைக் கொண்டு, இருட்டில் இருந்து வெளிச்சத்தை நோக்கிப் பார்க்கும்படியாகத் திருப்பிவிடும் வகையில் அமைவதுதான் கல்வி.

The aim of education will not be to implant vision in the instrument of sight. It will regard it as already possessing that, but as being turned in a wrong direction, and not looking where it out, and it will try to set this right.

ஒவ்வொரு குழந்தையிடத்திலும் கல்வி கற்பதற்குரிய ஆற்றல் இருப்பதைத் தெரிந்து, அவ்வாற்றலைச் சரியான வழியில் பயன்படுத்தும் பயிற்சியைக் கொடுப்பதுதான் கல்வி என்கிறார் திருவள்ளுவர். கல்வி என்னும் அதிகாரத்தில், மணலில் காணப்படும் கேணியை எவ்வளவு தோண்டு கிறோமோ அந்த அளவுக்குத் தண்ணீர் ஊறும்; அதுபோல

மக்களுக்குக் கற்ற கல்வியின் அளவுக்கு அறிவு ஊறும் என்கிறார். மணற்கேணியைத் தோண்டும் போது புறப்படும் தண்ணீர் ஏற்கனவே மண்ணுக்குள் இருந்த ஒன்றுதான். அதுபோலவே கற்கக் கற்க அறிவு ஊறும் எனச் சொல்லும் திருவள்ளுவரும், மனிதனிடத்தில் இயல்பாகவே அறிவு அமைந்திருக்கிறது; அது கல்வியின் மூலம் வெளிப்படுகிறது என்று குறிப்பிடுவதை எண்ணிப் பார்க்கலாம்.

**"தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத்து ஊறும் அறிவு"** (குறள் : 396)

## இளமையிற்கல்

கல்வி கற்பதற்குக் காலவரையறை என்று ஒன்று இல்லை. கல்வி நிலையங்களில் சென்று கற்பதோடு ஒருவன் உலகில் கற்க வேண்டிய அனைத்தையும் கற்று முடித்து விட இயலாது. மனிதன் புத்தகங்களிலிருந்தும், சான்றோர்களிடமிருந்தும், உலக நடையிலிருந்தும், வாழ்நாளில் கடைசிப் பகுதி வரையிலும் கற்றுக் கொண்டே இருக்க வேண்டும் என்பதனை 'சாந்துணையும் கல்லாதவாறு' என்கிறார் திருவள்ளுவர். இக்கருத்தையே பிளேட்டோ குழந்தைப் பருவத்தில் தொடங்கி வாழ்வின் இறுதிநாள் வரை, ஒருவன் கற்றுக் கொண்டே இருக்க வேண்டும் என்கிறார். ஆரம்பத்தில் குழந்தைகளுக்குச் சிறு சிறு கதைகளைச் சொல்லி, கேட்கும் ஆர்வத்தைத் தூண்டி அறிவை வளர்க்க வேண்டும். நன்னெறி காட்டிச் சென்ற பெரியோர்களின் வரலாறுகளைக் கதைகளாகச் சொல்லி, குழந்தைகளின் மனதில் பதிக்க வேண்டும். நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கி அறிவைத் திணித்தால், இளவயதிலேயே குழந்தைகளுக்குக் 'கல்வி கற்பது ஒரு கசப்பான அனுபவம்' என்று மனதில் பதிந்து விடும். எனவே விளையாட்டாகவும், வேடிக்கை காட்டியும், ஆரம்பகாலத்தில் கல்வியைக் குழந்தைகள் விரும்பும்படியாகச் செய்தல் வேண்டும். பாடம் புகட்டும் ஆசிரியர்கள் திறமைசாலிகளாகவும், குழந்தைகளின் குணநலன்களை வளர்க்கும் தகுதி படைத்த முன்னோடிகளாகவும் இருத்தல் வேண்டும் என்கிறார் பிளேட்டோ.

## கற்பிக்கும் முறை

பிளேட்டோவின் இலட்சிய அரசில் காணப்படும் கல்வி முறை, உடல்நலனுக்கான தேகப் பயிற்சியையும், மன நலனுக்கான கலைப்பயிற்சியையும் உள்ளடக்கியது. ஒரு நல்ல அரசு என்பது, அந்நாட்டில் காணப்படும் பொது சுகாதாரத்தில் இருந்துதான் தொடங்க வேண்டும். உடல் நலமும், மனநலமுமற்றவர்களாக இருக்கும் மனிதர்களைக் கொண்ட நாடு நாடாகாது. எனவே மாணவப் பருவத்திலேயே உடல் நலத்தையும், மன நலத்தையும் பெறுவதற்குக் கல்வி வகை செய்ய வேண்டும். பத்து வயதுவரை உடற்கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தால், குழந்தைகள் நோயற்ற பிரஜைகளாக உருவாக வாய்ப்பு ஏற்படுவதோடு, மனத்தளவில் தைரியம் உடையவர்களாகவும் இருக்க வகை ஏற்படும். உடல்நலத்தைப்போலவே, மன நலனும் மிகவும் முக்கியமானது. திடமான உடலும், பண்பட்ட உள்ளமும் இணைந்திருக்கும் நிலையைக் கற்பவன் அடைய, கல்வி வழிகாட்டவேண்டும். பொதுவாக, அதிக தேக பலம் உடையவன் மென்மைக் குணங்களை இழந்து விடுவானே என்ற ஒரு ஐயப்பாடு பலருக்கும் ஏற்படுவதுண்டு. இதற்குப் பதில் சொல்லும் பிளேட்டோ, விளையாட்டும் உடற்பயிற்சியும் நோயற்ற உறுதியான தேகத்தைத் தருவது போல், இயல், இசை, கலைப் பயிற்சிகளும், மனக் கல்வியும், மென்மையான மனதைக் கொடுத்து ஒருவனை மனநலம் உடையவனாக ஆக்கும். நல்ல இசை எத்தகைய மனதையும் உருகச் செய்யும் என்பது உலகறிந்த உண்மை. உள்ளம் பண்படும் போது உண்மையைக் கண்டுகொள்ளும் ஆர்வம் கற்பவனுக்கு உண்டாகிறது என்கிறார்.

## மனக் கல்வி

மனக் கல்வி என்று பிளேட்டோ குறிப்பிடுவது, கணிதம் முதலான அறிவு நூல் பயிற்சியேயாகும். கணிதம் கற்பது ஒருவனது புத்தியைக் கூர்மையாக்குவதோடு, எதையும் விரைவாகப் புரிந்து கொள்ளும் ஆற்றலையும் அளிக்கிறது. பிளேட்டோ குறிப்பிடும் கணிதப் பாடத்தில் ஜியோமெட்ரி

என்று சொல்லப்படும் சேத்திர கணிதம் முக்கிய இடம் பெறுகிறது. அறிஞன் பெட்ரன்ரசலைப் போன்றவர்கள் பிற்காலத்தில் கணிதத்தை மெஞ்ஞானத்தின் திறவுகோல் என்றனர். சேத்திரக் கணிதத்திற்குப் பிளேட்டோ எந்த அளவு முக்கியத்தும் கொடுத்தார் என்றால், தன் கலைக் கழகத்தின் வாசலில் 'சேத்திரக் கணித அறிவில்லாத எவனும் இங்கே நுழைய வேண்டாம்' என்ற வாசகத்தைப் பொறித்திருந்தார். இந்த சேத்திரக் கணிதமானது விஞ்ஞானிகளுக்கு மட்டுமல்லாமல், யுத்த வீரர்களுக்கும், மெய்ஞானிகளுக்கும் அவர்களின் சேத்திராடனத்திற்கு மிகவும் பயனுள்ளதாய் காணப்படுகிறது. திருவள்ளுவர் எண் என்று சொல்லப்படுவனவும், எழுத்து என்று சொல்லப்படுவனவும் ஆகிய இருவகைக் கலைகளும், உலகில் வாழும் மக்களுக்கு முகத்தில் இரண்டு கண்களைப் போன்றனவாகும் என்கிறார். கல்வி என்னும் அதிகாரத்தில், கற்கத் தகுந்த நூல்களைக் குற்றமில்லாமல் கற்க வேண்டும் என்று சொன்ன திருவள்ளுவர், வாழும் உயிருக்கு எண் எழுத்து ஆகியனவற்றின் முக்கியத்துவத்தைத் தெளிவாக்குகிறார்.

**"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**
**கண்ணென்ப வாழும் உயிர்க்கு"** **(குறள் : 392)**

கணித பாடங்களுக்கு அடுத்தபடியாக பௌதீகமும், அதை அடுத்து வான சாஸ்திரமும், தொடர்ந்து தர்க்க சாஸ்திரமும் கற்பிக்கப்பட வேண்டும் என்கிறார் பிளேட்டோ. அறிவின் உண்மையான எல்லையை ஒருவனுக்கு உணர்த்துவது தர்க்க சாஸ்திரம். வெறும் உடற்கல்வி மட்டும் பெற்றால், ஒருவன் மூர்க்கத்தனத்தை மட்டும் பெற்று, சமுதாயத்தின் ஒழுங்கையும் அமைதியையும் சிதைக்கும் வேலையில் ஈடுபடுவான். வெறும் மனக் கல்வி மட்டும் பெறுபவன் உடல் பலம் அற்றவனாய், அசமந்தனாய், ஒரு கோழையைப் போலக் காட்சியளிப்பான். உடற்கல்வி மட்டும் பெறுபவன் மென்மைப் பண்புகளை இழந்து நிற்பதைப் போல, மனக்கல்வி மட்டும் பெறுபவன் தைரியத்தை இழந்து நிற்பான். எனவே உடற்கல்வி, மனக்கல்வி ஆகிய இரண்டின் மூலமாகவும் தேவையான

உள்ள உறுதியையும், உடற்பலத்தையும் அதேநேரத்தில் மென்மைப் பண்புகளையும் ஒருசேர மாணவர்கள் சரிசமமாகப் பெற்றுக்கொள்ளும் விதத்தில் கல்வி அமைந்திருக்க வேண்டும் என்கிறார்.

உடல்நலம், மனநலம் ஆகிய இரண்டு மட்டும் பெற்றுவிட்டால் போதுமா? என்றால், இந்த இரண்டோடும் தெய்வ நம்பிக்கையும், நேர்மை உணர்வும் கலந்திருக்க வேண்டும் என்கிறார் பிளேட்டோ. ஒருவன் மன நிறைவுடனும், தன்னம்பிக்கையுடனும், ஒற்றுமையுடனும், தன்னடக்கத்துடனும் வாழவேண்டியது அவசியம் என்பதை உண்மைக் கல்வி அவனுக்குப் புகட்ட வேண்டும்.

எல்லோருக்கும் சமமாகக் கல்வி புகட்டி, அவர்களுக்கு இருபது வயதானவுடன் கல்வி பெற்றவர்களில், ஆளும் வகுப்பில் சேரத் தகுதி உடையவர் யார்? இராணுவ வகுப்பில் சேரத் தகுதி உடையவர் யார்? தொழில் வகுப்பில் யார்யாரைச் சேர்ப்பது? என்பதனை நிர்ணயம் செய்ய அவர்கள் தம் திறமையை வெளிக்காட்டச் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும். அந்தத் தேர்வில் வெற்றி பெற இயலாதவர்கள் நாட்டின் பொருளாதாரத்தை வளர்க்கும் தொழில் வகுப்பில் சேர்க்கப்படுவார்கள். அவர்கள் வணிகர்களாகவும், உழவர்களாகவும், இயந்திரத் தொழிலாளர்களாகவும், ஏனைய தொழில் புரிவோராகவும் செயல்படுவர். இவ்வாறு உரிய முறையில் மனிதர்களைத் தேர்வு செய்வதற்குரிய பொறுப்பு, நேர்மை உள்ளமும், அனுபவ அறிவும், திறமையும் உடைய கல்வி இலாகாவின் தலைவர் கையில் இருக்கும். அவர் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டு, ஐந்தாண்டுகளுக்குத் தன் பணியைச் செவ்வனே செய்வார். அவ்வாறு கல்வி இலாகாவின் தலைவராக இருப்பவர், ஐம்பது வயது நிரம்பியவராகவும், ஆண் பெண் குழந்தைகளைப் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும். கல்வி எவ்வளவு உன்னதமானது என்பதனை உணர்ந்திருக்க வேண்டும். குழந்தைகளின் கல்வி என்பதனை ஒரு சாதாரண விஷயமாகவோ, இரண்டாந்தரமாகவோ ஆக்கி விட அனுமதிக்கக் கூடாது.

தொழில் வகுப்பினரைப் பிரித்து, பொருளாதாரத்தைப் பெருக்க அனுப்பிய பின்னர், எஞ்சியவர்கள் மீண்டும் பத்தாண்டுகள் தொடர்ந்து கல்வி பயிலுதல் வேண்டும். அதற்குப் பின்னர் நடைபெறும் தேர்வில் தோல்வி அடைபவர்கள் இராணுவ வகுப்பில் சேர்க்கப்படுவார்கள். அவ்வாறு சேர்க்கப்படுபவர்கள் போர் வீரர்களாகவும், இராணுவத் தலைவர்களாகவும், உதவியாளர்களாகவும் பணிபுரிவர். தொழில் வகுப்பு, இராணுவ வகுப்பு என்ற இரு பிரிவுகளில் மாணவர்கள் சேர்க்கப்பட்ட பிறகு எஞ்சி நிற்போர் மீண்டும் ஐந்து ஆண்டுகள் கல்வி பயில வேண்டும். முப்பது வயதைத் தாண்டிய அந்த மாணவர்களுக்குத் தத்துவ ஞானப் பயிற்சி அளிக்கப்படும். தெளிவாகச் சிந்திப்பதற்கான மனப்பயிற்சியுடன், நல்லவிதமான முறையில் மக்களை அரசாட்சி செய்வதற்கான அரசியல் கல்வியும் கற்பிக்கப்படும். இவை அனைத்திற்குப் பிறகும், இவர்கள் மக்களை ஆளத் தகுதி உடையவர்கள் தானா? என்று சோதிக்க மற்றொரு தேர்வும் நடைபெறும். இந்தத் தேர்வில் மாணவர்கள் தங்கள் அறிவுலகத்தை விட்டுவிட்டு, கொஞ்ச நாள் வணிகர்களோடும், தொழிலாளர்களோடும், பல்வேறு விதமான மனிதர்களோடும் போட்டியிடுவார்கள். அவர்கள் தம் பசியைப் போக்கிக் கொள்ளத் தாங்களே உணவுதேடிக் கொள்ள வேண்டும்; போரில் ஈடுபட வேண்டும். இவ்வாறு சமூகத்தில் அனைவருடனும் இணைந்து அனுபவக் கல்வியைப் பெறுதல் அவசியம்.

அவ்வாறு அனுபவக் கல்வியை ஏறத்தாழ பதினைந்து ஆண்டுகள் பயில வேண்டும். அதற்குப் பிறகும் மாணவர்களிடம் தேசப்பற்று இருக்கிறதா? நேர்மை, நாணயம், நிதானம், திறமை, சுயநலமின்மை, பெருந்தன்மை, பற்றற்ற உள்ளம், உறுதியான மனம் இவைகளைப் பெற்றிருக்கிறார்களா? என்று சோதனை செய்யப்படும். இத்தனை நெறிமுறைகளையும் தாண்டி வந்து நிற்போர் மிகச் சிலராயிருப்பர். இதற்குள் பரிசோதனைக்கு ஆட்படுத்தப் பட்டவர்களுக்கு ஐம்பது வயதாகி இருக்கும். கூர்த்த மதியும்,

அனுபவ ஞானமும், சகிப்புத்தன்மையும் உடையவர்களாக ஒரு சிலரே எஞ்சி நிற்பர். அவர்களே மக்களை ஆளும் தகுதி படைத்த ஆளும் வகுப்பினர் என்கிறார் பிளேட்டோ. எந்த நிலையிலும் எவ்விதமான குறையுமின்றி பரிசோதனைகளில் தேறி வருபவனையே நாம் ஆட்சியாளனாகவும் பாதுகாவலனாகவும் தேர்ந்தெடுக்க வேண்டும் என்கிறார் பிளேட்டோ.

இவ்வாறு மூன்று வகையாகப் பிரிப்பது, பிறப்பைச் சார்ந்ததல்ல; உண்மையான திறமையையும், தகுதியையும், கல்வி அறிவையும் பொறுத்தது. தொழில் வகுப்பைச் சேர்ந்தவனின் மகனது ஆளுந்திறமை தேர்வில் வெளிப்பட்டால், அவன் ஆளும் வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்படுவான். அது போலவே, ஆளும் வகுப்பைச் சார்ந்தவன் போர்த் திறமுடையவன் என்று தெரிந்தால், அவன் இராணுவ வகுப்பில் சேர்க்கப்படுவான். மனிதர்களில் உயர்வு தாழ்வு என்ற பேதமில்லை; பூமியில் வாழும் அனைவரும் சமமானவர்களே. All men are by nature equal, made, all, of the same earth by the same creator. எனவே பிரிவுகள் இனத்தைப் பொறுத்ததல்ல; அறிவையும் திறமையையும் பொறுத்தது என்பது பிளேட்டோவின் கருத்து.

திருவள்ளுவர், எல்லா உயிர்க்கும் பிறப்பு ஒரு தன்மையானதே; ஆயினும் செய்கின்ற தொழில்களின் உயர்வு தாழ்வு வேறுபாடுகளால் சிறப்பியல்பு ஒத்திருப்பதில்லை என்கிறார்.

> "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்பொவ்வா
> செய்தொழில் வேற்றுமை யான்" (குறள் : 972)

தொழில்களால் மட்டுமே மனிதர்கள் வேறுபடுத்தப்படுகிறார்களே தவிர பிறப்பால் அல்ல எனத் தெளிவாக எடுத்துரைக்கிறார். பிறப்பால் உயர்வு, தாழ்வு என்று மனிதர்களைப் பிரித்த காலத்தில் வாழ்ந்த திருவள்ளுவர் 'பிறப்பொக்கும்' என்று புரட்சி முழக்கம் செய்தார்.

## பிளேட்டோவின் பல்துறைச் சிந்தனைகள்

அரசியலைப் பற்றிப் பேசும் பிளேட்டோ, ஆத்மாவைப் பற்றியும் சிந்திக்கத் தவறவில்லை. மனிதனோடு தெய்வத்தையும், விண்ணோடு மண்ணையும், உடலோடு ஆத்மாவையும், பிறவியோடு மறுபிறவியையும் இணைத்துச் சிந்திக்கிறார். பீடோ (Phaedo), தியாடீடஸ் (Theaetetus), பீட்ரஸ் (Pheadurs) ஆகிய நூல்களில் ஆத்மாவைப் பற்றிய தத்துவங்களை எடுத்துரைக்கிறார். உலக வாழ்க்கை என்பது மனிதனுக்கு ஒரு சிறை. உடலாகிய சிறைக்கூடத்திலிருந்து எப்பொழுது விடுதலை அடையலாம் என்று ஆத்மா சதா முயன்று கொண்டே இருக்கும். விடுதலை பெற்ற பின், மறு உலகில் சென்று, உலகில் பெற்ற பண்புகளுக்கும் அறிவுக்கும் ஏற்றபடியாக பரிசோ, தண்டனையோ அனுபவித்து விட்டு, அழிவற்ற தன்மையோடு இணையும்; அன்றேல் மறுபிறப்பு அடையும்.

அழியக் கூடிய மண்ணுலகிலிருந்து அழிவற்ற விண்ணுலகை நோக்கிச் செல்லும் யாத்திரைதான் மனித வாழ்க்கை. இந்த யாத்திரையில் தோழர்களாக வந்து சேரும் ஐம்புலன் உணர்ச்சிகளை நம்பி ஏமாந்து விடக்கூடாது. நன்மை தீமைகளைப் பகுத்துணரும் ஆற்றல் மிகுந்த நல்ல மனத்தின் துணை கொண்டு, பூவுலகில் ஒருவன் ஒழுக்கம் தவறாமல் வாழ வேண்டும். ஒழுக்கம் தான் ஒருவனுக்கு உயர்வு தரும்.

திருவள்ளுவர் உறக்கத்தையும் விழிப்பையும் போன்றது இறப்பும் பிறப்பும் என்கிறார். உறக்கமும், விழிப்பும் மாறி மாறி நிகழ்வது போல், இறப்பும் பிறப்பும் மாறி மாறி நிகழ்கின்றன.

> "உறங்குவது போலும் சாக்காடு, உறங்கி
> விழிப்பது போலும் பிறப்பு" (குறள் : 339)

பூமி வாழ்க்கை யாருக்கும் நிரந்தரமானதல்ல. எனவே வாழுங்காலத்தில் நல்லது எது, தீயது எது என்பதனை அறிவின் துணைகொண்டு தெரிந்து நல்லனவற்றை நாடி வாழ்தல் வேண்டும். அறிவைப் பெறுவதோடு நின்று

விடாமல் ஒருவன் ஒழுக்கத்தையும் காக்கத் தவறுதல் கூடாது. இதனை வலியுறுத்த வந்த திருவள்ளுவர் அறிவைப் பற்றிப் பேசும் போது, மனதைத் தீமையானவற்றில் செலுத்தாமல், தீமையிலிருந்து நீக்கிக் காத்து நன்மையை நோக்கிச் செலுத்துவது அறிவாகும் என்கிறார்.

"சென்ற இடத்தால் செலவிடா தீதுஒரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு" (குறள் : 422)

தீய செயல்களை ஒருவன் புரிந்தால், நிச்சயம் ஒருநாள் அவன் அழிவைச் சந்திப்பான். எனவே தீய செயலைப் புரியாவண்ணம் அவனை அவன் நல்லறிவானது தடுத்து நிறுத்தி, அழிவிலிருந்து காப்பாற்ற வேண்டும். அறிவு என்பது அழிவிலிருந்து ஒருவனைக் காப்பாற்றும் கருவி என்கிறார் திருவள்ளுவர்.

"அறிவுஅற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்கல் ஆகா அரண்" (குறள் : 421)

பகை கொண்டு எதிர்ப்பவர்களும் கூட, அழிக்க முடியாத உள் அரணாக இருப்பது அறிவு என்கிறார் திருவள்ளுவர்.

ஆத்மாவைப் பற்றித் தனிப்பட்ட முறையில் திருவள்ளுவர் பேசவில்லை என்றாலும், பிறவியைப் பற்றித் தெளிவாக எடுத்துச் சொல்கிறார். கடவுள் வாழ்த்து என்னும் முதல் அதிகாரத்திலேயே, இந்த உலகில் பிறந்து வந்த ஒவ்வொரு மனிதனும் பிறவி என்னும் பெருங்கடலை நீந்திக் கடப்பதற்கு இறைவனின் திருவடியே துணையாகும் என்கிறார். இதனை

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்" (குறள் : 10)

என்கிறது திருக்குறள்.

நிலையற்ற உலகை நிலை என்று எண்ணுவது அறிவற்ற ஒரு செயல். உண்மையில் ஆராய்ந்து பார்த்தால், ஒருநாள் என்பது ஒரு கால அளவு போலத் தோற்றமளிக்கிறதே தவிர, நாள் என்பது ஒவ்வொரு நாளும் உடம்பிலிருந்து கொஞ்சம்

கொஞ்சமாக அறுத்து எடுக்கும் வாள் என்பதை மறந்து விடக் கூடாது.

"நாள்என ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்
வாளது உணர்வார்ப் பெறின்" (குறள் : 334)

இறுதி நேரத்தை எட்டிக் கொண்டிருக்கும் மனிதன் விக்கல் வந்த பிறகா 'அறம் செய்ய வேண்டும்' என்று எண்ணுவது? அத்தகைய நிலை எல்லாம் ஏற்படும் முன்னர் அறம் செய்ய வேண்டாமா? என்ற கேள்வியை எழுப்புகிறார் திருவள்ளுவர்.

"நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும்" (குறள் : 335)

பிளேட்டோ, முற்பிறப்பும் பின்பிறவியும் உண்டு என்பதனை நம்பியவர். தனது உலகமாகிய ஆத்மீக உலகத்தில்தான், ஆத்மா தன் உண்மையான இயல்பை உணர்கிறது. ஆத்மா என்பது இரண்டு இறக்கைகளை உடைய, இரண்டு ரகக் குதிரைகளால் இழுத்துச் செல்லப்படும் ஒரு ரதத்தைப் போன்றது. அந்த இரண்டு குதிரைகளில் ஒன்று 'நேர்மையான ஆசைகள்' மற்றொன்று 'நேர்மையற்ற ஆசைகள்'. ரதத்தில் பூட்டிய இந்தக் குதிரைகளை, அறிவு என்ற சாரதி செலுத்திக் கொண்டு இருக்கிறான். எனவே மனிதன் பொறி புலன்களால், விளையும் அத்துமீறிய உணர்வுகளை, மனம் என்கின்ற கடிவாளத்தைப் பயன்படுத்திச் சரியான வழியில் நிற்கச் செய்தல் வேண்டும். பிளேட்டோவின் இந்தக் கருத்தினைக் கடோ உபநிஷத்தில் நாம் காணலாம்.

புலன்கள் குதிரைகள்; உலகப் பொருட்கள் அந்தக் குதிரைகள் செல்வதற்கான பாதைகள்; உடம்பு புலன்கள் மனம் ஆகியவற்றுடன் கூடிய ஜீவன் வாழ்க்கையை அனுபவிப்பவர் என்று மகான்கள் சொல்கின்றனர். யார் விழிப்புறாதவனோ, பிளவுபட்ட மனத்தை உடையவனோ, அவனுடைய புலன்கள் தேரோட்டிக்கு அடங்காத குதிரைகள் போல் வசப்படாமல் போகின்றன. அவன் இறை நிலையை அடைவதில்லை. யார் விழிப்புடைய, பொருந்திய மனத்தை

உடையவனோ, அவனுடைய புலன்கள் தேரோட்டிக்கு அடங்கிய குதிரைகள் போல் வசப்படுகின்றன. அவன் மீண்டும் பிறப்பு இல்லாத இறை நிலையை அடைகிறான்.

'அடக்கமுடைமை' என்னும் அதிகாரத்தில் ஆமை போல ஒருவன் தன் ஐம்பொறிகளையும் அடக்கி ஆள வேண்டும். அவ்வாறு செய்வது பல பிறப்பிலும் அவனுக்குக் காப்பாக அமையும் என்கிறார் திருவள்ளுவர்.

"ஒருமையுள் ஆமைபோல் ஐந்துஅடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்பு உடைத்து" (குறள் : 126)

**கலைகள்**

தூய்மையான காற்றை சுவாசித்துக் கொண்டு, சுகாதாரமான சூழ்நிலையில் வாழ்கிறவன் நல்ல தேக ஆரோக்கியத்தோடு இருப்பான். அதுபோலவே, அழகான கலைகளின் மத்தியில் வளர்கிறவன் நல்ல மனோபாவங்களைப் பெற்றுக் கொள்கிறான் என்கிறார் பிளேட்டோ. ஒரு நல்ல கவிதையைக் கற்று, அனுபவித்து, அதைப்பற்றிப் பேசும் திறனை வளர்த்துக் கொள்வது என்பது, ஒரு இயற்கையான உள்ளுணர்வினாலும் உத்வேகத்தினாலும் ஏற்படக்கூடியது. காந்தத்திற்குள் ஒரு ஆற்றல் மறைந்து நிற்பதைப் போல, கவிதைகளை ரசிக்கவும் பேசவும் தேவையான உத்வேகம் ஒருவன் உள்ளத்தில் இருப்பதனால், ஹோமரைப் போன்ற காவிய கர்த்தாக்களின் கவிப் புலமையை அவனால் அனுபவிக்க முடிகிறது.

காவிய கர்த்தாக்களாக இருந்தாலும், கவிதை புனைபவர்களாக இருப்பினும், அவர்களுக்குள் ஒரு உத்வேகம் நிலை கொண்டிருந்தால் மட்டுமே அவர்களால் கவிதைகளை எழுத முடியும். ஒருவனது கவித்துவம் என்பது ஒரு சாதாரண கலைத்திறமை அல்ல. இறைவனால் தரப்படுகிற ஒரு தெய்வீக சக்தியே ஆகும் என்கிறார் பிளேட்டோ. கவிஞர்கள் தங்கள் கவிதைகளின் மூலமாக மெய்யறிவை மக்களிடம் கொண்டு சேர்க்க முயல வேண்டும். சந்த நயம், சொல்லழகு, உவமானம், உவமேயம் இவைகளுக்கு மேலாக எழுத்துக்களில் கருத்து மிளிர வேண்டும்.

கதை இலக்கியத்தைப் பற்றிப் பேசும் பிளேட்டோ, கதை இலக்கியங்கள் ஓரளவாவது உண்மையைப் பிரதிபலிக்க வேண்டும். உண்மைக்குப் பொருத்தமில்லாத வெறும் கற்பனைக் குவியலாக கதை இலக்கியம் இருத்தல் கூடாது. அதிகமான துக்கத்தை ஏற்படுத்துகின்ற சோகக் கதைகளும் நல்லதல்ல. அழுமூஞ்சிகளாக இருக்கும் கதாபாத்திரங்களைப் படைத்து, அவர்களையும் அழவிட்டு, கதைகளைப் படிப்பவரையும் அழச் செய்வதனால் யாதொரு பயனும் இராது. அதுபோலவே, அதிகமதிகமாய் சிரிப்பை உண்டாக்குகிற கதைகளும் கூடாது. உணர்ச்சிகளைச் சமன்படுத்தி பரபரப்பில்லாமல் வாழ வேண்டிய மனிதர்கள், கண்ணீரைப் பெருக்கும் சோகக் கதைகளில் கொந்தளிக்கும் கோபதாபங்களைப் படிக்கும் போது, தாங்களும் தொட்டதற்கெல்லாம் உணர்ச்சிவசப்படக் கூடியவர்களாய் மாறுவார்கள். அறிவைச் சீர்படுத்தி, உணர்வுகளைக் கட்டுக்குள் நிறுத்தி, வாழ்க்கையை ஒழுங்காக நடத்திச் செல்ல வேண்டிய மனிதனுக்கு, சோக உணர்ச்சிகளையும் அதிகமான ஹாஸ்ய உணர்ச்சிகளையும் கிளர்ந்து எழச் செய்யும் கதைகளும் நாடகங்களும் தேவையில்லை என்கிறார் பிளேட்டோ. பொதுவாக உணர்ச்சிகளை அளவுக்கு அதிகமாகத் தூண்டி விடுகின்ற நாடகங்களையே மனிதர்கள் விரும்பிப் பார்த்து வருகிறார்கள். இதன் விளைவாக அவர்களின் சிந்தனா சக்தி மிகவும் குறைவுபட்டுப் போகிறது.

'Our first duty then, it seems is to set a watch over the makers of stories, to select every beautiful story they make, and reject any that are not beautiful, then we shall persuade nurses and mothers to tell those selected stories to the children.

For the child is unable to discriminate between what is allegory and what is not. Whatever he receives and believes at that early age is apt to become permanent and indelible. For these reasons perhaps we must do everything in our power to contrive that the first stories our children are told shall teach virtue in the fairest way.'

பிளேட்டோவின் மாணவரான அரிஸ்டாட்டிலோ முற்றிலும் வித்தியாசமான கருத்தைத் தெரிவிக்கிறார். உணர்ச்சிகரமான நாடகங்களைப் பார்ப்பதன் மூலமாக, மனிதர்களின் மனதில் தங்கி இருக்கும் நிறைவேறாத வேட்கைகள் தணிந்து போகின்றன. உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என்கின்ற பாடத்தையும் மனிதர்கள் கற்றுக் கொள்கின்றனர் என்கிறார். பிளேட்டோவோ, அடுத்தவர்களின் துன்பத்தைப் பார்த்து அழ ஆரம்பிக்கிற ஒருவன் தன்னுடைய துன்பங்களைப் போக்கிக் கொள்கிற வழியைக் கண்டுபிடிக்க முயலாமல் அழுது கொண்டேதான் இருப்பான். அத்தகையவனின் வாழ்வில் ஒரு துயரம் ஏற்படுமானால் அதைக் கட்டுப்படுத்த முடியாமல் அல்லாடிப் போவான். அது போலவே, அளவுக்கு அதிகமான ஹாஸ்யத்தைப் பார்த்து அதில் திளைக்கிறவன், ஒரு காலகட்டத்தில் அவனே கோமாளியாகி விடுகிறான் என்று கவிதை, கதை, நாடகம் ஆகிய இலக்கிய வடிவங்களைப் பற்றிய தன் கருத்தைத் தெரிவிக்கிறார் பிளேட்டோ.

ஒரு நாட்டின் கொள்கைகளுக்கு ஒத்துவரக்கூடிய கலைகளைத்தான் மக்கள் காணவும், கற்கவும் அனுமதிக்கப்பட வேண்டும். மக்களிடம் இலக்கியங்கள் சென்று சேர்வதற்கு முன்னால் தணிக்கை செய்யப்படுதல் வேண்டும். நாட்டின் கொள்கைகளுக்குப் பொருந்தாத கருத்துக்கள் அடங்கிய இலக்கியங்களைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார் பிளேட்டோ.

"Then the first thing will be to establish, a censorship of the writers of fiction, and let the censors receive any tale or the fiction which is good, and reject the bad; and we will desire mothers and nurses to tell their children the authorized ones only."

இவ்வாறு பிளேட்டோ குறிப்பிடுவது அறிஞர்களின் கருத்துச் சுதந்திரத்தைப் பறிப்பது போலாகும் என்று பலர் நினைக்கலாம். இதற்குத் தகுந்த பதிலுரைக்கும் பாவனையில் பிளேட்டோ குறிப்பிடும் செய்தி கவனத்தில் கொள்ளத் தகுந்தது. ஹோமர் முதலான காவியக் கவிஞர்களும்,

அவரைப் பின்பற்றிய பல்வேறு நாடக ஆசிரியர்களும் நாட்டில் உலவி வந்த புராதனமான கதைகளையே தங்கள் இலக்கியங்களின் கருப்பொருளாக்கினர். சில கீழ்த்தரமான உணர்வுகளைக் கடவுளரோடும் அவர்கள் பாடிய கதாநாயகர்களோடும் சம்பந்தப்படுத்தி இலக்கியங்களைப் புனைந்தனர். இத்தகைய இலக்கியங்களைக் கற்கும் இளைஞர்கள், கடவுளே கட்டுப்பாடில்லாமல் இருக்கும் போது நாம் இருந்தால் என்ன? என்று எண்ணத் தொடங்கி விடுவார்கள். இந்த எண்ணம் பல்வேறு தீமைகளுக்கும் வழிவகுக்கும். எனவே மக்களை இலக்கியங்கள் சென்றடைவதற்கு முன்னால், தணிக்கை செய்வது எவ்வளவு அத்தியாவசியமானது என்று உணர்த்தினார் பிளேட்டோ. சமூக அக்கறையோடு இக்கருத்துக்களை வெளியிடும் பிளேட்டோவின் காலத்தில் வெளியான நாடகங்கள் அனைத்துமே மிதமிஞ்சிய உணர்ச்சிகளைத் தூண்டக் கூடியதாகவே அமைந்திருந்தன என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

சங்கீதத்தைப் பற்றியும் பேசுகிறார் பிளேட்டோ.

"Then when any man lets music flute his soul away, and pour flooding into his mind through his ears, as through a funnel, those sweet and soft and mournful melodies, which we have described till he spends his whole life piping and cloying himself with sound, that man at first tempers the spirited element in him, as steel is tempered, and makes it useful instead of useless and hard."

சங்கீதத்தின் சிறப்பை, பொதுவாக அந்தச் சங்கீதம் மனதில் ஏற்படுத்துகிற மகிழ்ச்சியை வைத்துத் தீர்மானிக்க வேண்டும் என்பார்கள். இக்கருத்தை ஓரளவு ஏற்றுக் கொண்டாலும், சங்கீதம் சிறப்பான பண்புடையவர்களை மகிழ்விக்கக் கூடியதாக இருக்க வேண்டும். படிப்பிலும் பண்பிலும் உயர்ந்தவனுக்கு மகிழ்ச்சி தரக் கூடியதாக இருந்தால், அதை நல்ல சங்கீதம் எனச் சொல்லலாம். சங்கீதப் பயிற்சி உள்ளவர்களுக்கு எந்த ஒரு செயலையும் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்ற எண்ணமும், தாங்கள்

காண்பவைகளிலுள்ள குறைநிறைகளை உடனே கண்டு கொள்ளக் கூடிய பயிற்சியும் ஏற்படுகிறது. சுருங்கச் சொன்னால், மெய்யறிவை வளர்ப்பதற்குத் துணைபுரியாத கலை கலையல்ல என்றுரைக்கிறார் பிளேட்டோ.

**அறிவு**

'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்கிறார் திருவள்ளுவர். கல்வி, கல்லாமை ஆகிய அதிகாரங்களில் கல்வியின் சிறப்பையும், கல்லாமையால் வரும் தீமைகளையும் எடுத்துச் சொல்லும் திருவள்ளுவர், "அறிவுடைமை" என்று அறிவுக்கு ஒரு தனி அதிகாரத்தையும், "மெய்யுணர்தல்" என மெய்யறிவின் சிறப்பைச் சொல்ல ஒரு அதிகாரத்தையும் அமைத்துள்ளார். பிறரிடம் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளும்போது, அவற்றை அவர்கள் புரிந்துகொள்ளும் படியாகத் தெளிவாக எளிய முறையில் நாம் எடுத்துச் சொல்ல வேண்டும். அவர்கள் எடுத்துச் சொல்லும் கருத்துக்களையும், அவற்றின் நுட்பமான பொருளையும் நாம் ஆராய்ந்து தெளிய வேண்டும். அதுவே அறிவின் தன்மையாகும் என்கிறார் திருவள்ளுவர்.

"எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு" (குறள் : 424)

அறிவைப் பற்றிப் பேசும் போது, தான் சொல்வதில் ஏதாவது உண்மைக்குப் புறம்பாக இருந்தால், தன் தவறை மற்றவர்கள் திருத்த வேண்டும் என்கிறார் பிளேட்டோ. அதைப்போலவே பிறர் சொல்வது உண்மைக்கு மாறாய் இருந்தால் அவர்களைத் தான் திருத்த விரும்புவதாகக் குறிப்பிடுகிறார். ஏனென்றால் இரு தரப்பாருக்கும் இதனால் நன்மை இருக்கிறது. அதில் மற்றவர்களைக் காட்டிலும் தனக்கே நன்மை அதிகம் என்கிறார். தலைசிறந்த ஒரு சிந்தனைச் சிற்பியான பிளேட்டோ, தான் சொல்வதை அப்படியே மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தாமல், தன் கருத்துக்களிலும் தவறு இருக்கலாம்; அத்தவறுகளைத் தகுந்த ஆதாரங்களோடு சுட்டிக் காட்டினால், தான் திருத்திக் கொள்வதாகச் சொல்லும்

நேர்மையான மனம் படைத்தவராய் இருந்தார். எனவே உண்மை அறிவின் இலக்கணமாய்த் திகழ்ந்தார். இதனையே திருவள்ளுவர்,

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு" (குறள் : 423)

என்னும் குறளில், எப்பொருள் யார் யார் வாயிலாகக் கேட்டாலும், கேட்டவாறே எடுத்துக் கொள்ளாமல், அப்பொருளின் உட்புகுந்த நிற்கும் மெய்மையைக் கண்டு கொள்வதே அறிவாகும் என்கிறார்.

பிளேட்டோவோ, அறிவும் மெய்மையும் ஒன்றோடொன்று நெருங்கிய உறவுடையவை. மனிதனின் அறிவு உறங்கிவிடுதல் கூடாது. அவ்வாறு உறங்கத் தொடங்கினால் விலங்குக் குணமே மேலோங்கும். உணமை அறிவு இருக்குமிடத்தில் அறியாமைக்கு இடமில்லை. உண்மை அறிவு அறிய அறிய இன்னும் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிற விழைவையே உருவாக்கும் என்கிறார். இதனைத் திருவள்ளுவர் 'அறிதொறும் அறியாமை காணல்' என்கிறார். அறியாமையின் ஆபத்தைச் சொல்ல வந்த பிளேட்டோவோ, 'அறிவின் எதிரில் அறியாமை' தலைவணங்குகிறது. அறியாமைகளிலெல்லாம் பெரிய அறியாமை என்று ஒன்று உண்டு. தெரியாதவன் தனக்கு எல்லாம் தெரியும் என்று நினைத்துக் கொள்வது. இதுவே அனைத்துத் தவறுகளுக்கும் மூல காரணமாய் அமைகிறது.

"Neither do the ignorant seek after wisdom. For herein is the evil of ignorance, that he who is neither good nor wise is nevertheless satisfied with himself; he has no desire for that of which he feels no want."

ஒவ்வொரு மனிதனின் அறிவிலும் நான்கு நிலைகள் உண்டு. முதல் நிலை 'யூகம்' என்பது. இரண்டாவது நிலை 'நம்பிக்கை'; மூன்றாவது 'சிந்தனைத் தெளிவு'; நான்காவது நிலை 'மெய்யான பகுத்தறிவு'. ஒரு பொருளின் உண்மைத் தன்மையை அறிய விழைகிறவன், இத்தனை நிலைகளையும் தன் அறிவினால் தாண்டிச் செல்ல வேண்டும். பகுத்தறியும்

ஆற்றலைக் கொண்டு, செயல்களைச் சரியான வழியில் நடத்திக் கொள்ள வேண்டும். உண்மையைக் கண்டு உணர்தல் என்பது, அத்தகைய எளிய செயல் அல்ல என்கிறார்.

திருவள்ளுவரோ எந்தப் பொருள், எத்தன்மை உடையதாகத் தோன்றினாலும், அத்தோற்றத்தை மட்டும் கண்டு மயங்கி விடாமல், அப்பொருளின் உண்மை இயல்பை அறிந்து கொள்வதே மெய் உணர்வாகும்.

"எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு" (குறள் : 355)

குற்றமில்லாத மெய்யுணர்வு உடையவர்களுக்கு அந்த மெய்யுணர்வானது அறியாமையை நீக்கி இன்ப நிலையைக் கொடுக்கும்.

"இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு" (குறள் : 352)

என்றுரைக்கிறார்.

## பொருளாதாரம்

திருவள்ளுவர் பொருட்பாலில் நாடு, பொருள் செயல்வகை ஆகிய அதிகாரங்களில் பொருளாதாரத்தின் அத்தியாவசியத்தையும், அதைக் கட்டிக்காக்கும் முறைமைகளையும் தெரிவிக்கிறார். ஒரு நாட்டில் பசியும், நோயும், அழிவைச் சேர்க்கும் பகையும் இருத்தல் கூடாது எனச் சொல்லும் திருவள்ளுவர், ஒரு நாட்டின் அழகு ஐந்து அம்சங்களில் நிலை பெற்றிருத்தல் வேண்டும் என்கிறார். நோயில்லாமல் இருத்தல், செல்வம், விளைபொருள், வளம், இன்ப வாழ்வு, நல்ல காவல் ஆகிய ஐந்துமே ஒரு நாட்டிற்கு அணி என்கிறார். குறையாத விளைபொருட்களும், நல்ல அறிஞர்களும், கேடில்லாத செல்வமுடையவர்களும் கூடிப் பொருந்தி இருக்க வேண்டும். பகைவர்களால் ஏற்படும் தீமையையும் பொருள் வளமானது நீக்கும். இடையூறுகளை நீக்குகின்ற சிறப்பும் பொருளுக்கு உண்டு.

"பொருள்என்னும் பொய்யா விளக்கம் இருள்அறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று" (குறள் : 753)

"செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரியது இல்" (குறள் : 759)

பொருளாதாரத்தைப் பற்றிப் பேசும் பிளேட்டோ, மக்களுக்குப் பணத்தின் மேல் இருக்கும் ஆசையைச் சுட்டிக் காட்டுகிறார். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் மேல் பாசம் வைப்பதைப் போலவும், கவிஞர்கள் தங்கள் கவிதைகளை நேசிப்பதைப் போலவும், சுயமாகப் பணத்தைச் சம்பாதிப்பவர்கள் பணத்தின் மேல் அதிகமான பற்றுடைய வர்களாக இருக்கிறார்கள்; ஆனால் அளவுக்கு மீறிய செல்வம் ஆடம்பரத்தையும், சோம்பேறித்தனத்தையுமே வளர்க்கும்.

'Wealth and poverty, the one is the parent of luxury and indolence and the other of meanness and viciousness and both of discontent' என்பது பிளேட்டோவின் கருத்து. குடியரசு (Republic) என்ற தனது நூலில் பிளேட்டோ தெரிவிக்கும் இக்கருத்து சிந்தனைக்குரியது. "அளவுக்கு மீறிய செல்வமோ, அளவுக்கு மீறிய வறுமையோ மனிதர்களை ஒழுக்கம் கெட்டவர்களாகவும், திறமையற்றவர்களாகவும் செய்து விடுகிறது. அளவுக்கு மீறிய செல்வத்தினால் ஆடம்பரமும், சோம்பேறித்தனமும் ஏற்படும். அளவுக்கு மீறிய வறுமையினால் புரட்சியும், துவேஷமும், துரோக சிந்தனைகளும் உருவாகும். எனவே வறுமை, செல்வம் ஆகிய இவ்விரண்டும் அளவோடு இருக்கும் சமுதாயத்தில் நல்ல பண்புகள் இருக்கும். அங்கு அநீதிக்கு இடமிருக்காது. பிளேட்டோ குறிப்பிடும் இந்தச் செய்தி, ஏற்றத்தாழ்வு இல்லாத ஒரு சமூகத்தை உருவாக்குவது சாத்தியமில்லை என்பதனை மறைமுகமாக நமக்குத் தெரிவிக்கிறது. ஒரு தேசத்தில் குறிப்பிட்ட அளவு வறுமையிருந்தால் தவறில்லை என்பதைப் போலப் பிளேட்டோ பேசுகிறார்.

திருவள்ளுவரோ, வறுமையில்லாத ஒரு இலட்சிய நாடு உருவாக வேண்டும் என்று விழைந்தார். 'நேற்று

என்னை வாட்டிய வறுமை, இன்றும் என்னை வந்து வாட்டுமோ?' எனக் கலங்கித் துன்புறும் நிலையில் ஒரு வறியவன் இருந்தால், அதைவிடத் துயரம் வேறு எதுவுமில்லை. வறுமையின் காரணமாக ஒருவன் இரந்து உயிர்வாழ வேண்டும் என்ற நிலை ஏற்படுமானால், அத்தகைய உலகைப் படைத்த இறைவனே கெடுவானாக என்று தன் தார்மீக சினத்தை வெளிப்படுத்துகிறார் திருவள்ளுவர். 'குடியரசு' என்னும் நூலில், எந்த ஒரு நாட்டிலும் வறியவர்களும், செல்வந்தர்களும் இரண்டு பிரிவினராக இருந்து கொண்டிருப்பதைத் தவிர்க்க முடியாது என்கிறார் பிளேட்டோ.

'Any ordinary city is in fact two cities, one the city of the poor, the other, of the rich, each at war with the other; and in either division there are smaller ones - you woud make a great mistake if you would treat them as single states.'

வறுமையற்ற சூழலை ஒரு நாட்டில் உருவாக்குதல் வேண்டும் என்ற இலட்சியச் சிந்தனையை வெளிப்படுத்தும் திருவள்ளுவர், அதனை எட்டிப் பிடிப்பதற்கு ஒரு நீண்ட பயணம் தேவைப்படும் என்பதனையும் அறியாதவர் அல்லர். எனவே வறுமையற்ற நிலை வரும் வரை, வறுமைப்படுபவர்களை ஈகைப் பண்பினால் செல்வந்தர்கள் தாங்கிக் கொள்ள வேண்டும் என்பதையும் தெரிவிக்கிறார். பொருள் இல்லை என்று இரப்போர் இல்லாத போது, பொருள் கொடுப்பவரிடத்தில் என்ன புகழ் உண்டாகும்.

**"ஈவார்கண் என்உண்டாம் தோற்றம் இரந்துகோள்**
**மேவார் இலாஅக் கடை"** **(குறள் : 1059)**

என்று திருவள்ளுவர் வினவியதற்கு வறுமை இருக்கும் வரை வழங்குவதற்கு நல்ல மனம் படைத்தோர்களும் இருக்க வேண்டும் என்று எண்ணிய எண்ணமே காரணம்.

## உணவு

மனிதர்களின் வாழ்வில் முக்கியப் பங்கு வகிக்கும் உணவைப் பற்றிய சிந்தனைகள் திருக்குறளிலும், பிளேட்டோவின் நூல்களிலும் இடம் பெற்றுள்ளன.

மனிதனின் உடல் ஆரோக்கியத்தில் உணவும், உணர்வும் முக்கிய இடம் பிடிக்கின்றன. உணவை உண்ணும் முறைகளை மருந்து என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர், ஆறு குறட்பாக்களில் தெரிவிக்கிறார். தான் உண்ட உணவு நன்றாகச் செரித்துவிட்ட தன்மையைத் தெரிந்து கொண்ட பிறகு, ஒருவன் அளவோடு உண்பானாகில், அவனுக்கு நோய் வரும் வாய்ப்பு மிகவும் குறைவு. எனவே அவன் மருந்து உண்ண வேண்டிய அவசியமும் ஏற்படாது. அவ்வாறு செய்பவனுக்கு நீண்ட நாள் உலகில் வாழும் வாய்ப்பும் கிட்டும். நன்றாகப் பசித்த பிறகே, மாறுபாடில்லாத உணவை அளவுக்கு மீறாமல் உண்ண வேண்டும். பசியேயில்லாமல் இருக்கும் போது உண்பதும், கொஞ்சம் பசிக்கும்போது அதிகமாய் உண்பதும் பல்வேறு விதமான நோய்களை ஒருவனுக்கு அறிமுகப்படுத்திவிடும். குறைந்த அளவு உண்பவனுக்கு இன்பமும் அளவுக்கு அதிகமாய் உண்பவனுக்கு நோயும் வந்து சேரும்.

**"அற்றால் அளவுஅறிந்து உண்க; அஃதுஉடம்பு**
**பெற்றான் நெடிதுஉய்க்கு மாறு"** **(குறள் : 943)**

என்கிறார் திருவள்ளுவர். அளவறிந்து உண்ணாமல் அதிகப்படியாக உண்டு, உண்ட உணவு செரிக்கவே மருந்துகளை உட்கொள்ளும் மனிதர்களுக்குத் திருவள்ளுவரை விட வேறு யாரும் தெளிவாக பாடம் சொல்லிவிட முடியாது.

பிளேட்டோ, உணவைப் பற்றிக் குறிப்பிடும்போது, ஒருவனுடைய உடல் நலமாய் இருக்க வேண்டுமானால் அவன் உணவைப் பொருத்தவரை, ருசிக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்கக் கூடாது என்கிறார். சிலர் பலரகமான உணவுகளைத் தங்களைச் சுற்றி வைத்துக் கொண்டு, நேரம் போவதே தெரியாமல் பேசிக்கொண்டே உணவை வயிற்றுக்குள் அனுப்பிக் கொண்டே இருப்பார்கள். இதனைப் பற்றிப் பேசும் பிளேட்டோ, ஏககாலத்தில் பல வகையான சுருதிகளுடன் சங்கீதம் பாடினால், அந்தச் சங்கீதம் கேட்கச் சகிக்காத சப்தத்தோடும் அபஸ்வரத்தோடும் நாராசமாய் ஒலிக்கும். அதுபோல, விதவிதமான உணவுகளை

வயிற்றுக்குள் போடுவதால் தொல்லை ஏற்பட்டு நோய் பெருகும். எளிமையான பாடலின் இன்னிசை லயத்தில் இன்பம் பெருகுவது போல, எளிமையான உணவுகளினால் தேகம் நலம் பெறுகிறது.

விதவிதமான, ருசிமிகுந்த பதார்த்தங்களை அள்ளி அள்ளி விழுங்குபவனிடம் தன்னடக்கத்தை எதிர்பார்க்க முடியாது. எந்த நாட்டில் மக்கள் மத்தியில் பலவிதமான நோய்களும், தன்னடக்கமில்லாத தன்மையும் மலிந்து கிடக்கிறதோ அந்த நாட்டில் நீதிமன்றங்களும் வைத்திய சாலைகளும் தான் பெருகிக் கொண்டு இருக்கும்.

**பொய்யும் மெய்யும்**

'சத்தியமே வெல்லும்' என்பது பாரத தேசத்தின் தாரக மந்திரம். நம் நாட்டில் தோன்றிய ஞானிகள் அனைவரும் 'சத்தியமே தெய்வம்' என்று சொல்லி வந்துள்ளனர். வாய்மை என்னும் அறத்தின் சிறப்பைப் பேசும் திருவள்ளுவர், தாம் இந்த உலகில் உண்மையாகக் கண்ட பொருட்கள் அனைத்தையும் சீர்தூக்கிப் பார்க்கும் போது, வாய்மையைவிட சிறந்தது எனச் சொல்வதற்கு வேறு யாதொன்றுமில்லை.

**"யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்துஒன்றும்**
**வாய்மையின் நல்ல பிற" (குறள் : 300)**

என்கிறார். உண்மையையே எப்பொழுதும் பேசுகிறவன், தானம் தவம் செய்வாரை விடச் சிறந்தவன். அகத்தின் தூய்மைக்கு வாய்மையே ஆதாரம் என்றெல்லாம் வாய்மையைப் பற்றிப் பேசும் திருவள்ளுவர், பொய்மையின் தீமைகளையும் எடுத்துரைக்கத் தவறவில்லை. எவ்வளவுதான் நம்பும்படியாக ஒரு செய்தியை ஒருவன் சொன்னாலும், அது உண்மையா, பொய்யா என்பதை அவன் நெஞ்சம் நன்றாக அறியும். நெஞ்சறிந்த பொய்யை ஒருவன் துணிந்து சொல்வதாக இருந்தால், அவன் நெஞ்சே அவனை வருத்தும். பொய்யில்லாமல் வாழ்வதைவிடப் புகழ்நிலை வேறொன்றும் இல்லை. ஒருவன் பொய்யற்ற வாழ்வு வாழும்போது, எல்லா அறங்களும் தாமே அவனை வந்து சேரும். ஏனெனில்,

பொய்யாமை தலைசிறந்த அறமாகும். பொய்யாமை என்னும் அறத்தைப் போற்றி வாழும் நிலையை ஒருவன் வகுத்துக் கொண்டால், அவன் ஏனைய அறங்களைச் செய்யாமல் விட்டாலும் தவறேதும் இல்லை என்பதைப் போல, இக்குறளின் பொருள் மேலோட்டமாகப் பார்த்தால் தொனிக்கிறது.

"பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று" (குறள் : 297)

இக்குறளுக்கு உரை சொல்ல வந்த பரிமேலழகர், ஒருவன் பொய்யாமையே, பொய்யாமையே செய்ய வல்லவன் ஆயின், அவன் பிற அறங்களைச் செய்யாமையே செய்யாமையே நன்று. பொய்யாமை என்பது பிற அறங்களெல்லாம் தரும் பயனைத் தானே தரவல்லது என்கிறார். மணக்குடவரோ, பொய்யாமையைப் பொய்யாமல் செலுத்துவனாயின், பிற அறங்களைச் செய்தல் நன்றாம், அல்லது தீதாம் என்கிறார். காளிங்கரோ, பொய்யாமையாகிய வாய்மையைச் செலுத்துமிடத்து இடையிடையே பொய் புகுந்துவிடாமல் நடத்த வல்லவனாகில் அது அறம்; அதற்கு வேறாகிய பாவங்களை மேற்கொண்டு செய்யாமையாகிய தவிர்தலை உடைய செயல்களே நன்று என்கிறார். அருணாசலக் கவிராயரோ, பொய் சொல்லாதிருத்தலாகிய அறமுடையவனுக்கு, மற்றைய தர்மங்கள் செய்தல் நல்லதாகும். அத்தருமம் இல்லாதவனுக்கு மற்றைய தருமங்கள் செய்தல் நல்லதாகாது என்கிறார். கு.ச. ஆனந்தன் தம் உரையில், பொய்யாமையை பொய்யாமல் செய்வானாகின் அதுவே அறம் என்றாலும், பிற அறங்களைச் செய்யா திருத்தலைச் செய்யாமை (பிற அறங்களைச் செய்தல்) நன்மை ஆகும் என்கிறார்.

நாவலர் நெடுஞ்செழியனோ, ஒருவன் எப்பொழுதும் பொய்யாமையாகிய ஒரு அறச் செயலை மட்டும் போற்றிக் கடைப்பிடித்து வருவானேயானால், அவன் எப்பொழுதும் மற்ற அறங்களைச் செய்யாவிட்டாலும், அவன் பொதுவாக நன்மையே எய்துவான் என்கிறார். பிற அறங்களைச் செய்வதில் வாய்ப்பிற்கும் சூழ்நிலைக்கும் ஏற்றபடி

இடைவெளியும் தாமதமும் ஏற்படலாம். ஆனால் வாய்மையைப் பொருத்தமட்டில், இடைவெளிக்கு இடமில்லாமல், எப்பொழுதும் அவ்வறத்தை மனிதன் கடைப்பிடித்து நடக்க வேண்டும் என்ற பொருள் நாவலர் உரையில் தொனிக்கிறது. திருக்குறளுக்குப் புதிய உரை விளக்கம் செய்யும் நாவல் ஆசிரியர் சுஜாதா, மற்ற அறங்களைச் செய்யத் தவறினாலும், பொய் சொல்லாதிருப்பதில் தவறாமல் இருப்பது நல்லது என்கிறார். இத்தகைய உரை விளக்கங்களோடு 'பொய்யாமை பொய்யாமை' என்று தொடங்கும் வாய்மை அதிகாரத்தின் குறட்பாவை அதற்கு முந்திய 'பொய்யாமை அன்ன புகழில்லை' என்ற குறட்பாவோடு நாம் இணைத்துப் பார்த்துப் பொருள் கொள்ளலாம். ஒரு மனிதன் உலகில் கடைப்பிடிக்க வேண்டிய அறங்கள் பல இருக்கும்போது, பொய்யாமையை மட்டும் கடைப்பிடித்தால் போதும், ஏனைய அறங்கள் தேவையற்றவை என்று திருவள்ளுவர் நிச்சயமாகக் குறிப்பிட்டிருக்க மாட்டார். எந்தச் சூழ்நிலையிலும் வாய்மையே பேச வேண்டும் என்ற உறுதியுடன் வாழ்கின்ற மனிதன், எந்த நிர்ப்பந்தமும் இல்லாமல் ஏனைய அறங்களைத் தானே செய்து கொண்டு தான் இருப்பான். வாய்மை என்னும் தலைமை அறத்தைப் பிறழாமல் கடைப்பிடிக்கிறவனிடத்தில் எல்லா அறங்களும் தானே வந்து சேரும் என்றும் பொருள் கொள்ளலாம்.

> "பொய்யாமை அன்ன புகழ்இல்லை எய்யாமை
> எல்லா அறமும் தரும்" (குறள் : 292)

உண்மைக்குப் புறம்பாகப் பேசுவது மட்டும் தான் பொய்ம்மை என்று பலரும் எண்ணிக் கொண்டிருக்கும் போது, ஒரு சிறிதும் தீமையில்லாத சொற்களைப் பேசுவதும் வாய்மையே என்கிறார் திருவள்ளுவர்.

> "பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
> நன்மை பயக்கும் எனின்" (குறள் : 292)

குற்றமில்லாத நன்மையை விளைவிக்குமானால் பொய்யான சொற்களும் வாய்மை என்று கருதத்தக்க இடத்தைப்

பெறுவனவாம் என்று டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் 'பொய்ம்மையும் வாய்மை இடத்த' என்ற குறளுக்கு உரை விளக்கம் தருகிறார். குற்றம் தீர்ந்த நன்மையை உண்டாக்குகிற பொய், வாய்மையாகும் என்று சொல்லாமல் 'வாய்மை இடத்த' என்கிறார் திருவள்ளுவர். சமூகத்தின் நன்மை கருதிச் சொல்லப்படும் பொய்யாக இருந்தால், அதை வாய்மையின் இடத்தில் வைத்துப் பார்க்கலாம் என்று மிக நுணுக்கமாகத் திருவள்ளுவர் எடுத்துரைத்துள்ள திறம் எண்ணிப்பார்க்கத் தகுந்தது.

மெய்யையும் பொய்யையும் பற்றிப் பேசுகின்ற பிளேட்டோ, மெய்ம்மை அழகுடையது, அழிவற்றது. பொய்யை மனிதரும் கடவுளும் வெறுக்கிறார்கள். சில வேளைகளில் பொய்யைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. முக்கியமாகப் பகைவர்கள் விஷயத்தில் பொய்யைப் பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்படுகிறது. அது தவிர்க்க முடியாதது. பொய்யை மருந்து போல் உபயோகிக்கலாம். அந்த மருந்தை உபயோகிக்கத் தெரிந்தவன்தான் உபயோகப்படுத்த வேண்டுமே தவிர எல்லோரும் உபயோகிக்கக் கூடாது. நாட்டின் நலனுக்காக ஆட்சியாளர்கள் சில வேளைகளில் பொய் சொல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறது என்கிறார். இக்கருத்தைத் தன் குடியரசில்,

"The ruler of the state are the only ones who should have the privilege of lying either at home or abroad. They may be allowed to lie for the good of the state" என்று எடுத்துரைக்கிறார். உண்மையின் மேல் தம் ஆசிரியரைப் போல் நாட்டமுடைய பிளேட்டோ, வேறெதையும் விட உண்மையை மட்டுமே தான் அறிந்து கொள்ள விரும்புவதாக, "Renouncing the honours at which the world aims, I desire only to know the truth, and to live as well as I can, and when I die, to die as well as I can." என்ற வரிகளில் தெரிவிக்கிறார். வாய்மை அறத்தின் மேன்மை இவ்விரு சிந்தனையாளர்களின் எண்ண ஓட்டத்தின் மூலமாகத் தெளிவாக வெளிப்படுகிறது.

## நிதானமும் அமிதமும்

ஒரு மனிதனுக்குத் துன்பம் வந்துற்ற காலத்தில் அவன் தன் நிதானத்தை இழந்துவிடக் கூடாது. பொறுமையுடன் இருக்க வேண்டும். நிதானம் தவறி உணர்ச்சிவசப் படுவதனால், பல்வேறு தீமைகளே விளையும். பொறுமை என்பது சிறந்ததொரு அணிகலன். தன்னைத் தோண்டு கிறவர்களையும் தாங்குகின்ற பொறுமையோடு இருக்கும் பூமாதேவியிடமிருந்து நாம் பொறுமையைக் கற்றுக் கொள்ளவேண்டும் என்கிறது திருக்குறள். பொறுமை என்னும் பண்பினால், உலகம் அழியும் வரை ஒருவனது புகழ் நிற்கும். தமக்குத் தீங்கு இழைப்போரையும் பொறுத்துக் கொள்வதற்குத் தயாராக இருக்க வேண்டும் என்றும், எல்லா நற்பண்புகளும் இருந்தும் பொறுமை மட்டும் ஒருவனுக்கு இல்லாமல் இருந்தால், அவன் நிறை குணத்தவன் அல்லன் என்றும் திருக்குறள் எடுத்துரைக்கிறது.

> **"நிறைஉடைமை நீங்காமை வேண்டின் பொறைஉடைமை**
> **போற்றி ஒழுகப் படும்"** **(குறள் : 154)**

தங்களுக்குத் தீங்கு இழைத்தவரைப் பொறுத்துக் கொள்ளாமல், காலம் வரும்வரை காத்திருந்து அவர்களை வருத்துவோர் உண்டு. மாறாக, மற்றொரு சாரார் தீங்கையும் பொறுத்துக் கொண்டு அமைதியாக இருந்துவிடுவர். பொறுமையற்றவர்களை ஒரு பொருட்டாக மதிக்காத உலகம், பொறுமை உடையவர்களைப் பொன்னைப்போல் போற்றி மகிழும். பொறுமையின் சிறப்பைப் பேசவரும் திருவள்ளுவர், வல்லமை என்பது அறிவில்லாதவர்கள் செய்த தீமையைப் பொறுத்துக் கொள்வதேயாகும் என்கிறார். உண்ணாமல் நோன்பிருந்து தவம் செய்வாரை விட, பொறுமை என்னும் பண்பில் சிறந்து நிற்போர் உயர்ந்தவர்கள் ஆவர் என்கிறார் திருவள்ளுவர்.

இயந்திர கதியில் இயங்கிக் கொண்டிருக்கும் இக்காலத்தில், மக்கள் பொறுமை என்னும் பண்பைக் கொஞ்சம் கொஞ்சமாக மறந்து கொண்டே வருகிறார்கள். மக்களின் மனங்களிலும் அவர்கள் வாழ்கின்ற சூழ்நிலைகளிலும் பரபரப்பே நிலவி வருகிறது. மனிதர்கள்

எந்தச் சூழ்நிலையிலும் நிதானத்தை இழந்துவிடாமல், நிலை தாழாமல் இருத்தல் அவசியம். அவர்கள் அனுபவிக்கும் ஒவ்வொரு சுகமும் மிதமிஞ்சியதாக இருக்கக் கூடாது என்றும், தன்னடக்கமும் நிதானமும் இல்லாதவன் ஒருநாளும் திருப்தியடைய மாட்டான் என்றும் பிளேட்டோ தெரிவிக்கிறார்.

## நன்மையும் தீமையும்

நன்மையும் தீமையும் பற்றிப் பேசும் பிளேட்டோ, இந்த உலகில் நல்லவர்கள் வெகு சிலரே இருக்கிறார்கள். தீயவர்களும் ஒரு சிலரே இருக்கிறார்கள். இந்த இரு தரப்பாருக்கும் இடையில் இருப்பவர்கள்தான் அதிக எண்ணிக்கையில் காணப்படுகிறார்கள். ஒரு மனிதன் மற்றவர்களைத் துன்பப்படுத்தி வாழ வேண்டும் என நினைத்தால், அந்தத் தீய எண்ணமுடைய மனிதனே துன்பத்தை அனுபவிக்க நேரிடும். எவ்வளவு காலம் ஒருவன் மற்றவர்களைத் துன்பப்படுத்துகிறானோ, அவ்வளவு காலம் அவன் துன்பப்படுகிற நிலை உருவாகும். ஒருவன் நல்ல தன்மை உடையவன் என்று அவனது மனப் பண்புகளால் தான் இனம் கண்டு கொள்ளப்படுகிறான் என்கிறார்.

மனமாசற்றவர்கள் மற்றவர்களுக்குத் துன்பம் தராத கொள்கையுடையவர்களாக இருப்பர் என்கிறார் திருவள்ளுவர். தமக்குத் துன்பம் செய்கிறவர்களுக்குக் கூட மாசற்றவர்கள் துன்பம் தர வேண்டும் என்று எண்ணுவ தில்லை. முற்பகலில் மற்றொருவனுக்குத் துன்பத்தைச் செய்தால், செய்தவனுக்குப் பிற்பகலில் துன்பங்கள் தாமே வந்து சேரும்.

> **"பிறர்க்குஇன்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா**
> **பிற்பகல் தாமே வரும்"** **(குறள் : 319)**

மற்றவர்களுக்குத் துன்பம் தரவேண்டும் என்று நினைக்கிறவனே பெரிதும் துன்பப்படுவான் என்பதைத் திருவள்ளுவர் 'நோய் எல்லாம் நோய்செய்தார் மேலவாம்' என்கிறார்.

மனிதர்களில் சிலர் பண்பளவில் பலவீனர்களாக இருக்கிறார்கள். அந்தப் பலவீனங்கள் ஒருவனுக்கு எந்த

நன்மையும் செய்துவிடா. பண்பற்றவர்களாக இருக்கும் திறமைசாலிகள் பெரும்பாலும் மக்களுக்குக் கேடு செய்பவர்களாகவே இருப்பார்கள். நன்மையின் மேல் நாட்டமுடையவன் ஒருநாளும் இறைவனால் புறக்கணிக்கப் படுவதில்லை.

"No evil can happen to a good man either in life or after death. His fortunes are not neglected by the gods."

என்கிறார் பிளேட்டோ.

நல்ல பண்புகள் தெய்வீகச் சம்பத்துக்கள். அத்தகைய பண்பாளனை எந்தத் தீமையும் தன் பக்கம் கவர்ந்திழுக்க முடியாது. எதிலும் நிதானமான போக்கைக் கையாள்கிறவன் உண்மையான மகிழ்ச்சியை அடைவான்.

"A man must take with him into the world below an adamantine faith in truth and right that there too, he may be undazzled, by the desire of wealth or the other allurements of evil lest coming upon tyrannies and similar villainies, he do irremediable wrongs to others and suffer yet worse himself but, let him know how to choose the mean and avoid the extremes on either side as far as possible, not only in his life, but in all that which is to come for this is the way of happiness."

எந்த மனிதனும் இயல்பிலேயே கெட்டவனாகப் பிறப்பதில்லை. அவனது இயல்புக்கு மாறாக ஆரோக்கிய மற்ற உடம்பும், முறையற்ற கல்வியும் அவனை மற்றவர்கள் வெறுக்கத்தகுந்த செயல்களைக் செய்யும்படியாகத் தூண்டி, அவனுக்குத் தீயவன் என்ற பெயரைத் தேடித் தருகின்றன. தீமை இந்த உலகத்தில் சுற்றிச் சுழன்று கொண்டே இருக்கிறது. அதை விட்டு விலகி, தெய்விகப் பண்புகளை மனிதன் சுவீகரித்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு நல்ல பண்புகளை ஒருவன் சுவீகரித்துக் கொண்டால், அவன் மனிதனாய் இருந்தாலும் இறைத்தன்மை உடையவனாய் காணப்படுவான்.

"Evil can never pass away for there must always be an opposite to good. It has no place in heaven, so of necessity it

haunts the moral nature of this earthy sphere. Therefore we ought to escape from earth to heaven as quickly as we can and the way to escape is to become like god, as far as this is possible; and the way to become like him is to become holy good and wise."

சிலர் நமக்கு வேண்டியவர்களுக்கு நன்மை செய்தால் போதும். பகைவர்கள் செய்யும் தீமைக்கு நாம் திரும்பத் தீமை செய்தால் தவறில்லை என்று எண்ணுகின்றனர். இன்னா செய்தார்க்கும் இனியவை செய்ய வேண்டும் என்கிறார் திருவள்ளுவர். பகைவர்களுக்குத் தீமையும், நண்பர்களுக்கு நன்மையும் செய்வது சரிதானா எனக் கேட்டால், நல்லறிவு உடையவன் அவ்வாறு நடப்பதில்லை. என்கிறார் பிளேட்டோ. நண்பனோ, பகைவனோ, யாருக்கும் தீங்கு செய்யாதிருப்பதுவே அறம் என்கிறார் பிளேட்டோ.

"If that means that the just owes harm to his enemies and help to his friends, he was not a wise man, in that he said, what was unture. For we have discovered, that it is never just to injure any man."

இன்னா செய்தாருக்கு இனியவை செய்தல் வேண்டும் என்று திருவள்ளுவரின் வாசகத்தை இங்கு எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஒருவன் தன்னளவில் யாருக்கும் தீங்கு செய்யாமல் இருக்க வேண்டும் என்பதோடு, தீயவர்களுடன் இணங்கி இருத்தலும் கூடாது என்ற பிளேட்டோவின் கருத்துக்களை எண்ணிப் பார்க்கும் போது, சிற்றினம் சேர்தல் கூடாது என்று திருவள்ளுவர் உரைத்த அறமொழிகள்தாம் நம் நினைவிற்கு வரும். நிலத்தின் இயல்பை நீர் பெற்றுக் கொள்வது போல, தீயவர்களோடு நட்புச் செய்து கொண்டால், விரும்பியோ விரும்பாமலோ அவர்களது குணம் ஒருவருக்கு வந்து சேரும்.

"நிலத்துஇயல்பால் நீர்திரிந்து அற்றாகும்; மாந்தர்க்கு
இனத்துஇயல்பது ஆகும் அறிவு" (குறள் : 452)

என்கிறார் திருவள்ளுவர்.

நல்ல குணங்களைப் பெற்று அதன் வழி நடத்தல் தங்களது இயல்பான கடமை என்று இருப்பர் சான்றோர். நலம் என்று சொல்லப்படுவதே குணநலம்தான் என்று தெரிவிக்கிறார் திருவள்ளுவர். ஒழுக்கம் உயர்வு தரும் என்று திருவள்ளுவர் குறிப்பிடுவதைப் போல, பிளேட்டோவும், எத்தனைச் சிறப்புகளை ஒருவன் பெற்றிருந்தாலும் அவன் கண்ணியமற்றவனாகவும், ஒழுக்கமற்றவனாகவும் இருந்தால் அவன் இழிந்த தன்மை உடையவனாவான் என்கிறார். ஒழுக்கம் உயிரைக் காட்டிலும் மேலானது. எனவே, உயிரைவிட ஒழுக்கத்தைப் பேண வேண்டும்; ஒழுக்கமில்லாதவனுக்கு உயர்வு இல்லை; ஒழுக்கத்தினால் மேம்பாடும், ஒழுங்கீனத்தால் ஒருவனுக்குப் பழியும் உண்டாகும். ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்.

"பரிதோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்
தேரினும் அஃதே துணை" (குறள் : 132)

என்று ஒழுக்கத்தின் மேன்மையை வலியுறுத்துகிறார் திருவள்ளுவர்.

## வினைசெயல் வகை

வினைத்தூய்மை, வினைத்திட்பம், வினை செயல் வகை என்று மூன்று அதிகாரங்களில் நாம் செய்யும் செயலைக் குறைவின்றிச் செய்து முடிப்பது எவ்வாறு என திருவள்ளுவர் நமக்கு எடுத்துரைக்கிறார். எந்த ஒரு செயலில் ஈடுபட்டாலும் அது அறவழிப்பட்ட செயலாக இருத்தல் வேண்டும் என்பதை ஒருவன் கருத்தில் கொள்ள வேண்டும். துன்பத்தில் சிக்கிக் கொள்ளும் ஒருவன் அதிலிருந்து விடுபடுவதற்காகக் கூட இழிசெயல்களைச் செய்தல் சரியன்று. வஞ்சனை வழிகளில் பொருளைச் சேர்த்தால், அப்பொருளானது சுடப்படாத, பச்சை மண்கலத்தில் விடப்பட்ட தண்ணீரைப் போல, விரைந்து ஒருவனை விட்டு நீங்கும்.

நன்றாக ஆராய்ந்து தெளிந்து தனக்கு ஏற்ற தொழிலைத் தேர்வுசெய்து, சோர்வின்றி காலம் தாழ்த்தாமல் செய்து முடிக்க வேண்டும். எந்தத் தொழிலையும் செய்து

முடிப்பதற்கு ஒருவனுக்கு ஆதாரமாக அமைவது அதனைச் செய்து முடிக்க வேண்டுமென்ற மனத்திட்பமே ஆகும்.

"வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற" (குறள் : 661)

"ஊறுஒரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்
ஆறுஎன்பர் ஆய்ந்தவர் கோள்" (குறள் : 662)

'தெரிந்து வினையாடல்' என்னும் அதிகாரத்தில், ஒருவன் ஒரு தொழிலைச் செய்வதற்கு உரியவனாக இருப்பதை ஆராய்ந்து பார்த்தபிறகுதான், அவனை அந்தத் தொழிலுக்கு உரியவனாகும்படி உயர்த்த வேண்டும்; இந்தத் தொழிலை, இந்தக் கருவியால், இவன் செய்து முடிப்பான் என்று ஆராய்ந்த பிறகே அத்தொழிலை அவனிடம் ஒப்படைக்க வேண்டுமென்று திருவள்ளுவர் சொல்வது எக்காலத்தவரும் ஏற்றுக் கொள்ளும் உண்மையாகும். நல்ல தொழில் திறமை படைத்தவனாக இருப்பினும் உபகரணங்கள் சரியாக அமையாவிட்டால் தொழிலில் வெற்றிபெற முடியாது. தகுதியான கருவிகள் இருந்தும் தொழிற்படுகிறவன் திறமையற்றவனாக இருப்பின், அந்தத் தொழில் தோல்வியில் போய் முடியும். இன்ன தொழிலை, இன்னார்தான் செய்து முடிக்க முடியும் என்று தேர்ந்து தெளியாமல் யாரிடமாவது ஒப்படைத்தால், அந்தத் தொழிலும் நட்டத்தையே உண்டாக்கும். இதனையே திருவள்ளுவர்,

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றுஆய்ந்து
அதனை அவன்கண் விடல்" (குறள் : 517)

"வினைக்குஉரிமை நாடிய பின்றை அவனை
அதற்குஉரியன் ஆகச் செயல்" (குறள் : 518)

என்கிறார். தொழில் செய்பவன் கோணாது நேர்மையாய் தொழிலைச் செய்யும்வரை உலகம் கெடாது. 'வினை செய்வான் கோடாமை உலகு' என்கிறார் திருவள்ளுவர்.

தொழிலைப் பற்றிப் பேசும் பிளேட்டோ, கோடிக்கணக்கான மாந்தர்கள் மத்தியில் ஒரேவிதமான,

ஒரே அளவான திறமைகொண்ட இரண்டு மனிதரைக் கண்டுபிடிப்பது மிகவும் அரிது என்கிறார். ஒவ்வொரு மனிதனின் மனப்பாங்கும் மற்றொரு மனிதனின் மனப்பாங்கிலிருந்து மாறுபடுகிறது. எனவே, ஒரு மனிதனுக்கு எந்தத் தொழிலைச் செய்வதற்கு இயற்கையாகத் திறமை இருக்கிறதோ, அந்தத் தொழிலையே செய்வதற்கு ஆவன செய்ய வேண்டும். தொழிலைத் தேர்ந்தெடுத்த பிறகு கற்றுக் கொள்ளலாம் என்பது முறையல்ல. ஞாபக சக்தியும், எதையும் புரிந்து கொள்ளும் ஆற்றலும், சிறந்த குணபாவமும், நேர்மையும், உண்மையும், தைரியமும், நிதானமும் உடைய ஒருவன் ஒரு தொழிலில் ஈடுபட்டால், அந்தத் தொழில் ஒருபொழுதும் தோல்வியடையாது. ஒரே மனிதன் பலவிதமான தொழில்களிலும் ஒன்றுபோல் வெற்றி பெறுவது என்பதும் சாத்தியமாகாது. ஒருவன் ஒரே நேரத்தில் பல தொழில்களில் ஈடுபட்டால், அவனால் எதையும் முழுமையாகவும், சிறப்பாகவும் செய்து முடிக்க முடியாது. ஒரு நேரத்தில் ஒரு தொழிலில் மட்டும் கவனத்துடன் ஈடுபட்டால் அதைச் சிறப்பாக செய்து முடிக்கலாம் என்று பிளேட்டோ வழிகாட்டுகிறார்.

**மருந்து**

நோய்களுக்குப் புதுப்புது பெயர்களை வைத்து அவைகளைப் போற்றி வளர்க்கும் விதத்தில் வைத்திய நாகரிகம் வளர்ந்துள்ளது என்கிறார் பிளேட்டோ. ஒருவனுக்கு உடம்பில் காயம் ஏற்பட்டாலோ, தொற்றுநோய் பரவும் சூழலிலோ கட்டாயம் மருந்தின் உதவி தேவைப்படும். வெறும் சோம்பேறித்தனமான வாழ்க்கையில் மனிதர்கள் தேவையற்ற பழக்கவழக்கங்களினால் பல்வேறு புதுப்புது நோய்களை வரவழைத்துக் கொள்கிறார்கள். தேக ஆரோக்கியத்தின் மீதும் தேவையான அளவுதான் கவனம் செலுத்த வேண்டுமே தவிர, ஓயாது உடம்பைப் பற்றி அக்கறை கொள்வதும் தவறு. வெறும் உடம்பைப் பற்றியே அக்கறைப்படுபவன் பண்புகளை வளர்ப்பதில் கவனம் செலுத்த மாட்டான். இந்த அதீதமான அக்கறை, ஒருவன் செய்யும் தொழிலுக்கும், அவனது இலட்சியங்களுக்குமே

தடையாக அமையும். நோயில்லாமல் வாழ வேண்டும் என்று விரும்புவதில் தவறில்லை. ஆனால் ஒருவன் தன் உடம்பில் நோய் இருக்குமோ என்று சதா கற்பனை செய்து கொண்டிருப்பது தவறு.

நோயினால் துன்பப்படும் மனிதர்கள் திறமையும் அனுபவமும் மிகுந்த வைத்தியர்களை நாட வேண்டும். நோய்களைப் பற்றி நன்றாக தெரிந்து, அதை நீக்கும் வழியையும் அறிந்து வைத்திருக்கும் மனத்திறமை வாய்ந்த மருத்துவர்கள் நோயை நீக்கி நோயாளியைக் குணப்படுத்தும் திறமை உடையவராய் இருப்பர்.

நல்ல மருத்துவன், வெறும் பணம் சம்பாதிப்ப திலேயே குறியாக இருத்தல் கூடாது.

"For the doctor in the strict sense of the word has been admitted to be a ruler of bodies and not a money maker."

என்கிறார் பிளேட்டோ.

திருவள்ளுவர், 'மருந்து' என்னும் அதிகாரத்தில் மருத்துவ முறை பற்றியும், மருத்துவரைப் பற்றியும், நோய் தீர்க்கும் வழி பற்றியும் பேசுகிறார். நோயுற்றவன், நோய் தீர்க்கும் மருத்துவன், மருந்து, மருந்தை அருகிலிருந்து கொடுப்பவன் என்று மருத்துவ முறையை நான்கு வகையாகப் பிரிக்கிறார். ஒரு மருத்துவன், வைத்தியம் செய்வதற்குரிய தகுதிப்பாட்டைப் பெறும் பொருட்டாக, மருத்துவ நூலை நன்கு கற்றுத் தெளிந்திருக்க வேண்டும். ஒரேவிதமான நோயினால் இருவர் பாதிக்கப்பட்டிருந்தால் இருவருக்குமே ஒரே அளவு மருந்தைக் கொடுத்து குணப்படுத்துவது சாத்தியமில்லை என்பதை உணர்ந்து, நோயுற்றவர்களின் தேகம் எந்த அளவு பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கண்டறிந்து, அவர்களின் வயதையும் கணக்கில் எடுத்துக் கொண்டு, எவ்வளவு காலம் நோயின் தாக்கம் இருந்திருக்கிறது என்பதைக் கண்டுபிடித்து, எவ்வளவு காலம் மருந்துண்ண வேண்டும் என்பதையும் தெளிந்து வைத்தியம் செய்தல் வேண்டும். நோய் இன்னதென்று கண்டுபிடித்தால் மட்டும் போதாது, அந்த நோய்க்குக் காரணம் என்ன

என்பதையும் கண்டுபிடிக்க வேண்டும். அதன் பிறகு நோயைத் தணிக்கும் வழியை ஆராய்ந்து, உடல் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் மருத்துவம் செய்தல் வேண்டும்.

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்" (குறள் : 948)

"உற்றான் அளவும் பிணிஅளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல்" (குறள் : 949)

என்கிறார் திருவள்ளுவர். மருத்துவத்தைப் பற்றிய திருவள்ளுவர் கருத்துக்கள், நம் நடைமுறை வாழ்க்கைக்கு இன்றும் பயன் தரும் வகையில் அமைந்துள்ளன.

**சட்டமும் நீதியும்**

சின்னச்சின்ன விஷயங்களுக்கெல்லாம் சட்டத்திற்கு மேல் சட்டம் கொண்டு வருவதில் காலத்தை வீணாக்குவது புத்திசாலித்தனமல்ல. சட்ட வளர்ச்சியினால் மனித சமுதாயத்திற்கு எந்தவிதப் பயனுமில்லை. வளர்ந்த பிறகு, குழந்தைகள் தாங்களே எப்படி நடக்க வேண்டும் என்று தெரிந்து கொண்டு, அதன்படி நடப்பதைப் போல, மனிதர்களும் எந்த சட்டத் திணிப்பும் இல்லாமலேயே நல்லவர்களாக நேர்மையுடன் நடந்து கொள்ள வேண்டும். நாட்டில் நடைபெறும் குற்றங்களை விசாரித்துத் தீர்ப்பு சொல்ல வேண்டிய நீதிபதிகள், தீமையான செயல்களில் இளமைக் காலம் தொட்டே சம்பந்தப்பட்டவர்களாக இருத்தல் கூடாது. நல்ல அனுபவமும், சட்டங்களைப் பற்றிய அறிவும் உடையவராக இருத்தல் வேண்டும். இளவயதுடையவராக ஒரு நீதிபதி இருத்தல் கூடாது. மற்றவர்களின் தீமைகளை வெகுகாலமாக நுணுக்கமாகக் கவனித்து அறிகிறவராகவும், மனத்தளவில் ஒரு நல்ல மனிதராகவும் இருப்பவரே நீதிபதியாக இருக்க வேண்டும். ஏனென்றால், நற்பண்பு உடையவருக்கே நன்மை தீமையைப் பிரித்தறியும் ஞானம் இருக்கும்; தீயவரிடம் அந்த ஞானத்தை எதிர்பார்க்க முடியாது.

"A good judge must not be young, but old one who has learned late in life the nature of wickedness not from taking note of the wickedness dwelling his own heart, but from having learned to understand wickedness in the heart of others so that he has knowledge, though not personal experience, of how evil it is."

என்று சட்டத்தையும், நீதியையும் பற்றிய தன் கருத்தினைத் தெரிவிக்கிறார் பிளேட்டோ.

கடுமையான குற்றங்களைப் புரிபவரை தண்டனைக் குட்படுத்துவது தவறல்ல. அது ஒரு தேசத்துக்கு நன்மை பயப்பதாகும்.

"Punishment brings wisdom. It is the healing art of wickedness."

என்கிறார் பிளேட்டோ. திருவள்ளுவரோ, 'நடுவுநிலைமை' என்னும் அதிகாரத்தில், தட்டுகளில் வைக்கப்பட்ட பொருட்களைச் சீர்தூக்கிப் பார்க்கும் துலாக்கோலைப் போல, ஒரு பக்கம் சாயாமல் இருக்கும் நடுவுநிலைமை சான்றோர்க்கு அழகு என்கிறார். நடுவுநிலைமை என்பது உள்ளத்தில் கோணுதல் இல்லாமல் இருக்கும் தன்மை, சொல்லிலும் கோணுதல் இல்லாத தூய்மை என விளக்கம் செய்கிறார். ஒருநாளும் நடுவுநிலைமையிலிருந்து தவறுதல் கூடாது. அவ்வாறு தவறினால், கேடும் பழியும் தான் மிஞ்சும்.

"சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி" (குறள் : 118)

"சொல்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உள்கோட்டம் இன்மை பெறின்" (குறள் : 119)

என்ற குறட்பாக்கள், ஒரு பக்கம் சாயாமல் நடுவு நிலைமையோடு செயல்படுவதின் சிறப்பை எடுத்துரைக்கிறது. தவறு செய்பவர்களைத் தண்டிக்க வேண்டும் என்று பிளேட்டோ குறிப்பிடுவதைப் போல, திருவள்ளுவரும்,

கொலை போன்ற கொடிய தொழிலைச் செய்வாரை அரசன் தண்டிப்பது அறமேயாகும் என்கிறார்.

"கொலையின் கொடியாரை வேந்துஒறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனோடு நேர்" (குறள் : 550)

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த திருவள்ளுவரும், இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த பிளேட்டோவும் உலகமாந்தர் அனைவரும் நன்னிலை பெறவேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன் வாழ்ந்து சிறந்தவர்கள். அறநூல் ஆசானாகிய திருவள்ளுவரும், கிரேக்க நாட்டின் தத்துவச் சிந்தனையாளரான பிளேட்டோவும் உலகின் பல துறைகளைப் பற்றி ஒன்றுபட்ட கருத்தைக் கொண்டிருப்பது நம் சிந்தனைக்கு விருந்தாய் அமைகிறது!

# மாக்ஸ் முல்லரும் திருவள்ளுவரும்

## மாக்ஸ் முல்லர் - ஓர் அறிமுகம்

ஜெர்மானிய தத்துவஞானி மாக்ஸ் முல்லர் ஜெர்மனியில் பிறந்த ஒரு தத்துவச் சிந்தனையாளர். டீசா (Dessau) என்னும் ஊரில், வில்ஹெல்ம் முல்லர் என்பவருக்கும், அடல்லெய்ட் முல்லர் என்ற பெண்மணிக்கும் மகனாகப் பிறந்தவர். தந்தை ஒரு சிறந்த கவிஞராகத் திகழ்ந்தவர். தாயாரோ, ஓர் அமைச்சரின் புதல்வி. ஆயிரத்து எண்ணூற்று இருபத்து மூன்றாம் ஆண்டு பிறந்து, தம் சிறப்பான சிந்தனையினால் தலைசிறந்த தத்துவ ஞானி என்று உலகப் புகழ் பெற்றவர். லிப்சிக் (Leipzic) பல்கலைக்கழகத்தில் பயின்ற மாக்ஸ் முல்லர் இசை, கவிதை, தத்துவம் ஆகிய துறைகளில் தேர்ச்சியுடையவராய் விளங்கினார். ஆயிரத்து எண்ணூற்று நாற்பத்து மூன்றாம் வருடம், ஸ்பினோசாவின் ஒழுக்கவியல் (Spinoza's Ethics) என்பதனைப் பற்றி ஆராய்ச்சி செய்து பல்கலைக்கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்றார். கிரேக்கம், லத்தீன், அரபு, பாரசீகம், சமஸ்கிருதம் ஆகிய செம்மொழிகளில் விசேஷ கவனம் செலுத்தி சிறந்த புலமை பெற்றவர். ஆயிரத்து எண்ணூற்று நாற்பத்து நான்காம் ஆண்டு பெர்லினுக்குச் சென்று பிரட்ரிக் ஷில்லிங் (Friedrich Schelling) என்பவருடன் இணைந்து மேலும் பல துறைகளைக் கற்றார். இந்திய தேசத்தின் இணையற்ற பொக்கிஷங்களான உபநிஷதங்களைப் பிரட்ரிக் ஷில்லிங்குக்காக முதலில் மொழிபெயர்க்கத் துவங்கினார்.

பிரான்ஸ்பாப் (Franzbopp) என்பவரின் மேற்பார்வையில், சம்ஸ்கிருத நூல்களைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டார். இந்திய ஐரோப்பிய மொழிகளை முதல் முதலாவதாக முறையாகக் கற்ற ஆராய்ச்சி மாணவர் மாக்ஸ் முல்லர் என்று சொன்னால் அது மிகையல்ல. பின்னர் மொழிகளின் வரலாறுகளை சமயங்களின் வரலாறுகளோடு இணைத்து ஆய்வு செய்யத் தொடங்கினார். ஆழ்ந்த படிப்புக்கும் ஆராய்ச்சிக்கும் பிறகே, இந்திய நாட்டில் வழங்கிவரும்

கதைகளைப் பற்றிய தொகுப்பான ஹிதோபதேசத்தை (Hithopadesa) ஜெர்மானிய மொழியில் மொழிபெயர்த்து வெளியிட்டார். இதுவே மாக்ஸ் முல்லரின் முதல் புத்தகமாகும். பின்னர், ஆயிரத்து எண்ணூற்று நாற்பத்து ஐந்தில் பாரீசுக்குச் சென்று, யூஜின் பர்னாஃப் (Eugene Burnouf) என்பவரிடம் மேலும் சமஸ்கிருத நூல்களைக் கற்றுத் தேர்ந்தார்.

யூஜின் பர்னாஃப்தான், ரிக் வேதத்தின் சமஸ்கிருத மூலத்தை இங்கிலாந்தில் கிடைத்த கைப்பிரதிகளை அடிப்படையாக வைத்துப் பதிப்பிக்குமாறு முல்லருக்கு அறிவுறுத்தினார். ஆயிரத்து எண்ணூற்று நாற்பத்து ஆறில், கிழக்கிந்தியக் கம்பெனியாரிடம் (East-India Company) இருந்த சமஸ்கிருத மூல நூல்களைப் படிப்பதற்காக இங்கிலாந்திற்குச் சென்றார். இந்தியப் பண்பாட்டின் கருத்துரையாளராகப் பணியேற்றார். பிரம்ம சமாஜத்தோடு மாக்ஸ் முல்லருக்கு நிறைய தொடர்பு இருந்தது. ஆயிரத்து எண்ணூற்று ஐம்பத்தோராம் ஆண்டு, ஆக்ஸ்போர்ட் கிரைஸ்ட் சர்ச்சின் உறுப்பினரானார். மொழியியல் ஒப்பாய்வு சார்ந்த தம் முதல் தொடர் உரைகளை அங்கு நிகழ்த்தினார். ஆயிரத்து எண்ணூற்று ஐம்பத்து நான்கில், நவீன ஐரோப்பிய மொழிகள் துறையில் பேராசிரியர் ஆனார். ஆக்ஸ்போர்டின் ஆல் சேல்ஸ் கல்லூரியில் ஆயிரத்து எண்ணூற்று அறுபத்தெட்டிலிருந்து ஆயிரத்து எண்ணூற்று எழுபத்தைந்து வரை ஒப்பீட்டு இறையியல் பேராசிரியராக விளங்கினார்.

மாக்ஸ் முல்லரின் இறையியல் உரைகள், அடிப்படை சமயக் கொள்கைகளை மறுத்துப் பேசிவந்த ஜெர்மானிய அறிஞர்களுக்கு மத்தியில் எதிர்ப்புணர்வைத் தோற்று வித்தது. டார்வினின் புரட்சிகரமான பரிணாம வளர்ச்சி பற்றிய கருத்துக்களோடு மாக்ஸ் முல்லரின் சிந்தனைகள் முரண்பட்டன. ஜான் ரஸ்கினைப் போன்ற சிந்தனையாளர்கள், பண்பாடுகள் சிதைந்து போன பத்தொன்பதாம் நூற்றாண்டு வாழ்க்கைக்கு மாக்ஸ் முல்லரின் சிந்தனைகள் மாமருந்தாக அமைந்துள்ளன என்று குறிப்பிடுகின்றனர். சமஸ்கிருதத்தை வேதத்தின் மொழி என்பர். இந்திய ஐரோப்பிய மொழிகளில் மூத்த மொழி சமஸ்கிருதமே ஆகும். எனவே மாக்ஸ் முல்லர் சமஸ்கிருதம் பயில்வதில் தனிப்பட்ட ஆர்வம் காட்டி,

அவர் காலத்தில் வாழ்ந்த அனைத்து சமஸ்கிருத மொழி வல்லுநர்களை விட புலமையில் தலைசிறந்து விளங்கினார். மாக்ஸ் முல்லரைப் பொருத்தவரையில் 'மொழிவரலாற்றை ஒரு தேசத்தின் பண்பாட்டு வரலாற்றிலிருந்து பிரித்து விட முடியாது' என்பதில் அசையாத நம்பிக்கை உடையவராக இருந்தார்.

வேத உபநிஷதங்களை முழுவதுமாகக் கற்றுணர்ந்த பெருமைக்கு உரியவர் மாக்ஸ் முல்லர். மாக்ஸ் முல்லர் வேதங்களைப் பற்றிய விரிவுரைகளை எழுதுவதற்கு முன்னால், மேற்கத்திய நாட்டில் வாழ்ந்தவர்களுக்கு இந்திய தேசத்தின் வேத உபநிஷதங்களைப் பற்றி அதிகம் தெரியாது. ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியாரின் ஆவணத் தொகுப்புக்களைப் பார்வையிடுவதற்காகவே பலமுறை லண்டன் மாநகருக்குப் பயணப்பட்டார். ரிக் வேதத்தின் தொகுப்பை கம்பெனியாரிடமிருந்து பெறுவதற்கே அரும்பாடுபட்டார். மிகுந்த முயற்சிக்குப் பிறகு கிடைத்த ரிக் வேதத்தின் தொகுப்பை பொறுப்போடு ஆய்வு செய்து அவர் வழங்கியுள்ள விரிவுரை இன்றளவும் உலகப் புகழ் பெற்று விளங்குகிறது. ஆயிரத்து எண்ணூற்று நாற்பத்து ஒன்பதாம் ஆண்டு தொடங்கி ஆயிரத்து எண்ணூற்று எழுபத்து நான்காம் ஆண்டு வரை, மாக்ஸ் முல்லர் ரிக் வேத ஆராய்ச்சியிலேயே ஈடுபட்டிருந்தார். ஆயிரத்து எண்ணூற்று எண்பத்தோராம் ஆண்டு காண்ட் (Kant) எழுதிய கிரிடிக் ஆஃப் பியூர் ரீசன் (Critic of pure reason) என்ற நூலை மொழிபெயர்த்தார். மாக்ஸ் முல்லர் எழுதிய 'சமய ஒப்பீடு' கிறிஸ்துவ நம்பிக்கைக்கு விரோதமானது என்று பலர் குறைகூறத் தொடங்கினர். முல்லரின் கிஃபோர்ட் லெக்சர்ஸ் (Gifford Lectures) 'சமயமும் விஞ்ஞானமும்' என்ற நூல் கிறிஸ்துவுக்கும், கிறிஸ்துவ மதத்திற்கும், அதன் நம்பிக்கைகளுக்கும் விரோதமானது என்று கண்டனக் குரல் எழுந்தது.

ஒவ்வொரு சமயத்தின் தொடக்கத்தையும் ஆராய்ச்சி செய்து பார்க்கும்போது, இந்து சமயக் கொள்கைகளில் காணப்படும் பல குறைபாடுகள், முதலில் காணப்படவில்லை. காலம் செல்லச் செல்ல, சமய வளர்ச்சியோடு சேர்ந்து

சில தவறான நம்பிக்கைகளும், மூடப் பழக்கவழக்கங்களும் ஒட்டிக் கொண்டன என்பது முல்லரின் கருத்து. இராம் மோகன்ராய் நிறுவிய பிரம்ம சமாஜத்தின் மேல் முல்லர் கொண்டிருந்த ஈடுபாடு, சமயத்தைப் பற்றிய பல புரட்சிகரமான சிந்தனைகளை அவரிடம் தோற்றுவித்தது. தன் மனைவிக்கு எழுதிய கடிதத்தில், கோடிக்கணக்கான மக்களின் ஆன்மீக வளர்ச்சிக்கும், இந்திய தேசத்தைப் பற்றி மற்ற நாட்டவர்கள் தெரிந்து கொள்வதற்கும் வேதங்களைப் பற்றிய தம் உரை பெரிதும் உதவும் என்றும், வேதமே சமயத்தின் ஆணிவேர் என்றும் குறிப்பிடுகிறார்.

## சமயத்தின் நோக்கம்

சமயத்தின் உண்மையான நோக்கத்தை மக்கள் புரிந்து கொள்ளாமல் இருப்பது பெரிதும் ஆபத்தானது. ‘லௌகீக வசதிகளுக்கு வழி அமைத்துக் கொடுப்பதுதான் சமயம்’ என்று பலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ‘ஐம்புலன் வழி ஒருவன் துய்க்கும் இன்பங்களைச் சுதந்திரமாக ஒருவன் அனுபவிப்பதற்கு வழிவகுப்பதுதான் சமயம்’ என்று ஒருவன் எண்ணிக் கொண்டிருந்தால், அந்த எண்ணமே ஒரு தெய்வ நிந்தனையாகும். மாக்ஸ் முல்லரின் தெளிவான சிந்தனைகள் ஆத்மாவை உணரும் தன்மையை ஒருவனுக்கு உணர்த்த வல்லன. இந்த மெய் உணர்தலே உண்மைக் கல்வியாகும். ‘பணியுமாம் என்றும் பெருமை’ என்று திருவள்ளுவர் குறிப்பிடுவதைப் போல, தன்னை உணர்வதால் ஒருவன் பெறும் அறிவு, அவனுக்குப் பணிவு என்னும் பண்பைக் கொடுத்து இறைவனை அறியும் மெய்யுணர்வையும் தருகிறது.

‘Knowledge gives humility; of what use is knowledge if it does not show us the way to the highest?

இந்தியாவில் அவர் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்த இராமகிருஷ்ண பரமஹம்சரிடம் முல்லர் அபிமானம் கொண்டிருந்தார். இராமகிருஷ்ணரின் தூய வாழ்வும் அவரது வேதாந்தக் கொள்கைகளும் மாக்ஸ் முல்லரைப் பெரிதும் கவர்ந்ததனால், இராமகிருஷ்ணரைப் பற்றிக் கட்டுரைகளும் புத்தகங்களும் எழுதினார். ஆன்மீக ஒளியை

அமைதியாக உலகில் பாய்ச்சிய உண்மை ஞானியாக இராமகிருஷ்ணரை உணர்ந்தார் மாக்ஸ் முல்லர். ஆபரணங்களைச் செய்யும் ஒரு கைதேர்ந்த கைவினைஞனுக்குத்தான் ஆபரணங்களைப் பற்றித் தெரியும். அதுபோல, ஆன்மீகச் சிந்தனைகளை உலகிற்கு வழங்கிய மாக்ஸ் முல்லரைப் போன்ற ஒரு தத்துவ ஞானி, இராமகிருஷ்ணரை இனம் கண்டு கொண்டதில் எந்த வியப்பும் இல்லை. சத்தியம், தூய்மை, தன்னலமற்ற தன்மை - இந்த மூன்று நற்பண்புகளும் ஒருவரிடம் இருந்தால், வானிலும் மண்ணிலும், எந்தச் சக்தியும் அவனை அழித்து விட முடியாது. அப்படிப்பட்டவனுக்கு உலகில் உள்ள அனைவரும் எதிரிகளாக மாறும் சூழ்நிலை ஏற்பட்டாலும், அவன் தன் நிலையில் தாழாமல் எழுந்து நின்று ஒளிவீசுவான் என்கிறார் மாக்ஸ் முல்லர். இராமகிருஷ்ணரைப் பற்றிய பல செய்திகளை ஏற்கனவே எழுத்தில் வடித்திருந் தாலும், பரமஹம்சரின் வாழ்க்கையையும் படிப்பினைகளையும் பற்றிய முழுமையான தகவலைத் தரும் பெரிய நூல் ஒன்றை வெளிக்கொண்டு வர விழைந்தார் முல்லர்.

மாக்ஸ் முல்லரைச் சந்தித்து உரையாடிய இந்திய தேசத்துத் தத்துவஞானிகள், அவரை ஒரு மொழியியல் வல்லுநராகவும், ஆராய்ச்சியாளராகவும் பார்க்கவில்லை. முழுமுதற் கடவுளோடு ஒன்றுபடத் துடிக்கும் ஆத்மாவையும், பிரபஞ்சத்தோடு ஒன்று கலக்க விழையும் ஒரு விசாலமான இதயத்தையுமே கண்டனர். ‘ஆத்மாவை அறிந்த பிறகு, அறிந்து கொள்வதற்கு என்ன இருக்கிறது?’ என்ற திண்ணமான எண்ணமுடைய மாக்ஸ் முல்லரின் இதயத் துடிப்பில் உபநிஷதங்களின் இசையொலி கலந்து நின்றது.

## இந்திய தேசத்தை நேசித்தவர்

இந்திய தேசத்தைப் பார்க்காமலேயே நேசித்தவர் மாக்ஸ் முல்லர். இந்திய நாட்டின் பண்பாடும் கலாச்சாரமும் அவர் மனதில் மிகவும் உயர்வான இடத்தைப் பெற்றிருந்தன. வேத உபநிஷதங்களிடம் முல்லர் வைத்திருந்த பெரும் மதிப்பு அளவிடற்கரியது. இந்திய நாட்டின் பொக்கிஷங்களை விளக்க உரை செய்யும் முல்லரிடம், ‘ஏன் ஒருமுறை கூட இந்தியாவிற்குச் செல்லவில்லை?’ என்று பலரும்

கேட்டதுண்டு. 'இந்திய தேசத்தைப் பற்றிய உயர்ந்த எண்ணங்கள் என் மனதில் இடம் பிடித்திருக்கின்றன. நேரில் இந்தியாவிற்கு விஜயம் செய்யும்போது, இந்திய தேசத்தைப் பற்றிய உயர்வான என் எண்ணங்களுக்கு மாறாக எதையாகிலும் நான் பார்க்கவோ, கேட்கவோ நேர்ந்தால் என் மனதில் இருக்கும் இந்தியாவின் சித்திரம் பாதிப்படையும். அதை நான் விரும்பாத காரணத்தால் இந்தியாவிற்குச் செல்லாமலேயே ரிஷிகளும் முனிவர்களும் வாழ்ந்த அந்த நாட்டைப் பற்றிய உயர்வான சிந்தனைகளோடு வாழ்ந்து கொண்டிருக்கிறேன்' என்று பதிலுரைப்பார். 'எப்பொழுது இந்தியாவிற்கு வரப் போகிறீர்கள்? எங்கள் மூதாதையரின் தூய்மையான எண்ணங்களின் மேல் ஒளியைப் பாய்ச்சி, உலகுக்கு அறிமுகப்படுத்திய உங்களை வரவேற்க இந்திய தேசத்தில் ஒவ்வாரு இதயமும் தயாராக இருக்கிறது' என்று தங்கள் ஆதங்கத்தை வெளிப்படுத்தியவர்களுக்கு, கண்களில் கண்ணீர் பொங்க, தலையை மெல்ல அசைத்துக் கொண்டு, முகத்தில் புத்தொளி பாய, மாக்ஸ் முல்லர் சொன்ன பதில் "நான் இந்தியாவிற்கு வந்தால், அந்நாட்டை விட்டு எங்கும் செல்ல மாட்டேன். மாண்டபிறகு, என் உடலை அங்கேயே தகனம் செய்தால் மகிழ்வேன் (I would not return then; you would have to cremate me there)" என்பதுதான்.

ஒருவேளை, தம் முந்திய பிறப்பு இந்திய தேசத்தில் நிகழ்ந்திருக்கலாம் என்று மாக்ஸ் முல்லர் மனதின் அடி ஆழத்தில் ஓர் எண்ணம் இருந்திருக்கக் கூடும். மாக்ஸ் முல்லரின் வாழ்வு, வேதாந்த உலகிற்குக் கிடைத்த ஒரு மாபெரும் பரிசு. தெளிந்த சிந்தனையும், சத்தியத்தின் மேலிருந்த நாட்டமும் மாக்ஸ் முல்லரை ஓர் ஆத்மஞானியாக உலகிற்கு அறிமுகப்படுத்தின. "யாருக்காகவும், எந்த நிலையிலும் நீ சத்தியம் என்று அறிந்த உண்மைகளையும், நீ கடைப்பிடிக்கும் கொள்கைகளையும் விட்டுக் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. உன் ஆத்ம பலத்தை நம்பி வாழ். உறுதியுடனும், அன்புடனும், பொறுமையுடனும் காத்திருந்தால் உனக்குரிய நன்னிலை, தானே உன்னைத் தேடி வரும். 'Above all beware of compromises 'I do not mean, that you are to get into antagonism with anybody, but you have

to hold on to your own principles in weal and woe and never adjust them to other 'Fads', through the greed of getting supporters, your Athman is the support of the Universe - whose support do you stand in need of? Wait with patience, love and strength if helpers are not ready now, they will come in time" என்கிறார். ஐம்பதாண்டுகளுக்கு மேலாக, இந்திய தேசத்தின் தத்துவங்களை ஆய்வு செய்தவர். ஒரு ஆரண்யம் போல் அடர்ந்து காணப்படும் சமஸ்கிருத இலக்கியங்களுக்குள் நுண்மாண் நுழைபுலத்தோடு புகுந்து, அவற்றின் உன்னதமான தத்துவச் சிந்தனைகளை ஆர்வத்துடனும், இதயம் நிறைந்த விருப்பத்துடனும் கற்று உலகறியச் செய்தவர் என்பதனால் வேதாந்திகளுக்கெல்லாம் வேதாந்தி என்று புகழப்படும் பெருமை பெற்றார்.

'I confess that my heart beats with joy whenever I meet with such utterances in the sacred books of the east, a sudden brightness seems to spread over the darkest valleys of the earth' என்ற மாக்ஸ் முல்லரின் வாசகம் எண்ணிப் பார்த்து மகிழத்தக்கது.

### மாக்ஸ் முல்லரின் நூல்கள்

மாக்ஸ் முல்லரின் எழுத்தோவியங்கள் பதினெட்டு பாகங்களாகப் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. 'பண்டைய சமஸ்கிருத இலக்கிய வரலாறு', 'மொழியியல் பற்றிய விரிவுரைகள்', 'சமய இயல்பு - ஓர் அறிமுகம்', 'இந்தியாவில் காணப்படும் சமயங்களின் தோற்றமும் வளர்ச்சியும்', 'இந்தியா நமக்குக் கற்பிப்பது என்ன?', 'வாழ்க்கை வரலாறு பற்றிய கட்டுரைகள்', 'உபநிஷத விரிவுரைகள்', 'ஜெர்மானியச் செவ்விலக்கியங்கள் - நான்காம் நூற்றாண்டிலிருந்து பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை', 'சிந்தனையியல்', 'புத்த சமயம் - ஒரு கண்ணோட்டம்', 'இந்து சமய தத்துவம்', 'கிஃபோர்ட் விரிவுரைகள்', 'இயற்கைச் சமயம்', 'பௌதீகச் சமயம்', 'ஆதிமனிதனின் சமயம்', 'பிரம்ம ஞானம் அல்லது உளவியல் சமயம்', 'சுயசரிதை', 'மாக்ஸ் முல்லரின் வாழ்க்கையும் கடிதங்களும்' ஆகிய பல நூல்களை உலகிற்கு வழங்கிய பெருமைக்குரியவர் மாக்ஸ் முல்லர்.

## இந்தியா புகட்டும் பாடம்

'வேதம்' என்ற சொல்லுக்கு 'அறிவு' என்று பொருள். இந்து சமயத்தின் புனித நூல்களில் தலைசிறந்தது வேதம். இந்த வேதங்கள் எழுதப்படாத மறைகளாக இருந்தமையால் 'ஸ்ருதி' என்று அழைக்கப்பட்டன. 'ஸ்ருதி' என்ற சொல்லுக்கு 'கேட்கப்பட்டது' அல்லது 'வெளிப்படுத்தப்பட்டது' என்று பொருள். ஞானிகளுக்கும், ரிஷிகளுக்கும் சொல்லப் பட்டவைகளே தவிர, எழுதப்பட்டவை அல்ல. எனவேதான், நான்கு வேதங்களின் காலத்தைக் கணிப்பது என்பது இயலாத ஒன்று. பிற்காலத்தில் வேத வியாசரால் நான்கு வேதங்களாக ரிக், யஜுர், சாம, அதர்வணம் என்று பிரிக்கப்பட்டது. அவ்வாறு எழுதப்படுவதற்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே, வேதம் வாய்மொழியாக இருந்தது. வழிபாட்டு முறைகள், சம்பிரதாயங்கள், பிரார்த்தனைகள் அடங்கிய பிரமாணங்கள் (Brahmanas), துறவிகள், சந்நியாசிகள் அனுசரிக்க வேண்டிய நெறிமுறைகளைச் சொல்லும் ஆரண்யகங்கள், ஆன்மீகத் தத்துவ உரையாடல்களும், கதைகளும் அடங்கிய உபநிஷதங்கள் ஆகியனவும் வேதத்தின் பகுதிகளாகும்.

### நான்கு வேதங்கள்

நான்கு வேதங்களிலும் முதன்மையானது ரிக் வேதம். பன்னெடுங்காலமாக வாய்மொழியாக இருந்து வந்த வேதம், கிறிஸ்து பிறப்பதற்கு ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னால்தான் எழுதப்பட்ட மறை ஆயிற்று. ரிக் வேதத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட துதிப்பாடல்கள் காணப் படுகின்றன. ரிக் வேதத்தை இந்திய தேசத்தின் அறிவுப் பெட்டகம் எனலாம். சாம வேதமோ இந்திய தேசத்தின் இசையின் பிறப்பிடமாகவும், மூலமாகவும் அமைந்துள்ளது. தெய்வங்களைப் பற்றிய தோத்திரங்களின் இசை வடிவமே சாம வேதமாகும். யாகங்களைச் செய்யும் முறைமைகளைத் தெளிவாக எடுத்துச் சொல்வது யஜுர் வேதம் எனப்படுகிறது. அதர்வண வேதம் தெய்வங்களின் கவனத்தை மந்திரங்களின் மூலமாக, ஜெபிப்பவர்களின் பக்கம் நோக்கித் திருப்புகின்ற சக்தியை உள்ளடக்கியது. வேதத்தைப் போல, தேர்ந்தெடுத்த

உபநிஷதங்களுக்கும் மாக்ஸ் முல்லர் விளக்கவுரை வழங்கியுள்ளார். உபநிஷதங்கள் இந்திய சமுதாயத்தின் நடைமுறை வாழ்வினைப் பற்றி மட்டும் பேசாமல், மனித வாழ்வோடு சம்பந்தப்பட்ட தெய்வீகச் சிந்தனைகளைப் பற்றி அதிகம் பேசுகின்றன. குருநாதர்கள், தமது மாணவர்களுக்குப் போதிப்பது போல் அமைந்துள்ள உபநிஷதங்கள் ஒரு தனிப்பட்ட ஆன்மீகக் கல்வி முறையை அறிமுகப்படுத்து கின்றன. இந்தக் கல்வியின் நோக்கம் மாணவன் தனக்குள் இருக்கும் ஆத்மாவின் பிரசன்னத்தை உணர்வதேயாகும்.

ஆத்மா இறைவனோடு ஒன்று கலக்கும் போது ஏற்படும் இன்பத்தை ஒருவன் உணர வேண்டுமானால், அவன் அறிவு, ஒழுக்கம், தியானம் ஆகிய படிகளில் ஏறி வர வேண்டும். இறைவனோடு ஒன்றுபடுவதற்கான யோக முறைகள் மாணவர்களுக்குக் குருநாதர்களால் கற்பிக்கப்படுகின்றன. அறிவு அடங்கும்போது ஒருவனுக்கு ஞானம் பிறக்கிறது. அந்த ஞானம் ஒருவனைத் தன்னல மற்றவனாகவும், மோக்ஷம் அடையத் தகுதி உடையவனாகவும் மாற்றுகிறது. நன்மை தீமை இரண்டிலுமிருந்து அவன் விடுபட்டு, தான் என்பதற்றுப் போய், இறைவனில் ஒன்றுபடுவான். தன் முனைப்பு, மனதின் சபலத் தன்மை, தேவையற்ற ஆசைகள், கவனச் சிதறல் ஆகிய அனைத்திலிருந்தும் விடுபட்டு உண்மையான சுதந்திரத்தை அனுபவிப்பான். உபநிஷதங்கள் இசையோடு கூடிய பாடல்களைப் போல அமைந்துள்ளன. உபநிஷதங்களைப் போலல்லாமல், பிராமணங்கள் உரைநடையாக எழுதப் பட்டவை. பெரும்பாலும் வழிபாடுகளை நிகழ்த்தும் குருக்களுக்குப் பல்வேறு செய்திகளைத் தெளிவுபடுத்தும் இந்தப் பிராமணங்களில் சமூக வாழ்க்கை பற்றிய சில செய்திகளும் காணப்படுகின்றன.

காட்டில் வாழ்ந்த ரிஷிகள் ஆன்மீக விஷயங்களை வேத உபநிஷதங்களிலிருந்து தங்கள் வாய்மொழியாக எடுத்துச் சொன்னவை ஆரண்யகங்கள் ஆகும். ‘உண்மைதான் அனைத்து நற்பண்புகளிலும் தலைசிறந்தது என்றும், அதைமட்டும் முறையாக ஒருவன் கடைப்பிடிப் பதனால், அவன் மோக்ஷ கதி அடையலாம்’ என்றும்

ஆரண்யகங்கள் குறிப்பிடுகின்றன. 'பற்றற்ற தன்மை ஒருவரின் மனதைத் தூய்மையாக்கும் என்பதோடு, அவன் மீண்டும் பிறக்க நேர்ந்தால் நல்லதொரு பிறவி அடைவான்' என்றும் ஆரண்யகங்கள் எடுத்துரைக்கின்றன. யாவற்றையும் விட உயர்ந்தது எது என்று, தன் தந்தையிடம் மகன் கேட்ட கேள்விக்கு, அந்தத் தந்தை 'உண்மை, தவம், தன்னடக்கம், ஈகை, கடமை உணர்வு, வம்சவிருத்தி ஆகியனவற்றைக் கடைப்பிடிப்பதே அனைத்திலும் உயர்வானது' என்று குறிப்பிடுகின்றார்.

நான்கு வேதங்களையும் நன்கு கற்றுணர்ந்தவர் மாக்ஸ் முல்லர். வேதங்களே ஒரு மனிதனுக்குச் சத்தியத்தையும் கடவுளையும் வெளிப்படுத்திக் காட்டுகின்றன. இறைவன் தன் சிந்தனையுடன் வாழும் தன் குழந்தைகளை ஒருநாளும் கைவிடுவதில்லை என்று வேதம் தெரிவிக்கிறது என்கிறார். கீழை நாடுகளின் புனித நூல்களைக் கற்கும்போது, இருண்ட உலகின் பரப்பு ஒளிவிட்டுப் பிரகாசிப்பதாக நான் உணர்கிறேன் என்கிறார். 'We learn that no human soul was ever quite forgotten, and that there are no clouds of superstition through which the rays of eternal truth cannot pierce, such moments are the best rewards to the student of the religions of the world. They are moments of true revelation, revealing the fact that god has not forsaken, any of his children if only they feel after him if haply they may find him.'

**முல்லரின் விரிவுரைகள்**

வேதங்களைப் பற்றிய மாக்ஸ் முல்லரின் கட்டுரைகள் மிகவும் பிரசித்தமானவை என்பதனை சமய தத்துவ இலக்கியவாதிகள் அனைவரும் அறிவர். அதுபோலவே, முல்லர் ஒரு சிறந்த விரிவுரையாளராகவும் இருந்தார். அவருடைய இந்திய இயல் (Indology) பற்றிய விரிவுரைகள் நன்கு கற்றறிந்த பண்டிதர்களுக்கு மட்டுமல்லாமல் சாதாரண மக்களுக்கும் பயன்பட்டது. அவ்வாறு தம் மாணவர்களுக்கு அறிவுச் செல்வத்தை வழங்கி உதவி செய்த முல்லர், பல்கலைக்கழகத்தில் தாம் பெற்ற ஊதியத்தையும் தம்

மாணவர்களுக்கே பரிசுகளாக வழங்கினார். எந்தவிதமான கட்டுப்பாடும் இல்லாமல் தம் சுதந்திரமான சிந்தனைகளைத் தெள்ளத் தெளிவாக எடுத்துரைத்தார். தம் எழுத்துக்களையும் விரிவுரைகளையும் பற்றிய விமர்சனங்களையும் முக ஸ்துதிகளையும் கூட அப்படியே ஏற்றுக்கொள்ளாமல், எடை போட்டுப் பார்த்து உண்மைக்கு முக்கியத்துவம் தருகிற ஒரு தத்துவச் சிந்தனையாளராக விளங்கினார் மாக்ஸ் முல்லர். தம் விரிவுரைகள் சிலவற்றை கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தின் கார்பஸ் கிறிஸ்டி (Corpus Christy) கல்லூரியில் சமஸ்கிருத பேராசிரியராக இருந்த இ.பி. கௌவல் (Cowell) என்பவருக்கு, அவர்மேல் தமக்குள்ள மரியாதையைக் காட்டுவதற்காக அர்ப்பணித்தார். முப்பது ஆண்டுகால நட்பும், கௌவல் மேல் முல்லருக்கு இருந்த மரியாதையும் அளவிடற்கரியன. பேராசிரியர் கௌவல் மாக்ஸ் முல்லரின் விரிவுரைகளின் பகுதிகளை வெளிப்படையாக விமர்சனம் செய்தார். சம்பிரதாயப் புகழ் உரைகளையும், ஆதாரமற்ற பழிப்புகளையும் மதித்தவரல்லர் மாக்ஸ் முல்லர். எனவேதான், பேராசிரியர் கௌவலின் உண்மையான விமர்சனத்தை ஏற்றுக்கொண்டு, அத்தகைய வெளிப்படையான உண்மை விமர்சனம், கௌவல் தம்மேல் வைத்திருந்த அன்பினாலும், நட்பினாலும், கீழை நாட்டு இலக்கியங்களின் மேல் அவர் கொண்டிருந்த ஈடுபாட்டினாலும் உண்டானது என்பதை அறிந்து கௌவலைப் பாராட்டினார். "I shall consider, your outspoken criticism, of my lectures as the very best proof of your true and honest friendship. Sincere devotion to his studies and an unanswering love of truth ought to furnish the true scholar with an armour impermeable to flattery or abuse and with the visor that shuts out no ray of light from whatever quarter it may come. More light, more truth, more facts, more combination of facts - these are his quests."

### இந்தியாவிடம் ஈடுபாடு

இந்திய தேசத்தின் இணையற்ற பொருள் வளங்களைத் தங்கள் அரசியல் சாதுர்யத்தால் கவர்ந்து

சென்ற மேலைநாட்டுக்காரர்கள், இந்திய தேசத்தின் அறிவுப் பெட்டகங்களையும் கவர்ந்து செல்லத் தவறவில்லை. அத்தகைய சூழ்நிலைகளில் இந்திய தேசத்திற்கு ஏற்பட்ட பெரும் இழப்பை, அந்நாட்டின் புனித நூல்களைப் பற்றிய உண்மைகளை, தம் விரிவுரைகளாலும் எழுத்துக்களாலும் உலகிற்கு அறிவிப்பதன் மூலம் ஒரு சிறிதாயினும் தம்மால் ஈடுகட்ட முடியுமானால், அதற்காகத் தாம் மிகவும் மகிழ்ச்சி அடைவதாகக் குறிப்பிடுகிறார் மாக்ஸ் முல்லர். 'English men who have been able to achieve by pluck, by perseverance and by real political genius, the material conquest of India, do not mean, to leave the laurels of its intellectual conquest entirely to other countries, then I shall indeed rejoice, and feel that I have paid back, in however small a degree. The large debt of gratitude, which I owe to my adopted country and to some of its greatest statesmen, who have given me the opportunity, which I could find nowhere else of realizing the dreams of my life - the publication of the text and commentary of the Rig Veda - the most ancient book of Sanskrit, aye, of Aryan literature and now the edition of the translations of the sacred books of the east.' இந்திய தேசத்தின் மேல் மாக்ஸ் முல்லருக்கு இருந்த அளவற்ற ஈடுபாட்டை, இந்தியாவைத் தன்னை வளர்த்த நாடு என்று அவர் சொல்லிக் கொள்வதன் மூலம் நாம் தெரிந்து கொள்ளலாம். பாரத தேசத்திலேயே பிறந்து வளர்ந்த பலரிடம் காணப்படாத ஈடுபாட்டைப் பிறப்பால் ஜெர்மனியரான மாக்ஸ் முல்லர் இந்தியாவின் மேல் வைத்திருந்தது நம் அனைவருக்கும் மகிழ்ச்சி தருகிறது.

**சத்திய ஒளி**

பூமியின் தோற்றம், மனித குல வளர்ச்சி ஆகியவற்றைப் பற்றிய செய்திகளைத் தரும் இந்தியாவின் புனித நூல்கள், 'புற உலகத்தைப் போலவே அக உலகமும், அறிவுலகமும் வளர்ச்சி அடைந்துள்ளது. புறவளர்ச்சியும் அகவளர்ச்சியும் ஒன்றோடொன்று நெருக்கமாகத் தொடர்புடையன' என்கின்றன. அகவளர்ச்சி இல்லாத வெறும் புறவளர்ச்சி எந்தவிதத்திலும் உலகிற்குப் பயன்படாது

என்கின்ற உண்மையினை, ஆதி காலத்திலிருந்து இந்தியாதான் உலகத்திற்குச் சொல்லிக் கொண்டிருக்கிறது என்கிறார் முல்லர். ஆத்மாவை உணரவும், செழுமைப்படுத்திக் கொள்ளவும், சமஸ்கிருத இலக்கியங்களும் மந்திரங்களும் பெரிதும் துணை செய்கின்றன என்கிறார். பூமியில் குறை ஒன்றுமில்லாத நாடேதும் இல்லை. இக்கூற்று இந்தியாவுக்கும் பொருந்தும். எனவே குறைகளிலேயே மூழ்கிக் கிடக்கும் தாழ்வான சிந்தனையை ஒதுக்கிவிட்டு, சற்று உன்னதமாகச் சிந்திக்கத் தொடங்கினால் இந்தியாவின் சத்திய ஒளியை உணர முடியும். மேகங்களைக் கீழிருந்து பார்க்கும் போது இருளாகத்தான் தெரியும். சற்று உயரமான இடத்திலிருந்து கீழே உலவும் மேகத்தைப் பார்த்தால் அந்த மேகமானது சூரிய ஒளிபட்டுப் பிரகாசிப்பதைக் காணலாம் என்கிறார். 'Let us not dwell on any darker shade of the picture. Clouds are dark to those who are beneath them; but on the upper side, where the sun shines, they glow with golden splendour. Let us be willing to contemplate India fraternally and upon that side, where the radiance of the divine sheds the refulgent illumination.'

## பாடம் சொல்லும் நாடு

'இந்தியா நமக்கு எதைக் கற்றுக் கொடுக்கிறது' என்கின்ற விரிவுரையில் மாக்ஸ் முல்லர், இந்திய தேசத்தின் இணையற்ற பெருமைகள் சிலவற்றைக் கோடிட்டுக் காட்டுகிறார். ஒவ்வொரு தேசமும் பிறநாட்டிலிருந்து கற்க வேண்டிய பாடங்கள் உண்டு. அதில் இந்தியாவிலிருந்து நாம் கற்க வேண்டிய பாடங்கள் அநேகம். 'உலகில் இயற்கையின் ஆற்றலும் அழகும் செல்வமும் எந்த நாட்டில் குவிந்திருக்கிறது?' என்றால், நான் இந்திய நாட்டில் என்பேன். 'மனித இனத்தின் பல்வேறு விதமான சிக்கல்களுக்கு எங்கே மருந்து கிடைக்கும், மனிதர்களின் மனம் எங்கே முழுமையான நலத்துடன் காணப்படுகிறது?' என்று கேட்டால், இந்தியாவில் என்பேன். 'இந்த உலக வாழ்வு இத்தோடு முடிந்து போவதில்லை. அழிவற்ற மறுவாழ்வுக்கு நம்மை அழைத்துச் செல்கிறது' எனத் தெளிவாக தெரிவிக்கும் தேசம் எது?' எனக் கேட்டால்,

இந்திய தேசம் என்பேன். ‘ஒவ்வொரு மனிதனின் அகவாழ்க்கை தெளிவானதாகவும், தூய்மையானதாகவும் இருக்க வேண்டும் என்பதை எந்த நாடு கற்பிக்கிறது?’ எனக் கேட்டால், இந்திய தேசம் என்பேன் எனச் சொல்கிறார். கொல்கத்தா, மும்பை, சென்னை போன்ற நகரங்களில்தான் இந்தியா வாழ்கிறது என நினைத்தால் அது தவறு. உண்மையான இந்தியாவைத் தரிசிக்க அதன் கிராமப் புறங்களுக்குச் செல்ல வேண்டும் என்கிறார் மாக்ஸ் முல்லர். எந்தத் துறையைப் பற்றிய அறிவைப் பெறவேண்டுமானாலும் இந்தியாவில் பெறலாம்.

## சிந்தனைக் களஞ்சியம்

உலகெங்கிலும் வாழும் மக்களின் மனப் போராட்டங் களுக்கு இந்தியாவில் மருந்து உண்டு. நிலவியலைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமானால், இமயமலையில் தொடங்கி இலங்கை வரையிலும் சென்று பார்த்துப் படிக்கலாம். தாவர இயலைப் பற்றிய அறிவைப் பெறுவதற்கு, இந்திய நாட்டில் ஏராளமான வாய்ப்புகள் உண்டு. விலங்கியலைத் தெரிந்து கொள்ள வேண்டுமானாலும் இந்தியா பேருதவி செய்யும். மனித இனவியலைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால், வாழும் மனிதவியல் காட்சியகமாக இந்தியா மிளிர்கிறது. தொல்பொருள் ஆய்வியல் பற்றி அதிகம் தெரிந்து கொள்ளவும் இந்தியாவிற்குத்தான் செல்ல வேண்டும் என்கிறார் மாக்ஸ் முல்லர். இந்திய தேசத்திலிருந்து தந்தமும், சந்தனமும், மயிலிறகும், வாசனைத் திரவியமும் பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட செய்தியை வரலாறு நமக்குத் தெரிவிக்கிறது. இந்தியாவிற்கு உண்மை அறிவைப் பெறுவதற்காகச் செல்ல விரும்பும் ஒவ்வொருவரும், இந்திய தேசத்தைத் தங்கள் முன்னோர்களின் வீடு என்றே கருதிப் பார்ப்பார்கள். செயல்படுவதற்கும், சிந்திப்பதற்கும் அன்றும், இன்றும் இந்தியா சிந்தனையாளர்களுக்கு ஒரு மாபெரும் களமாகவே அமைந்துள்ளது. There are many bright dreams to be dreamed about India and many bright deeds to be done in India, if only you will do that.’ இந்திய தேசத்தின் லட்சிய வடிவத்தையே

உலகிற்குக் காட்ட, தான் விழைவதாகக் குறிப்பிடுகிறார் மாக்ஸ் முல்லர். வரலாற்று ஆசிரியர்களின் தகவல்களையும் இந்திய தேசத்தின் புனித நூல்களையும் துணைக்கு அழைத்துக் கொண்டு பாரத தேசத்தின் உண்மைச் சித்திரத்தைத் தீட்டுகின்றார். 'It is my wish or intention to draw an ideal picture of India, leaving out all the dark shades and giving you nothing but sweetness and light.'

இந்திய தேசத்தில் வாழும் மக்களைப் பற்றிய வெளிநாட்டவரின் சில தவறான எண்ணங்களை மாற்றுவதற்குத் தம் விரிவுரையின் மூலமும், எழுத்துக்களின் மூலமும் பெரிதும் முயன்றவர் மாக்ஸ் முல்லர். இந்தியர்களைப் பற்றிய தம் உயர்ந்த எண்ணத்தைப் போலவே, பலரும் இந்திய தேசத்தின் மேல் வைத்திருந்த அபிமானத்தை நமக்கு எடுத்துரைக்கிறார். வாரன் ஹேஸ்டிங்ஸ் இந்தியர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது, 'இந்தியர்கள் பண்பில் சிறந்தவர்கள், தாராள குணமும், நன்றி உணர்வும் அன்பும் உடையவர்கள். தங்களுக்குத் தீமை செய்பவர்களுக்குக் கூட, திருப்பித் தீமை செய்தல் தவறானது என்ற எண்ணமுடையவர்கள். உண்மையின் மேல் நாட்டமும், சட்டத்தை மதித்து நடக்கும் தன்மையும் உடையவர்கள்' என்கிறார். பிஷப் ஹீபர் 'இந்தியர்கள் வீரமும், பண்பாடும், அறிவுத்திறனும், அறிவை வளர்ப்பதில் ஆர்வமும் உடையவர்கள். நிதானம் தவறாத உழைப்பாளிகள். தங்கள் குழந்தைகளிடத்திலும், பெற்றோரிடத்திலும் அதிக அன்பு உடையவர்கள். பொறுமையும், நிதானமும் உடையவர்கள்' என்கிறார்.

சர். தாமஸ் மன்ரோ, 'ஐரோப்பிய நாடுகள் எதற்கும் இந்தியா குறைந்ததல்ல; ஐரோப்பாவில் வாழும் எந்த இனத்திற்கும் இந்திய இனம் குறைந்தது அல்ல' என்கிறார். இரக்க குணமும், விருந்தோம்பும் பண்பும், பெண்களை மரியாதையுடன் நடத்தும் பாங்கும் இந்தியர்களிடம் காணப்படும் அரிய பண்பு என்கிறார். தன் சொந்த அனுபவத்தில் இந்தியப் பண்டிதர்கள் பலருடன் பழகும் வாய்ப்பைப் பெற்ற மாக்ஸ் முல்லர், அவர்களது பரந்த மனோபாவத்தையும், உண்மையின் மேல் அவர்கள்

கொண்டிருந்த நாட்டத்தையும், ஆற்றலையும், எளிமையையும் கண்டு வியந்திருக்கிறார். ஏதாவது சிறு தவறுகள் செய்திருந்தால், அவைகளுக்குக் காரண காரியங்களைத் தேடாமல், உடனே அத்தகைய தவறுகளை ஏற்றுக் கொண்டு, திருத்திக் கொள்ளும் மனோபாவம் உடையவர்கள் இந்தியர்கள் என்றும், பாராட்டையும் வெற்றியையும் விட, உண்மைக்கும், சுய கௌரவத்திற்கும் முக்கியத்துவம் அளித்தவர்கள் என்றும் குறிப்பிடுகிறார். வணிகத் துறையில் நேர்மையானவர்கள் என்று பெயர் பெற்றவர்கள். சத்தியம் என்ற சொல்லின் உண்மைப் பொருளை உணர்ந்தவர்கள். எனவேதான், இந்திய இலக்கியங்களில் தூய அன்பிற்கும் உண்மைக்கும் பெரிதும் முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது.

## இதிகாச ஈடுபாடு

ஒவ்வொரு இளைஞனும் இந்தியாவிற்குச் செல்ல விரும்பினால், இந்திய வாழ்வை முழுமையாக அனுபவிப்பதற்கு அவன் சமஸ்கிருத மொழியைப் பயில வேண்டும் என்கிறார் மாக்ஸ் முல்லர். உலகில் எங்கும் காண முடியாத சில காட்சிகளை இந்தியாவில் காணலாம். மகாபாரதம், இராமாயணம் போன்ற இந்திய தேசத்து இதிகாசங்களைக் கிராமப்புறங்களில் உள்ள கோயில்களில் மக்கள் கூட்டமாக அமர்ந்திருக்க, ஒருவர் கதையையும் கவிதையையும் மாற்றி மாற்றிச் சொல்லிக் கொண்டிருப்பார். கேட்டுக் கொண்டிருப்பவர்கள், இராமர் வனவாசம் சென்று விட்டார் என்றதும் அழுவார்கள். வனவாசத்திலிருந்து திரும்பி வந்து முடிசூடிக் கொண்டார் என்ற கதையைச் சொல்லும் நாளில், வீட்டையும் கிராமத்தையும் விளக்குகளாலும், மலர்களாலும் அலங்காரம் செய்து, இராமர் அங்குதான் வரப்போகிறார் என்பதுபோல் பாவித்து மகிழ்வார்கள். மகாபாரதக் கதையோ, தொண்ணூறு நாட்களோ அல்லது ஆறு மாதமோ நடைபெறும். வியாசரும், வால்மீகியும் படைத்த இதிகாசங்களை எத்தனை முறை வேண்டுமானாலும் மக்கள் சோர்வில்லாமல் கூட்டம் கூட்டமாக இருந்து கேட்டுக் கொண்டிருப்பார்கள். இந்த அரிதான காட்சி இந்திய தேசத்து மக்களுக்கு அந்த நாட்டின் இதிகாசங்களின் மேல் இருந்த ஈடுபாட்டைக் காட்டுகிறது.

இமயத்தின் உயரத்தை, எவரெஸ்ட் சிகரத்தின் உயர்வை வைத்துக் கணக்கிடுவது போல, இந்தியாவின் உயர்வை வேதங்கள், உபநிஷதங்கள், வேதாந்தங்கள், நீதி நூல்கள் ஆகியனவற்றை வைத்துக் கணக்கிடலாம். 'The true history of the world must always be the history of the few and as we measure the Himalaya by the height of Mt. Everest, we must take the true measure of India from the poets of the veda, the sages of the Upanishads the founders of the Vedanta and Sankhya philosophies and the authors of the oldest law books.'

**வாழ்க்கை ஒரு பயணம்**

இந்திய நாட்டின் இணையற்ற தொன்மை இலக்கியங்களைக் குறைகூறும் விமர்சகர்களின் வாசகங்கள் மாக்ஸ் முல்லரிடத்தில் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தின. வேதங்களின் உண்மைப் பொருளை உணர முடியாதவர்கள், இந்திய தேசத்து வேதத்தில் பெரிதாக ஒன்றுமில்லை என்று விமர்சித்தார்கள். அவர்களுக்கும் பதில் உரைத்தார் முல்லர். எப்பொழுதும் இந்த உலகச் சிந்தனையில் உழன்று கொண்டிருக்கும் மனிதர்கள், சில வேளைகளில் தங்களையே 'நான் யார்? இந்த உலக வாழ்வின் பொருள் என்ன? மற்றவர்களின் துன்பத்தில் நாம் மகிழ்ச்சி அடைவது சரிதானா?' என்று கேட்டுக் கொள்வார்கள். - அவ்வாறு எழுப்பப்படும் கேள்விகளுக்கு இந்திய நாட்டின் புனித நூல்களில்தான் பதில் காணப்படுகிறது. ஒவ்வொரு மனிதனின் குணமும் அவன் வந்த மரபு, கற்ற கல்வி, வாழும் சூழல் ஆகியனவற்றைப் பொருத்து உருவாகிறது. மனிதன் தன் கடினமான உழைப்பினால் மிகப் பெரிய நகரங்களையும், சாலைகளையும், பாலங்களையும், கப்பல்களையும் உருவாக்கி இருக்கிறான். சித்திரங்கள், சிற்பங்கள் என்று அவன் கலை அறிவு விரிவடைகிறது. மின்சாரத்தின் பயனாகப் பல வசதிகளைத் துய்க்கிறான் மனிதன். இந்த வசதிகளால் இந்தப் பூமியில், தன் மனித வாழ்க்கை சிறப்படைந்து விட்டதாக மனிதன் நினைக்கிறான். எனவே வாழ்வு முடிந்தவுடன் இந்த உலகை விட்டுப் பிரிந்து செல்வதற்கு வருந்துகிறான்.

இத்தகையதொரு வருத்தத்தைப் போக்குவதற்கு இந்திய நாட்டின் புனித நூல்கள்தாம் வழிகாட்டுகின்றன. உலகம், மனிதர்கள் கொஞ்சநாள் இளைப்பாறுமிடம். ஒரு கிராமத்தை விட்டு மற்றொரு கிராமத்திற்குப் பயணப்படுவதைப் போல, இந்த உலகைவிட்டு மற்றொரு உலகிற்குப் பயணப்படுவதுதான் மனித வாழ்க்கை என்றுரைக்கிறது இந்திய நாட்டுப் புனித நூல்கள். 'As a man journeying to another village, may enjoy a night's rest in the open air, but after leaving his resting place, proceeds again, on his journey the next day. Father, mother, wife and wealth are all but like a night's rest to us - wise people do not cling to them for ever.' வாழ்வு அநித்தியமானது என்பதைப் புனித இலக்கியங்கள் தெரிவித்தாலும், மனிதனுக்குத் திரும்பிப் பார்ப்பதற்குக் கடந்த காலமும், அவனுக்கு முன்னால் இனி நடந்து செல்ல வேண்டிய பாதையும் தென்படுகின்றன. தன் அனுபவ ஞானத்தின் மூலமாகத் தன் எதிர்காலத்தில் எதிர்ப்படும் புதிர்களுக்கு விடைகண்டு, அவன் தன் வாழ்வை நடத்திக் கொண்டு செல்ல வேண்டும். வாழ்வு நிரந்தரமானதல்ல என்றாலும், வாழும் காலத்தில் ஒருவன் செம்மையாக வாழ்தல் வேண்டும். காலையில் தோன்றி மாலையில் மறையும் விட்டில் அல்லன் மனிதன். 'For short as our life is, we are not mere may flies that are born in the morning to die at night.'

ஆயிரத்து தொள்ளாயிரத்தில் ஆக்ஸ்போர்டில் மாக்ஸ் முல்லர் இயற்கை எய்திய போது பெரியோர்கள் பலர், அவரது மனிதப் பண்பையும், தத்துவ சிந்தனையையும் பாராட்டி இரங்கல் செய்தி வழங்கினார்கள். லோகமானிய திலகர் தம் இரங்கல் செய்தியில், In him India has lost the warmest friend, the wisest lover and the most enthusiastic admirer' என்று கூறினார்.

இந்திய தேசம், தன்னை நேசித்த ஒரு ஞானியை, தன்னை ஆர்வத்தோடு ரசித்த ரசிகனை, ஒரு இதமான நண்பனை இழந்து விட்டது என்று தெரிவித்த வாசகம் முற்றிலும் உண்மையானது.

## நடைமுறை வாழ்வில் வேதாந்தம்

இந்தியாவில், கோடைகாலத்தின் மாலை நேரங்களில், இளைஞர்களும் முதியவர்களும் இணைந்து மர நிழல்களில் அமர்ந்து கொண்டு பரிமாறிக் கொண்ட வாழ்வியல் நெறிகள், வேத உபநிஷதங்களின் சாரத்தை உள்ளடக்கியனவாகவே இருந்தன எனத் தெரிவிக்கிறார் மாக்ஸ் முல்லர். அவர் எடுத்துச் சொல்லும் வேதம் காட்டும் அறங்கள் பலவும் திருக்குறளில் பேசப்படுவதைப் பார்க்கிறோம். உலக நிலையாமையை எடுத்துச் சொல்வதன் மூலம், மக்கள் வாழும் காலத்தில் அறம் செய்ய வேண்டும் என்ற உணர்வைப் பெறுவர் என எண்ணினார் திருவள்ளுவர். எனவேதான், நேற்று இருந்தவன் இன்று இல்லை என்று சொல்லப்படும் நிலையாமைதான் இவ்வுலகத்தின் தன்மை என்றுரைக்கிறார் திருவள்ளுவர்.

> "நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
> பெருமை உடைத்துஇவ் வுலகு" (குறள் : 336)

இந்திய தேசத்தில் வாழும் மக்கள், இந்த உலகின் தன்மையைப் பற்றி நன்றாகவே அறிந்து வைத்திருந்தனர் என்கிறார் மாக்ஸ் முல்லர். இந்தியர்களின் உரையாடல்கள், வழிபாடுகள் அனைத்திலும், கண்ணுக்குத் தெரியாமல் மறைந்திருக்கும் மறு உலகத்தைப் பற்றிய செய்திகளே நிரம்ப இடம் பிடித்துள்ளன. வாழ்வின் உன்னத நெறிகளை எடுத்துரைப்பவர்களை அரசர்களும், இளவரசர்களும், மக்களும் பெரிதும் மரியாதை செய்தனர்.

'They never looked upon their life on earth as something real. What was real to them was the invisible, the life to come, what formed the theme of their conversations the subject of their mediations was the real, that alone lent some kind of reality to their unreal phenomenal world.'

### புலன்களுக்குப் புலப்படாதது

கண்ணுக்குத் தெரியாமல் மறைந்திருக்கும் சூட்சும சக்திதான் உலகத்தை வழிநடத்திக் கொண்டிருக்கிறது என்று உபநிஷதம் தெரிவிப்பதையும் எடுத்துரைக்கிறார்

மாக்ஸ் முல்லர். ஒரு தந்தையும் மகனும் உரையாடுகின்றனர். கண்ணால் காண முடியாத சூட்சுமம் எவ்வளவு உண்மையானது, நிரந்தரமானது என்பதை மகனுக்குச் சொல்ல விரும்புகிறார் தந்தை. மகனை அழைத்து, அத்திப் பழம் ஒன்றை எடுத்து வரச் செய்கிறார். அதைக் கொண்டு வந்த மகனிடம், உள்ளே என்ன இருக்கிறது பார்! என்றார். மகனோ 'சின்னச் சின்ன விதைகள்' என்றான். 'அதில் ஒரு விதையை மட்டும் கையில் எடுத்து, அதற்குள் என்ன இருக்கிறதென்று பார்' என்றார் தந்தை. சின்னஞ்சிறு விதையை உடைத்துப் பார்த்த மகன், 'உள்ளே ஒன்றுமே இல்லையே' என்றான். 'கண்ணுக்குப் புலப்படாத, சூட்சும சக்தி ஒன்று, அந்த விதைக்குள் குடிகொண்டிருக்கிறது. அதுவே மிகப் பெரிய அத்திமரத்தைத் தோற்றுவிக்கும் ஆற்றல். அதுபோலத்தான் சூட்சுமமான இறை சக்தி, கண்களுக்குப் புலப்படாமல் உலகின் ஒவ்வொரு பொருளையும் உற்பத்தி செய்தும், வளர்த்தும், காத்தும் வருகிறது' என்று மகனுக்கு உணர்த்தினார் தந்தை. நிலையற்ற இந்த உலகில் மனிதர்களின் வாழ்வும் நிலையற்றது. இந்த உண்மைகளைத் தெரிந்து கொண்ட பின்பும், மக்கள் ஏன் ஒருவரையொருவர் பகைத்தும் துன்புறுத்தியும் வாழ்கிறார்கள் எனக் கேட்கிறது வேதம்.

'As all have to sleep together laid low in the earth, why do foolish people wish to injure one another.'

**நிலையற்ற உலகம்**

உலகம் நிலையற்றது. எனவே, அதில் வாழும் உயிர்களும் நிலையற்றவை. உடம்போடு உயிருக்குள்ள உறவு, தான் இருந்த கூடு தனியாக இருக்க, அதைவிட்டு விட்டு, பறவை வேறு இடத்திற்குப் பறப்பதைப் போன்றது.

"குடம்பை தனித்துஒழியப் புள்பறந் தற்றே
உடம்போடு உயிரிடை நட்பு" (குறள் : 338)

என்கிறார் திருவள்ளுவர். இக்கருத்தை மாக்ஸ் முல்லரின் வேத விளக்கத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம். நம் உடம்பு கடலின் நுரையைப் போன்றது. நம் உயிரோ பறவையைப்

போன்றது. நம் உறவுகள் நிரந்தரமானவையல்ல. கடலில் மிதக்கும் இரண்டு கட்டைகள், அவ்வப்போது அலைகளால் ஒன்று சேர்க்கப்பட்டு பின் பிரிவதைப் போன்றதே நம் உறவு. நம் வாழ்க்கை என்னும் சிறிய பயணத்தில் நாம் சந்திப்பவர்கள்தான், நம் உறவினர்களும் நண்பர்களும். உடம்பும், உறவும், செல்வமும் மனிதனை விட்டுப் போகும் என்பது உண்மை. அவனைப் பற்றித் தொடர்வது அவனது பாவ புண்ணியங்களைத் தவிர வேறெதுவுமில்லை. புதிய புதிய ஆடைகளை உடுத்திக் கொண்டு, உடுத்தி இருந்த பழைய ஆடையைக் களைவது போல, ஆத்மாவும் குடியிருக்கும் உடலை உதறிவிட்டு வேறு உடலுக்குள் புகுந்து, உலகிற்கு வரும் என்கிறது வேதம்.

'Our body like foam of the sea, our life like a bird, our company with those whom we love does not last for ever, as two logs of wood meet upon the ocean and then separate again thus two living creatures meet.

According to the Veda, the soul is eternal but the body of all creatures is perishable. When the body is destroyed, the soul departs elsewhere fettered by the bonds of our births, as man puts on new garments, in this world, throwing aside those which he formerly wore, even so, the self of man puts on new bodies which are in accordance with his acts.'

எனவே, இத்தகைய நிலையாமையை உணர்ந்து எக்காலத்திலும் நல்லனவற்றையே நாட வேண்டும் என்கிறார் திருவள்ளுவர்.

> "எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்
> மாணாசெய் யாமை தலை" (குறள் : 317)

உயிர்களுக்கு நிலையாகத் தங்கி இருக்கும் வீடு என்று ஒன்று இல்லை என்கிறார் திருவள்ளுவர்.

> "புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
> துச்சில் இருந்த உயிர்க்கு?" (குறள் : 340)

**நல்லன நாடல் வேண்டும்**

வேதாந்தத் தத்துவமானது, விடைகாண முடியாத மனிதர்களின் கேள்விகளுக்கு விடை சொல்கிறது. மனிதன் அனுபவிக்கும் துன்பங்களுக்கு அவனது வினைகளே காரணம் என்பதைத் தெள்ளத் தெளிவாக வேதம் எடுத்துரைக்கிறது. அதுபோலவே திருக்குறளும், தீயனவற்றை ஒழித்து நல்ல செயல்களையே ஒருவன் செய்தல் வேண்டும் என்றும், இன்னா செய்தவருக்கும் கூட இனியவையே செய்தல் வேண்டும் என்றும், இன்னா செய்தவர்களைத் தண்டிப்பதைக் காட்டிலும் அவர்களை மன்னித்து நல்லுதவி செய்வதே சிறந்தது என்றும் எடுத்துரைக்கிறது. இதே கருத்தை மகாபாரதத்திலிருந்து மேற்கோள் காட்டுகிறார் மாக்ஸ் முல்லர். உன்னால் ஏற்றுக் கொள்ள முடியாதவைகளை மற்றவர்களுக்குச் செய்ய வேண்டுமென்று ஏன் நினைக்கிறாய்? உனக்கு எது விருப்பமோ, அதையே நீ மற்றவர்களுக்கும் செய்.

'Bear it in mind thou shall not do to others what is disagreeable to thyself.'

இந்த ஒப்புமையையும் நாம் எண்ணிப் பார்த்துச் சிந்திக்கலாம்.

தன் வாழ்நாளை நிறைவுசெய்து கொண்டு, உலகை விட்டு மனிதன் செல்லும் போது அவனுடன் செல்பவர் யாரும் இல்லை. அவன் செய்த பாவ புண்ணியங்களே அவனைப் பின் தொடரும். எனவே, நல்வினையானாலும், தீவினையானாலும் அதற்குரிய பலனை ஒருவன் அனுபவித்தே தீர வேண்டும் என்பதை மனதில் இருத்த வேண்டும்.

'When thou goest away from here, no one will follow thee, wherever thou goest. Whatever act, good or bad man performs, of that by necessity, he receives the recompense.'

என்ற பொருள் பொதிந்த வேத வாக்கியங்களை நமக்கு நினைவுபடுத்துகிறார் மாக்ஸ் முல்லர்.

## மெய்யுணர்தல்

மயக்க உணர்வினால் உண்மைக்கும் பொய்ம்மைக்கும் வேறுபாடு தெரியாமல் வாழும் மனிதர்கள், மெய்ப்பொருள் அல்லாதனவற்றை மெய்ப்பொருளாகக் கருதிக் கொள்வதால், மீண்டும் துன்பத்தை உண்டாக்கும் பிறவிச் சூழலில் அகப்பட்டுக் கொள்கின்றனர். உண்மைப் பொருளையும், பொய்ப்பொருளையும் இனம் கண்டுகொள்ளும் நல்லறிவு வாய்க்கப் பெற்று, மெய்ப்பொருளையே நாடும் மனமுடையோர் பிறவி என்னும் கடலைக் கடப்பர். ஒருவனது அறிவில் கலந்திருக்கும் மயக்கம், மெய்ப் பொருளைக் காண முடியாமல் அவனுக்குத் தடையை ஏற்படுத்துகிறது. பலவகையிலும் அறிவு நூல்களைக் கற்று, தங்களது ஆற்றலை வளர்த்துக் கொண்ட அறிஞர் பெருமக்களுள்ளும் உலகளாவிய மதிப்பினைப் பெற்றிருந்தும் மெய்ப்பொருளை உணராதார் உண்டு. மெய்யுணர்வு பெற்றுத் தெளிந்தார்க்கு வானுலகம் அருகாமையில் உள்ளது என்கிறது திருக்குறள்.

"ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணியது உடைத்து" (குறள் : 353)

இக்குறளுக்குப் பொருள் சொல்லவரும் பரிமேலழகர், 'மறுபிறப்பும், இருவினைப் பயனும், கடவுளும், உளவோ, இலவோ என ஒன்றில் துணிவு பிறவாது நிற்றல்' எனக் குறளில் வரும் 'ஐயம்' என்ற சொல்லுக்கு விளக்கம் அளிக்கிறார். அத்தகைய ஐயத்திலிருந்து நீங்கி, மெய் உணர்ந்தார்க்கு எய்தி நின்ற நிலவுலகத்திலும் எய்தக் கடவதாய வீட்டுலகம் நணித்ததாதல் உடைத்து என்கிறார். மணக்குடவரோ, 'மெய்ப்பொருளை ஐயப்படுதலின்றி நீங்கித் துணிந்தவர்களுக்கு, இவ்வுலகத்திலும் மேலுலகம் நணித்தாம் தன்மை உடைத்து' என்கிறார். பரிதிமாற் கலைஞரோ, 'சந்தேகமற உபதேசத்தில் நிலைமை கண்டார்க்கு, பூமியில் இருக்கையிலே முக்தி பெற்றதற்கு ஒக்கும்' என்கிறார். 'உண்மை அறிவுடையோர்க்கு பக்கத்தில் உள்ள பொருள்களை மட்டுமல்லாமல், தொலைவிலுள்ள பொருள்களையும் கண்டறிய முடியும் என்ற அடிப்படையில்,

ஐயத்திலிருந்து நீங்கி உண்மைப் பொருளை உணர்ந்தவர்க்கு, வையத்தை விட வானம் பக்கத்திலுள்ளது' என்கிறார், புலவர் குழந்தை. இவர் விஞ்ஞானமும் ஒருவகையில் பார்த்தால் மெய்யுணர்வே என்ற கருத்தில் உரை வழங்கியிருக்கலாம்.

**கலக்கமும் தெளிவும்**

இந்த உலகில் கண்ணில் காணும் பொருள்களை எல்லாம் உண்மை என்று எண்ணிக் கொண்டு அதற்குமேல் எண்ணிப் பார்ப்பதற்கு ஞானம் இல்லாத மனிதர்களுக்கு இறைவனின் திருவடியைச் சென்றடையும் பிறவியற்ற வாழ்வு ஒரு புதிராகவே தோன்றும். உலக வாழ்க்கையைப் பற்றிய ஐயப்பாடுகள் எழும்போதெல்லாம் மேலோர் சான்றோர்களிடம் கேட்டுத் தெளிவு பெறுவர். உலகம், உயிர், அழிவற்றது, அழியாதது, நிலையானது, நிரந்தரமற்றது என்பன பற்றிய குழப்பங்கள் தன் மனதை ஆக்கிரமித்துக் கொண்ட போது, அந்தக் கலக்கத்திலிருந்து தெளிவு பெறுவதற்காக பகவான் கிருஷ்ணனைப் பற்றினான் அர்ச்சுனன். பகவானோ, அவன் ஐயப்பாடுகளைத் தன் உபதேசத்தினால் தெளிவுபடுத்திய பின்னர், புத்துயிரும் புதிய சிந்தனைகளும் உடைய ஒரு புது மனிதனாக அர்ச்சுனன் மாறினான். பாண்டு புத்திரனாக தேவேந்திரனது அருளால் பிறந்த அர்ச்சுனன், குருக்ஷேத்திரப் போர்க்களத்தில் கண்ணனால் கீதாபதேசம் செய்யப்பட்ட பிறகு, மீண்டும் பிறந்தான் எனச் சொல்வது பொருத்தமானதாகும். 'என் ஐயங்கள் எல்லாம் தீர்ந்து விட்டன. நான் தெளிவு பெற்றுவிட்டேன்' என்று அர்ச்சுனன் கண்ணனிடம் தெரிவித்தான். தெளிவற்ற மயக்க நிலையைப் புறந்தள்ளி விட்டு ஞானநிலையை அடைந்தான். அதுபோலவே, மனிதர்களும் மயக்க நிலை நின்று நீங்கி, மெய்யுணர்வு பெறும்போது, வானுலகைப் பூமியிலேயே அனுபவிக்கலாம். சந்தேகம் நீங்கி உண்மையை உணர்ந்தவர்களுக்குத் தேவலோகம், பூமியிலேயே வந்து சேரும் என்கின்றனர் இன்னும் சில உரையாசிரியர்கள். திருக்குறள் மூதறிஞர் ஆ.வே. இராமசாமி என்பார், 'ஐயம் நீங்கித் தெளிந்த

மெய்யறிவு உடையவர்களுக்கு மண்ணுலகை விட விண்ணுலகு மிகவும் நெருக்கமானதாகும்' என்கிறார். நாவலர் நெடுஞ்செழியன் தம் உரையில், 'ஐயப்பாட்டிலிருந்து நீங்கி மெய்யுணர்வு பெற்றவர்களுக்குக் குறைந்த அளவே பார்வையில்படும் இந்த நடைமுறை உலகத்தைவிட, பரந்த அளவில் பார்வையில் படும் இயற்கைப் பெருவழியே மிக நெருக்கத்திலிருப்பதாகக் கருதப்படும்' என்கிறார்.

விருப்பு, வெறுப்பு, அறியாமை ஆகிய குற்றங்கள் மெய்யுணர்வு உடையாரிடத்தில் சென்று தங்கா. அறியாமைதான், பிறவித் துயருக்குக் காரணம் என்பதை மெய்யுணர்ந்தோர் அறிவர். உலகில் காணும் பொருள்களை உண்மை என நம்பி, அவைகளைச் சார்ந்து ஒழுகினால் நமக்குத் துன்பமே மிஞ்சும். ஒவ்வொரு பொருளும் உன்னதமான செம்பொருளைச் சார்ந்து உள்ளது என்பதனை உணர்பவன் பற்றுக்களிலிருந்து விடுபடுவான். எனவேதான், திருவள்ளுவர் செம்பொருள் காண்பது அறிவு என்கிறார். ஐந்து புலன்களால் ஒரு மனிதன் அடைய வேண்டிய உணர்வுகளை முற்றிலும் துய்த்த போதிலும், அவன் மெய்யுணர்வு பெறவில்லை என்றால் பயனில்லை. இதனைத் திருவள்ளுவர்,

**"சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்**
**சார்தரா சார்தரு நோய்"** (குறள் : 359)

**காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்**
**நாமம் கெடக்கெடும் நோய்"** (குறள் : 360)

என்றுரைக்கிறார். வேத வேதாந்தங்களைப் பற்றிய தம் கருத்துக்களை வழங்கும் மாக்ஸ் முல்லர் உலகம் முழுவதிலும் வாழும் மனிதர்கள் கடைப்பிடிக்க வேண்டிய பல அறங்களைத் தம் கருத்துக்களாக வழங்குகிறார். இந்திய தேசத்தின் பண்புச் சிறப்பு முழுவதையும் transcendent என்ற சொல்லுக்குள் அடக்கி விடலாம் என்பது அவர் கருத்து.

வேதங்களும், தன்னை உணரும் அறிவை வேதாந்தம் என்றுரைக்கிறது. தன்னை அறிதலும், இவ்வுலகில்

அனைத்தையும் இயக்கும் உன்னத சக்தியான செம்பொருளை அறிவதுமே மெய்யுணர்வாகும். இந்திய தேசத்தின் முக்கியமான பண்புகளில் ஒன்று இந்த மெய்யறிவுதான் என்கிறார் மாக்ஸ் முல்லர்.

'The transcendent temperament acquired no doubt a more complete supremacy in the Indian character than anywhere else. If I were asked to indicate by one word, the distinguishing feature of the Indian character, as I have here tried, to sketch, if I should say it was transcendent.'

உலக அறிவைக் கடந்த உள்ளொளி என்னும் ஞானமே ஆதிகாலந்தொட்டு இந்திய தேச மக்களின் மெய்யுணர்வாய் இருந்துள்ளது. வாழும் உலகைப் பற்றிய அனைத்து அறிவையும் சேகரித்துப் பகுத்தும் தொகுத்தும் உணர்கின்றவர்கள் அறிவே சக்தி வாய்ந்தது என்று இன்று பறைசாற்றிக் கொள்கின்றனர். நாம் வாழும் உலகம் இத்தகைய அறிவை அடைவதையே தன் இலக்காகக் கொண்டுள்ளது. ஆனால் உண்மை அறிவு இத்துடன் முடிந்து போவதில்லை. இதையும் தாண்டி, உலக அறிவைக் கடந்த மெய்ஞானத்தை நோக்கி மனிதர்கள் செல்ல வேண்டும். இந்த உண்மையை உலகோர் உணர்வதற்கு முன்னரே உணர்ந்த பெருமை இந்தியர்களுக்குண்டு. எனவேதான் இந்திய தேசத்தில் வழிவழியாக ஞானிகள் தோன்றி அருள் ஒளி பரப்பினார்கள். இவ்வாழ்வைக் கடந்த மற்றொரு நிரந்தர வாழ்வு உண்டு என்பதனை முற்றிலும் உணர்ந்த மெய்யறிவாளர்களிடம் அழியும் பொருட்களைப் பற்றிப் பேசினால் அவர்கள், 'அழிவது என்பதே அழியாப் பொருளில்லாமல் சாத்தியமில்லை' என்கின்றனர். ஏனென்றால் அந்த அழியாப் பொருளே தோற்றம், மாற்றம், வளர்ச்சி, மறைவு அனைத்திற்கும் காரணமாக அமைந்துள்ளது. மெய்யறிவாளனிடத்தில் சாவைப் பற்றிப் பேசினால் 'அது பிறப்பின் தொடக்கம்' என்பான். காலத்தைப் பற்றிப் பேசினால் 'அது நிரந்தரத்தின் நிழல்' என்பான். நமக்கு அறிவைப் பெருக்கவும், இன்ன பிற செயல்களைப் புரியவும் கருவியாய் இருப்பது ஐம்புலன்கள் என்று சொன்னால், 'அவைகளே நம் ஆத்மாவின்

சுதந்திரத்தைத் தடை செய்யும் விலங்குகள்' என்பான். இந்த உலகம், இந்த வாழ்க்கை, நாம் பார்க்கும் பொருட்கள், நாம் கேட்பவை, தொடுபவை அனைத்தும் உண்மையென நினைக்கிறோம். 'இது என் வீடு'; 'இதுதான் என் கடமை'; 'இங்குதான் எனக்கு இன்பம்' என்று மனிதர்கள் நினைக்கிறார்கள். ஒரு மெய்யறிவாளனோ, 'வாழும் இந்த உலகம் ஒரு காலத்தில் இல்லாமல் இருந்தது; இனி ஒரு காலத்தில் இல்லாமலும் போகலாம். வாழ்க்கை என்பது ஒரு குறுகிய காலக் கனவு. இந்த உலகில் நாம் அனுபவிக்கும் எதுவும் நிரந்தரமல்ல. குடும்பம், மனைவி, குழந்தைகள், நம் உடல், நம் செல்வம் அனைத்தும் நம்மை விட்டுப் போகும். அப்படியானால் நம்முடன் வருவதுதான் என்ன எனக் கேட்டால், நாம் செய்த நன்மையும் தீமையுமே என்பதைத் தம் வேத விளக்கவுரையில் தெளிவுபடுத்துகிறார் முல்லர்.

'Our own age is proud of that kind of knowledge and to be content with it and never to attempt to look beyond it... but for all that there is a beyond and he who has once caught a glance of it, is like a man who has gazed at the sun wherever he looks every where he sees the image of the sun. Speak to him of finite things, and he will tell you, that the finite is impossible and meaningless, without the infinite. Speak to him of time, and he will call it mere shadow of eternity. To us the senses seem to be the organs, the tools, the most powerful engines of knowledge; to him they are, if not actually deceivers at all events, heavy fetters, checking the flight of the spirits. To us this earth is life; all that we see and hear and touch is certain. To him earth is a thing that once was not, and that again will cease to be. This life is a short dream.' என்ற வாசங்களை, 'இந்தியா நமக்கு என்ன கற்றுக் கொடுக்கிறது' (India, what can it teach us) என்ற நூலில், படிப்பவர்கள், மாக்ஸ் முல்லரின் தெளிந்த சிந்தனையை உணர முடியும். வேத உபநிஷதங்களின் சாரமே, மேல்நாட்டவர் அதுவரை அறிந்து வைத்திருக்காத தத்துவ சிந்தனைகளாய் மாக்ஸ் முல்லர் மூலம் வெளிப்படுகிறது.

## வாய்மை என்னும் தூய்மை

எங்கு வாய்மைக்குப் பெரிதும் மதிப்பளிக்கப்படு கிறதோ, அங்கு பொய்ம்மை எப்பொழுதும் சிறுமை என்று கருதப்படும். அதர்வண வேதத்தில், பொய்யுரைப்பவன் மேலும் மேலும் பல துன்பங்களை அனுபவிப்பான் என்றும், அத்துன்பங்கள் உண்மை சொல்பவனை அணுகா என்றும் காணப்படுகிறது. உண்மையைப் பற்றிப் பேசும் மாக்ஸ் முல்லர், பிரமாணங்களிலிருந்து சில செய்திகளை எடுத்துரைக்கிறார். எரிந்து கொண்டிருக்கும் அக்னியில் நெய் வார்த்தது போல, உண்மை சொல்லச் சொல்ல ஒருவனின் உள்ளொளி பெருகிக் கொண்டே இருக்கும். அக்னியில் தண்ணீர் விட்டால், அது எவ்வாறு அவிந்து போகுமோ அதுபோல, ஒருவன் சொல்லும் பொய்யானது அவனிடம் தங்கி இருக்கும் ஒளியைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்து கடைசியில் அவனைத் தீயவனாக்கும். ஆகவே மனிதர்கள் உண்மை பேசுவார்களாக! என்கிறது பிரமாணம்.

Whosoever speaks the truth makes the fire on his own altar blaze up as if he poured butter into lighted fire. His own light grows larger, and from tomorrow, to tomorrow he becomes better. But whosoever speaks untruth, he quenches the fire on his altar as if he poured water into the lighted fire, his own light grows smaller and smaller and from tomorrow to tomorrow he becomes more wicked. Let man, therefore speak truth ony.

### உண்மையும் பொய்யும்

பொய் பேசுகிற மனிதன் தூய்மையற்றவனாகிறான். எனவே, ஒருவன் பொய்ம்மையைக் கைவிடுதல் வேண்டும். ஒருவருக்குத் தரப்படும் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதும் வாய்மையே ஆகும். கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதில் சிரமங்கள் ஏற்படுமானால், கொடுத்த வாக்குறுதியை மீறலாம் என்று எண்ணுவது பொய்ம்மையின் பாற்படும். இதனை விளக்க வந்த மாக்ஸ் முல்லர், இராம காதையில், கைகேயிக்கு தசரதன் கொடுத்த வாக்குறுதியை நமக்கு நினைவுபடுத்துகிறார். தன் மகன் பரதன் நாடாள

வேண்டும் என்றும், கோசலை மைந்தன் இராமன் பதினான்கு ஆண்டு காலம் வனம்புக வேண்டும் என்றும், இரண்டு வரங்களைக் கேட்டாள் கைகேயி. வரங்கள் என்னென்ன என்பதைத் தெரிந்து கொள்ளும் முன்னதாகவே, எதைக் கேட்டாலும் தருவதாக வாக்களித்தான் தசரதன். நாடாள வேண்டிய இராமன் கானகம் செல்லவேண்டும் என்றும், அரசு முறைமைக்கு மாறாக இளையவன் நாடாள வேண்டும் என்றும் கைகேயி வரங்கேட்க, அதுகேட்டுத் துடிதுடித்தான் தசரதன். இராமனோ, தகப்பனின் வாக்கைக் காப்பாற்றுவதற்காகக் கானக வாழ்க்கையை மேற்கொள்ள முடிவு செய்தான். இராமனைப் பிரிந்த துயரம் தாளாமல் மாண்டு போனார் தசரதன். அதன் பின்னர், காட்டில் இருந்த இராமன் திரும்பி வந்து ஆட்சி புரிய வேண்டும் என்று அனைவரும் விழைந்தனர். இராமனோ பதினான்கு ஆண்டு காலங்கள் நிறைவடைவதற்கு முன் திரும்பி வந்தால், தன் தந்தை கொடுத்த வாக்கு பழுதுபடும் எனச் சொல்லி, எத்தகைய இடர்ப்பாடுகள் வந்தாலும் தந்தையின் வாக்கைக் காப்பாற்றியே தீருவேன் என்று வனவாசத்தைத் தொடர்ந்தான். மக்கட்பேறு என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர், 'இத்தகைய புதல்வனைப் பெற இவன் தந்தை என்ன தவம் செய்தானோ' என்று சொல்லும்படியாக ஒரு புதல்வன் இருத்தல் வேண்டும் என்கிறார்.

> **"மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை**
> **என்நோற்றான் கொல்எனுஞ் சொல்"** (குறள் : 70)

என்ற குறள், இராமனுக்கு மிகவும் பொருந்தும். அதர்வண வேதம் 'ஒரு மகன், தந்தையின் ஆக்ஞையை அனுசரித்து நடக்க வேண்டும் என்றும், தாயோடு ஒரு மனமுடையவனாக வாழ வேண்டும் என்றும், பகையின்றி, கன்றைப் போலவும், பசுவைப் போலவும், பெற்றோரும் குழந்தைகளும் அன்புடன் இருக்க வேண்டும்' என்றும் தெரிவிக்கிறது.

## இராமனும் ஜாபாலியும்

இராமாயணத்தில் இராமனுக்கும் ஜாபாலிக்கும் நடைபெற்ற உரையாடலையும் மாக்ஸ் முல்லர் நினைவுபடுத்துகிறார். ஜாபாலி, இராமனைப் பார்த்து, "ரகுவம்சத்தில்

பிறந்தவனே; சிறந்த பண்பொழுக்கமும், உன்னதமான உணர்வுகளும் உடைய நீயா சாதாரண ஒரு மனிதனைப் போல், உறவை எண்ணிக் கலங்குகிறாய். இந்த உலகில் பிறந்தவர்களுக்குள் உண்மையாய் சிந்தித்துப் பார்த்தால் உறவென்பது இல்லை. ஒருவன் தனியாகவே பிறக்கிறான், தனியாகவே இறக்கிறான். தாயென்றும் தந்தையென்றும் மாண்டு போன பின்பும் உறவு கொண்டாடுவது பைத்தியக்காரத்தனம் அல்லவா? தசரதன் வேறு, நீ வேறு, மாண்டு போன தந்தைக்கென்று பிண்டங்களைக் கொடுத்து சிரார்த்தம் செய்கிறாயே! மூதாதையர்களுக்கு இவ்வாறு. வழங்கப்படும் பிண்டங்கள் அவர்களைச் சென்று சேருமென்று நினைக்கிறாயா? நீ அபிமானம் கொண்டிருக்கும் புனித நூல்களில் சொல்லப்படும் பற்றின்மை, யாகம், வள்ளன்மை, பக்தி முயற்சிகள் இவைகள் அனைத்தும் திறமைமிகுந்த மனிதர்களால் சுயலாபத்திற்காக எழுதப்பட்டவை. அறிவோடு பொருந்தாத எந்தவொரு செயலையும் ஏற்றுக்கொள்வது சரியல்ல. இந்த உலகம் வேறு, அந்த உலகம் வேறு என்றா இருக்கிறது. இந்த உலகம்தான் அந்த உலகம். இந்த உலகில் நல்லவர்கள் யாரும் எந்த நன்மையும் அடைவதில்லை. சொல்லப்போனால், தீயவர்கள் இன்பமும், நல்லவர்கள் துன்பமும் அனுபவிக்கிறார்கள். எனவே, சோகத்தைத் தள்ளிவிட்டு வாழ்க்கையை மகிழ்ச்சியுடன் அனுபவிப்பாயாக" என்கிறான். சாஸ்திரம் தெரிந்தவர்கள், அதிலும் குறிப்பாக அரச சபையில் பணிபுரிவோர், சிற்சில வேளைகளில் மற்றவர்களை மகிழ்ச்சிப்படுத்த வேண்டும் என்பதற்காக, தர்மங்களைக் கூட வளைத்துப் பேச முற்படுவர்என்பதற்கு ஜாபாலி ஓர் உதாரணம்.

ஜாபாலி பேசக் கேட்ட இராமன், அவரைப் பார்த்து, "தாங்கள் கூறிய சொற்கள், ஒரு அறிவுரையைப் போலவும், உண்மையைப் போலவும் வெளிப்பார்வைக்குத் தோன்றினாலும், அவைகள் உண்மை அல்ல; பாவங்களைப் பற்றிக் கவலைப்படாமல் மகிழ்ச்சியாய் வாழ்ந்தால் போதும் என்று எந்த நல்ல மனிதனும் நினைப்பதில்லை. நன்னடத்தையே ஒரு மனிதனை உயர்ந்தவனாக்குகிறது.

எவ்வளவு திறம் படைத்தவனாக இருந்தாலும், அவன் நன்னடத்தை இல்லாதவனாய் இருந்தால் கீழானவனே. சத்தியமும் தயையும்தான் ஒரு அரசனுக்கு இருக்க வேண்டிய பண்புகளில் உயர்ந்தவைகளாகும். ஒரு நல்ல அரசு உண்மையின் மேல்தான் நிறுவப்பட வேண்டும். துறவிகளும், தெய்வங்களும் உண்மைக்கு மதிப்பளிக்கின்றனர். உண்மையே பேசுகிற மனிதன் உலகில் வாழும்போதே உயர்ந்த நிலையை அடைவான். நல்ல மனிதர்கள் பொய்யர்களைக் கண்டால் பாம்பைக் கண்டது போல அச்சப்படுவார்கள். உண்மை என்ற உயர்ந்த பண்பிலிருந்தே அனைத்து நல்ல குணங்களும் பிறக்கின்றன. உண்மையை விட உயர்ந்தது வேறு எதுவும் இல்லை. அவ்வாறு இருக்கும்போது, மாண்டுபோன என் தந்தையின் வாக்கைக் காப்பாற்ற வேண்டும் என்று நான் முடிவு செய்தது எப்படி தவறாகும்? கொடுத்த வாக்கு எப்படியானாலும் ஆகட்டும் என்று சத்தியத்திற்குப் புறம்பாக நடப்பவனல்லன் நான்" என்று பதிலுரைக்கிறார்.

**பாரதம் தரும் சேதி**

மகாபாரதத்திலிருந்தும் மேற்கோள் காட்ட மாக்ஸ் முல்லர் தவறவில்லை. 'கொடுத்த வாக்கைக் காப்பாற்ற வேண்டும்; சத்திய வழி நடத்தல் வண்டும்' என்ற கருத்துக்களை விளக்கம் செய்யும் பல சம்பவங்கள் மகாபாரதத்தில் உண்டு. மகாபாரத யுத்தத்தில், யாராலும் வீழ்த்த முடியாத பீஷ்மரை அர்ச்சுனன் ஒரு உபாயத்தைக் கடைப்பிடித்து வீழ்த்தினான். பிறப்பில் பெண்ணாய் இருந்து, ஆணாக மாறிய சிகண்டி என்பவனைத் தனக்கு முன்னால் நிறுத்தி வைத்துக்கொண்டு, பீஷ்மர் மேல் அம்பு மழை பொழிந்தான். பதிலுக்குத் தாம் ஒரு அம்பு தொடுத்தால், அந்த அம்பு சிகண்டியின் மேல் பட்டு விடும் எனக் கருதி, தம் உயிர்போனாலும் கவலையில்லை என்று பீஷ்மர் அம்புதொடுக்காதிருந்தார். போர்க்களத்தில் ஒருவன் பெண் சாயலில் இருந்தால்கூட அவன் மேல் அம்பு தொடுப்பதில்லை என்ற விரதமுடைய பீஷ்மர், பெண்ணாயிருந்து ஆணாய் மாறிய சிகண்டியின் மேல் எவ்வாறு அம்பு தொடுப்பார்? எனவே, அர்ச்சுனனால்

சிகண்டியைக் காரணமாக வைத்துப் பீஷ்மரை வீழ்த்த முடிந்தது. உயிரைவிட கொண்ட கொள்கை முக்கியமானது என்று உண்மையுடன் வாழ்ந்து வந்துள்ளனர் பீஷ்மரைப் போன்ற பெரியோர்கள். இந்திய தேசத்தில் பொய்யாமை எந்த அளவு வலியுறுத்தப்பட்டிருக்கிறது என்பதனை, இராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாசங்களின் துணைகொண்டு விளக்குகிறார் மாக்ஸ் முல்லர். உண்மையின் சிறப்பை வலியுறுத்திப் பேசும் மாக்ஸ் முல்லர் சில காலகட்டங்களில், பொய் பேசுவது தவிர்க்க முடியாததாகி விடுகிறது என்பதையும், நம் புனித நூல்களிலிருந்தே எடுத்துரைக்கிறார். கோபத்திலும், அளவுக்கு அதிகமான மகிழ்ச்சியிலும், பயத்திலும், வலியிலும், துன்பத்திலும் மனிதர்கள் பொய் சொல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. குழந்தைகள், வயதால் தளர்ந்தவர்கள், குடிபோதைக்கு ஆளானவர்கள், மனநிலை சரியில்லாதவர்கள் பொய் சொல்ல நேரிடுகிறது. இருப்பினும் அத்தகைய பொய்களும், அற்பப் பாவங்கள் என்ற வரிசையில்தான் வைக்கப்படும். ஆயிரக்கணக்கான குதிரைகளைப் பலியிட்டு செய்யப்படும் யாகங்களை விட பேசப்படும் ஒரு உண்மை மேலானது என்ற கருத்தையும் எடுத்துரைக்கிறார். உலகின் எந்த இலக்கியத்திலும் ஆன்மீகப் பண்புகளுக்கும் உண்மைக்கும் இவ்வளவு முக்கியத்துவம் தரப்படவில்லை. இந்தியாவிற்குச் சென்று சத்தியத்தைப் போற்றி வாழும் மக்களை ஒருவன் சந்திக்க நேர்ந்தால், எல்லாவற்றையும்விட முதலில் தனக்குத் தானே உண்மையாய் இருக்க வேண்டும் என்ற பாடத்தைத் தான் இந்தியனிடத்தில் கற்றுக் கொள்வான் என்கிறார் முல்லர்.

## வாய்மை எனும் அறம்

திருவள்ளுவர், வாய்மையைப் பற்றிப் பேசும்போது, ஒருவன் தன் உள்ளம் அறிய பொய்யில்லாமல் நடப்பானானால் உலகத்தாரின் உள்ளங்களிலெல்லாம் இருப்பவனாவான் என்கிறார்.

> "உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
> உள்ளத்துள் எல்லாம் உளன்" (குறள் : 294)

உள்ளத்தில் பொய் இல்லாதவன் எல்லோர் உள்ளத்திலும் இடம் பிடிப்பான் என்ற வாசகத்தை, சத்தியத்தைக் கடைபிடிப்பதையே குறிக்கோளாகக் கொண்ட மகாத்மா காந்தியின் வாழ்க்கையோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம். தானமும் தவமும் செய்வாரை விட, உண்மை பேசுபவன் உயர்ந்தவன் என்று உண்மையின் சிறப்பை உலகறிய எடுத்துரைக்கிறார் திருவள்ளுவர்.

"மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானம்செய் வாரின் தலை" (குறள் : 295)

உள்ளதை உள்ளபடி சொல்வதுதான் வாய்மை என்று உலகம் எண்ணிக் கொண்டிருக்க, திருவள்ளுவரோ வாய்மை என்ற சொல்லின் மற்றைய பரிமாணங்களை நமக்கு எடுத்துக் காட்டுகிறார். மற்றவர்களின் மனம் வருந்துமாறு தீமையான சொற்களைச் சொல்வதும் வாய்மைக்கு மாறான பொய்ம்மை என்றே கொள்ளப்படும் என்கிறார்.

"வாய்மை எனப்படுவது யாதுஎனின் யாதுஒன்றும்
தீமை இலாத சொலல்" (குறள் : 291)

உண்மையைப் போல பொய்யை, மற்றவர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு பேசினாலும், தான் சொல்வது பொய் என்பதை ஒருவன் தெரிந்தே வைத்திருப்பான். எனவேதான்,

தன்நெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்" (குறள் : 293)

என்ற குறளில், ஒருவன் தன் உள்ளம் அறிவதாகிய ஒன்றைக் குறித்து பொய் சொல்லக் கூடாது. அவ்வாறு சொன்னால் அவனை மற்றவர்கள் வருத்துவதற்கு முன்னால், அவன் நெஞ்சமே வருத்தும் என்கிறார். இந்திய நாட்டின் புனித நூல்களிலிருந்து மாக்ஸ் முல்லரால் மேற்கோள்களாகக் காட்டப்படும் சில வாசகங்கள் திருக்குறளின் கருத்தை ஒத்திருப்பதைப் பார்க்கிறோம். தீமை செய்கிறவன் தன்னை யாரும் பார்க்கவில்லை என்று நினைக்கிறான். அவனைக் கடவுள் பார்த்துக் கொண்டிருப்பதோடு, அவனுடைய மனச்சாட்சியும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறது.

ஒருவனின் மனச்சாட்சிதான் உண்மையான சாட்சி. சில வேளைகளில் நாம் தனியாக இருப்பதாக நினைக்கிறோம். ஆனால், ஒருபோதும் நாம் தனியாக இருப்பதில்லை. நம்மோடு நம் மனமும் கூடவே இருந்து கொண்டிருக்கிறது. நாம் செய்யும் செயல்களில் எது நல்லது, எது தீயது என்பதைப் பார்த்துக் கொண்டே இருக்கிறது.

'Evil doers think indeed that no one sees them but the gods see them, and the old man within.

Self is the witness of self. Self is the refuge of self. Do not despise thy own self the highest witness of men.

If, friend, thou thinkest thou art, self alone remember there is the silent thinker (the highest self) always within thy heart and he sees what is good and what is evil.'

ஒருவன் எவ்வளவு நல்ல செயல்களை வாழ்க்கையில் செய்தாலும், அவன் பொய் சொல்பவனாக இருந்தால் அனைத்து நன்மைகளும் விழலுக்கு இறைத்த நீர் போலாகும். பொய்யாமை என்னும் அறம், எல்லா அறங்களையும் கொண்டு வந்து சேர்க்கும் என்ற திருவள்ளுவரின் கருத்தைப் புனித நூல்களிலும் பார்க்கலாம். எப்பொழுதும் கீழானவைகளை விட்டுவிட்டு உன்னதமானவைகளையே பார்க்க வேண்டும். நடப்பை மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்வதோடு நில்லாமல், தூரதிருஷ்டியோடு எதனையும் எண்ணிப் பார்க்க வேண்டும். கயமையை ஒழித்து நேர்மையையும், பொய்மையை ஒழித்து உண்மையையும் நிலைநாட்ட வேண்டும் என்ற இந்திய தேசத்தின் சிந்தனைகள் மாக்ஸ் முல்லரின் மனதை வெகுவாகக் கவர்ந்துள்ளன.

'O friend, whatever good, thou mayest have done from thy very birth all will go to the dogs, if thou speak an untruth.

Practise righteousness, not unrighteousness; speak truth, not untruth; look far, not near; look up toward the highest, not toward anything low.'

திருவள்ளுவர் மனிதர்கள் உயர்வானவைகளைப் பற்றியே நினைக்க வேண்டும் என்கிறார். நினைத்தவை எல்லாம் கைகூடாமல் போனாலும், உயர்வாக நினைப்பதை ஒருபோதும் விட்டுவிடக் கூடாது.

"உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்; மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து" (குறள் : 598)

என்னும் குறளை, வேதாந்தச் சிந்தனையோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

## வாழ்வாங்கு வாழ்தல்

### மக்கட் பண்பு

எவ்வளவு நாள் உலகில் வாழ்கிறோம் என்பதை விட எப்படி வாழ்கிறோம் என்பதே முக்கியமானது என்கின்றனர் பெரியோர். வாழும் காலத்தில் உயர்ந்த பண்புகளை வரித்துக் கொண்டு, மற்றவர்களுக்குத் துன்பம் தராமல் நன்மையே நாடி அற உணர்வுடன் வாழும் வாழ்க்கையே உன்னதமான வாழ்க்கையாகும். வாழ்க்கைக்கு உகந்த பல்வேறு நன்னெறிகளைத் திருவள்ளுவர் நமக்கு எடுத்துரைக்கிறார். அன்புடன் வாழ்ந்து, அறம் பேணி, நடுநிலை தவறாமல் ஒழுக்கமுடையவர்களாய் நாம் வாழ வேண்டும் என்பதைத் திருக்குறள் வலியுறுத்துகிறது. அரசனுக்கும், அமைச்சனுக்கும், குடும்பத் தலைவனுக்கும், தலைவிக்கும், மகனுக்கும், தந்தைக்கும், மனைவிக்கும், கணவனுக்கும், நாட்டில் வாழும் ஏனைய குடிமக்களுக்கும் தேவையான அறங்களைச் சுருக்கமாகவும், அழுத்தமாகவும் எடுத்துரைத்த தனிப் பெருமைக்குரியவர் திருவள்ளுவர். அறத்துப்பாலில் வரும் 'ஒழுக்கமுடைமை' என்னும் அதிகாரத்திலும், பொருட் பாலில் வரும் 'பண்புடைமை' என்னும் அதிகாரத்திலும் திருவள்ளுவர் ஒழுக்கத்தின் விழுப்பத்தையும், பண்பின் உயர்வையும் எடுத்துரைக்கிறார். பண்புடையவர்கள் இன்றும் உலகில் வாழ்வதால்தான், இந்த உலகமானது இயங்கிக் கொண்டிருக்கிறது என்கிறார் திருவள்ளுவர். எவ்வளவு கூர்மையான அறிவைப் பெற்றவர்களாய்

இருந்தாலும், அவர்களிடத்தில் மக்கட் பண்பு காணப்பட வில்லையென்றால், அவர்கள் ஓரறிவுள்ள மரத்திற்குச் சமானமாவர் என்கிறது திருக்குறள்.

"அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லா தவர்" (குறள் : 997)

தீய குணங்களை விட்டொழித்து நன்மையை நாடும் நல்ல மனிதர்களைப் பண்பாளர்கள் என்றழைக்கிறார் திருவள்ளுவர். ஒரு மனிதன் வெறுத்து ஒதுக்கத் தகுந்த தீய குணங்களான பொறாமை, சிற்றினம் சேர்தல், தற்பெருமை, பொய்யுரைத்தல் இவைகளை விட்டொழித்தல் வேண்டும். பொறாமை என்னும் தீய பண்பை வளர்த்துக் கொள்பவர்க்கு, வேறு பகை எதுவும் தேவையில்லை. அவனது பகைவர்கள் அவனுக்குத் தீங்கு செய்யத் தவறினாலும், பொறாமை தவறாமல் அவனுக்குத் தீமையைக் கொண்டுவந்து சேர்க்கும். தனக்கு எந்த ஆக்கமும் அறமும் வேண்டாமென்று நினைக்கிறவனே மற்றவர்களைப் பார்த்து பொறாமை கொள்வான். பொறாமை கொள்ளாமல் வாழ்வது ஒரு சிறந்த நெறியாகும். அதுபோலவே, ஒருவன் பிறர் பொருளை எந்தக் காலத்திலும் கவரும் எண்ணமுடையவனாக இருத்தல் கூடாது. அவ்வாறு செய்கிறவனுக்குக் குற்றம் வந்து சேர்வதோடு அவனது குடியும் கெட்டுப் போகும் என்கிறது திருக்குறள்.

"நடுவுஇன்றி நன்பொருள் வெஃகின் குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும்" (குறள் : 171)

பிறர் பொருளை வஞ்சிப்பது தவறு என்று சொல்வதோடு நிறுத்திக் கொள்ளாமல், மனதால் மற்றவரின் பொருளை வஞ்சித்து விடலாம் என்று எண்ணுவதும் குற்றம் என்கிறார் திருவள்ளுவர்.

உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல்" (குறள் : 282)

**புறங்கூறாமை நன்று**

ஒருவன் செய்யும் அறங்களை ஒருவன் போற்றாவிட்டாலும், மற்றவனைப் பற்றிப் புறங்கூறாமல்

இருப்பதுவே நல்லது. ஒருவன் இல்லாத இடத்தில் அவனைப் பழித்துப் பேசிவிட்டு, அவனைக் கண்டதும் முகமலர்ந்து பேசும் பழக்கமுடைய மாந்தர் திருவள்ளுவர் காலத்திலும் வாழ்ந்துள்ளனர். உண்மையான நகை என்பது, உள்ளத்து மலர்ச்சியின் வெளிப்பாடாக முகத்தில் காணப்படும் மலர்ச்சியாகும். உள்ளத்தில் கள்ளத்தை வைத்துக் கொண்டு, நேரில் முகமலர்ந்து காணப்படும் பொய் நகையாளர்களிடம் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்கிறார். ஒருவன் புறங்கூறிக் கொண்டு, பொய்யுடன் உயிர் வாழ்வதைவிட சாவது சாலச் சிறந்தது என்று புறங்கூறுவோரிடம் தான் கொண்டுள்ள சினத்தை வெளிப்படுத்துகிறார் திருவள்ளுவர்.

"அறன்அழீஇ அல்லவை செய்தலின் தீதே
புறன்அழீஇப் பொய்த்து நகை" (குறள் : 182)

புறங்கூறிப் பொய்த்துஉயிர் வாழ்தலின் சாதல்
அறங்கூறும் ஆக்கம் தரும்" (குறள் : 183)

மற்றவர்களைப் பற்றிப் புறம் பேசும் ஒருவனை அடுத்தவர்கள் பழித்துப் பேசும் நாள் வெகு தொலைவில் இல்லை. புறம் கூறுபவனின் குற்றங்களை மற்றவர்கள் தெளிவாக ஆராய்ந்து விமர்சனம் செய்யத் தலைப்படுவர். எனவே மற்றவர்களைப் பழித்துப் பேசும்போது, தனக்கு அந்த நிலை விரைவில் வரும் என்பதை ஒருவன் எண்ணிப் பார்க்க வேண்டும். மற்றவர்களின் தவறை உலகறியப் பழிதூற்றுவதே சிலருக்கு வேலையாக இருக்கும். அவ்வாறு பழித்துப் பேசினால், தான் தவறற்றவன் என்று மக்கள் நினைப்பார்கள் என்று, ஒருவன் எண்ணும் எண்ணமும் தவறானது. பழிதூற்றும் போதே ஒருவன் பண்பற்றவன் என்று தெரிந்து கொள்ளலாம். ஒருவரது தவறை அவர்களிடமே நேராக எடுத்துச் சொல்வதே முறையாகும். இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சொல்லி இருதரப்பிலும் ஆதாயம் பெற நினைக்கும் இழிவான மனிதனை அவன் இறந்தாலும் தவறில்லை எனச் சாடுகிறார் திருவள்ளுவர். எனவேதான், கண்ணின்று கண்ணறச் சொன்னாலும் சொல்லலாம்; ஆனால் ஒருவருக்குப் பின்னர் புறம் பேசுவதுதான் தவறு

என்கிறார். பழி சொல்லி வாழ்பவன் பூமிக்குப் பாரமாய் இருக்கிறான் என்பார் திருவள்ளுவர். அவனைத் தாங்கும் உலகம் 'இவனையும் சுமக்க வேண்டி இருக்கிறதே' என்று அவனிடம் வெறுப்புக் கொள்ளும். புறம் கூறுபவரிடம் சகவாசம் வைத்துக் கொண்டால், அவர்கள் குரங்கு கை பூமாலையைப் போல, நல்ல நட்பைப் பிய்த்து எறிந்து விடுவர். புறம்பேசித் திரியும் புன்மை உடையோர், தங்களிடம் நெருங்கிப் பழகுபவரின் குற்றத்தையும் தூற்றித் திரிவார்கள். இவ்வாறு செய்பவர்கள் அயலவர்களிடத்தில் எப்படி நடந்து கொள்வார்கள் என்று சொல்ல வேண்டியதில்லை. குற்றம் புரியும் மற்றவர்களைப் பார்க்கும் போது, நம்மிடத்திலும் சில குற்றங்கள் உண்டு என்று எண்ணும் தன்மை ஒருவனுக்கு இருந்தால், அவன் ஒருநாளும் புறங்கூறித் திரிய மாட்டான். அயலார் குற்றத்தைப் போலத் தன் குற்றத்தை ஒருவன் காண வல்லவனானால் உலகத்தில் உயிர் வாழ்க்கைக்குத் துன்பம் ஏதுமில்லை.

"ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுஉண்டோ மன்னும் உயிர்க்கு" (குறள் : 190)

என்கிறார் திருவள்ளுவர்.

## சினம் என்னும் நெருப்பு

மனிதனின் நல்ல பண்புகளையெல்லாம் சிதைக்கும் நெருப்பைப் போன்ற சினத்தினைக் கைவிடல் வேண்டும் என்று நமக்கு அறிவுறுத்தும் திருவள்ளுவர், சினத்தைச் 'சேர்ந்தாரைக் கொல்லி' என்று அழைக்கிறார். நெருப்பு எவ்வாறு தன்னில் போடப்பட்ட அனைத்துப் பொருள்களையும் சுட்டெரிக்குமோ, அதுபோல ஒருவனது சினமானது அவனைச் சேர்ந்தவர்களின் நட்புறவுகளை யெல்லாம் அழித்து, தன் இனத்தையும் சுட்டெரித்து விடும் என்கிறார். ஒருவனிடம் அளவுக்கு அதிகமாகச் சினப்படுவது, தன்னையே ஒருவன் அழித்துக் கொள்வதற்குச் சமமாகும். எந்த நிலையிலும் சினம் கொள்ளக் கூடாது என்பதனைச் சொல்ல வந்த திருவள்ளுவர், உனக்கு இன்னாதனவற்றை ஒருவன் செய்தாலும், அவனை வெகுளாமல் இருத்தல்

வேண்டும் என்கிறார். பரிதிமாற்கலைஞர், 'இணர் எரி தோய்வன்ன' என்னும் தொடருக்கு, 'பூங்கொத்தை அக்கினியில் இட்டாற்போலே' என்று பொருள் உரைக்கிறார். அக்கினியில் பூங்கொத்தைப் போடுவதைப் போல, ஒருவர் நமக்குப் பொல்லாங்கு செய்தாலும் அவ்விடத்திலும் சினப்படாது இருத்தல் வேண்டும் என்கிறார்.

**"இணர்எரி தோய்வன்ன இன்னா செயினும்**
**புணரின் வெகுளாமை நன்று"** (குறள் : 308)

சிலர் தங்கள் சினம் பலிக்குமிடத்தில் சினந்தும், பலிக்காத இடத்தில் தங்களைக் காத்துக் கொண்டும் இருப்பர். சினத்தைக் காப்பது என்பது தன் சினம் பலிக்குமிடத்திலும் வெகுளாமல் இருப்பது, யாரிடத்தில் சினமடைந்தாலும் அது தவறே ஆகும் என்கிறார் திருவள்ளுவர். எவ்வளவுதான் சினப்பட்டாலும், பலிக்காது என்று தெரிந்ததும், தன்னைவிட வலியவர்களிடத்தில் சினம் கொள்வது பயனற்றது. அதுபோலவே பலிக்கும் என்று தெரிந்து, மெலியவர்களிடத்தில் சினப்படுவதும் தவறானது. எனவே, யாரிடத்திலும் சினப்படாமல் இருப்பதே, ஒருவன் தன்னைத் தான் காத்துக் கொள்ளும் தகுதியாகும். சினம் ஒருவனைச் சார்ந்தவர்களையும், அவன் உறவினர்களையும் வேறுபடுத்துவதோடு நின்றுவிடாமல், அவனையே அழித்து விடும். இதனை நம் மனதில் பதிக்க விழைந்த திருவள்ளுவர், நிலத்தை ஒருவன் தன் கையினால் ஓங்கி அறைந்தால், அவன் கை வலிக்காமல் போகாது; கையே புண்பட்டுப் போகும். அதுபோல ஒருவனது சினத்திற்கு ஆளாகிறவன் எவ்வளவு துன்பப்படுவானோ அதைவிடவும் சினப்படுகிறவன் மிகுதியும் துன்பமடைவான் என்கிறார்.

**"சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு**
**நிலத்துஅறைந்தான் கைபிழையா தற்று"** (குறள் : 307)

### அழுக்காறு என்னும் பாவி

அழுக்காறு எனப்படும் பொறாமையைத் திருவள்ளுவர் 'அழுக்காறு என ஒரு பாவி' என்ற தொடரின் மூலம் சாடுகிறார். ஒருவனது செல்வத்தையும் அழித்து,

அவனைத் தீய வழியில் செலுத்த வல்லது பொறாமை. பொறாமை இல்லாமல் வாழ்வது என்பது உயர்ந்த ஒழுக்கநெறி. மனதில் பொறாமையுடையவன் யாருக்கு என்ன கேடு செய்யலாம் என்று எப்பொழுதும் தீய எண்ணத்துடனே இருப்பான். திருமகள் அவனுக்கு அருகில் செல்லவே மாட்டாள். அவள், தன் தமக்கைக்கு அவனைக் காட்டி, தான் நீங்கி விடுவாள் என்கிறார் திருவள்ளுவர். மனிதர்களால் பெரும்பாலும் விலக்க முடியாத தீமையாய் இருப்பது பொறாமை. உலகைத் துறந்த இரண்டு துறவிகள், ஒரு மலையுச்சியில் போய் தவம் செய்தாலும் அதில் ஒருவரை மக்கள் புகழ்ந்தால் அடுத்தவர் பொறாமையே கொள்வார். ஒருவனது உயர்வைக் கண்டு மகிழ்ச்சி அடைவதற்குப் பதிலாக பொறாமைப்படும்போது அவனது மனம் கீழான நிலைக்குச் சென்று விடுகிறது. எனவே, பொறாமை இல்லாமல் வாழும் இயல்பை ஒருவன் முயன்றேனும் பெறல் வேண்டும். அதுவே சிறந்த ஒழுக்க நெறியாகும் என்கிறார் திருவள்ளுவர்.

**"ஒழுக்காறாக் கொள்க ஒருவன் தன்நெஞ்சத்து**
**அழுக்காறு இலாத இயல்பு"** **(குறள் : 161)**

## ஒழுக்கமே உயர்வு

திருவள்ளுவர் எடுத்துரைக்கும் கருத்துக்களை, மாக்ஸ் முல்லரின் வேத விளக்கவுரை பிரதிபலிக்கிறது. எல்லா மனிதர்களுக்கும் பொதுவான அறங்கள் என்றிருப்பன வற்றைத் துறந்து விட்டு வாழ்வது வாழ்வாகாது. என்னென்ன குறைபாடுகளைக் களைந்து மனிதர்கள் நன்னெறியில் நிற்க வேண்டும் என்பதனையும், முயன்றாகிலும் தீய பண்புகளை விலக்கி விடுதலே ஒருவன் செய்யத் தகுந்தது என்பதையும் நமக்கு எடுத்துரைக்கிறார் மாக்ஸ் முல்லர்.

'To avoid backbiting, jealousy, pride, self-consciousness, unbelief, dishonesty, self priase, blaming others, deceit, covetousness, delusion, anger, and envy is considered to be the duty of men of all order.'

ஒருவன் நன்னடத்தையில் நிற்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றி 'புனித நூல்கள்' (Sacred books of India by Max Muller) சிறப்பாக எடுத்துரைக்கின்றன. மனித வாழ்க்கையில் கடைப்பிடித்தொழுக வேண்டிய நெறிமுறைகளை, நம் ஆன்றோர்கள் நமக்கு எடுத்துக் காட்டியுள்ளனர். அந்த உயர் நெறிகளைக் கடைப் பிடிக்காமல் மனம்போன போக்கில் போவதும், கால்போன போக்கில் நடப்பதுமாக இருப்பவன் இம்மையிலும், மறுமையிலும் துன்புறுவான்.

'To live according to the rule of conduct is doubtlessly the highest duty of all men. He whose soul is defiled by vile conduct perishes in the world and in the next.'

பக்தி முயற்சிகள், வேதபாராயணம், யாக பூஜைகள், தான தர்மங்கள் எதுவும் தன் கடமையைச் செய்யாமலும், நன்னடத்தை இல்லாமல் இருக்கும் ஒரு மனிதனைக் காப்பாற்றாது என்று தெளிவாகத் தன் விளக்கவுரையில் மாக்ஸ் முல்லர் எடுத்துச் சொல்லும் திறம் எண்ணிப் பார்க்கத் தகுந்தது.

'Neither austerity nor (the study of) the Veda, nor (the performance) the Agnihothra, nor lavish liberality can ever save him, whose conduct is vile and who has strayed from this (path of duty).

நன்னடத்தை இல்லாதவன் எவ்வளவு வேத பாராயணம் செய்தாலும், ஆறங்கங்களைப் பற்றித் தெளிவாக அறிந்திருந்தாலும், ஒரு பறவை முழு வளர்ச்சியடைந்த பின் கூட்டை விட்டுப் பறந்து செல்வதைப் போல, அவனது இறுதி நாளில் அனைத்தும் அவனை விட்டுப் பறந்து போகும்.

'The Vedas do not purify him, who is deficient in good conduct, though he may have learnt them, all together with the six angas the sacred text depart from such a man at death.'

நல்ல நடத்தை இல்லாத ஒழுக்கக்குறைவான மனிதனுக்கு, வேதங்கள் மகிழ்ச்சியைத் தாரா. அவனது பக்தி முயற்சிகள் எந்தப் பலனையும் அளிக்காது. அழகிய மனைவி அருகில் இருந்தாலும் அவளைப் பார்க்க முடியாத கண் பார்வையற்றனின் நிலைதான், ஒழுக்கமற்றவன் வேதத்தைப் படிப்பதனால் ஏற்படும் நிலை. நல்ல, தகுதியான பாத்திர மறிந்துதான் பாலையோ, தயிரையோ, வெண்ணெயையோ, தேனையோ வைத்துப் பத்திரப்படுத்துவர். சுடப்படாத, பச்சை மண் பாத்திரத்தில் பாலையோ, தயிரையோ வைத்து பத்திரப்படுத்த முயற்சித்தால் பானையும் பாழாகும், பாலும் வீணாகும். அதுபோலத் தகுதியற்றவன் மனதில் வேதம் தங்காது. காமம், வெகுளி, அழுக்காறு, அவா, பொய்ம்மை, பகை என்ற தீய குணங்களின் உறைவிடமாக இருக்கும் மனதில், வேதம் தங்குவது சாத்தியமில்லை.

'Just as milk, sour milk, clarified butter and honey, poured into an unburnt earthen vessel, perish owing to the weakness of the vessel' என்ற உவமை சிந்தனைக்குரியது.

திருவள்ளுவர் ஒழுக்கமுடைமை என்னும் அதிகாரத்தில், உயிரைவிடச் சிறந்தது ஒழுக்கம் என்றும், கற்ற மறைப் பொருளை ஒருவர் மறந்தாலும், மீண்டும் அதனை ஓதிக் கற்றுக்கொள்ள முடியும்; ஆனால் மறை ஓதுகிறவனின் ஒழுக்கம் குன்றினால், அவன் மிகுந்த இழிநிலையை அடைவான் என்றும் கூறுகிறார்.

"மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்" (குறள் : 134)

என்ற குறளுக்கு கற்ற வேதத்தை மறந்தாலும், மீண்டும் அதை ஓதி நினைவில் கொள்ளலாம்; ஆனால் மறை ஓதுபவனின் ஒழுக்கம் குன்றினால், அதை ஈடுகட்ட இயலாது என்று பரிமேலழகர் உரை தருகிறார். எனவே, ஒழுக்கமே உயர்நிலை என்பதனைத் தெளிவுற எடுத்துரைக்கிறார் திருவள்ளுவர். ஒழுக்கம் தவறுவதால் குற்றம் ஏற்படும் என்பதைத் தெரிந்து, மனவலிமையுடைய சான்றோர் ஒழுக்கத்தைத் தவறாமல் காத்துக் கொள்வர் என்கிறார்.

"ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக்கு அறிந்து" (குறள் : 136)

என்ற திருவள்ளுவரின் வாசகத்தை எண்ணிப் பார்த்தல் வேண்டும். நற்பண்புகள் இல்லாதவனின் மனதில் வேதம் தங்குவதில்லை என்ற கருத்தை எடுத்துரைக்கப் பச்சை மண் பாத்திரத்தில் வைக்கப்பட்ட பால், மோர் ஆகியவற்றின் நிலையை உவமை காட்டுகிறது முல்லரின் வேத வியாக்கியானம். திருவள்ளுவரும், பண்பில்லாதவனிடத்தில் இருக்கும் செல்வம், தூய்மையற்ற கலத்தில் வைக்கப்பட்ட பாலைப் போன்றது என்கிறார். நல்ல பாலை அதன் தன்மையும், சுவையும் மாறிப் போகாமல் இருக்கத் தூய்மையான கலத்தில் வைத்துப் பயன்படுத்த வேண்டும். அவ்வாறின்றித் தூய்மையற்ற கலத்தில் வைக்கப்படும் பால் திரிந்து போகும் நிலையை அடையும். பால் திரிந்தால் அதன் தன்மை கெட்டுப் போக, அந்தப் பால் யாருக்கும் பயன்படாது. அதுபோல, பண்பில்லாதவனிடத்தில் செல்வம் சேர்ந்தால், அது பூதம் காத்த புதையலைப் போல யாருக்கும் பயன்படாமல் வீணாய் போகும்.

"பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந்தீமை யால்திரிந் தற்று" (குறள் : 1000)

என்கிறார். இதேபோல், வினைத்தூய்மை என்னும் அதிகாரத்தில், வஞ்சனையான வழியில் பொருளைச் சேர்த்து வைத்துக் காப்பாற்றுதல், பச்சை மண்கலத்திற்குள் நீரை விட்டு அதைக் காப்பாற்றுதல் போன்றது என்கிறார். வஞ்சனையால் பொருளைச் சேர்ப்பதும் ஒழுக்கக் கேடேயாகும். இதனை,

"சலத்தால் பொருள்செய்துஏ மார்த்தல் பசுமட்
கலத்துள்நீர் பெய்துஇரீஇ யற்று" (குறள் : 660)

என்ற திருக்குறள் நமக்கு எடுத்துரைக்கிறது. இத்தகைய சிறந்த கருத்துக்களை திருக்குறளிலும் மாக்ஸ் முல்லரின் வேத விளக்கவுரையிலும் நிரம்ப நாம் காணலாம். வேத உபநிஷதங்களைக் கற்போர் இந்த ஒற்றுமையைக் கண்டு மகிழ்வதில் வியப்பொன்றுமில்லை.

## நல்விருந்து வானத்தவர்க்கு

திருவள்ளுவர் இல்லறத்தார் ஆற்ற வேண்டிய கடமைகளை அறத்துப் பாலில் இல்லறவியலில் தெரிவிக்கிறார். அன்பு, விருந்தோம்பல், இனியவை கூறல், செய்ந்நன்றியறிதல், நடுவுநிலைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பிறனில் விழையாமை, பொறையுடைமை, அழுக்காறாமை, வெஃகாமை, புறங்கூறாமை, பயினில சொல்லாமை, தீவினை அச்சம், ஈகை, புகழ் என்று பல்வேறு பண்பு நலன்களைச் சொல்லி, இவற்றை இல்லறத்தார் கடைப்பிடிக்க வேண்டிய பண்புகளாய் பட்டிலிடுகிறார். இல்லத்திலிருந்து அறம் வளர்ப்பவன் தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார், தாம் என்ற ஐவகையிடத்தும் அறநெறி தவறாமல் போற்றுதல் சிறந்த கடமையாகும் என்கிறார். இல்வாழ்பவனே துறந்தவர்க்கும், வறியவர்க்கும், இறந்தவர்க்கும் துணையாவான் என்கிறது திருக்குறள்.

> "தென்புலத்தார் தெய்வம் விருந்துஒக்கல் தான்என்றாங்கு
> ஐம்புலத்தாறு ஓம்பல் தலை" (குறள் : 43)

விருந்தினரைப் பேணுதல் இல்லறத்தாரின் தலையாய கடமையாகும். இல்வாழ்க்கை நடத்துவதே விருந்தினரைப் போற்றுவதற்குத்தான் என்கிறார் திருவள்ளுவர். விருந்தினரென்று திருவள்ளுவர் குறிப்பிடுவது, கூடி இருந்து பேசி மகிழத் தம்மைத் தேடி வரும் உறவினர்கள் அல்லர். நமக்கு முன்பின் தெரியாதவர்களே விருந்தினர்கள் ஆவர். அவர்களையே வடமொழியில் 'அதிதி' என்கிறோம். அத்தகைய விருந்தினரை நாள்தோறும் இல்லறத்தான் போற்ற வேண்டும் என்கிறார். விருந்தினராக வந்தவரை வீட்டின் புறத்தே இருக்க வைத்து விட்டு, தான் மட்டும் உண்பது, சாவா மருந்தாகிய அமிழ்தமாகவே இருந்தாலும் அது விரும்பத்தக்கதன்று என்கிறார். நல்ல செல்வநிலையில் இருப்பவன் விருந்தோம்பாவிடில் அவனும் ஒருவகையில் வறியவனே ஆவான்.

> "உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
> மடமை; மடவார்கண் உண்டு" (குறள் : 89)

அதிதியைப் பற்றி மாக்ஸ் முல்லரின் விளக்கவுரை 'ஒரு விருந்தினன் எப்பொழுது வந்தாலும் அவனுக்குத் தேவையானவற்றைக் கொடுத்துப் பராமரிப்பது இல்வாழ்வாரின் கடமை' என்கின்றது. எந்த நேரத்தில், எந்த விருந்தினர் வந்தாலும் தங்களுக்கு வேண்டியன கிடைக்கும் என்று எண்ணியே இல்லறத்தானைத் தேடி வருவர். எனவே, அந்த நம்பிக்கை வீண்போகாமல் விருந்தினனுக்கு உணவளித்து உபசரிக்க வேண்டும். 'சாவா மருந்தெனினும் வேண்டற் பாற்றன்று' என்றார் திருவள்ளுவர். அதைப்போலவே, பசியோடு ஒரு விருந்தினன் ஒரு வீட்டில் தங்கி இருத்தல் கூடாது என தன் விளக்கவுரையில் தெரிவிக்கிறார் மாக்ஸ் முல்லர்.

'Let him not turn away a guest, who comes in the evening. A guest should not dwell in his house, without receiving food as all rivers, both great and small, find a resting place in the ocean, evenso men of all orders, find protection by householders.'

"அதிதி தேவோ பவ." அதிதியைத் தெய்வமாகப் போற்று என்று உபநிஷதம் உரைக்கிறது. திருவள்ளுவரும், வந்த விருந்தினரை உபசரித்து, இனி வர இருக்கும் விருந்தினரை எதிர்பார்த்திருப்பவன் வானவர்க்கு நல்விருந்தாவான் என்கிறார்.

"செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு" (குறள் : 86)

### மழையும் உழவும்

வான் சிறப்பு என்னும் அதிகாரத்தில், மழையின் அவசியத்தை பத்து குறட்பாக்களில் எடுத்துரைக்கிறார் திருவள்ளுவர். மழையில்லை என்றால் நிலவளம் மட்டுமல்ல, கடல் வளமும் குன்றும் என்கிறார். வானிலிருந்து மழைத்துளி பூமியை நோக்கி வரவில்லையென்றால், ஒரு பசும்புல்லின் தலையைக் கூட பூமியில் பார்க்க முடியாது. வானம் வழங்கும் மழை உயிர்களுக்கு அமுதம் போன்றது.

"வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று" (குறள் : 11)

மழை பெய்து நாடு செழிக்க வேண்டுமென்ற பிரார்த்தனை அதர்வண வேதத்திலும் காணப்படுகிறது. 'மழையின் தாரைகள் புவியை மகிழ்ச்சியும் இன்பமும் உடையதாக மாற்றுக. விஸ்வரூபமான செடி கொடிகள் எங்கும் தோன்றுக. வர்ஷிக்கும் வர்ஷ தாரைகள் புவியை அனுசரித்துப் பொழிக. மேகமே புவியை நனைப்பாயாக. உன்னால் பொழியப்பட்டு பெருமழை பெய்யட்டும்' என்கிறது வேதம். மழை என்னும் வருவாய் வளம் குன்றி விட்டால், உழவர்களும் ஏர்கொண்டு உழ முடியாது என்கிறார் திருவள்ளுவர்.

"ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்" (குறள் : 14)

'உழுவார் உலகத்தார்க்கு ஆணி' என்பர். ஏனென்றால், உயிர் வாழ்வதற்கான பயிரை விளைவித்துத் தருபவர்கள் உழவர்களே ஆவர். உழவர்களின் கரங்கள் உழவுத் தொழிலைச் செய்யாமல் மடங்கி இருக்குமானால், உலகப் பற்றுக்களைத் துறந்து விட்டோம் என்று சொல்லும் துறவிகளும் உலகில் வாழ முடியாது. உழுவாரின் கையைத்தான் துறவிகளும் எதிர்பார்த்திருக்கின்றனர்.

"உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேம்என் பார்க்கும் நிலை" (குறள் : 1036)

இந்த உலகம் எந்தத் தொழிலைச் சுற்றிச் சுழன்றாலும், அத்தொழில்கள் அனைத்தும் ஏர்த் தொழிலுக்குப் பின்னால்தான் நிற்க வேண்டும். எனவே, அனைத்துத் தொழில்களிலும் முதன்மையிடம் வகிப்பது மனிதனின் பசி போக்கப் பாடுபடும் உழவர்களின் உழவுத் தொழிலேயாகும்.

"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம், அதனால்
உழந்தும் உழவே தலை" (குறள் : 1031)

என்கிறது திருக்குறள்.

உழவுத் தொழில் மென்மேலும் சிறப்படைவதற்கான பிரார்த்தனையை அதர்வண வேதத்தில் காண்கிறோம்.

'கலப்பைகளை இணையுங்கள்; நுகத்தடிகளை விசாலமாக்குங்கள். எங்களுக்குக் கொத்தும் குலையும் குவிக. அரிவாள் இன்னும் நெருங்கி பக்குவ தான்யத்தைப் பற்றுக. கலப்பையினது கொழுக்கள் நிலத்தை தனித்தனித் தள்ளுக; குடியானவர்கள் எருதுகளைச் சுகமாய் அனுசரிப்பார்களாக. கலப்பையே! உன்னைப் போற்றுகிறோம். நீ எங்களுக்கு நல்லது செய். நீ எங்களுக்கு நற்பயன் அளிப்பாயாக' என்கிறது வேதம்.

உலகம் தோன்றிய நாளிலிருந்து உயிர்களை உண்பித்து வரும் உழவினைப் பற்றிய சிறப்பம்சங்களைத் திருக்குறளிலும், வேதத்திலும் காண முடிகிறது.

## உயர்ந்த சிந்தனைகள்

திருவள்ளுவர் வாழ்ந்த காலத்தில், தமிழகத்தில் வறுமையும், சமூக ஏற்றத்தாழ்வுகளும், அறியாமையும், தனி மனித ஒழுக்கத்திற்கு விரோதமான குற்றங்களும் நிலவி வந்துள்ளன. அவற்றை எல்லாம் நேரில் பார்த்தும், பலர் சொல்லக் கேட்டும் வருத்தமுற்று, வறுமையும், அறியாமையும், ஏற்றத்தாழ்வும் இல்லாத ஒரு சமுதாயம் உருவாக வேண்டுமென்ற விழைவோடு எழுதப்பட்டதுதான் திருக்குறள். வேதாந்தத் தத்துவங்களும் உலகில் நிலவி வருகின்ற தீமைகளை எல்லாம் களைந்து மனிதர்களைச் சுற்றி வளைத்திருக்கும் பல்வேறு வாழ்க்கைச் சிக்கல்களில் இருந்து, அவர்களை விடுவிக்கத் தேவையான வழியைத்தான் காட்டுகின்றன.

'Vedanta Philosophy is a kind of solution for the problems of the existence of evil in the world.'

### தன்னை உணர்தல்

பண்டைக்காலத்தில், இல்லற வாழ்வு வாழ்ந்தவர்கள் செல்வம், புகழ், அதிகாரம், பற்று ஆகிய எதைப் பற்றியும்

அதிகம் கவலைகொள்ளாமல் தேவையானவைகளைக் கொண்டு திருப்தி அடைந்து நிம்மதியுடன் வாழ்ந்து வந்ததாக வரலாறு எடுத்துரைக்கிறது. ஒருவகையில் பார்த்தால், இல்லறத்தில் இருந்தாலும் துறவிகளைப் போலவே மக்கள் வாழ்ந்தார்கள். எனவே வஞ்சித்தல், பிறர் பொருளைக் கவர்தல், அடுத்தவர்க்குத் துன்பம் செய்தல் ஆகிய தீமைகளைப் பற்றி அறியாதவர்களாகவே மக்கள் வாழ்ந்தனர். பிற்காலத்தில்தான், சுயநலமும், ஆசையும் பெருகப் பெருக மனிதர்கள் வாய்மையை மறக்கத் தொடங்கினார்கள். பொய்ம்மை, சமூகத்தில் புகுந்துகொண்ட பின், தீமைகள் ஒவ்வொன்றாகச் சமுதாயத்திற்குள் நுழையத் தொடங்கின. எந்தெந்தத் தீய பண்புகளின் பிடிகளுக்குள் மனிதர்கள் சிக்கிக் கொண்டிருக்கிறார்களோ, அவற்றிலிருந்து அவர்கள் விடுபடும் பொருட்டாகவும், நற்பண்புகளை வரித்துக் கொள்ளும் பொருட்டாகவும் திருவள்ளுவர், வாழ்வின் அனைத்துத் துறைகளையும் கவனத்தில் கொண்டு திருக்குறள் மூலம் நன்னெறிகளை எடுத்துரைத்தார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த மாக்ஸ் முல்லர், இந்தியாவைப் பற்றி அறிந்து கொண்ட செய்திகள் அனைத்தும், இந்திய தேசத்தின் புனித நூல்களான வேத உபநிஷதங்களிலும், இதிகாசங்களிலும் காணப்படுவனவே யாகும். இவ்வுலகில் மனிதர்களாய்ப் பிறந்தவர்கள் அடைய வேண்டிய பெரும் பயன் என்ன என்பதனையும், அனைத்தையும் இயக்கும் பரம்பொருளின் ஆட்சி எத்தகையது என்பதனையும், தீமைகளை வெறுத்து ஒதுக்கி நல்லன நாடி தெளிந்த சிந்தனையுடன் மக்கள் வாழ வேண்டியதன் அவசியத்தையும், தன்னை உணரும் ஞானத்தையும் இந்திய தேசத்தைப் போல் வேறு எந்தத் தேசமும் எடுத்துரைக்கவில்லை என்கிறார் மாக்ஸ் முல்லர். உலக தத்துவ ஞானிகளைத் தோற்றுவித்த தேசம், கிரேக்க தேசம். அங்குதான் சாக்ரடீஸ், பிளேட்டோ, அரிஸ்டாட்டில் முதலான ஞானிகள் தோன்றி, தங்களது தத்துவச் சிந்தனைகளை உலகிற்கு வழங்கினர். ‘ஏன்’, ‘எதற்கு’ என்ற கேள்விகளின் மூலமாக, உண்மை அறிவைப் பெற்று, நம்மை நாம் நன்கு அறிந்து கொண்டு, அறிவின் திறத்தால்

வாழ்வைச் செம்மையுற அமைத்துக் கொள்ளவேண்டும் என்று கிரேக்கத் தத்துவஞானிகள் வழிகாட்டினார்கள். இந்திய தேசத்து ரிஷிகளும், ஞானிகளும் எடுத்துரைத்த தத்துவம் இதனினும் மேலானது. ஒருவன் உலகை அறிந்து கொள்வதோடும், தன்னை அறிந்து கொள்வதோடும் நில்லாமல், தனக்குள் இருக்கும் ஆன்மாவை அறிந்து கொள்ள வேண்டும் என்பதே இந்திய தேசம் உலகிற்கு வழங்கும் ஞானோபதேசமாகும்.

'Knowledge of the self is really the Vedanta that is, the end, the highest goal of the Veda, the highest wisdom of Greece was to know ourselves the highest wisdom of India is to know ourself.'

## ஆசையும் பற்றும்

எனவேதான், ஆத்மாவை உணர்ந்தவர்கள் இந்த உலக வாழ்வு அநித்தியமானது என்று தெரிந்து பற்றற்றவர்களாய் வாழ்ந்துள்ளனர். பற்றுக்களை விட்டொழிப்பது அவ்வளவு சுலபமான ஒன்றல்ல. அதிகமான பற்று ஒருவனைத் தவறான வழியில் நடத்திச் செல்லும். யான், எனது என்றிருக்கும் மக்கள், தங்கள் உடம்பை, இது எனது உடைமைதானா? என்று சிந்தித்துப் பார்த்தால் அது தனதல்ல என்று தெரிந்து கொள்வர். தொடர்பில்லாத பொருள்களை எல்லாம், எனது என்று சொல்லும் மனிதன் ஆழ்ந்து சிந்திப்பானாகில், எந்தப் பொருளும் தன்னுடையதல்ல என்பதைப் புரிந்து கொள்வான். எனவே, யான் என்றெண்ணுவது ஒருவிதமான மயக்கம். இதனைத் திருவள்ளுவர்'யான் எனது என்னும் செருக்கு' என்கிறார். யான், எனது என்ற இவ்விரண்டையும் விடாமல் பற்றிக் கொள்பவர்களைத் துன்பங்களும் விடாமல் பற்றிக் கொள்ளும். இருவகைப் பற்றுக்களும் அற்றால் மட்டுமே பிறவித் துன்பம் ஒழியும் என்கிறார் திருவள்ளுவர்.

"பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று
நிலையாமை காணப் படும்" (குறள் : 349)

இவ்வாறு பற்றற்றவராய் இருப்பவரிடம் அதிகப்படியான ஆசையும் இருக்காது. ஆசையும் பற்றும் ஒன்றோடொன்று

இணைந்து செயல்படும் தன்மையன என்பதைத் திருவள்ளுவர்,

> "அற்றவர் என்பார் அவாஅற்றார் மற்றையார்
> அற்றாக அற்றது இலர்" (குறள் : 365)

என்கிறார்.

**வாழ்வது அறியார்**

இவ்வாறு, ஆசையும் பற்றுமின்றி வாழ வேண்டுமென்றால், தன்னைச் சுற்றி இருக்கும் உலகமும், தன் பூமி வாழ்க்கையும் நிலையற்றவை என்பதை மனிதன் உணர்ந்திருக்க வேண்டும். இளமையும் நில்லா; யாக்கையும் நில்லா; வளவிய வான் பெருஞ்செல்வமும் நில்லா. வாழ்க்கையின் உண்மைத் தன்மையை ஆராய்ந்து அறியாமல் வாழ்பவரைத் திருவள்ளுவர் 'ஒருபொழுதும் வாழ்வது அறியார்' என்கிறார். இக்குறளுக்குப் பொருள் சொல்லும் பரிமேலழகர், 'ஒரு பொழுதளவும் தம் உடம்பும் உயிரும் இயைந்திருத்தலைத் தெளியமாட்டார்; மாட்டாது வைத்தும், கோடி அளவுமன்றி, அதனினும் பலவாய நினைவுகளை நினையா நிற்பர் அறிவிலாதார்' என்கிறார். மணக்குடவர், 'ஒரு பொழுதளவும், தம் உயிர் நிலைநிற்கும் என்பதனை அறியாராய் இருந்தும், தமது வாழ்நாளை, கோடியுமல்ல, பலவாகக் கருதுவார் உலகத்தார்' என்கிறார்.

நாவலர் உரையில் 'ஒரு சிறு பொழுது கூட, தம் வாழ்க்கையின் நிலையாமையை ஆராய்ந்து அறிய மாட்டாதவர்கள், வீணாக எண்ணிக் குவிப்பன ஒரு கோடி அளவையும் மிஞ்சுகின்ற அளவிற்குப் பலப்பல கோடி எண்ணங்களைக் கொண்டவையாக அமையும்' என்ற பொருளைப் பார்க்கிறோம். திருக்குறளுக்குச் சுருக்கமான உரைதரும் நாவலாசிரியர் சுஜாதாவோ, ஒருபொழுது கூட வாழ்வது நிச்சயமில்லை. ஆனால் வாழப்போவதாக எண்ணிக் கொண்டிருப்பதோ பலகோடி' என்கிறார். இத்தகைய உலக நிலையாமையை உணர்தல், ஒரு மனிதன் தன் குணங்களைச் சரியாக அமைத்துக் கொள்ளப் பெரிதும் துணை செய்யும் என்பது மேலோரின் கருத்தாகும்.

## இந்தியாவுக்கு நிகர் இந்தியாவே

புற உலகில் பலவிதமான வளர்ச்சிகளை நாள்தோறும் மனிதர்கள் சந்தித்து வருகிறார்கள். நவீன உலகம், அறிவுலகம் என்றழைக்கப்படுகிறது. இவ்வுலகில், தங்கள் அறிவினால், உலகத்தின் தோற்றம், வளர்ச்சி ஆகியனவற்றைப் பற்றிய செய்திகளை ஆராய்ந்து வெளிப்படுத்திய அறிஞர்களின் திறமை சாதாரணமானதல்ல. உலகத்தின் பல நாடுகள் புறவளர்ச்சியைப் பற்றியே ஆராய்ந்து கொண்டிருக்கும் போது, இந்திய தேசம்தான் மனிதர்களின் அகவளர்ச்சியைப் பற்றி ஆராயத் தொடங்கியது. மனிதர்களின் அகவளர்ச்சியையும் அவர்கள் தங்கள் உண்மை நிலையை உணர்வதற்கான ஏதுக்களையும் எடுத்துரைப்பதில் இந்தியாவுக்கு நிகர் இந்தியாதான் என்பது மாக்ஸ் முல்லரின் கருத்து.

'In that study of the history of the human mind in that study of ourselves, our true selves, India occupies a place which is second to no other country.'

இந்திய தேசத்தின் இணையற்ற பொக்கிஷங்களான வேதநூல்களைக் கற்பதற்காகவே ஒருவன் சமஸ்கிருத மொழியைப் பயில வேண்டும். அவன் ஆழ்மனதில் இருக்கும் எத்தனையோ விடைதெரியாத கேள்விகளுக்கு இந்தியாவின் புனித நூல்கள் அவனுக்கு விடையளிக்கும். சமயம், அது தொடர்பான சம்பிரதாயங்கள், சட்டம் ஆகிய துறைகளைப் பற்றி அதிகாரப்பூர்வமாகத் தங்களுக்கு அறிவிப்பது வேதம்தான் என்பதில் இந்தியர்கள் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டுள்ளனர். வேதாந்தம் என்பது இந்தியர்களின் உயிர்மூச்சு. அவன் சுவாசத்தோடு கலந்துவிட்ட வேதத்தை இந்தியனை விட்டுப் பிரிக்க முடியாது. தெய்வ வணக்கங்களிலும், பிரார்த்தனைகளிலும் வேதம்தான் எதிரொலிக்கிறது. இந்தியாவின் தத்துவ அறிஞர்களின் கருத்துக்கள் வேத வாக்கியங்களைத்தான் பிரதிபலிக்கின்றன. ஏன்! ஒருவேளை உணவுக்கு வழியில்லாத ஏழை சொல்லும் பழமொழியிலும் வேதம் தான் ஒலித்துக் கொண்டிருக்கிறது. இன்று உலகில் அதிக கவனம் செலுத்தப்படும் துறைகளான

பொதுக்கல்வி, உயர்கல்வி, பாராளுமன்றப் பிரதிநிதித்துவம், சட்ட உருவாக்கம், நாடுவிட்டு நாடு செல்லல் இவைகளைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமானால், இந்திய தேசத்திலிருந்து ஏராளம் தெரிந்து கொள்ளலாம். இந்தியாவில்தான் மனித வரலாற்றிலேயே விலைமதிக்க முடியாத உன்னதமான உபதேசப் பொக்கிஷங்கள் காணப்படுகின்றன. இந்திய நாடு சமஸ்கிருதம் என்ற வேதமொழி பிறந்த நாடு. எல்லா தேசத்தவர்க்கும் நல்லொழுக்கத்தின் அடிப்படையைக் கற்பித்த நாடு. எந்தத் திணிப்பும் இல்லாமல் இயற்கையின் வழி சமய உண்மைகளை எடுத்துரைத்த நாடு. நுணுக்கமான தத்துவங்களைக் கண்டறிந்து உலகிற்கு அறிமுகப்படுத்திய நாடு. சட்ட நுணுக்கங்களையும், விளக்கங்களையும் உலகிற்குத் தெரிவித்தத நாடு. எனவே இந்தியாவின் சிறப்பு மிகுந்த விலைமதிப்பற்ற பொக்கிஷங்களை அறிந்து கொள்ளுதல் நம் கடமையாகும் என்கிறார் மாக்ஸ் முல்லர்.

'You have to go to India, whether you like it or not, because, some of the most valuable and most instructive materials in the history of man are treasured up in Indian and in India only.'

சுதந்திரமாகவும் தெளிவாகவும், தம் உள்ளத்து எண்ணங்களை எழுத்துக்களில் வடித்த இணையற்ற பெருமைக்குரியவர் மாக்ஸ் முல்லர் என்றால் அது மிகையாகாது.

## எழுதா மறையும் எழுதிய மறையும்

திருக்குறளை எழுதிய மறையென்றும், வேதங்களை எழுதா மறையென்றும் உரைப்பர். இரண்டு மறைகளிலும் உலகோருக்குத் தேவையான உறுபொருள் உரைக்கப் பட்டுள்ளது. வடமொழிக்கும், தென்மொழியான தமிழுக்கும் பல்வேறு துறைகளில் பல ஆண்டுகளாகக் கருத்துப் பரிமாற்றங்கள் நிகழ்ந்து வந்துள்ளன. எல்லோருக்கும் பொதுவான பல்வேறு அறங்களை வடமொழி வேதமும், திருக்குறளும் எடுத்துரைக்கின்றன. மாக்ஸ் முல்லரைப் போன்ற

ஐரோப்பிய நாட்டைச் சேர்ந்த மொழியியல் வல்லுநர்கள் பலர் வேதத்தைக் கற்று, வளர்க்க முற்பட்டுள்ளனர். வேதத்தைப் பதிப்பித்த பெருமையும் அயல்நாட்டவர்க்கு உண்டு. அதுபோலவே, அயல்நாட்டுப் பாதிரியார்கள் இந்தியாவிற்கு வந்து தமிழைக் கற்று, திருக்குறளால் ஈர்க்கப்பட்டு ஆங்கிலம், ஜெர்மன், ஃபிரெஞ்ச் ஆகிய மொழிகளில் திருக்குறளை மொழிபெயர்த்தனர். திருக்குறளையும், வேதத்தையும் உலகறியச் செய்த பெருமை மேல்நாட்டு அறிஞர்களுக்கும் உண்டு என்பதை நாம் மறுக்க இயலாது. உலக அளவில் காணப்படும் பல்வேறு நீதி நூல்களிலும் திருக்குறளுக்கென்று ஒரு தனிச் சிறப்பும், பெருமையும் உண்டு. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே புரட்சிகரமான சிந்தனைகளைத் துணிவாக உலக நலம் கருதி எடுத்துரைத்தவர் திருவள்ளுவர்.

## உயிரா? ஒழுக்கமா?

மிகவும் உயர்ந்தது ஒருவனின் உயிர்தான் என்று உலகோர் நினைத்துக் கொண்டிருந்த காலத்தில், உயிரைவிட உயர்ந்தது ஒழுக்கம்தான் எனச் சொன்னவர். உயிர் என்றோ ஒருநாள் உடலைவிட்டு நீங்கும். ஆனால், ஒழுக்கம் தவறாது வாழ்பவன் உலகோரால் என்றும் உயர்ந்த நிலையில் வைத்து எண்ணப்படுவான்.

**"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்"** (குறள் : 131)

உயிரை விடவும் உயர்வானது ஒழுக்கம் எனச் சொல்லும் திருவள்ளுவர், மானமும் உயிரைவிட மேலானது என்கிறார். மானத்தைப் பெரிதென மதித்து ஒழுகுவார், தமக்கு ஏதாவது இழிவு ஏற்படுமானால் உயிரையும் விட்டுவிடத் துணிவர். தன் உடம்பிலிருந்து மயிர் நீங்கினால் உயிர் வாழாத கவரிமானைப் போல, மானம் அழிய நேர்ந்தால், சான்றோர் உயிர் துச்சமெனக் கருதி அதனை நீத்து மானத்தைக் காப்பர்.

**"மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்**
**உயிர்நீப்பர் மானம் வரின்"** (குறள் : 969)

"இளிவரின் வாழாத மானம் உடையார்
ஒளிதொழுது ஏத்தும் உலகு" (குறள் : 970)

'நாணுடைமை' என்னும் அதிகாரத்தில், நாணத்தைத் தமக்குரிய பண்பாகக் கொள்பவர், தமக்கு வரும் பழி எண்ணி அஞ்சுவர். சான்றோர்களுக்கு அணிகலமாக இருப்பது நாணுடைமை. எனவேதான் சான்றோர்கள் தகாத செயல்களைச் செய்யாமல் கவனமாகத் தவிர்த்து விடுவர். நாணத்தை விடவேண்டிய நிலை வந்தால், உயர்ந்தோர் உயிரை வேண்டுமானால் விடுவரே அல்லாமல் நாணத்தை விடமாட்டார்.

"நாணால் உயிரைத் துறப்பர் உயிர்ப்பொருட்டால்
நாண்துறவார் நாண்ஆள் பவர்" (குறள் : 1017)

உயர்ந்தது உயிரா? ஒழுக்கமா? என்றால், உயிரைவிட ஒழுக்கமே உயர்ந்தது என்றும்; உயர்ந்தது மானமா? உயிரா? என்றால், உயிரைவிட மானமே உயர்ந்தது என்றும்; உயர்ந்தது நாணமா? உயிரா? என்றால், உயிரைவிட நாணமே உயர்ந்தது என்றும் திருவள்ளுவர் எடுத்தியம்புவது தமிழினத்தின் தகுதிப்பாட்டை உலகறியச் செய்கிறது. திருவள்ளுவர் காலத்திற்கு முன் வாழ்ந்த நீதிநூல் ஆசிரியர்களை விட, தனித்த சிறப்புடன் திருவள்ளுவர் தனிமனித அறங்களையும், பொதுமை நெறிகளையும் எடுத்துரைக்கிறார். எனவேதான், பொதுநெறி காட்ட வந்த அறநூல் என்றும், உலகிற்கே வழிகாட்ட வந்த உன்னத நூல் என்றும் திருக்குறளை அனைவரும் போற்றிப் புகழ்கின்றனர்.

## தனி அறமும் பொது அறமும்

தனி மனிதர்களின் பண்பும், ஒழுக்கமும் எப்படி இருந்தாலும் அதைப் பற்றிப் பெரிதும் கவலை கொள்ளாமல், பொதுவான சமுதாய அறத்தைப் பல சிந்தனையாளர்கள் தங்கள் எழுத்துக்களில் வடித்துத் தந்துள்ளனர். திருவள்ளுவரைப் பொருத்தவரையில், தனிமனித ஒழுக்கமே சமூக ஒழுக்கத்தின் அடிப்படையாகும். ஒழுக்கம் தவறிய மக்களின் கூட்டமைப்பு, ஒரு நல்ல சமுதாயமாக இருக்க

இயலாது. எனவேதான் திருவள்ளுவர் தனிமனிதனுக்குரிய அறத்தை முதலில் எடுத்துரைத்துப் பின்னர் பொதுவான அற நெறிகளையும் அரசியல் நெறிகளையும் எடுத்துரைக்கிறார்.

## அறவழியில் பொருள் தேடு

பறந்து பறந்து பொருள் தேடுவது என்பது நாம் வாழும் உலகில் அன்றாடம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் செயல். மக்களுள் மிகச் சிலரே, பழியோடு கூடிய பொருளை நாடாமல் நேர்மை வழியில் பொருளைத் தேடுகின்றனர். பெரும்பாலும் பழிபடர்ந்த செல்வமே உலகில் இன்று வியாபித்துள்ளதைப் பார்க்கிறோம். நிறையப் பொருளைச் சேமிக்காவிட்டால் தவறில்லை. சிறு பழி வந்து சேருமாறு நடந்து கொண்டாலும் அது தவறு. எடுத்துக்காட்டாக, பொருட்களை விற்பனை செய்து பொருள் ஈட்டும் வாணிகம் தவறானதல்ல; உண்மைப் பயன்பாடில்லாத போலிகளையும், காலாவதியான உணவு மற்றும் மருந்துகளையும் விற்பனை செய்து மக்களை வஞ்சிப்பது குற்றமாகும். உழைப்பிற்கு ஏற்றபடி ஊதியம் பெறுவது உலக நடைமுறை; உழைப்பே செய்யாமல் ஊதியம் பெறுவது குற்றமாகும். பணியாட்களை வைத்துப் பழுதற வேலை வாங்குதல் ஏற்புடையது; ஆனால் அவர்களுக்குரிய நியாயமான ஊதியத்தை வழங்காமல் இருப்பது வஞ்சனையாகும். இத்தகைய தவறுகளைப் புரிகிற மனிதன் எவ்வளவு பொருளைச் சேர்க்கிறானோ, அதைவிடப் பல மடங்கு பழியையும் சேர்க்கிறான். எனவே, பழிக்கு அஞ்சி ஒருவன் பொருளைச் சேர்த்தல் வேண்டும்.

சிலர் நேர்மையான வழியில் பொருளைத் தேடுபவர்களாக இருப்பர். நல்ல வழியில் சேர்த்த செல்வத்தைத் தங்களுக்கு மட்டுமே பயன்படுத்திக் கொள்வர். உற்றாருக்கோ, பொருள் அற்றவர்க்கோ எவ்வித உதவியும் செய் முன்வர மாட்டார்கள். அவ்வாறு யான், எனது என்று இருத்தலும் தீது. பழிக்கு அஞ்சிச் சேர்த்த செல்வத்தைத் தானும் உண்டு, மற்றவர்களையும் உண்பிக்க வேண்டும். அங்ஙனம் செய்யும்போது, வாழ்க்கையின் ஒழுங்கு ஒருநாளும் குறையாது.

"பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்" (குறள் : 44)

என்கிறார் திருவள்ளுவர். பிறிதொரு இடத்தில், உலகில் உள்ள அறநூலார் தொகுத்த அறங்கள் எல்லாவற்றிலும் தலைசிறந்தது, தன்னிடம் இருப்பதை மற்றவர்களுக்கும் பகுத்து உண்ணக் கொடுப்பது என்று தெள்ளத் தெளிவாய் உரைக்கிறது குறள்.

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை" (குறள் : 322)

திருவள்ளுவர் சொல்லும் இந்த அறம், அவர் வாழ்ந்த காலத்தில், எந்த ஒரு சிந்தனையாளரின் சிந்தனைக்கும் எட்டாமல் இருந்துள்ளது என எண்ணும்போது நாம் வியப்படையாமல் இருக்க முடியாது.

## பாருக்குள்ளே நல்ல நாடு

தனி மனிதர்களுக்கு அறம் சொல்லும் திருவள்ளுவர், பொது அறத்தையும் அழுத்தந்திருத்தமாக எடுத்துரைக்கிறார். பல்வேறு விதமான இன, சமய, மொழி வேறுபாடுகளால் மக்கள் பிரிவுபட்டு நிற்கும் இந்தக் காலத்திலும், வேற்றுமைகளை மறந்து மக்கள் ஒன்றுபட்டிருக்க வேண்டும் என்பதைக் குறிப்பாக உணர்த்துவதைப் போலக் கல்வி யறிவுடைய சான்றோர்களும், உணவை உற்பத்தி செய்யும் உழவர்களும், ஏழை பணக்காரர் என்ற ஏற்றத்தாழ்வு இல்லாமல் ஒன்றுபட்டு வாழ்வதே ஒரு நல்ல நாட்டிற்கு இலக்கணம் என்கிறார்.

"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்வுஇலாச்
செல்வரும் சேர்வது நாடு" (குறள் : 731)

பிணியின்மை, செல்வம், விளைபொருள், வளம், இன்ப வாழ்வு, நல்ல காவல் இவை ஐந்தும் ஒரு நாட்டின் அழகாகும் எனத் திருவள்ளுவர் சொல்வது உலகின் எல்லா நாடுகளுக்கும் பொருந்தும். அண்டை நாடுகளோடு பகையை வளர்த்துக் கொண்டால், அவர்களை வெற்றி

கொள்வதிலேயே ஒரு அரசன் தன் கவனம் முழுவதையும் செலுத்தி, போர் செய்வதிலேயே காலத்தைக் கழிப்பான். அவ்வாறு மன்னனோ, ஆட்சியாளரோ நடந்து கொள்ளும் போது, அவர்களது ஆட்சியில் நாட்டு மக்களின் தேவைகள் அனைத்தும் புறக்கணிக்கப்படும். மக்கள் பசியிலும் பிணியிலும் வருந்த நேரிடும் என்கிறார் திருவள்ளுவர்.

**"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்**
**சேராது இயல்வது நாடு"** (குறள் : 734)

இக்காலத்தில், போர்களிலேயே நாட்களைக் கடத்தும் சில உலக நாடுகளில் வாழும் மாந்தர் பசியோடும், பிணியோடும் நிரந்தரப் போராட்டம் நடத்தி வருவதைப் பார்க்கிறோம். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் பகையையும் நட்பாகச் செய்து கொள்ளப் பழக வேண்டும் என்றுரைத்தார் திருவள்ளுவர்.

## துன்பத்திலும் துணை நிற்கும் நூல்

தமிழ் நூல்களில் தலைமை நூலாக இருப்பது திருக்குறள். வடமொழியில் நல்ல புலமையும் தேர்ச்சியும் உடைய சுதந்திரப் போராட்ட வீரர் சுப்பிரமணிய சிவா, திருக்குறளை வடமொழி இலக்கியமான பிரம்ம சூத்திரத்தோடு ஒப்பீடு செய்து கருத்துரை வழங்கியுள்ளார். அன்று இந்தியாவில் நடைபெற்ற ஆங்கிலேயரின் ஆட்சிக்கு முடிவு கட்ட வேண்டுமென்று பெரிதும் பாடுபட்டவர் சுப்பிரமணிய சிவா. அவர் மீது ராஜ துவேஷ வழக்கு பதிவு செய்யப்பட்ட போது, அரசாங்கத்திற்கு அவர் எழுதிக் கொடுத்த வாக்குமூலத்தோடு இரண்டு குறட்பாக்களை இணைத்துக் கொடுத்தார். 'எங்கு அதர்மம் இருந்தாலும், அதை அகற்றிவிட்டு, தர்மத்தை நிலைநாட்ட ஒவ்வொரு நேர்மையான மனிதனும் முயற்சி எடுத்தே தீருவான். அதுபோலவே, இந்திய நாட்டில் வாழும் மக்களைப் பலவகையிலும் துன்பப்படுத்தும் அந்நியரின் ஆட்சியைப் போக்கி விட்டு சுயராஜ்யத்தை நிலைநிறுத்த இந்திய மக்கள் முயற்சி செய்து வருகிறார்கள். அந்த முயற்சியில் பங்கேற்கும் தனக்குத் தண்டனை வழங்குவது நியாயமற்றது' என்று

திருக்குறளை மேற்கோள் காட்டி, தன் வாக்குமூலத்தைப் பதிவு செய்தார் சுப்பிரமணிய சிவா. குடிகளை வருத்தும் தொழிலை மேற்கொண்டு முறையற்ற செயல்களைச் செய்யும் ஒரு அரசனோ, ஆட்சியாளனோ கொலைத்தொழிலை செய்பவனை விட கொடியவன். வரி என்ற பெயரால் மக்களின் சக்திக்கு அதிகமாக அவர்களிடமிருந்து பணத்தைப் பறிக்கும் ஆட்சியாளனுக்கும், செல்லும் வழியில் வேலைக் கையில் பிடித்துக் கொண்டு 'இருப்பதை எல்லாம் கொடுத்து விட்டுப் போ' என்று மிரட்டும் திருடனுக்கும் எந்த வேறுபாடுமில்லை.

> "கொலைமேற்கொண் டாரிற் கொடிதே அலைமேற்கொண்டு
> அல்லவை செய்தொழுகும் வேந்து" (குறள் : 551)
>
> வேலொடு நின்றான் இடுஎன் றதுபோலும்
> கோலொடு நின்றான் இரவு" (குறள் : 552)

என்ற பொருள் தரும் குறட்பாக்கள் வாக்குமூலத்தில் இடம் பெற்றிருந்தன. இந்த வாக்குமூலத்தைக் கொடுத்த பிறகு, அதைப் படித்துப் பார்த்த நீதிபதி பின்கே, சுப்பிரமணிய சிவாவிற்குப் பத்து ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதித்தார். சிறையில் இருக்கும் போதும், குறளைப் பிரியாத சுப்பிரமணிய சிவாவின் திறத்தை என்னென்பது? வ.வே.சு. ஐயர் அவர்கள், ஆங்கிலேயர்களின் அடக்குமுறைக்குத் தப்பித்து, சுதந்திரப் போராட்ட வீரர்களோடு தாமும் சில காலம் தலைமறைவானார். அப்பொழுது அவர் தம்முடன் எடுத்துச் சென்ற இரு பெரும் நூல்களில் ஒன்று திருக்குறள், மற்றொன்று கம்ப இராமாயணம். வ.வே.சு. ஐயர் அவர்கள் திருக்குறள் முப்பாலையும் மொழிபெயர்த்துக் கொண்டிருக்கும்போது, ஆங்கிலேயர்களிடம் அகப்பட்டுக் கொள்ளக் கூடாது என்று புதுவைக்குச் சென்று, அங்குத் தன் மொழிபெயர்ப்பை நிறைவு செய்தார். மகாத்மா காந்தி அடிகளும், ஜி.யு. போப் எழுதிய திருக்குறளின் ஆங்கில மொழிபெயர்ப்பை விரும்பிக் கற்றார். திருக்குறள் மேல் ஆறாக் காதல் கொண்ட நாவலர் சத்தியமூர்த்தி அவர்கள் மேடைகளில் அடிக்கடி எடுத்துச் சொன்ன திருக்குறள்,

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு" (குறள் : 110)

என்பதாகும். சுதந்திரத்திற்காகப் பாடுபடும் தேசத் தலைவர்களிடமும், சுதந்திரப் போராட்ட வீரர்களிடமும் நாம் நன்றியுடன் நடந்து கொள்ள வேண்டும் என்று எடுத்துக் காட்டுவதற்கு இக்குறள் அவருக்குப் பெரிதும் பயன்பட்டது.

## பேரின்பம் தரும் குறள்

உலக மொழிகள் பலவற்றிலும் மொழிபெயர்க்கப் பட்ட பெருமைக்குரியது திருக்குறள். சமஸ்கிருதம், இந்தி, தெலுங்கு, மலையாளம் உள்ளிட்ட இந்திய மொழிகளில் மட்டுமல்லாமல், லத்தீன், ஜெர்மன், ஆங்கிலம், ஃபிரெஞ்சு போன்ற மேல்நாட்டு மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அப்பா தீட்சிதர் என்பவர் திருக்குறளின் அறத்துப்பாலை 'நீதி குசுமமாலா' என்ற பெயரில் மொழிபெயர்த்து வெளியிட்டார். வைத்திய நாதர் என்பவரால் தெலுங்கு மொழியிலும், க்ஷேமானந்த ராகத் என்பவரால் இந்தி மொழியிலும், கோவிந்த பிள்ளை என்பவரால் மலையாளத்திலும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. ஜோசப் பெஸ்கி என்பவர் அறத்துப் பாலையும், பொருட்பாலையும் லத்தீன் மொழியில் மொழிபெயர்த்தார். கிண்டர்ஸ்லி என்பவர் ஆங்கிலத்திலும், டாக்டர் கிரெளல் என்பவர் லத்தீனிலும், ஏ.எப். காம்ஸ் என்பவர் ஜெர்மனியிலும், ஃபிரட்ரிக் ருக்கர்ட், காரல் கெளல் ஆகியோர் ஜெர்மனியிலும் மொழிபெயர்த்து வெளியிட்டனர். ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்களில் எஸ்.டபிள்யு. எல்லிஸ், ஈ.ஜெ. ராபின்ஸன், ரெவரண்ட் ஜெ. லாஸரஸ், டி.எம்.ஸ்காட், ரெவரண்ட் ஜி.யு. போப் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர் ஆவர். டபிள்யு.எச். ட்ரூ என்பவர், 'திருக்குறள் சிற்சில வகுப்பினருக்கு மட்டும் உரிய நெறிகளை ஒதுக்கி விட்டு, உலக மக்கள் அனைவருக்கும் பொருந்தும் நெறிகளைக் குறிப்பிடுகிறது' என்கிறார். திருக்குறளைக் கற்ற சார்லஸ் கௌவர் என்னும் ஆங்கில

அறிஞர், ‘திருக்குறளைத் தங்கள் மறை என்று பெருமையுடன் தமிழர்கள் பாராட்டுவதை மற்றவர்கள் நம்பாமல் இருக்கக் கூடும்; ஹோமர், கிரேக்கர்களுக்கு எப்படியோ, அதுபோலவே தமிழர்களுக்குத் திருவள்ளுவர்’ - என்றார்.

டாக்டர் க்ரௌல், திருக்குறள் தரும் இன்பம் பேரின்பம் என்கிறார். திருக்குறள் பயக்கும் இன்பம் எத்தகையது என்பதை எந்த மொழிபெயர்ப்பாலும் எடுத்துக்காட்ட இயலாது. உண்மையைக் கூறுமிடத்து, திருக்குறள் வெள்ளி ஜரிகைப் பையில் வைக்கப்பட்ட பொன்னாலான இலந்தைக் கனியைப் போன்றது என்ற அவரது வாசகம் நம்மை மகிழ்ச்சியில் ஆழ்த்துகிறது. கற்கக் கற்க நம் மனமாசினை நீக்கி, நம்மைத் தூயவர்களாக்கி, பண்பிலும், அறத்திலும் சிறந்தவர்களாக வளர்த்தெடுக்கும் திருக்குறளை உலகப் பேரறிஞர்களின் சிந்தனைகளோடு ஒப்பிட்டுப் பார்த்து மகிழ்வோம்!



பேராசிரியை திருமதி. **இளம்பிறை மணிமாறன்**

சீரோங்கு செம்மொழித் தமிழின் சொற்றிறம் கொழிக்கும் நாவன்மையால் தென்னாட்டார் மனத்தையும் திரைகடலுக்கு அப்பால் வாழும் நந்தமிழரின் நெஞ்சத்தையும் ஆளும் நாவுக்கரசி திருமதி. இளம்பிறை மணிமாறன் அவர்கள் வளமார்ந்த தமிழுக்கும் இறையியல் தெரிதரு ஆன்மீகத்திற்கும் தம் உரைப் பொழிவால் அருந்தொண்டாற்றி வருவதை அறியாதார் இலர்.

தூத்துக்குடி ஏ.பி.சி. மகாலட்சுமி கல்லூரியின் மேனாள் முதல்வரான அம்மையார் அருந்தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆழ்ந்து கற்ற பன்னூல் அறிவின் மேம்பட்ட புலமைநலம் வாய்க்கப்பெற்றவர். இந்நாளில் அவர்கள் ஆற்றிவரும் உரைப்பொழிவுகளையெல்லாம் என்றும் நின்று நிலவும் நூல்களாகத் தமிழுலகிற்கு வழங்கி வருகிறார்கள்.

திருக்குறள் பாவை, உலக அரங்கில் திருவள்ளுவர்-பகுதி 1, கம்பனும் கீதையும், கம்பனில் வாழ்வியல் நெறிகள், நயன நாடகம், கம்பனும் நாமும், எண்ணமும் வண்ணமும், தன்னம்பிக்கை ஊட்டும் தாய், மந்திர மலர்கள், பயன்தரும் பதிகங்கள் என்பன அம்மையாரின் சிந்தனைக் கருவூலத்தினின்றும் வெளிப்போந்த தேனின் சுவை சொட்டும் தீந்தமிழ் நூல்கள்.

ஞானவாணி திருமதி. இளம்பிறை அவர்கள் தம் பள்ளிப் பருவம் தொடங்கித் தென்காசித் திருவள்ளுவர் கழகத்தோடு ஒன்றிக் கலந்த உறவால் அதன் இற்றை நாள் வளர்ச்சிக்குப் பெரிதும் துணைநின்று வருகிறார்கள்.

அம்மையாரின் ஆழ்ந்த சிந்தனைகள் அலைஅலையாய் எழுந்து வரும் சொற்பொழிவுகளும் அவற்றின் நூல்வடிவுகளும் தொடர்ந்து கிடைக்கப் பெறுதல் தமிழுலகிற்கு வாய்த்த நற்பேறு எனலாம்.

சுந்தரம் ஆப்செட்,
தென்காசி. போன் : 223040